# ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவ ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

(நாமவளி விளக்கவுரையுடன்)



# ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவ ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்



ஸ்ரீ லக்ஷ்மிஸரஸ் மாருதி

ஸ்ரீ லக்ஷ்மி ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்

ராமகிருஷ்ணா நகர், புதுச்சேரி – 1.

போன் : 0143 - 2260096



நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவ ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்** (நாமவளி விளக்கவுரைவுடன்) |
| முதற் பதிப்பு | : | ஸ்ரீ விக்ருதி வருடம் ஆவணி - 2010 |
| தொகுப்பு | : | ஸ்ரீ சாரி, ஸ்ரீ மதி விஷ்ணு பிரியா சாரி |
| நூலின் அளவு | : | Crown 1/8 |
| தாள் | : | 18.6 (70 GSM) மேப்லித்தோ |
| பக்கங்கள் | : | 288 |
| விலை | : | ரூ. 90 .00/- |
| வெளியீடு | : | ஸ்ரீ லக்ஷ்மி ஸரஸ் மாருதி ட்ரஸ்ட் ராமகிருஷ்ணா நகர், புதுச்சேரி - 1. போன் : 0143 - 2260096 |
| அச்சிட்டோர் | : | ஓம் ஸ்ரீ ரமணா ஆப்செட் பிரிண்டிங் புதுச்சேரி - 13. போன் : 94430 59049 |




ஸ்ரீ மதே இராமாநுஜாய நம:



## வாழ்த்து

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! உன்
சேவடி சேவ்வித்திருக்காப்பு
அடியேமோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாடும்
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும்
சுடராழியும் பல்லாண்டு
படை போர்புக்கு முழங்கும், அப் பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே.

பெரியாழ்வார்.

ஸ்ரீ :

## ஸ்ரீ லஷ்மி ஹயக்ரீவ ஸஹஸ்ரநாமம் அவதாரிகை

" ஸஹஸ்ர சீர்ஷா புருஷ:
ஸஹஸ்ராக்ஷஸஹஸ்ர பாத்! "



என்று எல்லா வேதங்களிலும் ஓதப்படுவதான புருஷஸுக்தம் ஆரம்பத்திலேயே ஸ்ரீ மந்நாரயணனை துதிக்கும் போது ஸஹஸ்ரம் - அதாவது ஆயிரம் என்பதற்கு ஒரு முக்கியத்துவம் அளிக்கிறது. யுகம் தோறும் எம்பெருமானை நேரில் தரிசிக்க, அவன் திருவடிகளை அடைய பலவித வித்தைகள் கூறப்பட்டுள்ளன. கலிஸந்தராண உபநிஷத் கலிகாலத்தில் சுலபமாக நாமஸ்மரணை செய்தே ஸ்ரீ மந்நாரயணனை அடையலாம் என்று உபதேசிக்கின்றது.

ஸ்ரீ ஸ்வாமி தேசிகனும் " ரமாதயித! ரங்கபூரமண! கிருஷ்ண! விஷ்ணோ! ஹரே திரிவிக்ரம! ஜனார்த்தன! திரியுகநாத! நாரயண! இதீவசுபதானிய படதி நாமதேயானிதே நதஸ்ய யமவச்யதா நரகபாத : பீதி: குத" என்று பயத்தைப் போக்குவதான ஸ்ரீ அபீதிஸ்தவத்தில் எம்பெருமானின் திருநாமங்களை போற்றி நரகபயமே இல்லாது வாழலாம், எம்பெருமான் திருவுள்ளம் பற்றி மோக்ஷமே அருள்வான். யமபடர்கள் கடைசி நேரத்தில் நம்மை அணுக மாட்டார்கள் என்கிறார். ஆகையால் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை அனுதினமும் பாராயணம்



செய்வதென்பதை பெரியோர்கள் உபதேசித்து வந்துள்ளனர். ஸஹஸ்ரநாமம் எல்லா தேவதா ஸ்வரூபங்களுக்கும் பல புராணங்கள் விளக்கிக் காட்டுகின்றன, எடுத்து காட்டுகின்றன ஆயினும் ஹம்ஸ ஸஹஸ்ரநாமம் எனப் போற்றப்படும் ஸ்ரீ ஹயக்கீரிவ ஸஹஸ்நாமம் மனித சக்திக்கு உட்பட்ட காலபிரமாணத்திற்கும் முற்பட்ட தொன்மையான காலத்தைச் சேர்ந்தது. மதுகைடபர்களை ஸம்ஹரித்து பிரமனுக்கு தன் படைப்புத் தொழிலை நிர்வகிக ஸ்ரீ பரிமுகன் வேதங்களைத் தாமே உபதேசித்து வேதங்களை புனிதப் படுத்தினான் என்பது வரலாறு. வேதங்கள் எப்படி கர்ணபரம்பரையாக இன்றளவும் காலபிரமாணத்தைக் கடந்து நிலைபெற்று உள்ளனவோ அதேபோல ஸ்ரீ லஷ்மி ஹயக்ரீவ ஸஹஸ்ரநாமம் ஸ்ரீ ஹயக்ரீவராலேயே பிரமனுக்கு உபதேசிக்கப்பட்டு, பின் ஸ்ரீ காச்யப ரிஷி பிரமனை அணுகி

" தாதமே ஸ்ரீ ஹயக்ரீவ தாமதரம் ஸாஹஸ்ரமுத்தமம்!அத்யேதும் ஜாயதே காங்ஷா தத்பிரஸீத மயிபிரபோ! என வரமாகக் கேட்டு உபதேசம் பெற்று நமக்கெல்லாம் உதவும் படியாக வழக்கில் வர அனுக்ரஹித்து உள்ளார். நிவிருத்தி தர்மம் எனும் மோட்ச தர்மத்திற்கு உடைய ஆதி புருஷனாகிய பரிமுகனைப்பற்றிய அறுதியான இந்த ஸஹஸ்ரநாமம் ஜீவனின் ஆத்மா பரமபதத்தை அடைய என்னென்ன உபசாரங்களைப் பெறுகின்றது. அந்த ஆத்மா என்ன வழியாகச் சென்று எவ்விதமான ஏற்றங்களை, போகங்களைப் பெற்று உய்வடைகிறது என்பதையெல்லாம் இந்த ஸஹஸ்நாமத்தில்

வெளிப்படையாக வர்ணிக்கப்பட்டுள்ளது. இக்காரணத்தால் இந்த ஸ்ரீ லஷ்மி ஹயக்ரீவ ஸஹஸ்ரநாமம் ஏனைய ஸஹஸ்ர நாமங்களினின்று வேறுபட்டுள்ளது. வடமொழியின் ஒவ்வொரு அக்ஷரமும், பதமும். ஸ்ரீ பரிமுகனின் ஸ்வருபமே என காட்டப்பட்டுள்ளது. வித்தை, செல்வம், செல்வாக்கு, இதர வௌகீக பலன்கள், ஏன் மோக்ஷமே ஸ்ரீ ஹயக்ரீவனே ஸ்ரீ ஹயக்ரீவனுக்கு ஸஸ்ரநாமம் தொடங்குமுன்இரு தியான ச்லோகங்கள் உள்ளன. அவை சந்திரமண்டத்தில் வெண்தாமரை மீது சங்கு சக்கரம் இரு கரங்களில் ஏந்தி



ஒரு கரத்தில் ஞான முத்திரை காட்டி, மறு கரத்தில் வாக்தேவியாகிய பிராட்டியாரை அணைத்தப்படி புஸ்தகத்தை ஏந்திய பரிமுகனின் ஸ்வரூபத்தை வர்ணிக்கின்றன. இவைகளனின் ஸாரமாகவே ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஒரு தியானச்லோகம் அருளியுள்ளார்

வியாக்யாமுத்ராம் கரஸர ஸிஜை
புஸ்தகம் சங்க சக்ரே பிப்ரத்பின்னஸ்படிகருசிரே
புண்டரீகே நிஷண்ண: அம்லான : ஸ்ரீ: அம்ருத விசதை
அம்சுபி பிலாவயன்மாம் ஆவிர்பூயாத்தனக மஹிமா
மானஸே வாக் தீச:! என்கிற ச்லோகம் இதையே

விளக்குகிறது. சுக்லாம் பரதாம் விஷ்ணும் எனத்தொடங்கும் முதல்ச்லோகம் ஸ்ரீ பரிமுகனைத்தான் வர்ணிக்கிறது. பின் ஸ்ரீ மஹாபாரதம் உறைத்தபோது



வேதவியாஸர் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கும் இந்தச்சுலோகத்தையே தொடக்கமாக வைத்தார். இவ்வித அபார மகிமை பொருத்தியஅனாதியானஸ்ரீ ஹயக்ரீவ ஸஹஸ்ரநாமத்திற்கும் யாவரும் உணர்த்து மோக்ஷம் வரையிலான பலன்களை பெறவேண்டும் என்கிற பரந்த நோக்கத்துடன் இந்த சிறு கருத்துரையுடன் வெளியிடப்படுகிறது..

கிருதஞ்ஞதாஞ்ஜலி

1971ம் வருடம் ஆனி அனுஷம் கூடிய சுபயோக சுபதினத்தில் (05.07.1971) ஸ்ரீ ராமகிருஷ்ணநகர், புதுச்சேரி திருக்கோயில் மஹாஸம்ப்ரோக்ஷணம் நடந்தது. அதற்கு முன்பாக வாசாமகோசரமாக ஏற்பட்ட தடைகளும், இன்னல்களும், அஸ்யையும் மஹாஸம்ப்ரோக்ஷணம் என்பதாக ஒன்று நிறைவேறுமா என்கிற பயமும் அடியேனை மிகவும் வாட்டின. அப்போதெல்லாம் அடியேறுக்கு ஆத்மபலத்தை ஊட்டி, ஊக்குவித்து கூடவே இருந்து நடத்தி வைத்து, மண்டலாபிஷேகம் முடியும்மட்டும் இங்கேயே எழுந்தருளியிருந்த வைகுண்டவாஸி. ஸ்ரீ ஹயக்ரீவ ஸேவா ரத்னா, ஸ்ரீ சடாரிஸேவக லிப்கோ நிறுவனர் உபவே கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்களை ஒவ்வொரு கணமும் நன்றி பெருக்குடன் நினைவு கூர்கிறேன். மஹாஸம்ப் போக்ஷணம் நடந்த அன்று என் கனவு பலித்தது என்று சர்மாஸ்வாமி ஸாதித்தார். அடியேனுக்கு ஸ்ரீ ஹயக்கீரிவனைப் பற்றி நினைவு, உணர்வு, பக்தி



இவைகளை ஏற்படுத்திய சர்மா ஸ்வாமிக்கும் கூட கிட்டாத பாக்கியமாக பரிமுகனுக்கு திருக்கோயில் நிர்மாணிக்கும் கைங்கர்யத்தை அடியேனுக்கு அளித்த, அருள் சுரந்த பரிமுகனின் கருணையின் திறத்தை எண்ணி எண்ணி நெகிழ்கிறேன். சர்மாஸ்வாமி அவர்கள் இப்பூவுலகில் அடியேனுடன் கூடிஇருந்து ஸ்ரீ ஸந்நிதி வைபோகங்களை அனுபவிக்கவில்லையே என வருத்தினாலும் நித்யஸுரிகளுடன் கலந்திருந்து என்றும் எப்போதும் அடியேனை சர்மா ஸ்வாமி ஆசீர்வதிப்பார். இந்த ஸன்னதி மேன்மேலும் பிரகாசமடையும் என்கிற அசையாத நம்பிக்கை அடியேனுக்கு உண்டு. ஆனி அனுஷம் நல்லநாள் என பஞ்சாங்க முறைப்படி நாள் குறித்தோமே தவிர அந்நாள் ஸ்ரீ நாத முனிகளின் திருநக்ஷத்திரம் என்பதை உணர்ந்திருக்க வில்லை. தமிழ்மறை ஈத்து ஸ்ரீ வைஷ்வை ஸம்ப்ரதாயத்தை உயர்த்தி நிறுத்திய ஸ்ரீ நாதமுனிகளின் திருக்ஷேத்திரத்தில் ஆவிர்பவித்த ஸ்ரீ ஹயக்ரீவன் இன்று வரை தினம் தினம் திவ்யஸாந்நித்யம் கொண்டு, பிரகாசமாக தன்னைவந்து சேவிக்கும் அடியார்கட்கெல்லாம் திருஷ்டாததிருஷ்ட



பலன்களை வாரி வழங்கி அனுதினமும் நூற்றுக்கணக்கான பக்தர்களை ஈர்த்து திவ்யோத்ஸவகளைக் கண்டருளி யாவரையும் மகிழ்வித்து வருகிறார் என்றல் இதில் அதிசயமில்லை என்பதை உணர்கிறேன்.

"நாதமுனி கழலே நாளும் தொழுதெழுவோம் நமக்கார் நிகர்நானிலத்தே"- என்ற ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் திவ்யஸூக்தி நினைத்து நன்றி கூறுகிறேன். ஸ்ரீ ஹயக்ரீவனுக்கு என தனி ஸன்னதி 30-40 வருடங்களுக்கு முன் மிக அபூர்வம், அதிலும் புதுச்சேரி ஸ்ரீ ஹயக்ரீவ ஸன்னதியின் தனித்தன்மை என்ன வென்றல் மூலவர், உத்ஸவர், யாகபேரர், தீர்த்தபேரர், கௌதுக பேரர் என பஞ்ச பேரங்களும் ஸ்ரீ ஹயக்ரீவ மூர்த்தியாகவே எழுந்தருளியிருப்பது. தனிச்சிறப்பு, மஹா ஸம்ப்ரோக்ஷணை தினமே பரிமுகனன் கருடாரூடனாய் எழுந்தருளியது. அவரின் விசேஷ அனுக்கிரஹமே ஸ்ரீ பரகால மடம் ஆஸ்தான மூர்த்திபிஷிக்கதராய் எழுந்தளியிருந்த 35-வது பட்டம் ஜீயர் ஸ்ரீ ஹயக்ரீவனுக்கு கருடஸேவை நடந்தது பற்றி திருவுள்ளம் மிக உகந்தார்.

ஸ்ரீ அஹோபிலமடம் ஜீயர் 45-வது பட்டம் ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ நாராயண யதீந்திர மஹாதேசிகன், பெரியாச்ரமம் ஸ்ரீதிருக்குடந்தை ஆண்டவன், ஸ்ரீ முஷ்ணம் ஆண்டவன் போன்ற மஹனீயர்கள் எல்லாம் மங்களாசாஸனம் செய்து உகந்த பரிமுகன் இன்று இவ்வளவு ஜனவச்யம், பிரகாசம், திவ்ய ஸாந்நித்தியம் , வைபோகம், நித்யோத்ஸவ கல்யாண பரிபூரிதராய

யாவரையும் ஈர்த்து வருகிறார் என்றால் அதில் ஆச்சரியமில்லை. பரிட்சைக்கு செல்லும் மாணவ மாணவிகள் இவருக்கு ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்து அதிசய பலன்களைக் பெற்று வருகிறார்கள். மஹா வரப்பிரசாதமாக எம்பெருமானை ஸேவிக்க வரும் பக்தர்கள் நல்ல எண்ணங்கள பல விசேஷமாக பக்கத்திலுள்ள கட்டிடம் கோயிலுக்கு சேர்ந்துள்ளது. இன்னும் இந்த சன்னதியில் ஈடுபட்டவர்கள் எதிர்காலத்தில் இடம் இன்னும் அதிக விஸ்தராமாக ஏற்பட்டு ராஜகோபுரத்துடன் சன்னதி அமையும் என் ஆசாஸிக்கிறார்கள். ஸ்ரீ ஹயக்ரீவ ஸஹஸ்ரநாம அர்ச்சனை. ஹோமாதிகள் தொடர்ந்து நடைபெறும் சன்னதியில் குறிப்பாக ஸ்ரீ ஹயக்ரீவ ஸஹஸ்ரநாமத்திற்கு விசேஷம் ஸ்புரிக்கின்றது. ஏனைய ஸஹஸ்ரநாமங்களினின்று ஸ்ரீ விஷ்ணு மூர்த்தியின் ஸஹஸ்ரநாமமங்களினின்று ஸ்ரீ ஹயக்ரீவ ஸஹஸ்ரநாமம் வேறுபடுவது முக்கியமான ஒரு கருத்தாலோ தான்- அது நிவிருத்தி தர்மத்தின் உரிய பரிமுகனை வேதம் உபதேசித்து பெருமானை வர்ணிக்கும் இந்த ஸஹஸ்ரநாமம் ஆத்ம பரமான விஷயங்களைச் சொல்லி மோக்ஷத்திற்கு வழி காட்டுவதாய்அமைந்துள்ளது. எம்பெருமான் திருக்கோயில் அமைக்க அடியேனைப் ஒரு பொருட்டாக மதித்தது போல, ஸ்ரீ ஹயக்ரீவ ஸஹஸ்ரநாமத்திற்கு எளிய உரை எழுதவேண்டும் என்று சில வருஷங்களுக்குமுன் ஸ்வப்னத்தில் நியமித்தார். அடியேன் சிறுமதி கொண்ட அல்பச்ருதன், அடியேன் ஆசார்ய பரம்பரையாக கூடஸ்தராகிய ஸ்ரீ லஷ்மிகுமார



தாததேசிரிடமும், அடியேன் ஸ்வாசார்யனகிய கோடிகன்னிகா தானம் ஸ்ரீ ஸுந்தர தாதாயர்ய மஹாதாததேசிகரிடமும் கொண்ட சிரத்தை கிருதஜ்நதை தவிர வேறு குணமற்றவன். இந்த ஸ்ரீ ஹயக்ரீவ ஸஹஸ்ரஹாம உரைஎன்பது முடவன் கொம்புத்தனை அடைவது போலவே எனக் கைவிட்டு உழந்து வந்தேன். 2,3 மாதங்களுக்கு முன் ஒருநாள் ஸ்ரீ ஸன்னதி வந்தபோது அர்ச்சக முகேன பரிமுகன் இனியும் காலம் கடத்தாமல் உடனே உரை எழுதவேண்டியது என பணித்தான். அடியேன் சிற்றறிவு பெற்றவனையும் பரிமுகனின் கட்டளைக்கு பணியவேண்டியதாயிற்று.

அடியேன் தர்மபத்னி ஸ்ரீமதி விஷ்ணுபிரியா உதவியுடன் இக்காரியத்தை மேற்கொண்டேன். அவ்வப்போது தெளியாத நிலை ஏற்பட்ட போதெல்லாம் ஸ்ரீ கண்ணபிரானும், ஆசாரியனும் கனவிலும், நினைவிலுமாக புத்திபுகட்டி, இதை எழுதி முடிக்கச் செய்தனர். இதில் என்ன குறையோ, தவறோ அறிய மாட்டேன். கர்ம பகவான் ஸ்வஸ்மை ஸ்வ பீரிதயே ஸ்வயமேவ காரயதி என்கிற ஸாத்விக தியாகத்துடன் ஹயக்கீரிவனுக்கு அவன் திருவடித் தாமரைகளுக்குகே அர்ப்பணம் செய்து, வருகிற ஆவணி ச்ரவணத்தன்று இதை வெளியிட முற்படுகிறேன். ஞானவான்கள், அறிஞர்கள் இதை ஏற்குமாறு பரிமுகனே திருவுள்ளம் பற்ற வேண்டும்.

இதை எழுத ஆதாரமாக இருந்த ஸ்ரீ கோசம் அபினவ

தேசிகன் எனப்போற்றப்படும் வைகுண்டவாஸி ஸ்ரீ உபவே உத்தமூர் வீரராகவாச்சாரி ஸ்வாமிகள் வெளியிட்ட ஸ்ரீ ஹயக்கீரிவ ஸஹஸ்ர நாமமே. ஸ்வாமி இங்கு ஜீவிதராய் எழுந்தருளியிருந்த ஸமயம் அடியேன் பக்கம் அனுக்ரஹபூர்வமாக, திவ்யகடாக்ஷத்துடன் திருவுள்ளம் உவந்து எழுந்தருளியிருந்தார். அண்ணாரின் ஆசிர்வாதங்களை இறைஞ்சி வேண்டி இதை வெளியிட முற்பட்டேன்.

அருள்தர எண்ணி புதுவை வந்தன
பரிமுகப் பெருமான் மலர்ப்பதங்களே-

R.S. சாரி





Sri Sri Jagadguru Shankaracharya Mahasamsthanam

V.R. Gowri Shankar
CEO & Administrator
Sri Sringeri Math and its Properties

**Ref:** **Camp :** **Date:** April 3,2010

Ref/SGS/116



Sri R.S. Chari
Chairman
Sri Lakshmi saras Maruthi Trust
No.9, Ramakrishna Nagar
Pondicherry - 605003

Dear Sir,

Received your latter regarding the I book to be brought out by you containing Sri Lakshmi Hayagriva Sahasranama Stotram and Namavali with a brief commentary. It was placed at the lotus feet of His Holiness with your pranams.

We give below the message from His HolinessJagadguru Sri Sri Bharathi Theertha Mahaswamigal who is adorning the sacred Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri, as its 36th Pontiff:

Contd..2.

தேசிகன் எனப்போற்றப்படும் வைகுண்டவாஸி ஸ்ரீ உபவே உத்தமூர் வீரராகவாச்சாரி ஸ்வாமிகள் வெளியிட்ட ஸ்ரீ ஹயக்கீரிவ ஸஹஸ்ர நாமமே. ஸ்வாமி இங்கு ஜீவிதராய் எழுந்தருளியிருந்த ஸமயம் அடியேன் பக்கம் அனுக்ரஹபூர்வமாக, திவ்யகடாக்ஷத்துடன் திருவுள்ளம் உவந்து எழுந்தருளியிருந்தார். அண்ணாரின் ஆசிர்வாதங்களை இறைஞ்சி வேண்டி இதை வெளியிட முற்பட்டேன்.

அருள்தர எண்ணி புதுவை வந்தன
பரிமுகப் பெருமான் மலர்ப்பதங்களே-

R.S. சாரி





श्रीश्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम् दक्षिणाम्नाय श्रीशारदापीठम् शृङ्गेरी
Sri Sri Jagadguru Shankaracharya Mahasamsthanam
Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri - 577 139, Karantaka. INDIA.



V.R. Gowri Shankar BE, DISc, MIMA., CEO & Administrator, Sri Sringeri Math and its Properties
Phone Off : 08265 - 250123 Resi : 08265 - 250132 Fax : 08265 - 250792
Website : www.sringerisharadapeetham.org (or) www.sringeri.net
E.mail : info@sringerisharadapeetham.org

Ref: Camp : Date: April 3,2010

Ref/SGS/116



Sri R.S. Chari
Chairman
Sri Lakshmi saras Maruthi Trust
No.9, Ramakrishna Nagar
Pondicherry - 605003

Dear Sir,

Received your latter regarding the ! book to be brought out by you containing Sri Lakshmi Hayagriva Sahasranama Stotram and Namavali with a brief commentary. It was placed at the lotus feet of His Hollness with your pranams.

We give below the message from His HolinessJagadguru Sri Sri Bharathi Theertha Mahaswamigal who is adorning the sacred Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri, as its 36th Pontiff:

Contd..2.

श्रीश्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम् दक्षिणाम्नाय श्रीशारदापीठम् शृङ्गेरी
Sri Sri Jagadguru Shankaracharya Mahasamsthanam
Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri - 577 139, Karantaka. INDIA.



V.R. Gowri Shankar BE, DBSc, MIMA,
CEO & Administrator
Sri Sringeri Math and its Properties
Phone Off : 08265 - 250123 Resi : 08265 - 250192 Fax : 08265 - 250792
Website : www.sringerisharadapeetham.org (or) www.sringeri.net
E.mail : info@sringerisharadapeetham.org

Page -2-

There is one Lord and Self and the many are only His representations and becomings. We can experience this fact and the efficacy of the nama japa, whenever we extol the deity with unswerving devotion through the Saharanama Stotrams and the Namavalis. This spiritual exercise is very much conducive to the purification of mind.

In this connection, the book containing Sri Lakshmi Hayagriva Sahasranama stotram and Namavali with a breif commentary is of greatet value and a welcome addition as it will very much help the devout in their daily worship.

The benign blessings of His Holiness are conveyed for the success of the book and to all the devotees for a healthy, happy and prosperous life.

Asirmantrakshatas and Sri Sharada Chandramouleeswara prasada, blessed by his holiness are enclosed.

Yours sincerely

(V.R. GOWRISHANKAR)



திருவஹீந்த்ரபுரம் உருப்பட்டூர் ஸௌந்தரராஜன்
எஃப் 5.சந்த்ரா ப்ளாட்ஸ்
90.ப்ருந்தாவன் தெரு மேற்குமாம்பலம்
சென்னை - 6000033 போன் : 24843986

**ஸ்ரீ**

**மாதவாய மதுவித்விஷே நம :**

ஸ்ரீ குலசேகர ஆழ்வார் அருளிய ஸ்ரீமுகுந்தமாலாஸ்தோத்ரத்தில், 39வது ச்லோகத்தில், மதுவென்னும் அரக்கனை அழித்த ஸ்ரீ லக்ஷ்மிபதியான ஸ்ரீ நாராயணுக்க நமஸ்காரம்---- "மாதவாய மதுவித்விஷே நம:"என்றுசொல்லப்படுகிறது. ஸ்ரீ ஹயக்ரீவர் திருக்கோயில், புதுச்சேரியில் ராமக்ருஷ்ணாநகரில், ஸ்ரீ உ.வே.ஆர்.எஸ்,சாரிஸ்வாமியின் அளவற்ற முயற்சியால் அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஹநுமான், இமயமலையில், ஸஞ்சீவிமூலிகைகளத் தேடிவந்தபோது, மலையையே பெயர்த்து எடுத்து இலங்கைக்கு போகும்போது ஒருஇடமே "இராமக்ருஷ்ணாநகர்" என்றும் சொல்லப்படுகிறது. இப்படி சரிந்து விழுந்த இடங்கள் புண்யபூமியாக ஆகி அங்கு ஸ்ரீ ஹயக்ரீவன் ஸாந்நித்யம் ஏற்பட்டது. உதாரணங்கள் : திருவஹீந்திபுரம், நங்கநல்லூர் முதலியன.

•பகவான், ஸாந்நித்யத்துடன் எழுந்தருளியிருக்கிறார் என்பதை அறிவது எப்படி என்கிற கேள்விக்கு, அடியேன் ஸ்ரீ காஞ்சி பேரருளாளன் மாதப்பத்திரிக்கை---விரோதிவருஷ பங்குனி இதழில் ஆராதநம் அல்லது பூஜைசெய்பவர் ஆசாரசீலராக இருக்கவேண்டும், அந்தந்த

ஆகமமுறைகளைத்தவறாமல், வழுவாமல்செவ்வனே செய்யவேண்டும், அர்ச்சாவதாரத்திருமேனியின் ஸௌந்தர்யம்; இவற்றைத்தவிர ஸேவார்த்திக்ள் அடிக்கடிசென்று ஸேவிப்பதைக்கொண்டு, பகவான் நித்யஸாந்நித்யத்துடன் எழுந்தருளி இருக்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ளலாம் என்று எழுதி இருக்கிறேன். இவையாவும் அமையப்பெற்ற திருக்கோயில் இது அதனால்தான், ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவனைத்தரிசித்து, அர்ச்சித்து, பல முறைவணங்கி, த்யானித்துப் பல்லாயிரக்கணக்கானோர் பலனடைந்து வருகின்றனர்.

ஸ்ரீ உ.வே.சாரி ஸ்வாமியின் "லக்ஷ்மி ஸரஸ் மாருதி ட்ரஸ்ட் "பற்றிச்சொல்லியாகவேண்டும்.



ஸ்ரீ லக்ஷ்மி ஸரஸ் என்பது புகழ்பெற்ற புஷ்கரணி அங்கு ஸ்ரீ ஆஞ்ஜநேயர் எழுந்தருளியிருக்கிறார். இவருக்குத் தடாக ஆஞ்ஜனேயர் என்றே பெயர் ஸ்ரீ லக்ஷ்மிமிஸரஸ்.... இப்போது ஐயங்கார் குளம் என்று அழைக்கப்டுகிறது. (வந்தவாசி--காஞ்சிபுரம் மார்க்கத்தில், தூசி என்கிற ஊரின் அருகே உள்ளது)



ஸ்ரீ லக்ஷ்மி குமார தாததேசிகன் எழுந்தருளியிருந்த காலம், அவர் ஒரு சமயம், ஏராளமான பொன்த்ரவ்யத்துடன், சிஷ்யர்களுடன் மேற்சொன்ன இடததில் சஞ்சரித்துக்



கொண்டிருந்த போது அப்போது ஸரஸ் என்பதெல்லாம் இங்கு இல்லை) திருடர்கள் வந்து, பொன்னைக்கொள்ளையடிக்க முயற்சிக்க, ஸ்ரீ தாததேசின் பெருமாளைப்பிரார்த்திக்க, ஸ்ரீ ஆஞ்ஜனேயன் வானரசேனையுடன்வந்து திருடர்களை அடித்துவிரட்ட, ஸ்ரீ தாததேசிகன் மிகுந்த சந்தோஷத்துடன், இந்த இடத்தில் ப்ரம்மாண்டமான குளத்தைவெட்டி, ஸ்ரீ ஆஞ்ஜநேயருக்கும் ஸந்நிதியை நிர்மாணித்தாகவரலாறு இந்தத்தடாக ஆஞ்ஜநேயர் பெயரில் ஸ்ரீ ஹநுமத் விம்சதி'' என்கிற ஸ்தோத்ரத்தையும் அருளினார்.

ஸ்ரீ உ..வே.சாரி ஸ்வாமியும் அவர் தர்மபத்நியும் " ஸ்ரீ லக்ஷ்மிஸரஸ் மாருதி ட்ரஸ்ட்" என்கிற பெயரில் மஹோந்நதமான கைங்கர்யங்களில் ஈடுபட்டுவருகிறார்கள். இந்த டிரஸ்ட் மூலம், வெளியிடப்பட்டு, விநியோகிக்கப்படும் ஸ்தோத்ர புஸ்தகங்கள் ஏராளம்.

இந்த ஸ்ரீ லக்ஷ்மிஹயக்ரீவர் கோவிலுக்கு

மஹாஸம்ப்ரோக்ஷணம் என்றும் இந்தப்புனித நாளில், ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்துக்கும், நாமாவளிக்கும் வ்யாக்யானம் எழுதி புஸ்தகமாக வெளியிட இருப்பதாகவும், அதற்கு அடியேனின் கட்டுரை தேவையென்றும் ஸ்ரீ உ..வே.சாரி ஸ்வாமி கட்டளையிட்டார்.

அஹோ பாக்யம்' என்னே ஸ்ரீ லக்ஷ்மிஹயக்ரீவனின் கருணை

ஸ்ரீ ஹயக்ரீவன் அவதாரம்---பகவானின் முதல்

அவதாரம் மது, கைடபர் என்கிற இரண்டு

அரக்கர்களால் ப்ரஹ்மாவிடமிருந்து திருடப்பட்டு,

ஒளித்துவைக்கப்பட்ட வேதத்தை, அந்த அரக்கர்களை ஸம்ஹரித்து. வேதத்தை மீட்டுக்கொடுத்த அவதாரம்.

வேதங்கள், வேதாங்கங்கள்,



சாஸ்த்ரங்கள், அறுபத்து

நான்குகலைகள், எல்லாவற்றிற்கும்

ஆதாரமானவர் ஸ்ரீ ஹயக்ரீவன்

ஸரஸ்வதிதேவி, தக்ஷிணாமூர்த்தி,

வ்யாஸர், பரமஸிவன்,ஸுப்ரமண்யர்,

விநாயகர்---------இவர்கள் யாவரும், ஸ்ரீ ஹயக்ரீவர்

பக்தி லேஸத்தால்-----கல்விக்கு அதிபதி என்கிற

புகழைப்பெற்றார்கள்

வாணீச தக்ஷிணாமூர்த்தி, வ்யாஸேஸ ஸ்கந்த

ஹேரம்பா।

அந்யே கலாப்ரவீணாஸ்து ஹயாஸ்ய ஸக்தி லேஸஜா:||

ஸ்ரீ ஹயக்ரீவன் அநாதிகாலமாய்,

ஸநாதனதர்மரக்ஷணம் செய்துருவதை இந்த ச்லோகம்

தெரிவிக்கிறது.

லக்ஷ்ம்யா ஸஹ ஹயக்ரீவோ தேவ்யா காருண்ய

ரூபாய|

ரக்ஷக : ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தே பிச கீயதே||

ஸ்ரீ ஹயக்ரீவன் எப்படிப்பட்டவர் என்றால்.......

ஸர்வவாகீஸ்வரேஸ்வரன்

ஸர்வவேதமயன்

ஸர்வமந்த்ரஸ்வரூபி

உத்கீதப்ரணவமூர்த்தி



நித்யநிர்தோஷன்

சின்மயானந்தரூபன்

நிர்மலன்

வேத---வேதாந்த ஸாஸ்த்ரார்த்தத்வ வ்யாக்யான-

தத்பரன்

ஞானானந்தமயன்

ஸர்வ வித்யா ஆதாரன்

பக்தரக்ஷகன்

துஷ்டநிக்ரஹன்

வித்யா ப்ரதத்வ அநுக்ரஹன்

இப்படி, எவ்வளவு புகழ்ந்தாலும், நிறைவு அடையாது, ஸ்ரீ ஹயக்ரீவன், ஆவணி மாதம் ச்ரவண நக்ஷத்ரத்தில்,

பௌர்ணமிதிதியில் அழகான நீண்ட தீர்க்கமான நாசியுடனும் இரண்டு பெரிய மிளிரும் காதுகளுடன் கூடிய, குதிரை முகத்துடன் ஸுர்ய ஒளிக்கதிர்கள்-----------பிடரி கேசங்களாக அமைய பூமி நெற்றியாக அமைய கங்கை, ஸரஸ்வதி இரு புருவங்களாக அமைய சந்த்ர ஸுர்யர்கள் இரு தாமரைக்கண்களாக அமைய சந்த்யாதேவதை நாசித்துவாரங்களாக அமையபித்ருதேவதைகள் பற்களாக அமைய கோலோகம், ப்ரஹ்ம் லோகங்கள் இரண்டு உதடுகளாக அமைய காளராத்ரி கழுத்தாக அமைய திவ்ய தேஜஸ்ஸுடன் ஸ்ரீ ஹயக்ரீவன் அவதரித்தார்.



ஸ்ரீ ஹயக்ரீவரைப்பற்றிய பெருமைகளை எடுத்துச் சொல்லாத க்ரந்தம் எதுவும் இல்லை. வேதம், வேதாந்தம், உபநிஷத் கல்பம்.புராணம் யாவும் இவர் புகழைப்பறை சாற்றுகின்றன. ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில், ஆங்காங்கே ஸ்ரீ ஹயக்ரீவரைப் புகழ்ந்து இருக்கிறார்கள். ஸ்ரீ கூரத்தாழ்வான், மற்றும் பலப்பல ஆசார்யர்கள் ஸ்ரீ ஹயக்ரீவரின் மஹிமையை பல்வேறு ஸ்தோத்திரங்கள் மூலமாக வெளியிட்டு இருக்கிறார்கள்.ஸ்வாமி தேசிகன், சகலசாஸ்த்ர பண்டிதராக, சகலகலாவல்லுநராக, அநுக்ரஹம் செய்தது ஸ்ரீ ஹயக்ரீவர்தான் தன்னுடைய மாதுலர் (அம்மான்) அறிவுரையின்பேரில், காஞ்சியிலிருந்து (தூப்புல்) திருவஹீந்த்ரபுரம் வந்து, அடியர்வர்க்குமெய்யன் திவ்யதம்பதிகளின் அநுமதியைப்பெற்று, எதிரே உள்ள ஔஷதகிரி மேலேறி, அங்கேயுள்ள ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதி அருகே அமர்ந்து, கருடமந்த்ரத்தை பல்லாயிரக்கணக்கில் ஆவ்ருத்திசெய்ய, ஸ்ரீ கருடன் ப்ரஸன்னராகி, ஸ்ரீ ஹயக்ரீவமந்த்ரத்தை உபதேசிக்க, ஸ்வாமி தேசிகன், பல்லாயிரக்கணக்கில் ஸ்ரீ ஹயக்ரீவ மந்திரத்தை ஜபிக்க, மகிழ்ச்சியுடன் ஸ்ரீ ஹயக்ரீவன்





ப்ரஸன்னராகி, தன்லாலாம்ருதத்தை ஸ்வாமிதேசிகனுக்கு அருள, மஹாசார்யன் முதலில் அருளியது ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம் தான். இந்த ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸ்தோத்ரமாகவும் அமைந்துள்ளது என்று அடியேனின் வம்ஸத்து முன்னோர்கள் மற்றும் அவர்களின் ஸமகாலத்தவர்கள், ச்லாகித்துச்சொல்லிப் பெருமைப்படுவார்கள் என்று சொல்லி அடியேன்கேட்டதுண்டு மஹாவித்வான்கள், ஸம்ஸ்க்ருத பண்டிதர்கள், வ்யாக்யான கர்த்தாக்கள், இதை ஆய்வுசெய்துவெளியிட்டால் ஆஸ்திக உலகம் அவர்கட்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கும்.

ஸ்ரீ.உ.வே சாரி ஸ்வாமி, மஹோந்நதமான ஸம்ப்ரோக்ஷண புண்யதினத்தில் வெளியிடும், அருமையான புஸ்தகத்தில், ஸஹஸ்ரநாம வ்யாக்யானம், மற்றும் நாமாவளி வ்யாக்யானங்களில், ஸ்ரீ ஹயக்ரீவனைப்பற்றிய,

மேலே சொன்னதைக் காட்டிலும் அரிய,பெரிய, அதிசயக்கத்தக்க விளக்கங்கள் பொதிந்துகிடப்பதை நன்குதெரிந்து புரிந்து கொள்ளலாம்.

இவ்வளவு அருமையான, வ்யாக்யானங்களுடன் கூடிய புஸ்தகத்தை வெளியிட்ட ஸ்ரீ உ.வே.சாரியர்ஸ்வாமிக்கும், அவர்தம் தர்மபத்னிக்கும், இதில் கைங்கர்யம் செய்யும் அனைவருக்கும், ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவன் சகல ஸ்ரேயஸ்களையும் அருளுமாறு ப்ரார்த்திக்கிறேன்.

ஸர்வம் ஸ்ரீ ஹயக்ரீவ ப்ரீயதாம்

அடியேன்

உருப்பட்டூர் ஸௌந்தர்ராஜன்
ஆசார்ய பக்தி ஸார்தூல, தேசிக ஸேவாரத்னம்,
சேர்மன், ஸ்ரீ காஞ்சி பேரருளாளன்,
ஆன்மீக மாதப்பத்ரிகை.







வ.ந. கோபால தேசிகாசாரியர் M.A.M.Sc., (London), I.R.T.S. (Retd.)
ஒப்பிலியப்பன் ஸந்நிதி.கும்பகோணம்.

**ஸ்ரீ**

**வெள்ளைப் பரிமுகர்**

எம்பெருமான் ஸ்ரீ மந்நாராயணன் எடுத்த பலபல அவதாரங்களில், ஹயக்ரீவ அவதாரம் மிகவும் ப்ரஸித்தி பெற்றது. தசாவதாரங்கள் என்று சொல்லப்படும் பத்து அவதாரங்களில், இது கணக்கிடப்படா விட்டாலும், மிகவும் புகழ் வாய்ந்தது இந்த அவதாரம்.

பிரம்மாவிடமிருந்து மது, கைடபன் என்னும் அசுரர்கள் வேதங்களைப் பறித்துச் சென்றனர். பகவான் குதிரை முகத்துடன், ஹயக்ரீவனாக, அந்த அசுரர்களைக் கொன்று, வேதங்களை பிரம்மாக்கு மீட்டுக் கொடுத்தான் என்பது யாவரும் அறிந்ததே.

மதுவைக் கொன்றதால், ஹயக்ரீவனுக்கு மது சூதனன் என்றும் பெயர். இந்த மது சூதனன் என்னும் திருநாமம், கேசவன், நாராயணன் முதலான பகவானுடைய பன்னிரு நாமங்களில் ஒன்று என்பதை நாம் அறிவோம். ஸ்வாமி தேசிகன் தம்முடைய பன்னிரு நாமம் என்னும் ப்ரபந்தத்தில், இந்த மதுசூதன மூர்த்தியின் திருமேனி நிறம், ஆயுதம், வாஸஸ்தானம் (இருப்பிடம்) முதலியவற்றை வர்ணிக்கிறார்.

ஹயக்ரீவனை வேதம் பல இடங்களிலும் போற்றிப் பேசுகிறது. ஹயக்ரீவ உபநிஷத் என்றே தனியாக ஓர்

உபநிஷத் உள்ளது. இதில் ஹயக்ரீவனுடைய பீஜாக்ஷரம், மந்த்ரம், பெருமை முதலியன கூறப்படுகின்றன.

இந்த அவதாரத்தில், ஹயக்ரீவனுக்கு திவ்ய மகிஷியாக இருப்பவள் வாக்தேவி, இவள் அம்ப்ருணர் என்னும் ரிஷிக்குப் பெண்ணாக அவதரித்ததால், வாகாம்ப்ருணீ என்றும் பெயர். இவளைப் பற்றி வாகாம்ப்ருணி ஸுக்தம் என்று ருக்வேதத்தில் தனிப் பகுதியயே உள்ளது.

இந்த வாக்தேவியை மடியில் வைத்துக் கொண்டிருக்கும் ஹயக்ரீவனைத்தான் நாம் திருக்கோயில்களில் ஸேவிக்கிறோம்.

சிவனுடைய அவதாரமான தக்ஷிணாமூர்த்திக்கும், சரஸ்வதிக்கும் மற்றும் வ்யாஸர் முதலான ஞானிகளுக்கும் அறிவைக் கொடுப்பது ஹயக்ரீவன் தான். இந்த தக்ஷிணாமூர்த்தி ஓர் ஆலமரத்தின் கீழ் அமர்ந்து கொண்டு, தக்ஷர், புலஸ்த்யர், அகஸ்த்யர், மார்க்கண்டேயர் என்ற நான்கு முனிவர்களுக்கு, எம்பெருமானைப் பற்றின தத்துவ உபதேசம் செய்கிறான்.



பிரம்மாக்கு வேதங்களை மதுகைடபர்களிடமிருந்து மீட்டுக் கொடுத்தாலும், வேதங்களைக் உபதேசம் செய்ததாலும், ஹயக்ரீவன் கல்விக் கடவுளாகப் போற்றப்படுகிறார்.



இப்படிபட்ட மகிமையை உடைய ஹயக்ரீவனுக்குப் புதுச்சேரி ராமக்ருஷ்ணாநகரில் அழகான ஒரு திருக்கோயில் அமைந்துள்ளது. திருக்கோயிலையும், அதில் எழுந்தருளி இருக்கும் பரிமுகப் பெருமாளையும் பேணிக் காத்து வருபவர் ஸ்ரீ உபவே R.S. சாரியார் ஸ்வாமிபகவத் ராமானுஜர் பெருமானைப் பார்த்துக் கூறுகிறார். பெருமானே நீதான் எனக்குத்தாய், தகப்பன், உறவினர், குரு, கல்வி, செல்வம் எல்லாம் எல்லாமே நீதான்..

இங்கே ஸ்ரீ பாஷ்யகாரர் பெருமானைக் குழந்தை என்று அழைக்கவில்லை ஏன்? இது ஸ்வாமியின் சரணாகதி கத்யத்தில் வரும் ச்லோகம். அங்கே எம்பெருமானிடம் ஸ்வாமி சரணாகதி பண்ணுகிறார். அதனால் தான் இங்கே பெருமானைக் குழந்தையாகப் பார்க்கவில்லை.

ஆனால் நம் சாரியார் ஸ்வாமி, திருக்கோயிலில் இருக்கும் ஹயக்ரீவனைதம் செல்லக்குழந்தையாகவே பாவிக்கிறார் நடத்துகிறார். பால் நினைந்து ஊட்டும் தாயை விட மிகுந்த பரிவுடன், அந்த ஹயக்ரீவக் குழந்தையை கவனித்துக் கொள்கிறார்.

நம்மாழ்வார் சிந்தையாலும், சொல்லாலும், செய்கையினாலும், தொலை வில்லி மங்கலத்து தேவ பிரானையே தந்தை, தாய் என்று அடைந்தார். (திருவாய் மொழி 6-5-11). சாரியார் ஸ்வாமியே சிந்தையாலும், சொல்லாலும், செய்கையினாலும், புதுச்சேரி

ஹயக்ரீவனையே குழந்தை என்று அடைந்துள்ளார்.

இந்தத் திருக்கோயிலின் மஹா ஸம்ப்ரோக்ஷணமும், ஹயக்ரீவ ஸஹஸ்ர நாம க்ரந்தம் (உரையுடன்) வெளியீடும். மிகச் சிறப்பாக நடைபெற உள்ளன. இந்தப் புனிதமான கைங்கர்கங்களில் சாரியர் ஸ்வாமி தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகிறார்.

இந்தக் கைங்கர்யங்களில் ஸ்வாமிக்கு உறுதுணையாக இருந்து, பாடுபட்டு வருபவர் ஸ்வாமியின் தர்மபத்தினி ஸ்ரீமதி விஷ்ணுப்ரியா அம்மையார்.

'தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மையே ஒக்க அருள்செய்வார் எம்பெருமானே ” என்கிறார் திருமங்கை ஆழ்வார். (பெரிய திருமொழி - 11-3-5), அது போல, ஹயக்ரீவனையே ஸேவித்துக் கொண்டிருக்கும் இந்த தம்பதிகளுக்கு ஹயக்ரீவனுடைய திவ்ய கடாக்ஷம் பரிபூரணமாக உள்ளது என்பது யாவரும் அறிந்ததே.

இந்த திவ்ய மஹோத்ஸவங்கள் பொலிவுடன், சிறப்புடனும் நடைபெற ஒப்பிலியப்பனை வேண்டி நிற்கிறேன் அடியேன்.

வ.ந. கோபால தேசிகாசாரியர்



T.B. NAGARAJAN, I.A.A.S (Retd)
Thanjavur

SRI RAMA JAYAM

Dear Chari,

It is a previlage indeed, to pen a fewlines to this most-welcome work of Sri R.S. Chari

At the outset, let me say a few words about the author, whom I have known for nearly five decades. we worked together in Pondicherry Adminstration for some years. His metculous,. impartial handling of cases earned the respect of one and all, and no wonder he was elevated to the rank of chief Secretary.

But, high positions sat highly on him, and he Continned his steadfast devotion to his chosen deity and Acharya, and erected a temple to the deity. He has all along kept up his intensive and extensive study of holy scriptures and works.

His vyakhyanam of Sri Lakshmi Hayagreeva Sahasran namam, I learn, is the first one in the field. From any angle, he is eminently fitted for this sacred task, and the work will be of great use to worshippers.

About lord Hayagreeva, who holds a very high place in all Schools of hindu thought, and who is the source-repository of all vidyas, there is no need for me to elaborate here. My learned, most esteemed friend, Sri. M.K. Srinivasan ( Who is also anerst while colleague of mine) has written in great, luacid, detary on this, in his foreword.

"Aadhaaram Sarva vidyaanaam,
Itayagreevam upaasmahe"

**T.B. Nagarajan.**



**M.K. Srinivasan**
Chennai.

ஸ்ரீ :

ஸ்ரீ மதே லக்ஷ்மி ஹயக்ரீவ பாப்ரந்தமணே நம :

## கலியுகக் கடவுள் பரிமுகப் பெருமான்

எம்பெருமான் எடுத்த பல அவதாரங்களுள் மிகவும் தொன்மையானதும் முதன்மையானதும் ஆவது ஸ்ரீ ‘ஹயக்ரீவ’ அவதாரமாகும். இவருக்கு ‘ஹயவதநன் ஹயசிரஸ, மதுஸூதனன் பரிமுகன் எனப் பல திருநாமங்களுண்டு ஸாதாரணமாகக் கூறப்படும் அவதாரம் காரணங்களைத் தவிர, அவ்வவதாரத்திற்கு இரண்டு சிறப்புகள் உள்ளன. ஒன்று வேதங்களைக் கற்றது. மற்றொன்று ஆசார்யராகத் திகழ்ந்தது என்பர் பெரியோர். எம்பெருமான் மத்ஸ்யாவதார்த்திலும் வேதங்களைக் காப்பாற்றியும், ஆசார்யகத்வம் செய்தும் மற்றைய ஹம்ஸ, நர நாரயாண, கீதாசர்ய அவதாரங்களில் தத்வோபதேசம் செய்திருந்த போதிலும், ப்ரபஞ்ச ஸ்ருஷ்டிக்கு முன்பேயே ப்ரஹ்மாவிற்கு உபதேசம் செய்து, பின்பு அவரிடமிருந்த வேதங்கள் மீட்டுக் கொடுத்து, ப்ரஹ்மாவைப் படைப்புகள் செயலில் ப்ரவர்த் தித்தது ஹயக்ரீவ அவதாரத்தில் தான் என்பதை அனைவரும் அறிவர். இந்த அவதாரத்தின் வரலாறு ஸ்ரீ மஹாபாரத,



சாந்திபருவம் . 357 -ம் ஸர்கத்தில் ‘‘ஹயசிரோபாக்யாளம்” என்கிற தலைப்பில் விஸ்தாரமாக கூறப்பட்டுள்ளன.

ரஜோ குணமும், தமோகுணமும் மது, கைடபன் என்று அஸுரவேஷம் பூண்டு வேதங்களை எடுத்தச் சென்றபொழுது, ப்ரஹ்மா பகவனைச் சரணடைய அவர் ஹயக்ரீவ உருவம் எடுத்து வேதங்களை மீட்டு, அஸீரர்களை மாய்த்துப் பேருபகாரம் செய்தார்.

ஆகையால் எம்பொருமானின் தயாகடாக்ஷம் முதன் முதலில் ப்ரஹ்மாவை நோக்கிச் சென்றது. என்றால் மிகையாகாது. “ உமது தயையினால் மறுபடியும் ப்ரஹ்மாவிற்கு வேதங்களை உபதேசித்திராவிடில், அவர் பாக்யத்தை இழந்தவராகவும் அறிவிலியாகவும் இருந்திருப்பார்.

மந்தோ பவிஷ்யந் நியதம் விரிஞ்சோ
வாசரம் நிதே வஞ்சித பகதேய !:
தைத்யாபநீதாத் தயயைவ பூயோபி
அத்யாபயிஷ்யோ நிகமாந் நசேத்வம்.

மந்தோ பவிஷ்யந் நியதம் விரிஞ்சோ
வாசாம் நிதே வஞ்சித பாதேயம் !
தைத்யாபநீநாத் தயமைய பூயோபி
அத்யாபயிஷ்யோ நிகமாந் நசேத்வம்.

என்று ஸ்வாமி தேசிகன் தமது ஹயக்ரீவ ஸ்தேத்ரம் 8-ம் சுலோகத்தில் ஹயக்ரீவப் பெருமானைத் துதித்துள்ளார் அப்பெருமானின் கடாஷம் இவ்வுலக மக்கள் மீது

எப்பொழுது விழுகிறது என்றால். அவர்கள் புண்யம் செய்தவர்களாக இருந்தால், அவர்கள் பிறக்கும் பொழுதே ஏற்பட்டு விடுகிறது. மேற்கூறிய சாந்திபர்வம் 358 -ம் ஸர்கத்தில் " எவனோவன் மீது பிறக்கும்

பொழுது மது ஸூதனப் பெருமானின் கடாஷம் படுகிறதோ, அவன் ஸத்வகுணம் நிறைந்தவனாவான் என்றும் அவன் மோஷபுருஷார்த்தத்தையே விரும்புவான்" என்றும் கூறப்படுகிறது. இக்கடாஷம் அக் குழ்ந்தையைக் காலக்ரமத்தில் ஒரு நல்ல ஆசார்யரிடம் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறது.

ஏனென்றால் பகவத் கடாஷம் இருந்தால் தான் சிறந்த ஆசிரியர் கிடைப்பார், அவ்வாசார்யர் அநுக்ரஹித்தால்தான் அவர்கள் மோஷமடைவார்கள், என்று ஸ்பஷ்டமாகிறது. மேலும் அவருடைய கடாஷம் பெறுவதற்குப் புண்யம் செய்திருக்க வேண்டும் என்றும், புண்யம்.

ராஜ குணமு, தமோகுணமும் மது, கைடபள் என்று அஸுரவேஷம் பூண்டு வேதங்களை எடுத்தச் சென்ற பொழுது, ப்ரஹ்மா பகவனைச் சரணடைய அவர் ஹயக்ரீவ உருவம் எடுத்து வேதங்களை மீட்டு, அஸீரர்களை மாய்த்து பேருபகாரம் செய்தார்.

ஆகையால் எம்பொருமானின் தயாகடாஷம் முதன் முதலில் ப்ரஹ்மாவை நோக்கிச் சென்றது. என்றால் மிகையாகாது. " உமது தயையினால் மறுபடியும் ப்ரஹ்மாவிற்கு வேதங்களை உபதேசித்திராவிடில், அவர்



பாக்யத்தை இழந்தவராகவும் அறிவிலியாகவும் இருந்திருப்பார்.

என்று ஸ்வாமி தேசிகன் நமது ஹயக்ரீவ ஸ்தேத்ரம் 8-ம் சுலோகத்தில் ஹயக்ரீவப் பெருமானின் கடாக்ஷம் மக்கள் மீது எப்பொழுது விழுகிறது என்றால். அவர்கள் புண்யம் செய்தவர்களாக இருந்தால், அவர்கள் பிறக்கும் பொழுதே ஏற்பட்டு விடுகிறது.

மேற்கூறிய சாந்திபர்வம் 358 -ம் ஸர்கத்தில் " எவனோவன் மீது பிறக்கும் பொழுது மது ஸூதனப் பெருமானின் கடாஷம் படகிறதோ. அவன் ஸத்வகுணம் நிறைந்தவனாவாள் என்றும் அவன் மோட்சபுருஷார்த்தத்தையே விரும்புவான்" என்றும் கூறப்படுகிறது. இக்கடாட்சம் அக் குழ்ந்தையைக் காலக்ரமத்தில் ஒரு நல்ல ஆசார்யரிடம் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறது.

ஜாயமானம் ஹி புருஷம் யம பஸ் சேத் மதுசூதனே
ஸாஸ்விகஸ்து விஞ்ஞேய ஸ்வை மோக்ஷார்த்த
சிந்தக:

ஏனென்றால் பகவத் கடாட்சம் இருந்தால்தான் தான் சிறந்த ஆசார்யம் கிடைப்பார். அவ்வாசார்யார் அனுக்ரஹித்தால்தான் பெருமாள் அவனுக்கு மோக்ஷமளிப்பார். எனவே ஹயக்ரீவ கடாட்சம் பெற்றவர்கள் மோக்ஷமடைவார்கள் என்று ஸ்பஷ்டமாகிறது. மேலும் அவருடைய கடாட்சம் பெறுவதற்குப் புண்யம் செய்திருக்க வேண்டும் என்றும்,

புண்யம் செய்ய (செய்திருக்க) அவனையே உபாஸிக்க வேண்டும் என்று ஸூத்திக்கிறது. நிற்க.

உலகத்தில் மூன்று குணங்கள் உள்ளன. அவை ஸத்வம், ரஜஸ், தமஸ் எனப்படும். பகவான் கிருஷ்ணன் கீதையில், " வேதங்கள் மூன்று குணங்களைப் பற்றிக் கூறுகின்றன''. ஆனால், அர்ஜுன நீ இம்முக்குணங்களற்று, சுக துக்கமிரண்டாலும் பாதிக்கப்படாத வனாய், கலப்பில்லாத ஸத்வகுணத்தை மட்டும், பெற்று புதிதாக எதையும் அடைய வேண்டும் என விரும்பாமல் அடைந்ததைக் காப்பாற்ற வேண்டும் என்றில்லாமல் ஆத்மாவைக் தேடுபவனும் வாழக்கடவாய் என அருளியுள்ளார். நிர் தவந்வோ நித்ய ஸத் வத்ஸ்தோ நிர்யோக ஆத்ம வாந்ய

விரும்பாமல் அடைந்ததைக் காப்பாற்ற வேண்டும் என்றில்லாமல் ஆத்மாவைக் தேடுபனாய் வாழக் கடவாய் என்று அருளியுள்ளார்.

ஸத்வ குணத்தை மட்டும் பெற வேண்டுமானால் மீதி இரண்டு குணங்களையும் அறவே அகற்ற வேண்டும். அல்லது குறைத்துக்கொண்டே வரவேண்டும். இந்த உலகத்தில் ஸம்ஸார வாழ்க்கையில் அவையிரண்டையும் அழிக்கவே இயலாது. ஆனால் குறைத்தும் கட்டுப்படுத்தியும், அவைகளால் பாதிக்கப்படாமலும் இருக்க முடியும். அம்மாதிரி நிலைக்குப் பகவான் மதுஸூதனனுடைய கடாக்ஷமும் அனுக்ரஹமும் இன்றியமையாதவை.

ரத்வகுணத்தை அதிக பக்ஷத்தில் அடைந்தவர்கள்



ஆதனை நன்றாக அனுபவித்தும் விருத்தி செய்யவும் விரும்புவர். ஆனால் இப்போதுள்ள சூழ்நிலையில் இது மிக்க கடினமான செயலே. இந்நாட்களில் ரஜோ குணத்திலிருந்து தோன்றும் அஜ்ஞானமும் ஆலஸ்யமும் தலை தூக்கி, நிற்கின்றன. கூடவே ஸத்வ குணமும்,அதை அடுத்து பகவத் பக்தியும், ஆன்மிக ஞானத்தை வளர்க்க வேண்டும். என விருப்பம் சிலரிடயே ஏற்பட்டு வருகிறது. எனினும் இவ்விருப்பம் வளர்ச்சியும் கணிதமுறையில் கூறப்படும் அளவு வளர்ச்சி வழியில் மெல்ல செல்கின்றன. அதற்கு மாறாக ரஜோ தமோ குணங்களும் அவற்றின் அனுபத்திகளும் பெருக்க வளர்ச்சி வழியாகச் சீக்கிரமே வளர்கின்றன. இந்நிலையைத் தவிர்க்க் மேலும் மேலும் ஹயக்ரீவ வழிபாடு நற்குணம் படைத்தோர மிகுந்த அளவில் உருவாக்க முடியும்.

நம் முன்னோர்களான ஆழ்வார்கள் ஆசார்யர்களும் பகவான் ஹயக்ரீவனுடைய மஹிமையான அனேக இடங்களில் விவரித்துள்ளர். ஆழ்வார்களுடைய திவ்ய பிரபந்தங்களில் பல இடங்களில், பரிமுகனுடைய (ஹயக்ரீவனுடைய) அவதாரம் நேர்முகமுகமாகவும் , ஸூசிப்பதாகவும் இருக்கிறது திருவாய் மொழியில் காணப்படும் மயர்வ மதில மருளினார். மதுஸூதனாகிய ஸ்ரீ ஹயக்ரீவனைப் பற்றியதே எனப் பெரியோர் பணிப்பர். ஸ்ரீ திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழிப்

பாசுரங்களில் அனேக வரிகளும் பாகங்களும் ஸ்ரீ

ஹயக்ரீவனைப் பற்றியே உள்ளன. (2-ம், 4-5-6-. 5-3-2, 7-8-2, 10-6-3, 11-8-08) ஸ்ரீ ஹயக்ரீவனை உபாஸித்தனாலன்றோ அவ்வாழ்வார் நாலுகவிப் பெருமான் என விருது பெற்றார். ஆசார்யகர்களுள் ஸ்ரீ ஹயக்ரீவ அவதாரத்தை நம் கண் முன் நிறுத்தினவர் கவிஸார்வ பௌமரும் ஆசார்யச்ரேஷ்டருமான ஸ்வாமி தேசிகனே. அவர் தமது அனேக நூல்களில் ஹயக்ரீவப் பெருமானைத் துதித்துள்ளார். அவற்றுள் சிகரமாய்ப் நிற்பது ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்தரமாகும். அந்த ஸ்தோத்திரத்தில் ஒரு சில சுலோகங்கள் ஹயக்ரீவப் பெருமானின் திருவுருவ வர்ணனைகள். ஒன்று (32) த்யான சுலோகம். மற்ற ஸ்தோத்திரங்கள் அனைத்தும் பல்ச்ருதிகள் என்னலாம்படி பரிமுகப் பெருமானின் திருவருளால் என்ன என்ன ஸுபிக்ஷங்கள், நன்மைகள் ஏற்படும் என்பதைக் கூறுகின்றன. விரிவுக்கஞ்சி சிலவற்றையே இங்கு குறிப்பிடுவோம். வாக்குவணம் வளர (சு. 14, 15, 27, 28, 29) அஞ்ஞானம் அகல (3,21, 26) ஜ்ஞானம் வ்ருத்தியடைய (23, 24, 25) மன உறுதியும் பெற (2, 9, 10) இந்த ஸ்தோத்ரத்தைப் படிப்பவர்களுக்கும் தெரிகிறது. இக்காரணத்தினால் தான் அனேகா இந்த ஸ்தோத்திரத்தை நித்யானுஸந்தானமாகக் கொண்டுள்ளனர்.

மற்றைய ஸம்ப்ரதாய ஆசார்யர்களும் ஹயக்ரீவ உபாஸகரகளாய் இருந்தனர் என்பதை குருபரம்பரை வரலாறுகளிலிருந்து அறிகிறோம். ஸ்ரீ ஆதிசங்கார் ஸ்ரீ



விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் 91 வது நாமாபளியாகிற

தீர்த்தகர : என்கிற சொல் மதுனகடைபர்களை அழித்த ஹயக்ரீவனேயே குறிக்கிறது என்றும், அப்பெருமான் தான் பதினான்கு வித்யாஸ்தானங்ளுக்கு நிர்மாதா படைத்தவன் என்றும் கூறியுள்ளார். த்வைத ஸம்ப்ரதாயத்தில் பரிமுகனைப் பெரிதும் வழிபட்டு வருகின்றனர். என்பதைக் காண்கிறோம். பதினைந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த வாதிராஜா என்கிற ஆசார்யர் ஹயக்ரீவனுக்குப் பிரதி தினமும் ஹயக்ரீவ பண்டி, என்கிற ஒரு விசேஷ தளிகையை ப்ரத்ய க்ஷமாகவே நிவேதனம் செய்து மகிழ்ந்தார் எனக் கூறப்படுகிறது. பகவான் குதிரை உருவமெடுத்து, வாதிராஜரின் பின்புறத்தில் நின்று கொண்டு, அவரது தோள்களின் மீது தமது முன்னிரண்டு கால்களை இருத்தி, வாதிராஜர் தலைக்கு



மேல் தாங்கிக் கொண்டிருந்த பாத்திரத்திரிருந்து இந்நிவேதனத்தை இருந்த பாகமே வாதிராஜருக்கு அன்றாட உணவாயிற்று என்றும் சரித்திரம் கூறுகிறது.

பகவானின் ஹயக்ரீவ அவதாரத்தைப் பற்றி பல பல விஷயங்கள் உள்ளன. அவற்றை உபநிஷத்துகள் இதிஹாஸ புராணங்கள்,

திவ்ய ப்ரபந்தங்களை மற்றும் பூர்வாசார்ய ஸ்ரீ ஸுக்திகளிலிருந்து கண்டு மற்ற எல்லா வழிபாடுகளும் அடங்கியுள்ளன. அவரது அனுக்ரஹமின்றி ஜ்ஞானமும் ஸத்வ குணமும் கிட்டாது. அவரை ப்ரதான் தெய்வமாகக் கொண்டு கோவில்களோ, ஸந்நிதிகளோ நிர்மாணித்தால் அவ்விடங்கள் எல்லாம் ஸுபிக்ஷம் கூடிய ஸ்த்த ங்காளகத்திகழும் என்பதில் துளிக்கூட ஐயமில்லை. அவரே இந்த யுகத்திற்கு, இக்காலத்திற்குக் கைகண்ட தெய்வம் அனைவரும் உணர வேண்டும். தமிழ்நாடு மட்டுமின்றி, நம் பாரத தேசத்தின் பல இடங்களில் பரிமுகப்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளவேண்டும் என்பதே நம் ஒரு மிக்க ப்ரார்த்தனை.

இச்சிறு கட்டுரையை ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரத்தை விளக்கும் ப்ரத்யோக மலரில் பிரசுரிக்க வாய்ப்பளித்த ஸ்ரீ சாரி ஸ்வாமிக்கு அடியேனுடைய க்ருதஜ்ஞனாதயைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். மேலும் அவருக்கு அடியேனுடைய அறிவுரையாளர், தஞ்சை வாழ் ஸ்ரீ நாகராஜ கோஸ்வாமி அவர்களுக்கும் அடியேன் ப்ரணமங்கள் சுபமஸ்து.





ஸ்ரீ:

ஸ்ரீ மதே ஸ்ரீலக்ஷ்மீ ஹயவதந ஸ்ரீ லக்ஷ்மீநாராயணாப்யாம் நம:

பன்னூல் பதிப்பாளர்,
பதிப்பக வேந்தர்
**T.N.C. VARADAN, B.A.,**
ADVISER
The Little Flower Co.,
LIFCO Associates &
Vishwak Solutions Pvt. Ltd,



*Residence:*
"JAYASARMA VILLA"
New No. 19, Postal Colony First St.,
West Mambalam,
Chennai - 600 033
Phone : 24891959, 24892715

Date : 12.06.2010

ஸ்ரீ லக்ஷ்மீ ஸரஸ் மாருதி ட்ரஸ்ட், கல்விக்கும் செல்வத்திற்கும் அதிதேவதையாக விளங்கும் ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவப் பெருமாள் ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்தையும் நாமாவளிகளையும் தொகுத்து விசேஷ அர்த்தத்துடனும், மஹநீயர்களின் வண்ணப் படங்களுடனும், சில திருக்கோயில்களின் படங்களுடனும் அழகுற அச்சிட்டு வெளியிட்டிருப்பது நம் பரம பாக்யமாகும்.

அடியேன் திருத்தகப்பனார் ஸ்ரீ சடாரி ஸேவக, பக்திப் பிரசார பிரவீண ஸ்ரீ சர்மாஜி அவர்கள் புதுவை ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவப் பெருமாள் கோயில் நிர்மாணிப்பதில் ஒரு முக்கிய காரணமாயிருந்தவர். இந்தத் திருக்கோயில் தினேதினே மேன்மேலும் சிறப்புற தேவையானவற்றைத் திறம்பட செய்துகொண்டும், ஸத்க்ரந்தங்களை வெளியிட்டும் வருகின்றது இந்தத் திருக்கோயிலுக்கு மேன்மேலும் பக்தர்கள் வந்து ஸேவித்து கோயில் மிகப் பிரபலமாக வேண்டுமென்று ஸ்ரீ ஹயக்ரீவனையே பிரார்த்திக்கிறேன்.

இந்நூலைப் படிப்பதால் ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவப் பெருமாள் திவ்ய அநுக்ரஹம் கிடைப்பது பரம நிச்சயம்.

ஆஸ்திகர்கள் அனைவரும் இதனை வாங்கிப் படித்து, ஸ்ரீ லக்ஷ்மீ ஸரஸ் மாருதி ட்ரஸ்ட் இம்மாதிரி இன்னும் பல புஸ்தகங்களை வெளியிட உத்ஸாஹத்தை உண்டுபண்ணும்படி பிரார்த்திக்கிறேன்.

தி.ந.ச.வரதன்.

தி.ந.ச.வரதன் (லிப்கோ)







श्रीः

श्रीलक्ष्मीहयवदनपरब्रह्मणे नमः

# श्रीहयग्रीवसहस्रनामस्तोत्रम्

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥

यस्य द्विरदवक्त्राद्याः पारिषद्याः परश्शतम् ।
विघ्नं निघ्नन्ति सततं विष्वक्सेनं तमाश्रये ॥

श्रीकाश्यपेन—

"तात मे श्रीहयग्रीवनाम्नां साहस्रमुत्तमम् ।
अध्येतुं जायते काङ्क्षा तत् प्रसीद मयि प्रभो ॥"

इति पृष्टस्तदोवाच ब्रह्मा लोकपितामहः ।
श्रेयसामपि च श्रेयः काश्यपेह विशांपते ॥

अमत्या विहितं पापं मूलतो हि विनश्यति ।
रहस्यानां रहस्यं च पावनानां च पावनम् ॥

प्रायश्चित्ते कृते तस्य कर्ता न निरयी भवेत् ।
कामतस्तु कृते पापे प्रायश्चित्तशतेन च ॥

तन्न नश्यति तत्कर्ता व्यवहार(र्य)स्य जायते ।
एवं दुरपनोदानां बुद्धिपूर्वमहाम्हसाम् ॥

श्रीहयग्रीवसहस्रनामस्तोत्रम्

आवर्जनकराणामप्यन्ते निष्कृतिरीरिता ।
प्रणम्य मानसतया मन्त्ररत्नानुकीर्तनम् ॥
हंसनामसहस्रस्य पठनं शिरसाऽन्वहम् ।
प्रणम्य भगवद्भक्तपादोदकनिषेवणम् ॥
तदेतत् त्रितयं सर्वपापसङ्घातनाशनम् ।
इतीदं परमं गुह्यं हंसो हयशिरोहरिः ॥
वेदोपदेशसमये मां निबोध्योपदिष्टवान् ।
अनेन मन्त्ररत्नेन महाश्वशिरसो हरेः ॥
सहस्रनामभिस्तुल्या निष्कृतिर्नैतराम्हसाम् ।
अनन्यभगवद्भक्तपादोदकनिषेवणम् ॥
एतद्द्वयोपदेशाङ्गमादौ स्वीकार्यमिष्यते ।
इत्युक्त्वाऽनन्तगरुडविष्वक्सेनपदोदकम्
आदौ मां प्राशयन् अन्ते परिशुष्ये(ष्की ?)कृताम्हसे ।
आत्मनो नामसाहस्रं सर्षिच्छन्दोधिदैवतम् ॥
सन्यासमुद्रिकाभेदं मह्यं साङ्गमुपादिशत् ।
यथावत् तदिदं वत्स दद्यां ते शृणु तत्त्वतः ॥
यत् प्राप्याऽऽत्यन्तिकावृत्तिनिवृत्त्या मोक्षमेष्यति ।
हयास्यनामसाहस्रस्तोत्रराजस्य वैभवम् ॥
ऋषिः श्रीमान् हयग्रीवो विद्यामूर्तिः स्वयं हरिः ।
देवता च स एवास्य छन्दोऽनुष्टुबिति श्रुतम् ॥ 15



श्रीहयग्रीवसहस्रनामस्तोत्रम्

हंसो हंसोहमित्येते बीजं शक्तिस्तु(श्च?) कीलकम् ।
हंसीं(?) हंसोह(?)मित्येते प्राग्जप्या मनवस्त्रयः ॥
एकैकस्य दशावृत्तिरिति संख्या विधीयते ।
प्रणवत्रयमस्त्रं स्यात् कवचं श्रीः श्रियो भवेत् ॥
श्रीविभूषण इत्येतत् हृदयं परिकीर्तितम् ।
परोरजाः परंब्रह्मेत्यपि योनिरुदाहृता ॥
ध्यानं विद्यामूर्तिरिति विश्वात्मेति च गद्यते ।
विश्वमङ्गलनाम्नोऽस्य विनियोगो यथारुचि ॥
भ्रूनेत्रश्रोत्रनासाहन्वोष्ठतालूदरक्रमात् ।
षोडशस्वरविन्यासो दक्षिणारम्भमिष्यते ॥ १० ॥
जिह्वातलेपि तन्मूले स्वरावन्त्यौ च विन्यसेत् ।
तदा तालुद्वयन्यासंस(सम)स्वायो(सकाम?)स्तु परित्यजेत्
अयं हि विद्याकामानामाद्यस्त्वन्यफलैषिणाम् ।
दोःपत्सवथ्यङ्गुलीशीर्षे वर्गान् कचटतान् न्यसेत् ॥
पार्श्वयोस्तु पफौ पृष्ठोदरयोस्तु बभौ न्यसेत् ।
मकारं हृदये न्यस्य जीवे वा पञ्चविंशके ॥
नाभिपायूदरे गुह्ये यरलवान् विनिक्षिपेत् ।
शषौ कुण्डलयोःशीर्षे हारे च कटिसूत्रके ॥
सहौ हृदब्जे हार्दे च लमापादशिखे(खं ?) न्यसेत् ।
क्षश्च शीर्षादिपादान्तं मातृकान्यास एष तु ॥ 21

अस्य श्रीहयग्रीवसहस्रनामस्तोत्रमहामन्त्रस्य—श्रीहयग्रीव ऋषिः । अनुष्टुप् छन्दः । श्रीहयग्रीवः परमात्मा देवता । हंस इति बीजम् । हंसोहमिति शक्तिः । हंसां हंसीमिति(?) कीलकम् । ओं ओं ओमित्यस्त्रम् । श्रीः श्रियः इति कवचम् । श्रीविभूषण इति हृदयम् । परोरजाः परं ब्रह्मेति योनिः । विद्यामूर्तिर्विश्वात्मा इति ध्यानम् । हंसामङ्गुष्ठाभ्यां नमः । हंसीं तर्जनीभ्यां नमः । हंसूं मध्यमाभ्यां नमः । हंसों अनामिकाभ्यां नमः । हंसौं कनिष्ठिकाभ्यां नमः । हंसः करतलकरपृष्ठाभ्यां नमः । एवं हृदयादिन्यासः ॥

(हंसां ज्ञानाय हृदयाय नमः । हंसीं ऐश्वर्याय शिरसे स्वाहा, हंसूं शक्त्यै शिखायै वषट्, हंसों बलाय कवचाय हुं, हंसौं तेजसे नेत्राभ्यां वौषट् । हंसः वीर्यायास्त्राय फट् ओमिति दिग्बन्धः)

अथ मातृकान्यासः—

ओं अम् आम् भ्रुवोः । इम् ईम् नेत्रयोः । उम् ऊम् श्रोत्रयोः । ऋम् ॠम् नासिकयोः । लृम् ॡम् कपोलयोः । एम् ऐम् ओष्ठयोः । ओम् औम् दन्तपङ्क्त्योः । अम् जिह्वातले । अः जिह्वामूले । कवर्गं दक्षिणे बाहूमूले कूर्परे मणिबन्धे करतले हस्ताग्रे । चवर्गं वामे बाहूमूले कूर्परे मणिबन्धे करतले हस्ताग्रे । टवर्गं दक्षिणे पादमूले जानुनि पादपार्ष्णौ पादतले पादाग्रे ।





तवर्गं वामे पादमूले जानुनि पादपार्ष्णौ पादतले पादाग्रे । पफौ पार्श्वयोः । बभौ पृष्ठोदरयोः । मं हृदि । यं रं लं वं नाभौ पायौ उदरे गुह्ये । शषौ हस्तयोः । सहौ शीर्षे कट्याम् । लक्षौ हृदब्जे हार्दे इति मातृकान्यासः ।

## ध्यानम् ॥

विद्यामूर्तिम् अखण्डचन्द्रवलयश्वेतारविन्दस्थितम्
हृद्याभं स्फटिकाद्रिनिर्मलतनुं विद्योतमानं श्रिया ।
वामाङ्कस्थितवल्लभां प्रति सदा व्याख्यान्तमाम्नायवा-
गर्थान् आदिमपूरुषं हयमुखं ध्यायामि हंसात्मकम् ॥
विश्वात्मा विशदप्रभाप्रतिलसद्वाग्देवतामण्डलो
देवो दक्षिणपाणियुग्मविलसद्बोधाङ्कचक्रायुधः ।
वामोदग्रकरे दरं तदितरेणाश्लिष्य दोष्णा रमां
हस्ताग्रे धृतपुस्तकः स दयतां हंसो हिरण्यच्छदः ॥ 27

(सहस्रनामारम्भः)

7. ओं श्रीं हंसो हमैमों क्लीं श्रीःश्रियः श्रीविभूषणम् ।
परोरजाः परब्रह्म भूर्भुवस्सुवरादिमः ॥
भास्वान् भगश्च भगवान् स्वस्ति स्वाहा नमः स्वधा ।
श्रौषड् वौषडलं हुं फट् हुं ह्रीं क्रों ह्रौं यथा तथा ॥
कर्क(र्क)ग्रीवः कलानाथः कामदः करुणाकरः ।
कमलाध्युषितोत्सङ्गः श्रये कालीवशानुगः ॥ 30

श्रीहयग्रीवसहस्रनामस्तोत्रम्

निषच्चोपनिषच्चाथ नीचैरुच्चैःसमं सह ।
शश्वद्युगपदह्नाय शनैरेको बहुध्रुवः ॥
भूतसृद् भूरिदः साक्षी भूतादिः पुण्यकीर्तनः ।
भूमा भूमिरथोत्सद्धपुरुहूतः पुरुष्टुतः ॥
प्रफुल्लपुण्डरीकाक्षः परमेष्ठी प्रभावनः ।
प्रभुर्भर्गः सतां बन्धुर्भयध्वंसी भवापनः ॥
उद्यन्नुरुशयाहुंकृदुरुगाय उरुक्रमः ।
उदारस्त्रियुग स्त्र्यात्मा निदानं निलयो हरिः ॥
हिरण्यगर्भो हेमाङ्गो हिरण्यश्मश्रुरीशिता ।
हिरण्यकेशो हिमहा हेमवासा हितैषणः ॥
आदित्यमण्डलान्तस्स्थो मोदमानः समूहनः ।
सर्वात्मा जगदाधारः सन्निधिः सारवान् स्वभूः ॥
गोपतिर्गोहितो गोमी केशवः किन्नरेश्वरः ।
मायी मायाविकृतिकृत् महेशानो महामहः ॥
म मा मि मी मु मू मृ मॄ म्लृ म्लॄ मे मैं तथैव च ।
मोमौं बिन्दुर्विसर्गश्च ह्रस्वो दीर्घः प्लुतस्वरः ॥
34. उदात्तश्चानुदात्तश्च स्वरितः प्रचयस्तथा ।
कं खं गं घं ङं च चं छं जं झं ञं टं ठमेव च ॥
डं ढं णं तं थं च दं च धं नं पं फं बमेव च ।
भं मं यं रं लं च वं च शं षं सं हं ळमेव च ॥



श्रीहयग्रीवसहस्रनामस्तोत्रम्

क्षं यमो व्यंजनो जिह्वामूलीयोर्धविसर्गवान् ।
उपध्मानीय इति च संयुक्ताक्षरमेव च ॥
पदं क्रिया कारकश्च निपातो गतिरव्ययः ।
सन्निधिर्योग्यताऽऽकांक्षा परस्परसमन्वयः ॥
वाक्यं पद्यं संप्रदायो भावः शब्दार्थलालितः ।
व्यञ्जना लक्षणा शक्तिः पाको रीतिरलंकृतिः ॥
शय्या प्रौढध्वनिस्तद्वत्काव्यं सर्गः क्रिया रुचिः ।
नानारूपप्रबन्धश्च यशः पुण्यं महद्धनम् ॥
व्यवहारपरिज्ञानं शिवेतरपरिक्षयः ।
सद्यः परमनिर्वाणं प्रियपथ्योपदेशकः ॥
संस्कारः प्रतिभा शिक्षा ग्रहणं धारणं श्रमः ।
आसु(शु ?)ता स्वादिमा चित्रं विस्तारश्चित्रसंविधिः ॥
पुराणमितिहासश्च स्मृतिः सूत्रं च संहिता ।
आचार आत्मनस्तुष्टिराचार्याज्ञाऽनतिक्रमः ॥
श्रीमान् श्रीगीश्श्रियःकान्तः श्रीनिधिः श्रीनिकेतनः ।
श्रेयान् हयाननः श्रीदः श्रीमयः श्रितवत्सलः ॥
हंसश्शुचिषदादित्यो वसुश्चन्द्रोऽन्तरिक्षसत् ।
होता च वेदिषद्योनिरतिथिर्द्रोणसद्धविः ॥
नृषन्मृत्युश्च वरसदमृतं चर्तसद् ध्रुवः ।
व्योमसद्द्विविधस्फोटशब्दार्थव्यङ्ग्यवैभवः ॥ 50

## श्रीहयग्रीवसहस्रनामस्तोत्रम्

अब्जा रसःस्वादुतमो गोजा गेयो मनोहरः ।
ऋतजाःसकलं भद्रमद्रिजाःस्थैर्यमुत्तमम् ॥
ऋतं समज्ञा त्वनृतं बृहत्सूक्ष्मवशानुगः ।
सत्य ज्ञानमनन्तं यत् तत्सद्ब्रह्ममयोच्युतः ॥
अग्रेभवन्नगो नित्यः परमः पुरुषोत्तमः ।
योगनिद्रापरः स्वामी निध्यानपरनिर्वृतः ॥
रसो रस्यो रसयिता रसवान् रसिकप्रियः ।
आनन्दो नन्दयन् सर्वान् आनन्दी हयकन्धरः ॥
कालः कालयश्च कालात्मा कालाभ्युत्थितजागरः ।
कालसाचिव्यकृत् कान्ताकथितव्याधिकार्य(ल?)कः ॥
दृङ्न्यश्वनोदश्वनोद्यल्लयसर्गो लघुक्रियः ।
विद्यासहायो वागीशो मातृकामण्डलीकृतः ॥
हिरण्यं हंसमिथुनमीशानःशक्तिमान् जयी ।
गृहमेधी गुणी श्रीभूनीलालीलैकलालसः ॥
अङ्केनोदूह्य वाग्देवीमाचार्यकमुपाश्रयः ।
वेदवेदान्तशास्त्रार्थतत्त्वव्याख्यानतत्परः ॥
ह्रौं ह्रूं ह्रंहं हयो हंसूं हंसां हंसीं हसूं हसौं ।
हसूं हं हरिणो हारी हरिकेशो हरेडितः ॥
सनातनो निर्बीजस्सन्नव्यक्तो हृदयेशयः ।
अक्षरः क्षरजीवेशः क्षमी क्षयकरोऽच्युतः ॥





## श्रीहयग्रीवसहस्रनाम स्तोत्रम्

कर्ता कारयिता कार्यं कारणं प्रकृतिः कृतिः ।
क्षयक्षयमना मार्थो विष्णुर्जिष्णुर्जगन्मयः ॥
सङ्कुचन् विकचन् स्थाणुर्निर्विकारो निरामयः ।
शुद्धो बुद्धः प्रबुद्धश्च स्निग्धो मुग्धस्समुद्गतः ॥
सङ्कल्पदो बहुभवन् सर्वात्मा सर्वनामभृत् ।
सहस्रशीर्षः सर्वज्ञः सहस्राक्षः सहस्रपात् ॥
व्यक्तो विराट्स्वराट् सम्राट् विश्वरूपवपुर्विधुः ।
मायावी परमानन्दो मान्यो मायातिगो महान् ॥
वटपत्रशयो बालो ललन् अम्नायसूचकः ।
मुखन्यस्तकरग्रस्तपादाग्रपटलः प्रभुः ॥
नैद्रीहासा(?)श्वसंभूतज्ञाज्ञसात्त्विकतामसः ।
महार्णवाम्बुपर्यङ्कः पद्मनाभः परात्परः ॥
ब्रह्मभूर्ब्रह्मभयहृत् हरिरोमुपदेशकृत् ।
मधुकैटभनिर्माता मत्तब्रह्ममदापहः ॥ ४० ॥
वेधोविलापवागाविर्द्यासारोऽमृषार्थदः ।
नारायणास्त्रनिर्माता मधुकैटभमर्दनः ॥
वेदकर्ता वेदभर्ता वेदाहर्ता विदांवरः ।
पुङ्खानुपुङ्खहेषाढ्यः पूर्णषाड्गुण्यविग्रहः ॥
लालामृतकणव्याजवान्तनिर्दोषवर्णकः ।
उल्लोलध्वानधीरोद्यदुच्चैर्हलहलध्वनिः ॥

श्रीहयग्रीवसहस्रनामस्तोत्रम्

कर्णाद्यारम्य कल्कात्मा कविः क्षीरार्णवोपमः ।
शङ्खी चक्री गदी खड्गी शार्ङ्गी निर्भयमुद्रकः ॥
चिन्मुद्राचिह्नितो हस्ततलविन्यस्तपुस्तकः ।
विद्यानाम्नीं श्रियं शिष्यां वेदयन् निजवैभवम् ॥
अष्टार्णगम्योऽष्टभुजो व्यष्टिसृष्टिकरः पिता ।
अष्टैश्वर्यप्रदो ह्यष्टमूर्तिपितृस्तुतः ॥
आनीतवेदपुरुषो विधिवेदोपदेशकृत् ।
वेदवेदाङ्गवेदान्तपुराणस्मृतिमूर्तिमान् ॥
सर्वकर्मसमाराध्यः सर्ववेदमयो विभुः ।
सर्वार्थतत्त्वव्याख्याता चतुष्षष्टिकलाधिपः ॥
शुभयुक् सुमुखश्शुद्धः सुरूपस्सुगतिस्सुधीः ।
सुमतिस्संवृतिश्शूरः सुतपास्सुष्टुतिस्सुहृत् ॥
सुन्दरस्सुभगस्सौम्यस्सुखदस्सुहृदांप्रियः ।
सुचरित्रस्सुखतरश्शुद्धसत्त्वप्रदायकः ॥
रजस्तमोहरो वीरो विश्वरक्षाधुरन्धरः ।
नरनारायणाकृत्या गुरुशिष्यत्वमास्थितः ॥
परावरात्मा प्रबलः पावनः पापनाशनः ।
दयाघनः क्षमासारो वात्सल्यैकविभूषणः ॥
आदिकूर्मो जगद्भर्ता महापोत्री महीधरः ।
तडिद्वत् स्वामी हरिर्यक्षो हिरण्यरिपुरैच्छिकः ॥





श्रीहयग्रीवसहस्रनामस्तोत्रम्

प्रह्लादपालकः सर्वभयहर्ता प्रियंवदः ।
श्रीमुखालोकनस्त्रंसत्क्रौन्चकः कुहकाञ्चनः ॥
छत्री कमण्डलुधरो वामनो वदतांवरः ।
पिशुनात्माशनो दृष्टिलोपनो बलिमर्दनः ॥
उरुक्रमो बलिशिरोन्यस्ताङ्घ्रिर्बलिमर्दनः ।
जामदग्न्यः परशुभृत् कृत्तक्षत्रकुलोत्तमः ॥
रामोऽभिरामः शान्तात्मा हरकोदण्डखण्डनः ।
शरणागतसन्त्राता सर्वायोध्यकमुक्तिदः ॥
संकर्षणो मदोदग्रो बलवान् मुसलायुधः ।
कृष्णाक्लेशहरः कृष्णो महाव्यसनशान्तिदः ॥
इन्द्रालिङ्गोत्तरागर्भप्राणदः पार्थसारथिः ।
गीताचार्यो धराभारहारी षट्पुरमर्दनः ॥
कल्की विष्णुयशस्सूनुः कलिकालुष्यनाशनः ।
साधुदुष्कृतपरित्राणविनाशविहितोदयः ॥
वैकुण्ठे परमे तिष्ठन् सुकुमारयुवाकृतिः ।
विश्वोदयस्थितिध्वंससङ्कल्पेन स्वयंप्रभुः ॥
मदनानां च मदनो मणिकोटीरमानितः ।
मन्दारमालिकापीडो मणिकुण्डलमण्डितः ॥
सुस्निग्धनीलकुटिलकुन्तलः कोमलाकृतिः ।
सुललाटः सुतिलकः सुभ्रूकः सुकपोलकः ॥

श्रीहयग्रीवसहस्रनामस्तोत्रम्

सिद्धस्सदा सदालोकसुधास्यन्दिरदच्छदः ।
तारकाकोरकाकारविनिर्मितरदच्छदः ॥
ஓம் வேதாஹர்த்ரே நம:
ஓம் விதா3ம்வராய நம:
ஓம் புங்கா2நுபுங்க2ஹேஷாட்4யாய நம:
ஓம் பூர்ணஷாட்குண்யவிக்ரஹாய நம:
ஓம் லாலாம்ருதகணவ்யாஜவாந்தநிர் தோஷ
வர்ணாய நம:
ஓம் உல்லோலத்4வாநதீ4ரோத்யது
ச்சைர்ஹலஹலத்வநயே நம:
ஓம் கர்ணாதாரப்ய கல்காத்மநே நம:
ஓம் கவயே நம:
ஓம் க்ஷீரார்ண வோபமாய நம: 390
ஓம் சங்கி2நே நம:



ஓம் சக்ரிணே நம:
ஓம் கதிநே நம:
ஓம் கட்கி3நே நம:
ஓம் சார்ங்கிணே நம:
ஓம் நிர்ப்ப4யமுத்ரகாய நம:
ஓம் சிந்முத்ரா சிந்ஹிதாய நம:
ஓம் ஹஸ்ததலவிந்யஸ்த புஸ்தகாய நம:
ஓம் சிஷ்யபூத வித்யாஸ்ரீ நிஜவைபவ
வேத3காய நம:
ஓம் அஷ்டார்ணகம்யாய நம:
ஓம் அஷ்டபுஜாய நம: 400
ஓம் வ்யஷ்டி ஸ்ருஷ்டி கராய நம:
ஓம் பித்ரே நம:
ஓம் அஷ்டைச்வர்ய ப்ரதாய நம:
ஓம் ஹ்ருஷ்யதஷ்டமூர்த்தி
பித்ருஸ்துதாய நம:
ஓம் ஆநீதவேதபுருஷாய நம:
ஓம் விதிவேதோபதேசக்ருதே நம:
வேதவேதாங்க வேதாந்த புராண
ஸ்ம்ருதி மூர்த்திமதே நம:
ஓம் ஸ்ர்வகர்ம ஸமாராத்யாய நம:
ஓம் ஸ்ர்வவேதமயாய நம:
ஓம் விபவே நம: 410
ஓம் ஸ்ர்வார்த்தத்வவ்யாக்யாத்ரே நம:
ஓம் சதுஷ்ஷஷ்டிகலாதிபாய நம:
ஓம் சுபயுஜே நம:
ஓம் ஸுமுகாய நம:
ஓம் சுத்தாய நம:
ஓம் ஸுரூபாய நம:

ஓம் ஸுகதாய நம:
ஓம் ஸூதி4யே நம:
ஓம் ஸுவ்ருதயே நம:
ஓம் ஸம்வ்ருதே நம: 420
ஓம் சூராய நம:
ஓம் ஸுதபஸே நம:
ஓம் ஸுஷ்டுதயே நம:
ஓம் ஸுஹ்ருதே நம:
ஓம் ஸுந்தராய நம:
ஓம் ஸுபகாய நம:
ஓம் ஸௌம்யாய நம:
ஓம் ஸுக2தாய நம:
ஓம் ஸுஹ்ருதாம் ப்ரியாய நம:
ஓம் ஸுசரித்ராய நம: 430
ஓம் ஸுக2தராய நம:
ஓம் சுத்தஸத்வ ப்ரதாயகாய நம:
ஓம் ரஜஸ்தமோஹராய நம
ஓம் வீராய நம:
ஓம் விச்வரக்ஷாதுரந்தராய நம:
ஓம் நரநாராயணாக்ருத்யா
குருசிஷ்யத்வமாஸ்த்திதாய நம:
ஓம் பராவராத்மநே நம:
ஓம் ப்ரபலாய நம:
ஓம் பாவநாய நம:
ஓம் பாபநாசனாய நம: 440
ஓம் தயாக4னாய நம:
ஓம் க்ஷமாஸாராய நம:
ஓம் வாத்ஸல்யைகவிபூஷணாய நம:
ஓம் ஆதிகூர்மாய நம:



ஓம் ஜகத்ப4ர்த்ரே நம:
ஓம் மஹாபோத்ரிணே நம:
ஓம் மஹீத4ராய நம:
ஓம் மஹீபித்ஸ்வாமிநே நம:
ஓம் ஹரயே நம:
ஓம் யக்ஷாய நம: 450
ஓம் ஹிரண்யரிபவே நம:
ஓம் ஐச்சி2காய நம:
ஓம் ப்ரஹ்லாதபாலகாய நம:
ஓம் ஸர்வப4யஹர்த்ரே நம:
ஓம் ப்ரியம்வதாய நம:
ஓம் ஸ்ரீமுகா2லோகனஸ்ரம்
ஸத்க்ரௌஞ்சகாய நம:
ஓம் குஹகாஞ்சனாய நம:
ஓம் ச்சத்ரிணே நம:
ஓம் கமண்டலுதராய நம:
ஓம் வாமனாய நம: 460
ஓம் வததாம்வராய நம:
ஓம் பிசுனாத்யோசனோத்ருஷ்டி லோபநாய நம:
ஓம் பலிதர்த3னாய நம:
ஓம் உருக்ரமாய நம:
ஓம் பலிசிரோந்யஸ்தாங்க்ரயே நம:
ஓம் பலிமர்த3னாய நம:
ஓம் ஜாமதக்ந்யாய நம:
ஓம் பரசுப்ருதே நம:
ஓம் க்ருத்தக்ஷத்ரகுலோத்தமாய நம:
ஓம் ராமாய நம:
ஓம் அபிராமாய நம: 470
ஓம் சாந்தாத்மநே நம:

ஓம் ஹரகோதண்டக$^{2}$ண்டநாய நம:
ஓம் சரணாகதஸந்த்ராத்ரே நம:
ஓம் ஸர்வாயோத்$^{4}$யகமுக்த்தாய நம:
ஓம் ஸங்கர்ஷணாய நம:
ஓம் மதோதக்ராய நம:



ஓம் பலவதே நம:
ஓம் முஸலாயுதா$^{4}$ய நம:
ஓம் க்ருஷ்ணாக்லேசஹராய நம: 480
ஓம் க்ருஷ்ணாய நம:
ஓம் மஹாவ்யஸந சாந்த்தாய நம:
ஓம் இங்கலாலிதோத்தராகர்ப்பராணதாய நம:
ஓம் பார்த்த ஸாரதயே நம:
ஓம் கீதாசார்யாய நம:
ஓம் தராபரஹாரிணே நம:
ஓம் ஷட்புமர்த்தனாய நம:
ஓம் கல்கிநே நம:



ஓம் விஷ்ணாயசஸ்ஸுநவே நம:
ஓம் கலிகாலுஷ்ய நாசநாய நம: 490
ஓம் ஸாதுபரித்ராணவிஹிதோதயாய நம:
ஓம் துஷ்க்ருத்வி நாசவிஹிதோதயாய நம:
ஓம் பரமவைகுண்டஸ்த்தாய நம:
ஓம் ஸுகுமாரயுவாக்ருதயே நம:
ஓம் விச்வோதயஸங்கல்ப்ப ப்ரபவே நம:
ஓம் விச்வஸ்த்திதிப்ரபவே நம:
ஓம் விச்வத்வம்ஸ்பரபவே நம:
ஓம் மதநமதநாய நம:
ஓம் மணிகோடீரமாநிதாய நம:
ஓம் மந்தார மாலிகா பீடாய நம:





ஓம் மணிகுண்டல மண்டிதாய நம:
ஓம் ஸுஸ்நிக்த நீல குடிலகுந்தளாய நம:
ஓம் கோமளாக்ருதயே நம:
ஓம் ஸுலலாடாய நம:
ஓம் ஸுதிலகாய நம:
ஓம் ஸுப்ருகாய நம:
ஓம் ஸுகபோலாய நம:
ஓம் ஸதாஸித்தாய நம:
ஓம் ஸதாலோக ஸுதாஸ்யந்தி ரதச்சதா$^{3}$ய நம:
ஓம் தாரகாகோரகாகாரவிநிர் மிதரதச்சதாய நம: 510
ஓம் ஸுதாவர்த்தி பரிஸ்பூர்த்தி சோப$^{4}$மா
நரதச்சதாய நம:
ஓம் விஷ்டப்தாய நம:
ஓம் விபுலக்ரீவாய நம:
ஓம் நிப்ருதோச்சைச்ரவஸ்திதயே நம:
ஓம் ஸமாவ்ருத்தாவதாதோரு முத்தாப்ராலம்ப
பூஷணாய நம:
ஓம் ரத்நாங்கதிநே நம:
ஓம் வஜ்ரநிஷ்கிணே நம:
ஓம் நீலரத்னாங்க கங்கணாய நம:
ஓம் ஹரிந்மணிகணாபத்தச்ருங்கலா
கங்கணோர்மிகாய நம: 520
ஓம் ஸிதோபவீத ஸம்ச்லிஷ்யத் பத்மாக்ஷ
மணிமாலிகாய நம:
ஓம் ஸ்ரீசூர்ணவத் த்வாதசஊர்த்வ
புண்ட்ரரேகா பரிஷ்க்ருதாய நம:
ஓம் பட்டதந்துக்ரதநவத்பவித்ர ஸரசோபி4தாய நம:
ஓம் பீநவக்ஷஸே நம:
ஓம் மஹாஸ்கந்தா$^{4}$ய நம:

ஓம் விபுலோருகடீதடாய நம:
ஓம் கௌஸ்துபி$^4$நே நம:
ஓம் வநமாலிநே நம:
ஓம் காந்த்யாசந்த்ராயுதோபமாய நம:
ஓம் மந்தார மாலிகா மோதிநே நம: 530
ஓம் மஞ்ஜுவாசே நம:
ஓம் அமலச்சவயே நம:
ஓம் திவ்யகந்தாய நம:
ஓம் திவ்யரஸாய நம:
ஓம் திவ்யதேஜஸே நம:
ஓம் திவஸ்பதயே நம:
ஓம் வாசாலாய நம:
ஓம் வாக்பதயே நம:
ஓம் வக்த்ரே நம:
ஓம் வ்யாக்யாத்ரே நம: 540
ஓம் வாதிநாம்ப்ரியாய நம:
ஓம் பக்தஹ்ருந்மதுராய நம:
ஓம் வாதிஜிஹ்வாப$^4$த்ராஸந ஸ்த்திதாய நம:
ஓம் ஸ்ம்ருதி ஸந்நிஹிதாய நம:
ஓம் ஸ்நிக்தா$^4$ய நம:
ஓம் ஸித்திதாய நம:
ஓம் ஸித்தஸந்நுதாய நம:
ஓம் மூலகந்தாய நம:
ஓம் முகுந்தாய நம:
ஓம் க்லாவே நம: 550
ஓம் ஸ்வயம்புவே நம:
ஓம் சம்பவே நம:
ஓம் ஐந்தவாய நம:



ஓம் இஷ்டாய நம:
ஓம் மநவே நம:
ஓம் யமாய நம:
ஓம் அகாலகால்யாய நம:
ஓம் கம்புகலா நிதயே நம:
ஓம் கல்யாய நம:
ஓம் காமயித்ரே நம: 560
ஓம் பீமாய நம:
ஓம் காதர்ய ஹரணாய நம:
ஓம் க்ருதயே (க்ருதிநே) நம:
ஓம் ஸம்ப்ரியாய நம:
ஓம் பக்கணாய நம:
ஓம் தர்க்காய நம:
ஓம் சர்ச்சாயை நம:
ஓம் நிர்த்தாரணாதயே நம:
ஓம் வ்யதிரேகாய நம:
ஓம் விவேகாய நம: 570
ஓம் ப்ரவேசாய நம:
ஓம் ப்ரக்ரமாய நம:
ஓம் க்ரமாய நம:
ஓம் ப்ரமாணாய நம:
ஓம் ப்ரதிபுவே நம:
ஓம் ப்ராக்ஞாய நம:
ஓம் பத்$^2$யப்ரக்ஞாபூதாய நம:
ஓம் தா$^4$ரணாய நம:
ஓம் வித$^4$யே நம:
ஓம் விதாத்ரே நம: 580
ஓம் வ்யவத$^4$யே நம:

ஓம் உத்பவாய நம:
ஓம் ப்ரபவே நம:
ஓம் ஸ்த்திதயே நம:
ஓம் விஷயாய நம:
ஓம் ஸம்சயாய நம:
ஓம் பூர்வபக்ஷாய நம:
ஓம் கக்ஷ்யோபபாதகாய நம:
ஓம் ராத்தாந்தாய நம:
ஓம் விஹிதாய நம: 590
ஓம் ந்யாய பல நிஷ்பத்தயே நம:
ஓம் உத்பவாய நம:
ஓம் நாநாரூப தந்த்ராத்மநே நம:
ஓம் வ்யவஹார்யாய நம:
ஓம் வ்யஸ்திதயே நம:
ஓம் ஸர்வஸாதாரணாய நம:
ஓம் தேவாய நம:
ஓம் ஸாத்வஸாதுஹிதரதாய நம:
ஓம் ஸந்தாயை நம:
ஓம் ஸநாதநதர்மாய நம: 600
ஓம் தர்மார்ச்யாய நம:
ஓம் சந்தோமயாய நம:
ஓம் த்ரிதாமாத்மநே நம:
ஓம் ஸ்வச்சந்தாய நம:
ஓம் சா$^{2}$ந்தஸேடி$^{3}$தாய நம:
ஓம் யஜ்ஞாய நம:
ஓம் யக்ஞாத்மகாய நம:
ஓம் யஷ்ட்ரே நம:
ஓம் யக்ஞாங்காய நம:



ஸ்ரீ பௌண்டரிகபுரம் (பரவகோட்டை)
ஆண்டவன் ஸ்ரீ கோபாலதேசிக மஹாதேசிகன்



ஸ்ரீ மாலோலன் (ஸ்ரீ அகோபிலம்)



ஓம் அபக4நாய நம: 610
ஓம் ஹவிஷே நம:
ஓம் ஸமிதே4 நம:
ஓம் ஆஜ்யாய நம:
ஓம் புரோடாசாய நம:
ஓம் சாலாயை நம:
ஓம் ஸ்த்தால்யை நம:
ஓம் ஸ்ருவாய நம:
ஓம் ஸ்ருசே நம:
ஓம் ப்ராக்வம்சாய நம:
ஓம் தேவயஜநாய நம: 620
ஓம் பரித4யே நம:
ஓம் பரிஸ்தராய நம:
ஓம் வேதயே நம:
ஓம் விஹரணாய நம:
ஓம் த்ரேதாயை நம:
ஓம் பசவே நம:
ஓம் பாசாய நம:
ஓம் ஸம்ஸ்க்ருதயே நம:
ஓம் விதயே நம:
ஓம் மந்த்ராய நம: 630
ஓம் அர்த்தவாதாய நம:
ஓம் த்ரவ்யாய நம:
ஓம் அங்காய நம:
ஓம் தைவதாய நம:
ஓம் ஸ்தோத்ராய நம:
ஓம் சஸ்த்ராய நம:
ஓம் ஸாம்நே நம:
ஓம் கீதயே நம:

ஓம் உத்கீ$^{3}$தா$^{2}$ய நம: 640
ஓம் ஸர்வஸாதனாய நம:
ஓம் யாஜ்யாயை நம:
ஓம் புரோநுவாக்யாயை நம:
ஓம் ஸாமிதே$^{4}$ந்யை நம:
ஓம் ஸமூஹநாய நம:
ஓம் ப்ரயோக்த்ராத்மநே நம:
ஓம் ப்ரயோகாய நம:
ஓம் ப்ரபஞ்சாய நம:
ஓம் ப்ராசுபாவாய நம:
ஓம் க்ரமாய (ச்ரமாய) நம: 650
ஓம் ச்ரத்தாயை நம:
ஓம் ப்ரத்வம்ஸநாயை நம:
ஓம் துஷ்டயே நம:
ஓம் புஷ்டயே நம:
ஓம் புண்யாய நம:
ஓம் ரதயே நம:
ஓம் பவாய நம:
ஓம் ஸதஸே நம:
ஓம் ஸதஸ்ய ஸம்பாதாய நம:
ஓம் ப்ரச்னாய நம: 660
ஓம் ப்ரதிவசஸ்ஸ்த்திதயே நம:
ஓம் ப்ராயச்சித்தாய நம:
ஓம் பரிஷ்காராய நம:
ஓம் த்$^{4}$ருதயே நம:
ஓம் நிர்வஹணாய நம:
ஓம் ப$^{2}$லாய நம:
ஓம் நியோகா$^{3}$ய நம:
ஓம் பா$^{4}$வநாயை நம:



ஓம் பா$^{4}$வ்யாய நம:
ஓம் ஹிரண்யாய நம:
ஓம் தக்ஷிணாயை நம: 670
ஓம் நுதயே நம:
ஓம் ஆசிஷே நம:
ஓம் அப்யுப பத்தயே நம:
ஓம் த்ருப்தயே நம:
ஓம் ஸ்வாய நம:
ஓம் கேவலசர்மணே நம:
ஓம் புண்யக்ஷயாய நம:
ஓம் புந: பாதபயாய நம:
ஓம் சிக்ஷாசுகர்த்தனாய நம:
ஓம் கார்ப்பண்யாய நம: 680
ஓம் யாதநாயை நம:
ஓம் சிந்தாயை நம:
ஓம் நிர்வேதாய நம:
ஓம் விஹஸ்ததாயை நம:
ஓம் தேஹப்ருத் கர்ம ஸம்பாதாய நம:
ஓம் கிஞ்சிதகர்மாநுகூலகாய நம:
ஓம் அஹேதுகப்ரேம்ணே நம:
ஓம் ஸாம்முக்யாய நம:
ஓம் அநுக்ரஹாய நம:
ஓம் சுசயே நம: 690
ஓம் ஸ்ரீ மத்குலஜநாய நம:
ஓம் நேத்ரே நம:
ஓம் ஸத்வாபிமாநவதே நம:
ஓம் அந்தராய ஹராய நம:
ஓம் அதுஷ்டாஹாரதாயகாய நம:
ஓம் சுத்தாஹாராநுரூபாங்க

பரிணாமவிதாயகாய நம:

ஓம் ஸ்ராவபாதாதி விபத் பரிஹாரிணே நம:

ஓம் பராயணாய நம:

ஓம் சிர: பாண்யாதி ஸந்தாத்ரே நம:

ஓம் க்ஷேமக்ருதே நம: 700

ஓம் ப்ராணதாய நம:

ஓம் ப்ரபவே நம:

ஓம் அநிர்க்ருணாய நம:

ஓம் அவிஷமாய நம:

ஓம் சக்தித்ரிதய தாயகாய நம:

ஓம் ஸ்வேச்சாப்ரஸங்க ஸம்பத்தி வ்யாஜ

ஹர்ஷவிசேஷவதே நம:

ஓம் ஸம்வித்ஸந்தா$^4$யகாய நம:

ஓம் ஸர்வஜந்மக்லேச ஸ்ம்ருதிப்ரதாய நம:

ஓம் விவேக விதா$^4$யகாய நம:

ஓம் சோகவிதா$^4$யகாய நம: 710

ஓம் வைராக்ய விதாயகாய நம:

ஓம் பவபீதி விதாயகாய நம:

ஓம் கர்ப்பஸ்ய அநுகூலாத்$^3$யத்$^4$யவஸாய ப்ரதாய நம:

ஓம் சுபவைஜநநோ பேதஸதநேஹாய நம:

ஓம் ஜநிப்ரதாய நம:

ஓம் உத்தமாயு ப்ரதாய நம:

ஓம் ப்ரஹ்ம நிஷ்டாநுக்ரஹகாரகாய நம:

ஓம் ஸ்வதாஸஜந நிஸ்தீர்ண தத்வம்சஜ பரம்பராய நம:

ஓம் ஸ்ரீ வைஷ்ணவோத்பாதக்ருத

ஸ்வஸ்திகாவநி மண்டலாய நம: 720

ஓம் ஆதர்வணோக்தைகசதம்

ருத்யுதூர க்ரியாபராய நம:

ஓம் தயாத்ய ஷ்டகுணாதா$^4$த்ரே நம:



ஓம் தத்தத் ஸம்ஸ்க்ருதி ஸாத$^4$காய நம:

ஓம் மேதா$^4$விதா$^4$த்ரே நம:

ஓம் ச்ரத்தா4க்ருதே நம:

ஓம் ஸௌக்யதாய நம:

ஓம் ஜாமிதாஹராய நம:

ஓம் விக்நநுதே$^3$ நம:

ஓம் விஜயாதா$^4$த்ரே நம:

ஓம் தேசகாலாநு கூல்யக்ருதே நம: 730

ஓம் விநேத்ரே நம:

ஓம் ஸத்பதா$^2$நேத்ரே நம:

ஓம் தோஷஹ்ருதே நம:

ஓம் சுப$^4$தாய நம:

ஓம் ஸக்யே நம:

ஓம் ஹ்ரீதா$^3$ய நம:

ஓம் பீ$^4$தா$^3$ய நம:

ஓம் ருசிகராய நம:

ஓம் விச்வாய நம:

ஓம் விச்வஹிதேரதாய நம: 740

ஓம் ப்ரமாதஹ்ருதே நம:

ஓம் ப்ராப்தகாரிணே நம:

ஓம் ப்ரத்யும் நாய நம:

ஓம் பலவத்தராய நம:

ஓம் ஸாங்கவேதஸமாயோக்ரே நம:

ஓம் ஸர்வசாஸ்த்ரார்த்த வித்திதா$^3$ய நம:

ஓம் ப்ரஹ்ம சர்யாந்தராயக்$^4$நாய நம:

ஓம் ப்ரியக்ருதே நம:

ஓம் ஹிதக்ருதே நம:

ஓம் பராய நம: 750

ஓம் சித்தசுத்திப்ரதாய நம:

ஓம் சி$^{2}$ந்நாக்ஷசாபல்யாய நம:
ஓம் க்ஷமாவஹாய நம:
ஓம் இந்த்$^{2}$ரியார்த்த$^{2}$ரதிச்சே$^{4}$த்ரே நம:
ஓம் வித்யை கவ்யஸநாவஹாய நம:
ஓம் ஆத்மாநு கூல்யருசிக்ருதே நம:
ஓம் அகிலார்த்தி விநாசகாய நம:
ஓம் திதீர்ஷுஹ்ருத் தவராவேதிநே நம:
ஓம் குருஸத்பக்திதேஜநாய நம:
ஓம் உருஸம்பந்த$^{4}$க$^{4}$டகாய நம: 760
ஓம் குருவிச்வாஸவர்த்த$^{4}$நாய நம:
ஓம் குரூபாஸந ஸந்தாத்ரே நம:
ஓம் குரூப்ரேம பரவர்த்தநாய நம:
ஓம் ஆசார்யாபி மதைர்யோக்த்ரே நம:
ஓம் பஞ்ச ஸம்ஸ்க்ருதிபாவநாய நம:
ஓம் குருக்தவ்ருத்திநைச்சல்ய ஸந்தாத்ரே நம:
ஓம் அவஹிதஸ்த்திதயே நம:
ஓம் ஆபந்நாகிலரக்ஷார்த்தரய நம:
ஓம் ஆசார்யகமுபாச்ரிதாய நம:
ஓம் சாஸ்த்ரபாணிப்ரதா$^{3}$நக்ருதப$^{4}$வமக்ந
ஸமுத்த$^{4}$ரணாய நம: 770
ஓம் பாஞ்ச காலிகதர்ம நைச்
சல்யப்ரதி பாதகாய நம:
ஓம் ஸ்வதாஸாராதனாத்யர்த்த
சுத்தத்ரவ்ய ப்ரதாயகாய நம:
ஓம் ந்யாஸவித்யாவிநிர் வோட்ரே நம:
ஓம் ந்யஸ்தாத்மப$^{4}$ர ரக்ஷகாய நம:
ஓம் ஸ்வகைங்கர்யைகருசிதாய நம:
ஓம் ஸ்வதாஸ்ய ப்ரேமவர்த்தனாய நம:
ஓம் ஆசார்யார்த்தாகில த்ரவ்யஸம்ப்ருத்



யர்ப்பணரோசகாய நம:
ஓம் ஆசார்யஸ்ய ஸ்வஸச் சிஷ்யோஜ்
ஜீவநைகருசிப்ரதாய நம:
ஓம் ஆகத்யயோஜயதே நம:
ஓம் தாஸஹிதைதக்ருதி ஜாகராய நம: 780
ஓம் ப்ரஹ்மவித்யா ஸமாஸ்வாத ஸுஹிதாய நம:
ஓம் க்ருதஸமஸ்க்ருதயே நம:
ஓம் ஸத்யகாரே விஷதீ$^{4}$தா$^{3}$த்ரே நம:
ஓம் தருண்யாம் சவபுத்தி$^{4}$தாய நம:
ஓம் ஸபா$^{4}$ம் வ்யாளீம் ப்ரத்யாயயதே நம:
ஓம் ஸர்வத்ர ஸமபுத்திதாய நம:
ஓம் ஸம்பாவிதா சேஷதோஷஹ்ருதே நம:
ஓம் புநர் ந்யாஸ ரோசகாய நம:
ஓம் மஹாவிச்வாஸ ஸந்தாத்ரே
ஸ்த்தைர்யதாத்ரே நம:
ஓம் மதாபஹாய நம: 790
ஓம் வாதவ்யாக்யா ஸ்வஸித் தாந்த
ரக்ஷாஹேது ஸ்வ மந்த்ரதாய நம:
ஓம் ஸ்வமந்த்ரஜப ஸம்ஸித்தி ஜங்கா$^{4}$ல
கவிதோ தயாய நம:
ஓம் அதுஷ்டகுணவத் காவ்யபந்த
வ்யாமுக்த$^{4}$சேதநாய நம:
ஓம் வ்யங்க்ய ப்ரதா$^{4}$னரஸவத் க$^{3}$த்யபத்$^{3}$யாதி
நிர்மிதயே நம:
ஓம் ஸ்வப$^{4}$க்தி ஸ்துதிஸந்துஷ்டாய நம:
ஓம் பூயோபக்தி ப்ரதாயகாய நம:
ஓம் ஸாத்விகத்யாக ஸம்பந்ந
ஸத்கர்மக்ருத$^{3}$திப்தரியாய நம:
ஓம் நிரந்தராநு ஸ்மரண நிஜதாஸைக

தாஸ்யக்ருதே நம:
ஓம் நிஷ்காமவத்ஸலாய நம:
ஓம் நைச்யபா⁴வந நிர்விஷ்டாய நம: 800
ஓம் ஸர்வபூத பவத்பாவதர்சிஜநஸ
தாஸ்த்திதாய நம:
ஓம் கரணத்ரய ஸாரூப்ய கல்யாணவஜ்ஜந
ஸாதராய நம:
ஓம் கைங்கர்யகாமி சேஷித்வ பா⁴ஜே நம:
ஓம் பரவ்யூஹரதி நிர்தோஷசுபாச்ரய
பரிக்ரஹாய நம:
ஓம் சந்த்ரமண்டல மத்யஸ்த்த ச்வேதாம்
போருஹ விஷ்டராய நம:
ஓம் ஜ்யோத்ஸ்நாயமா நாங்கருசி
நிர்த்தூதாந்தர் பஹிஸ்தமஸே நம:
ஓம் பா⁴வ்யாய நம:
ஓம் ப⁴த்ரபா⁴வயித்ரே நம:
ஓம் பாரிஜாதவநாலயாய நம:
ஓம் க்ஷீராப்திமத்யமத்வீப பாலகாய நம: 810
ஓம் ப்ரபிதாமஹாய நம:
ஓம் நிரந்தர நமோவாக சுத்த யாஜி
ஹ்ருதாச்ரயாய நம:
ஓம் முக்தித்ச்வேத ம்ருத்ரூப ச்வேதத்வீப
விபாவநாய நம:
ஓம் கருடா ஹாரிதச்வேத ம்ருத் பூத யது பூ⁴தராய நம:
ஓம் பத்ராச்வ வர்ஷநிலயாய நம:
ஓம் ப⁴யஹாரிணே நம:
ஓம் சுபா⁴ச்ரயாய நம:
ஓம் பத்ர ஸ்ரீ வத்ஸ்ஹாரட்யாய நம:
ஓம் பஞ்சராத்ர ப்ரவர்த்தகாய நம:



ஓம் பக்தாத்மபாவ பவநாய நம: 820
ஓம் ஹார்தாய நம:
ஓம் அங்குஷ்ட்ட ப்ரமாணவதே நம:
ஓம் ஸ்வதாஸ ஸத்க்ருத்யா க்ருத்யாஸ்பதீக்ருத
தந்மித்ராரயே நம:
ஓம் ப்ராணோத்க்ராமணாய நம:
ஓம் ஊரீக்ருத ப்ராரப்தலோபநாய நம:
ஓம் லகுசிக்ஷாக்ஷபிதா சேஷபாபாய நம:
ஓம் த்ரிஸ்த்தூண க்ஷேபபூர்வக ஸூக்ஷ்ம
வபுஸ்ஸ்ருஜே நம:
ஓம் நிரங்குச க்ருபாபூராய நம:
ஓம் நித்ய கல்யாணகாரகாய நம:
ஓம் மூர்த்தந்ய நாட்யோதஞ்சிதஸ்வதாஸாய நம: 830
ஓம் உபாஸகப்ராரப்த கர்மமாத்ராநுபாவநாய நம:
ஓம் ஸர்வப்ராரப்த தேஹாந்ததிஷ்டாந்திம
ஸ்மரணாய நம:
ஓம் பக்தப்ரபந்நயமத் ருஷ்ட் யபாவகாய நம:
ஓம் திவ்யதேசப்ரதாய நம:
ஓம் மோக்ஷப்ரவ்ருத்தாநாம்ஸுர்யம் த்வாரயதே நம:
ஓம் ஆதிவாஹிக ஸத்காரை ரத்வநி மாநயதே நம:
ஓம் ஸர்வக்ர து⁴ஜ சத்வத் ப்ராப்ருதாநி ப்ரதாபயதே நம:
ஓம் துரந்தமாயாகாந்தாரத்³ருதலங்க⁴ நஹேதவே
நம:
ஓம் ஸ்பா²யத்ஸுதர்ச விவிதவீகாத்வநேத்ரே நம:
ஓம் ஸீமாந்த ஸிந்துபூ⁴த விரஜோத்தாரகாய நம: 840
ஓம் வசிநே நம:
ஓம் சிரோநிதாபிதாமாநவகராய நம:
ஓம் அநாதி வாஸநா தூநாய வைகுண்டேஸா
லோக்யதாய நம:

ஓம் அஹேய மங்களோதார தேஹேந ஸாரூப்யதாய நம:

ஓம் ஸூரிஜுஷ்டஸூகைகாந்த பரமபத ப்ராபகாய நம:

ஓம் அரண்யாக்யாம்ருதார்ணவ த்வயதர்சகாய நம:

ஓம் ச்ரமநாசநாய நம:

ஓம் திவ்யோத்யா நஸரோவாபீ ஸரின்மணிபர்வத ப்ராபகாய நம:

ஓம் ஐரம்மதாம்ருத ஸரஸ் ஸங்கமநாய நம:

ஓம் ச்ர்யு (ஸ்) பப்ருஹ் மணாய நம: 850

ஓம் ஸோமஸவநாச்வத்த ப்ராபகாய நம:

ஓம் விஷ்டரச்ரவஸே நம:

ஓம் திவ்யாப்ஸரஸ் ஸமாநீத ப்ரஹ்மாலங்கார தாயகாய நம:

ஓம் திவ்யவாஸோஞ் ஜநக்ஷௌமமால்ய க்ருதபஹுமாநாய நம:

ஓம் ஸ்வாயோத்யா நகரஸாதர ப்ரவேசகாய நம:

ஓம் தாஸவிக்ரஹஸ்த்தாபித திவ்யரஸ கந்தாலோகாய நம:

ஓம் ஸ்வதாஸ பஹுமாநநஸூரிவர்க்காய நம:

ஓம் ஸூரிஸே வோதி தாநந்த நைச்ய ஸ்வஜநாதி சாயகாய நம:

ஓம் நமோ வீப்ஸாகாரகாய நம:

ஓம் பரஹ்வக்ருதாஞ் ஜலித்வா பாதகாய நம: 860

ஓம் ப்ராகாராதிப்ரணாம காரகாய நம:

ஓம் இந்த்ரப்ரஜாபதி த்வாரபாலப்ராபகாய நம:

ஓம் மாலிகாஞ்சித மஹாராஜவீதிமத்ய ஸ்தாபகாய நம:

ஓம் ஸ்ரீ வைகுண்ட புரந்த்ரீகாரித நாநாஸத்காராய நம:

ஓம் திவ்யவிமாநப்ராபகாய நம:



ஓம் ப்ரஹ்மகாந்தி பூரகாய நம:

ஓம் மஹாநந்தாத்மகாய ஸ்ரீ மந்மணிமண்டப ப்ராபகாய நம:

ஓம் குமுதசண்டாதி ப்ராபிதவிஷ்வக் ஸேநாந்திகாய நம:

ஓம் ஸேநேசசோதிதாஸ்த்தாந நாயகாய நம:

ஓம் ஹேதிநாயகாய நம: 870

ஓம் திவ்யாஸ்த்தான ப்ராபகாய நம:

ஓம் வைநதேய ப்ரணாமயித்ரே நம:

ஓம் ஸ்ரீமத் ஸூந்தர ஸூரீந்த்ர திவ்யபங்க்தி ப்ராணாமயித்ரே நம:

ஓம் பாஸ்வராஸந பர்யங்க ப்ராபகாய நம:

ஓம் பர்யங்கவித்யா ஸம்ஸித்த ஸர்வவைபவாய நம:

ஓம் ஸ்ரீ காந்தேச ஸ்வாத்மதர்சகாய நம:

ஓம் சேஷதைகரதி மசேஷ ப்ரணாமநாய நம:

ஓம் அநந்தாக்ஷித்விஸாஹஸ்ர ஸாதராலோக பாத்ரதாப்ராபகாய நம:

ஓம் சுகுமார யுவாகாராய நம:

ஓம் அநவச்சி2ந்நாநந்த காரிதகிலிகிஞ்சிதாய நம:880

ஓம் தாஸக்ருதாஸங்கய ப்ரணமநோத்தாந ப்ரஸந்ந ஹ்ருதே நம:

ஓம் ஸ்ரீ ஸஹித ஸ்வப்ராப்த்யா ஜீவ புத்ர ப்ரஹர்ஷகாய நம:

ஓம் ஸ்வமுகா2ம்போதி மஜ்ஜந காரிணே நம:

ஓம் ஸ்வகீர்த்த நருசிப்ரதாய நம:

ஓம் தயாகங்காப்லாவந க்ருதார்த்த தாபாதகாய நம:

ஓம் லக்ஷ்ம்யாஸஹிதாய பர்யங்காரோஹண ப்ரஹ்வலாலநாய நம:

ஓம் கஸ்த்வமிதி ப்ருச்சதே நம:

ஓம் தாஸோஸ்மீத்யுக்திவிஸ்மிதாய நம:
ஓம் அப்ருதக்த்வ ப்ரகாரோக்திவிஸ்மிதாய நம:
ஓம் வாசாஸ்வாச்ரிதவத்பவதே நம: 890
ஓம் யதோபாஸநத்ருச்யஹயாஸ்ய ரூபாய நம:
ஓம் வாஸுதேவாய நம:
ஓம் வைகுண்டநாயகாய நம:
ஓம் யதாததைவஸ்வரூப ப்ரகாசகாய நம:
ஓம் ஜகந்மோஹநமூர்த்தயே நம:
ஓம் த்விமூர்த்தி ப்ரகாசகாய நம:
ஓம் பஹுமூர்த்தி ப்ரகாசாகாய நம:
ஓம் ஸ்வதோ யுகபத்ஸர்வ ஸாக்ஷாத்காரகாரிணே நம:
ஓம் காவ்யாதேசகாய நம:
ஓம் முக்தாதிகவயே நம: 900
ஓம் ஷடர்ணநிஷ்டச்வேத த்வீபஸ்திதிப்ரதாய நம:
ஓம் த்வாதசாக்ஷர நிஷ்ட
ஸாந்தாநிகலோகதாயிநே நம:
ஓம் அஷ்டாக்ஷரநிஷ்டகார்ய வைகுண்டதாயினே நம:
ஓம் சரணாகத நிஷ்டமுக்கிய வைகுண்டதாயினே
நம:
ஓம் ஸ்வமந்த்ரராஜநிஷ்டததிசய தாயினே நம:
ஓம் ஸ்ரீகாடோ$^4$ப கூடா$^4$ய நம:
ஓம் பூத தாத்ரீருசிதாய நம:
ஓம் நீலாவிபூதிவ்யாமுகதாய நம:
ஓம் மஹாச்வேதாச்வ மஸ்தகாய நம:
ஓம் தர்யக்ஷாய நம: 910
ஓம் த்ரிபுர ஸம்ஹாரிணே நம:
ஓம் ருத்ராய நம:
ஓம் ஸ்கந்தாய நம:
ஓம் விநாயகாய நம:



ஓம் அஜாய நம:
ஓம் விரிஞ்சாய நம:
ஓம் த்ருஹிணாய நம:
ஓம் வ்யாப்த மூர்த்தயே நம:
ஓம் அமூர்த்திகாய நம:
ஓம் அஸங்காய நம: 920
ஓம் அநந்யதீஸங்க விஹங்காய நம:
ஓம் வைரிப$^4$ங்கதாய நம:
ஓம் ஸ்வாமிநே நம:
ஓம் ஸ்வாய நம:
ஓம் ஸந்துஷ்யதே நம:
ஓம் சக்ராய நம:
ஓம் ஸர்வாதிகஸ்யதாய நம:
ஓம் ஸ்வயம் ஜ்யோதிஷே நம:
ஓம் ஸ்வயம் வைத்யாய நம:
ஓம் சூராய நம: 930
ஓம் சூரகுலோத்பவாய நம:
ஓம் வாஸவாய நம:
ஓம் வஸுரண்யாய நம:
ஓம் அக்நயே நம:
ஓம் வாஸுதேவாய நம:
ஓம் ஸுஹ்ருதே நம:
ஓம் வஸவே நம:
ஓம் பூதாய நம:
ஓம் பாவிநே நம:
ஓம் பவதே நம: 940
ஓம் பவ்யாய நம:
ஓம் விஷ்ணுஸ்த்தாநாய நம:
ஓம் ஸநாதநாய நம:

ஓம் நித்யாநுபாவாய நம:
ஓம் நேதீயஸே நம:
ஓம் தவீயஸே நம:
ஓம் துர்விபாவநாய நம:
ஓம் ஸநத்குமாராய நம:
ஓம் ஸந்தாத்ரே நம:
ஓம் ஸுகந்தயே நம: 950
ஓம் ஸுகதர்சநாய நம:
ஓம் தீர்த்தாய நம:
ஓம் திதிக்ஷவே நம:
ஓம் தீர்த்தாங்க்ரயே நம:
ஓம் தீர்த்தஸ்வாதுசுபாய நம:
ஓம் ஸுசயே நம:
ஓம் தீர்த்தவத்தீதிதயே நம:
ஓம் திக்மதேஜஸே நம:
ஓம் தீவ்ராய நம:
ஓம் அநாமயாய நம: 960
ஓம் ஈசாத்யுபநிஷத் வேத்யாய நம:
ஓம் பஞ்சோப நிஷதாத்மகாய நம:
ஓம் ஈசே நம:
ஓம் அந்தஸ்ஸ்த்தாய நம:
ஓம் தூரஸ்த்தாய நம:
ஓம் கல்யாணதமரூபவதே நம:
ஓம் ப்ராணாநாம்ப்ராணநாய நம:
ஓம் பூர்ணஜ்ஞாநைரபிராஸுதுர்க்ரஹாய நம:
ஓம் நாசிகேதோபாஸநார்ச்யாய நம:
ஓம் த்ரிமாத்ரப்ரணவோதிதாய நம: 970
ஓம் பூதயோநயே நம:



ஓம் ஸர்வஜ்ஞாய நம:
ஓம் அக்ஷராய நம:
ஓம் அக்ஷரபராய நம:
ஓம் அகாராதிபதஜ்ஞேய வ்யூஹாய நம:
ஓம் தாரார்த்த பூருஷாய நம:
ஓம் தஹ்ரரூபத்ருதே நம:
ஓம் ந்யாஸவித்யா வேத்யரூபாய நம:
ஓம் ஆதித்யாந்தர் ஹிரண்மயாய நம:
ஓம் இதந்த்ராய நம: 980
ஓம் ஆத்மநே நம:
ஓம் உத்கீதாதிப்ரதீ கோபாஸநாந்வயிநே நம:
ஓம் மதுவித்யோபாஸநீயாய நம:
ஓம் காயத்ரீத்யாநகோசராய நம:
ஓம் திவ்ய கௌக்ஷேயஸஜ்ஜ்யோதிஷே நம:
ஓம் சாண்டில்யோபாஸ்தி வீக்ஷிதாய நம:
ஓம் ஸம்வர்கவித்யாவேத்யாத்மநே நம:
ஓம் பரஷோடசகலாய நம:
ஓம் உபகோஸல வித்யேக்ஷ்யாய நம:
ஓம் பஞ்சாக்ந்யாத்மசரீகாய நம: 990
ஓம் வைச்வாநராய நம:
ஓம் ஸதே நம:
ஓம் பூமநே நம:
ஓம் ஜகத்கர்மணே நம:
ஓம் ஆதிபூருஷாய நம:
ஓம் மூர்த்தாமூர்த்தப்ரஹ்மணே நம:
ஓம் ஸர்வ ப்ரேஷ்ட்டாய நம:
ஓம் அந்யப்ரிய தாகராய நம:
ஓம் ஸர்வாந்தராய நம:

அபரோக்ஷாய நம: 1000
அந்தர்யாமிணே நம:
ஓம் அம்ருதாநகாய நம:
ஓம் அஹர்நாமா க்ஷிஸம்ச்ரிதாய நம:
ஓம் ஸதுர்யகாய த்ர்யர்த்தாய நம:
ஓம் யதோ பாஸ்த்யாப்ய் ஸத்வபுஷே நம:
ஓம் சந்த்ராதி ஸாயுஜ்யபூர்வமோக்ஷத
ந்யாஸகோசராய நம:
ஓம் ந்யாஸநாச்யாநப்யுபேத ப்ராரப்தாம்சாய நம:
ஓம் மஹாதயாய நம:
ஓம் அவதார ரஹஸ்பாதி ஜ்ஞாநிப்ராரப்த
நாசநாய நம:
ஓம் ஸ்வபரக்ருதந்யாஸபலப்ரதாய நம: 1010
ஓம் அஸாஹஸாய நம:
ஓம் அநபாயச்ரியே நம:
ஓம் ஸஸஹாயாய நம:
ஓம் ச்ரியைவ ஸதே நம:
ஓம் ஸ்ரீ மந்நாராயணாய நம:
ஓம் வாஸுதேவாய நம:
ஓம் விஷ்ணவே நம:
ஓம் உத்தமாய நம:
ஓம் ஸ்ரீ மதே ஹயக்ரீவாய நம: 1019

**ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவ ஸஹஸ்ர நாமாவளி**
**ஸம்பூர்ணம்**



ஸ்ரீ ரங்கநாதன் (ஸ்ரீ ரங்கம்)



ஸ்ரீ அனந்த லக்ஷ்மி, மணி மண்டபம், வில்லிவாக்கம்.



ஸ்ரீ:

## ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவ ஸஹஸ்ர நாமார்ச்சனை

(நாமாவளி விளக்கவுரை)



**1. ஓம் ஸ்ரீ ஹயக்ரீவாய நம :**

முதன் முதலாக திருநாமங்களைக் குறிப்பிடும் போது பரிமுகனாக அவதரித்து, குதிரை முகத்தால்வேதம் ஸாதித்தருளிய அவதாரத்தைக் குறிக்கிறது.

**2. ஓம் ஸ்ரீம் நம :**

அகலகில்லாதவளாக எம்பெருமானின்வாமபாகத்தில் வாக்தேவியாக எழுந்தருளியிருக்கும் படியான பிராட்டியுடன் கூடிய எம்பெருமானுக்கு வணக்கம்.

**3. ஓம் ஹும் ஹயக்ரீவாய நம :**

" ஹும் " என்ற பீஜாக்ஷரத்தைக் கொண்டு ஸகல ஞானத்தையும் அருளக் கூடிய எம்பெருமானின் வைபவம் பேசப்பகிறது.

**4. ஓம் ஐமோமாத்மனே நம:**

" ஐம் " "ஓம்" எனப்படும் மஹாமந்திரங்களுக்கு ஆத்மாவாக விளங்கி பிரதிபாதிக்கும் ஸர்வேச்வரன். - ஹயவதனன்.

**5. ஓம் க்லீமாத்மனே நம :**

"க்லீம்" என்கிற பீஜாக்ஷரத்தின் ஆத்மாவாக இருப்பவர் பரிமுகனாகிய எம்பெருமான்.

**6. ஓம் ஸ்ரீய : ஸ்ரீயை நம :**

எம்பெருமானுடன் ஏக ஸிம்ஹாஸனத்தில் பரதத்வ

ஸ்வரூபியாக விளங்கும் பிராட்டி எப்போதும் ஆச்ரயித்து அகலகில்லாமல் இருக்கும் படியான ஸ்வரூபத்தை உடைய பரமே பரிமுகன்.

**7. ஓம் ஸ்ரீ விபூஷணாய நம:**

இவ்வாறெல்லாம் மகிமைகள் பொருந்திய வாக்தேவியையே தம் ஆபரணமாக கொண்டு திகழும் பாங்கு உடையோனே பரிமுகன்.

**8. ஓம் பரோரஜஸே நம :**

எம்பெருமான் அகில ஹேயகுண பிரத்னீகன், ஸகல கல்யாணகுண பரிபூரிதன், ஆகையல் ரஜோகுணத்திற்கு அப்பாற்பட்ட ஸாத்வீக ஸ்வரூபன் ஹயவதனன் என்பதே திருவுள்ளம்.

**9. ஓம் பரப்பிரும்ஹணே நம :**

ஸர்வ வல்லமை படைத்த உயர்வர உயர்நலம் உடைய எல்லோரினும் மேம்பட்ட பரம்பொருள் ஸ்ரீ ஹயக்ரீவன்

**10.ஓம் பூர்புவஸ்வராதிமாய நம:**



வேதத்தின் ஆத்மாவாக கருதப்படும் காயத்திரி சந்தஸின் தொடக்கமாகிய பூர்புவஸுவ!என்பதின் தேர்ந்த பொருளே நம்பரமன்

**11. ஓம் பாஸ்வதே நம :**

" கோடி சூர்ய ஸமபிரப " என எம்பெருமானின் ஒளிமிகுந்த ஸ்வரூபத்தைப் பற்றி குறுப்பிடுவர். தூய்மையான ஒளிபிழம்பு ஸுரியனுடையது, எம்பெருமான் அது போன்றே தூய்மையான பரிபூண ஞானமாகிய ஒளியின் இருப்பிடம்.



**12. ஓம் பகாய நம :**

ஸர்வ வல்லமை படைத்த பரந்தமன் ஸ்ரீ ஹயவதனன்.

**13. ஓம் பகவதே நம :**

பரம்பொருளாகிய பகவத் ஸ்வரூபம் ஸ்ரீ ஹயக்ரிவன் என்பதாகும்.

**14. ஓம் ஸ்வஸ்யாத்மனே நம:**

பரிமுகனாகிய பரமன் ஸ்வயம் பிரகாசமான, அனாதியான ஜகத்காரணத்வம் கொண்ட ஸ்வரூபன் ஆதியந்தமில்லாத எக்காலத்திலும், எப்போதும் உயர்வர உயர்வுடையனாக, ஸர்வ வல்லமை கொண்ட பரதத்வமாக, விளங்குபவன். அவனுக்கு அந்தர்யாமியாருமிலர், அவனுக்கு மூலமும், அந்தமும் ஆத்மாவும் அவனே.

**15. ஓம் ஸ்வாஹாத்மனே நம :**

அக்னியில் ஆஹுதிகள் வழங்கும் போது ஹவிர்பாகங்களை ஏற்று அந்தந்த தேவதைகளிடம் சேர்ப்பிக்கும் தேவதை ஸ்வாஹாதேவி அந்த தேவதைக்கும் அந்தர்யாமியாய் நிர்வாகம் செய்வது எம்பெருமானே.

**16. ஓம் ஆத்மனே நம :**

ஸகல ஜீவராசிகளுக்கும் எல்லா ஆத்மாவினுள்ளும் பரந்து அந்தர்யாமியாய் விளங்கும் பரஸ்வரூபனே பரிமுகன்.

**17. ஓம் ஸ்வதாயை நம :**

எம்பெருமானுடைய இருக்கைக்கு, அவதாரத்திற்கு எதுவும் காரணம் கிடையாது ஸ்வேச்சையாக, தம் ஸங்கல்பமாத்திரத்தால் தாமே அவதரிப்பதும்,

ஸ்வருபத்தை தாமே ஏற்பதும் ஆன பூர்ண ஸ்வதந்திரன் எம்பெருமான்.

**18,19,20,21,22,23,24,25**

**ஸ்ரௌட், வௌஷட், அலம், ஹும்பட், ஹும், ஹ்ரெம், க்ரோம், ஹ்லௌம்** என்பன – பீஜாக்ஷரங்கள் இவைகளை சரீரமாய்க் கொண்டு "மந்த்ரமயம் சரீரம்" என்பதாக விளங்குபவன்.

**26. ஓம் யதாததாய நம:**

இப்படித்தான், இவ்வளவுதான், மேலும் இவைதான், என்று ஒருமுடிவு கூற .இயலாததான தன்மையுடையவன்.

**27. ஓம் கல்க க்ரீவாய நம:**

குதிரை வடிவான முகத்தை கழுத்தின் மேல்பாகமாக உடையவன் குதிரைமுகம் தூய்மைக்கும் , பூரணமான ஞானத்திற்கும் பிரதிபாத்யமானது.

**28. ஓம் கலாநாதாய நம:**

" த்ரிம்சத் கலாத்மாகய " என்கிற மாலாமந்திரத்தில் விவரித்துள்ள படி ஸகலவிதமான கலைகளுக்கும் தலைமை இருப்பிடமாக விளங்குபவன்.

**29. ஓம் கருணாகராய நம:**

" கருணேத்வம்ச குணேஷ் ஸார்வபௌமி" என்று ஸ்வாமி தேசிகன் அனுபவிப்பதுபோல் கருணையின் முழு வடிவமாகவும், கருணையின் உற்பத்திஸ்தானமாகவும் விளங்குபவன்.



**30. ஓம் காமதாய நம:**

சேதனனின் விருப்பங்களை பூரணமாக அருள்பவன் மோக்ஷம் வரையிலான ஸகலவித ஐஹிக ஆமுஷ்மிக பலன்களை அருள்பவன்.

**31. ஓம் க்ஷயே சாலிவசானுகாய நம:**

அஞ்ஞான இருளில் சிக்கித்தவிக்கும் சேதனுக்குசிறுகச்சிறுக இருளைப் போக்கி ஞானத்தை ஊட்டுபவன்

**32. ஓம் நிஷதே நம:**

வேதங்களின் பூர்ணஸ்வரூமாக பிரதிபாத்யனாக விளங்குபவன்

**33. ஓம் உபநிஷதே நம:**

உபப்பிரமணங்கள் எனப்படும் 108 உபநிஷத்துகளும் ஸ்ரீ ஹயக்ரீவனின் ஸ்வரூபமே.

**34. ஓம் நீசைராத்மனே நம:**

**35. ஓம் உச்சைராத்மனே நம:**

**36. ஓம் ஸமமாத்மனே நம:**

**37. ஓம் ஸ்வாஹாத்மனே நம:**

நிழல், வெய்யில், கிறுமை, பெருமை, ஏழ்மை, செல்வம் இப்படியாகிய விபரீதமான எல்லாவற்றிலும் உட்பொருளாக விளங்குபவன்,

எம்பெருமானே என்பது நம்மாழ்வார் அனுபவம், அதுபோல நீசம் என்ற சிறுமை, உச்சம் என்ற உயர்வு, மத்யம் என்ற சமமானநிலை, இவற்றைச் சார்ந்த தன்மை, ஆகிய நான்கினுக்கும் உட்பொருள் ஸ்ரீ ஹயக்ரீவனே.

ஸ்வரூபத்தை தாமே ஏற்பதும் ஆன பூர்ண ஸ்வதந்திரன் எம்பெருமான்.

**18, 19, 20, 21, 22, 23, 24, 25**

**ஸ்ரௌட், வௌஷட், அலம், ஹூம்பட், ஹூம், ஹ்ரெம், க்ரோம், ஹ்லௌம்** என்பன - பீஜாக்ஷரங்கள் இவைகளை சரீரமாய்க் கொண்டு "மந்த்ரமயம் சரீரம்" என்பதாக விளங்குபவன்.

**26. ஓம் யதாததாய நம:**

இப்படித்தான், இவ்வளவுதான், மேலும் இவைதான், என்று ஒருமுடிவு கூற இயலாததான தன்மையுடையவன்.

**27. ஓம் கல்க க்ரீவாய நம:**

குதிரை வடிவான முகத்தை கழுத்தின் மேல்பாகமாக உடையவன் குதிரைமுகம் தூய்மைக்கும் , பூரணமான ஞானத்திற்கும் பிரதிபாத்யமானது.

**28. ஓம் கலாநாதாய நம:**

" த்ரிம்சத் கலாத்மாகய " என்கிற மாலாமந்திரத்தில் விவரித்துள்ள படி ஸகலவிதமான கலைகளுக்கும் தலைமை இருப்பிடமாக விளங்குபவன்.

**29. ஓம் கருணாகராய நம:**

" கருணேத்வம்ச குணேஷ் ஸார்வௌமி" என்று ஸ்வாமி தேசிகன் அனுபவிப்பதுபோல் கருணையின் முழு வடிவமாகவும், கருணையின் உற்பத்திஸ்தானமாகவும் விளங்குபவன்.



**30. ஓம் காமதாய நம:**

சேதனனின் விருப்பங்களை பூரணமாக அருள்பவன் மோக்ஷம் வரையிலான ஸகலவித ஐஹிக ஆமுஷ்மிக பலன்களை அருள்பவன்.

**31. ஓம் க்ஷயே சாலிவசானுகாய நம:**

அஞ்ஞான இருளில் சிக்கித்தவிக்கும் சேதனனுக்குசிறுகச்சிறுக இருளைப் போக்கி ஞானத்தை ஊட்டுபவன்

**32. ஓம் நிஷதே நம:**

வேதங்களின் பூர்ணஸ்வரூமாக பிரதிபாத்யனாக விளங்குபவன்

**33. ஓம் உபநிஷதே நம:**

உபப்பிரமணங்கள் எனப்படும் 108 உபநிஷத்துகளும் ஸ்ரீ ஹயக்ரீவனின் ஸ்வரூபமே.

**34. ஓம் நீசைராத்மனே நம:**

**35. ஓம் உச்சைராத்மனே நம:**

**36. ஓம் ஸமமாத்மனே நம:**

**37. ஓம் ஸ்வாஹாத்மனே நம:**

நிழல், வெய்யில், கிறுமை, பெருமை, ஏழ்மை, செல்வம் இப்படியாகிய விபரீதமான எல்லாவற்றிலும் உட்பொருளாக விளங்குபவன்,

எம்பெருமானே என்பது நம்மாழ்வார் அனுபவம், அதுபோல நீசம் என்ற சிறுமை, உச்சம் என்ற உயர்வு, மத்யம் என்ற சமமானநிலை, இவற்றைச் சார்ந்த தன்மை, ஆகிய நான்கினுக்கும் உட்பொருள் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**38. ஓம் சாச்வதாத்மனே நம:**

என்றும் நிலைபெற்ற, குறைவற்ற அந்தமில்லா தன்மையன் ஸ்ரீஹயக்ரீவன்

**39. ஓம் யுகமாத்மனே நம:**

எல்லா ஜீவன்களுக்கும், அடையும் பொருளாகவும், அடையும் வழியாகவும் அமைந்த இருதிருவடித்தாமரைகளையுடையவன்.

**40. ஓம் அஹ்னாய நம:**

ஆஹ்னிகம் என்கிற நாளும் நடைபெம் எல்லாவித அனுஷ்டானத்தையும் ஏற்கும் பரம்பொருளானவன், நடைமுறையும் அவனே, நடப்பவையும் அவன் திவ்யஸங்கல்பமே.

**41. ஓம் சனைராத்மனே நம:**

சனை என்கிற பதம் மெதுவாக, படிப்படியாக, என பொருள்படும். மணி. நாளாக, நாட்கள், மாதமாக மாதங்கள் வருஷமாகக் கணக்கிடப்பட்டு முன்னேறும் காலபிரமாணம் ஸ்ரீஹயக்கீரீவனே.

**42. ஓம் ஏகஸ்மை நம:**

**43. ஓம் பஹவே நம:**

ஒன்றாகவும், பலவாகவும் எல்லாமாகவும் விளங்குபவன், அவன் ஸ்வரூபத்தை அளவிட்டு கூற இயலாது.

**44. ஓம் த்ருவாய நம:**

எம்பெருமானுடைய, சிருஷ்டியில் உள்ள கிரகங்கள், நட்சத்ர மண்டலங்கள்யாவும் கூடஅவன் ஸ்வரூபமே.



**45. ஓம் பூதபிருதே நம:**

ஜீவராசிகளின் காப்பாற்றுதலாகிய ரஷணத்தை செய்பவன் அவனே.

**46. ஓம் பூரிதாய நம:**

பிராட்டியை கொண்டாடும் போது ஸ்ரீ ஸ்வாமிதேசிகன் "வாஞ்சிதானாம் வஸுநாம்" என்றார் அதுபோல் இந்த பிரம்மாண்டத்தில் ஸகலவிதமான வேண்டும் வரன்களையும் அருள்பவன் அவன் தானேயன்றோ!

**47. ஓம் ஸாக்ஷிணே நம:**

ஸர்வ அந்தர்யாமியான பரமன் எல்லா உயிரணுக்களிலும் நிறைந்து எக்காலத்திலும் விழிப்பாக எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாக விளங்குபவன்.

**48. ஓம் பூதாதயே நம:**

எல்லா ஆத்மாக்களும் எம்பெருமான் ஸ்ரீ கௌஸ்துப மணியினின்று அவன் ஸங்கல்பத்தால் உண்டானவையே ஆகையால் ஸகல பூதங்கள் என்ற ஆத்மாக்களின் ஆரம்பம் அவனே.

**50. ஓம் புண்ய கீர்த்தனாய நம:**

எம்பெருமான் அகில ஹேயகுணபிரத்யனிகன் ஸகல கல்யாணகுண பரிபூரிதன என்கிற படியில் அவனை துதித்து பாடும் குணகானம் யாவுமே பாவன மயமாக பவித்ரமாக புண்யத்தின் ஸ்வரூபமாகவே இருக்கும்.

**51. ஓம் பூம்னே நம:**

ஈரேழு பதினான்கு உலகங்கள் எனப்படும் பூமண்டலம் யாவுமே அவன் ஸ்வரூபமே..

**52. ஓம் பூமிரதோன்நத்த புருஹூதாய நம:**

பூமியின் சுழற்சியில் ரதாருடனாக விளங்கி ஸாரதியாய் விளங்கும் ஸ்ரீ மத்நாராயணனை பலரும் கூடி அவர்காளல் அழைக்கப்படுவன், வரவேற்று உபசரிக்கப்படுவன்.

**53. ஓம் புருஷ்டுதாய நம:**

உலகின் தலைவனக கொண்டடக்கடுவன் ஜகத்வியாபாரங்களை அவ்வப் போது அறிந்துகொள்ளும் ஸர்வ வியாபகன்.

**54. ஓம் ப்ரபுல்ல புண்டரீகஷாய நம:**

மலர்ந்த விசாலாமான அழகிய கண்களை உடையவன்

**55. ஓம் பரமேஷ்டினே நம:**

இஷ்டி என்பது நமது அவாபூர்த்திக்காகச் செய்யப்படும் யாகம். பரமேஷ்டியின் மந்திரம் "ஓம்" எனப்படும் பிரணவம், அகார உகார மகார வாசயனாகிய பிரணவத்தின் பிரதிபாத்யமாகிய பரமன் ஸ்ரீபரிமுகனே.

**56. ஓம் பிரபாவனாய நம:**

மேன்மை, சிறப்பு, ஒளி இவைகளுக்கொல்லாம் இருப்பிடமாக உற்பத்திஸ்தானமாக விளங்குபவன்.

**57. ஓம் ப்ரபவே ... பர்காய நம:**



யாஞ்ஞுவால்க்ய மகரிஷி சாக்ஷாத்காரம் செய்த சூரிய மண்டலத்தின் நடுவில் எழுந்தரளியிருக்கும் வேதம் ஸாதிக்கும் பரிமுகன் என்று குறிப்பிடுகிறார்.

**58. ஓம் ஸதாம் பந்தவே நம:**

ஸாத்வீகமான எண்ணங்கள், விருப்பங்கள், குறிக்கோள் எதுவாயினும் தந்தருளி எப்போதும். ஸத்தான பந்துவாக ஆத்ம பந்துவாக இருந்து மோக்ஷமே தந்தருளி என்று மழியா சுத்த ஸத்வமான சரீரமும் தந்து, தமக்கு இணையான ஸாம்ராஜ்ஜியமும் தந்து. தாம்மிக விளங்கும் ஆத்மபந்து பரிமுகனே.

**59. ஓம் பயத்வம்ஸினே நம:**

"நதஸ்ய யமவச்யதா நரகபாத பீதிகுத" என்றும் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸாதித்துள்ளபடி ஸம்ஸாரபய, பிறவி எனும் மீளாபயம் இவைகளை நீக்கி அந்தமில்லா பேரின்பம் அருள்பவன்.

**60. ஓம் பவாபனாய நம:**

மேற்குறிய படி பவஸாகரத்தில் மீண்டும் பிறந்து " நச புனராவர்த்ததே நச புனராவர்த்ததே" என பகவத்ராமாநுஜர் ஸாதித்தபடி மீண்டும் பிறத்தல் இல்லாமல் பவ சோகத்தை போக்கி அருள்பவன்.

**61. ஓம் உத்யதே நம:**

உதிக்கும் சூரியனைப்போன்று ஸதாசார்யசம்பந்தம் மூலமாக அஞ்ஞான இருளை நீக்கி பகவானேபரதேவதை, அவனுக்கே நான்ஆட்பட்டவன் என்கிற பூர்ணஞானத்தை அருள்பவன்.

**62. ஓம் உருசயாய நம:**

திருப்பாற்கடலில் பள்ளிகொண்டு வியூஹ வியூஹாந்தர மூர்த்திகளாபய் எழுந்தருளியிருந்து, ஜகத் வியாபாரத்தை நிர்வகிக்கும் பரந்தமன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**63. ஓம் ஹீங்கிருதே நம:**

" ஹீங்கார சப்தம் " வில்லினின்று அம்புபுறப்படும் சப்தத்தை குறிக்கும், ஸ்ரீ ராமாவதாரத்தில் ஸ்ரீ விஷ்ணு தனுஸிவை நாணேற்றும்படியாக பரசுராமன் சூளுரைத்த சமயம், ஸ்ரீ ராமபிரான் ஸ்ரீ விஷ்ணு தனுஸிவை வளைத்து நாணேற்றி அம்பிற்கு இலக்கு என்ன என்று கேட்கிறார். பரசுராமன் க்ஷமா பிரார்த்தித்து உன்னை மதுவை ஸம்ஹரித்த மதுஸூதனனாக அறிகிறேன்.

"" ஓம் ஜானாமித்வாம் அக்ஷய்யம் மது ஹந்தாரம்'' என்று கூறுகிறர். இவ்வாறு ஹீங்காரசப்தத்தை உருவாக்கும் அழிவற்ற என்றும் நிலையாக விளங்கும் பரதேவதா ஸ்வரூபம் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**64. ஓம் உருவாய நம:**

வேதம், உபநிஷத்துக்கள் தொடங்கி ரிஷிகள், மஹரிஷியர்கள் யாவராலும் புகழ்ந்து போற்றப்படும் பெருமைக்குறியவன் பரிமுகன்.

**65. ஓம் உருக்ராம நம:**

எல்லாவிதமான சிறப்புகளையும் ஒருவருக்கு ஏற்றி பேசப்படலாம் என்றால் அவைகளுக்கு எல்லாம் மொத்தமான இருப்பிடமாக விளங்குபவன் பரிமுகனே.



**66. ஓம் உதாராய நம:**

எம்பெருமானின் அருங்குணங்களில் "ஔதார்யம்" என்ற பெருந்தன்மைக்கு விசேஷ மதிப்பு உண்டு, அவனுடைய பெருந்தன்மைக்கு நிதர்சனமான எடுத்துக்காட்டு திரௌபதிக்கு பரம ஔதார்யத்துடன் ரக்ஷணம் செய்ததே, மஹரிஷியர்கள் இதையே பெரிதாகக் கொண்டாடுவர்

**67. ஓம் திரியுகாய நம:**

" திரியுகநாத நாராயணன் " என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் கொண்டாடும்படி கிருத, திரேதா,துவாபர யுகங்களுக்கு தலைவனாக விளங்பவன் மது சூதனனே.

**68. ஓம் த்ரையாத்மனே நம:**

வேதங்களின், உபபிரம்மணங்களின் ஆத்மாவாக விளங்பவன் பரிமுகனே

**69. ஓம் நிதானாய நம:**

வடமொழியில் "நிதான் " என்பது பொக்கிஷம் என்றும் ஆறுதல் என்றும் பொருள்படும், பரிமுகன் ஸகல கல்யாண குணங்களின் பொக்கிஷம் என்றும் மேலும் அனைத்து ஜீவகோடிகளின் ஸம்ஸார தாபத்தை போக்கும் ஆறுதல் கல்மாகவும் விளங்குபவன்.

**70. ஓம் நிலயாய நம:**

இருப்பிடம் என பொருள்படும் இந்த சொல் எம்பெருமானுடைய ஆதியந்தமற்ற என்றும் நிலைபெற்ற நிலையான இருக்கையையும் குறிக்கும், எம்பெருமான் முதலும் முடிவும் அற்ற நிலையில் நிற்கின்ற பரம்பொருள்.

**62. ஓம் உருசயாய நம:**

திருப்பாற்கடலில் பள்ளிகொண்டு வியூஹ வியூஹாந்தர மூர்த்திகளாபய் எழுந்தருளியிருந்து, ஜகத் வியாபாரத்தை நிர்வகிக்கும் பரந்தமன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**63. ஓம்ஹூங்கிருதே நம:**

" ஹூங்கார சப்தம் " வில்லினின்று அம்புபுறப்படும் சப்தத்தை குறிக்கும், ஸ்ரீ ராமாவதாரத்தில் ஸ்ரீ விஷ்ணு தனுஸீவை நாணேற்றும்படியாக பரசுராமன் கூளுரைத்த சமயம், ஸ்ரீ ராமபிரான் ஸ்ரீ விஷ்ணு தனுஸீவை வளைத்து நாணேற்றி அம்பிற்கு இலக்கு என்ன என்று கேட்கிறார். பரசுராமன் க்ஷமா பிரார்த்தித்து உன்னை மதுவை ஸம்ஹரித்த மதுஸூதனனாக அறிகிறேன்.

''ஓம் ஜானாமித்வாம் அக்ஷய்யம் மது ஹந்தாரம்'' என்று கூறுகிறர். இவ்வாறு ஹீங்காரசப்தத்தை உருவாக்கும் அழிவற்ற என்றும் நிலையாக விளங்கும் பரதேவதா ஸ்வரூபம் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**64. ஓம் உருவாய நம:**

வேதம், உபநிஷத்துக்கள் தொடங்கி ரிஷிகள், மஹறணீயர்கள் யாவராலும் புகழ்ந்து போற்றப்படும் பெருமைக்குறியவன் பரிமுகன்.

**65. ஓம் உருக்ராம நம:**

எல்லாவிதமான சிறப்புகளையும் ஒருவருக்கு ஏற்றி பேசப்படலாம் என்றால் அவைகளுக்கு எல்லாம் மொத்தமான இருப்பிடமாக விளங்குபவன் பரிமுகனே.



**66. ஓம் உதாராய நம:**

எம்பெருமானின் அருங்குணங்களில் "ஔதார்யம் ' என்ற பெருந்தன்மைக்கு விசேஷ மதிப்பு உண்டு, அவனுடைய பெருந்தன்மைக்கு நிதர்சனமான எடுத்துக்காட்டு திரௌபதிக்கு பரம ஔதார்யத்துடன் ரக்ஷணம் செய்ததே, மஹறணீயர்கள் இதையே பெரிதாகக் கொண்டாடுவர்

**67. ஓம் திரியுகாய நம:**

" திரியுகநாத நாராயணன் " என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் கொண்டாடும்படி கிருத, திரேதா,துவாபர யுகங்களுக்கு தலைவனாக விளங்பவன் மது சூதனனே.

**68. ஓம் த்ரையாத்மனே நம:**

வேதங்களின், உபபிரம்மணங்களின் ஆத்மாவாக விளங்பவன் பரிமுகனே

**69. ஓம் நிதானாய நம:**

வடமொழியில் "நிதான் " என்பது பொக்கிஷம் என்றும் ஆறுதல் என்றும் பொருள்படும், பரிமுகன் ஸகல கல்யாண குணங்களின் பொக்கிஷம் என்றும் மேலும் அனைத்து ஜீவகோடிகளின் ஸம்ஸார தாபத்தை போக்கும் ஆறுதல் கலமாகவும் விளங்குபவன்.

**70. ஓம் நிலயாய நம:**

இருப்பிடம் என பொருள்படும் இந்த சொல் எம்பெருமானுடைய ஆதியந்தமற்ற என்றும் நிலைபெற்ற நிலையான இருக்கையையும் குறிக்கும். எம்பெருமான் முதலும் முடியும் அற்ற நிலையிய் நிற்கின்ற பரம்பொருள்.

**71. ஓம் ஹரயே நம:**

ஸ்ரீ ஹரி என்கிற திருநாமத்திற்கு ஒரே பிரதிபாத்ய மானவன் மஹாவிஷ்ணு, அதிகாலை கண்விழித்த உடனேயே ஹரி, என்கிற திருநாமத்தை ஏழுமுறை உச்சிரிக்கும் படியாக சொல்கிறது.ஸாஸ்திரம், நமது துக்கங்கள் யாவையும் போக்கி வாழ்வில் சூரியனைப் போன்ற பிரகாசத்தை உண்டுபண்ணும் சக்தி படைத்தவன் எம்பெருமான் ஹரி என்ருல் சூரியன் என்னும் பொருள் உண்டு.

**72. ஓம் ஹிரண்யகர்பாய நம:**



சதுர்முக பிரம்மா எம்பெருமானின் நாபிக்கமலத் தினின்று உற்பத்தியானவர், படைப்புத்தொழிலை, பிரம்மன் மூலமாக செய்பவனும் பரந்தாமனே,

**73. ஓம ஹேமாங்காய நம:**

"மந்த்ரமயம் சரீரம் " என ஸ்ரீ ஸ்வாமி தேசிகனால் கொண்டாடப்படும் பரிமுகன், ஸ்வர்ணமயமான ஸ்வரூபத்தையும் உடைய கோடி சூர்ய பிரகாசமுடையவன்

**74. ஓம் ஹிரண்யச்மச்ரவே நம:**

உலகின் உயர்ந்தவைகளுக் கெல்லாம் இருப்பிடமாக பொக்கிஷமாக விளங்குபவன்

**75. ஓம் ஈஷித்ரே நம:**

" ஜகத்பிரபும் தேவதேவம் " எனக் கொண்டாடப்படும் விதமாக பிரம்மாண்டங்களுக்கு தலைவனாக விளங்குபவன்



**76. ஓம் ஹிரண்யகேசாய நம:**



ஸ்ரீ நரசிம்ம அவதாரம் எடுத்த போது எம்பெருமான் கேசபாரம் மஞ்சள் நிறமாகவே இருந்தாம் சிம்மத்தின் பிடரி தங்கம் போன்றதே அல்லவா?

**77. ஓம் ஹிமக்னாய நம:**

ஹிம என்பது குளிர்ந்த பனி, சந்திரனின் கிரணங்கள் இவைகளை குறிக்கும் எம்பெருமானின் திருமேனி சந்திரனின் கிரணங்கள் போல "சுத்த ஸ்படிக ஸங்காசம் "என்கிற விதமாக அமைந்தது

**78. ஓம் ஹேம வாஸஸே நம:**

தங்கத்தின் கர்பமாகவும், தங்கம் என்கிற சுத்தமான உலோகத்தில் வாஸம் செய்பவனும் சுத்தஸத்துவமான பரிமுகன் என்பதே

**79. ஓம் ஹிதைஷிணாய நம:**

ஜீவகோடிகளின் நன்மையையே எப்போதும் கோருபவன், ஜீவன் அவனைநோக்கி ஒரு அடி எடுத்துவைத்தால்தாம் ஒன்பது அடி எடுத்து வைத்து வலியவந்து மோக்ஷம் வரையிலான பலன்களை தந்தருளும், ஜீவனின் ஒரே நன்மைகோரும் துணையாவான்.

**80. ஓம் மண்டலாந்தஸ்தாய நம:**

ஸீரிய மண்டலத்திலும், சந்திர மண்டலத்திலும், பரிமுகன் வஸிப்பதாக பிரமாணங்கள் கூறுகின்றன, ஆயினும் அங்கிங்கெனாதபடி

எல்லாமண்டலங்களின் உள்ளும், அவைகளின் ஸ்வரூபத்தை கடந்தும் ஒளிர்பவன் பரிமுகன்.

**81. ஓம் மோதமானாய நம:**

எம்பெருமாகை நினைத்த மாத்திரத்தில் நம் ஆத்மாவரையில் குளிர்ந்து, துக்கங்களை அகற்றி சந்தோஷம் பரவுகின்றதே அவ்விதமான மகிழ்ச்சியை உண்டு பண்ணக்கூடிய கருணாமூர்த்தி பரிமுகன்.

**82. ஓம் ஸமூஹனாய நம:**

சேர்ந்திருத்தல் என்கிற விதமான வாஸம் செய்பவன் ஒவ்வொரு ஜீவனின் உரைபவன் பலபேர் சேர்ந்திருத்தல் என்கிற ஒற்றுமை ஸ்வபாவமானவன்.

**83. ஓம் ஸர்வாத்மனே நம:**

பிரம்மருத்ராதி இந்திராதி தேவர்களுக்கும் பிரிகிருதி மண்டலத்தில் ஜனித்து வாழும் ஸகலவிதமானஜீவராசிகளுக்கும் ஆத்மா உள்ளும் அந்தர்யாமியாக விளங்கி வியாபாரங்களை நிர்வகிக்கும் ஸர்வாந்தர்யாமி எம்பெருமான்.

**84. ஓம் ஜகதாதாராய நம:**

ஜகத்காரணன் என்று ஆரம்பம் என ஒன்றில்லாத ஸ்வேச்சையாய் ஸ்வ ஸங்கல்பத்தாலேயே லீலாவிபூதியை நிர்வகிக்கும் காரண பூதனே பரமன்.

**85. ஓம் ஸன்னிதயே நம:**

"ஸ்வத ஸித்தம்" - என்று ஸ்ரீஸ்வாமி தேசிகன் கொண்டாடியபடி எப்போதும் "ஸ்வத ஸித்தமான" திவ்ய ஸான்னித்யம் பெற்ற திவ்யமங்கள ஸ்வரூபம் ஹயக்ரீவன்.



**86. ஓம் ஸாரவதே நம:**

"ஸாரஸாரம்" என்கிற ரஹஸ்ய கிரந்தத்தில் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் மந்திரதிரயத்தின் ஸாரதமமான ஸ்வரூபத்தை நிஷ்கர்ஷித்துள்ளார், எப்பெருமானோ வேதம் தொடங்கி யாவற்றுடையவும் ஸாரப் பொருயாக நிலைத்து நிற்பவன்.

**87. ஓம் ஸ்வபுவே நம:**

எம்பெருமானுக்குதாமேதான் பிரபு, எஜமானன் அவனுக்கு மேம்பட்ட எஜமானன் யாருமில்லை, மோக்ஷம் அளிக்கும் அதிகாரம் அவனுக்கு மட்டுமே உண்டு.

**88. ஓம் கோஹிதாய நம:**

ஆவினங்களின் நன்மையை எப்போதும் கருத்தில் கொண்டு அவைகளை நல்வழிப்படுத்தி மோக்ஷம் அளிக்கூடிய ஷிதைஷி பரமனே

**89. ஓம் கோமினே நம:**

எல்லா உயிரினும் உள் உரைபவன், அந்த பசுக்களாகவும் நடமாடும் உயிர் எம்பெருமானே.

**90. ஓம் கேசவாய நம:**

அதாவது இறைவன் என்பவன் யாவன் என்கிற கேள்விக்கு பதிலாக எல்லோரினும் மேம்பட்ட பரம்பொருள் கேசவனே என்பதைத்தான் இந்த திருநாமம் குறிக்கும்.

**91. ஓம் கின்னரேஸ்வராய நம:**

தேவர்கள் கின்னரர்கள், கிம்புருடர்கள் என்கிற விதமான வகைப்பட்ட கின்னரர்களுக்கும் தலைவன் பரிமுகனே, மற்றொரு விதமாகவும் இதை பொருள்பட கூறலாம், நித்ய சூரிகளாகிய அனந்த, கருட, விஷ்வக்ஸேனர் தொடங்கி நம்

போன்ற ஜீவராசிகள் மோக்ஷம் பெறுதலில் எம்பெருமானின் கைங்கர்ய ஸாம்ராஜ்யம் பெற்ற கிங்கரர்கள் - அதாவது எம்பெருமானுக்கு மட்டுமே அடிமைப்பட்டவர்கள் அப்படிப்பட்ட கின்னரர்களுக்கும் அவனே ஈஸ்வரன், அவனே தலைவன்

**92. ஓம் மாயினே நம :**

இந்த பிரக்கிருதி மண்டலம் மாயை அல்ல, உண்மையே, ஆன்மாக்களின் பாவ புண்ணிய கர்ம பலன்களை கழித்துவிடும் பிரகிருதி வாழ்க்கை நிஜமே, ஆயினும் பிராப்தி விரோதியால் நிலையான ஆனந்தம் எதுவென உணராது மயங்கும் நிலை ஜீவனுக்கு ஏற்படுகிறது, இந்த மாயை என்கிற நிஜமற்ற எண்ணம் நமக்கு ஏற்படும் நிலையும் அவன் ஸங்கல்பமே

**93. ஓம் மாயாவி க்ருதி கிருதே நம :**

இவ்விதமான பொய்யான தோற்றங்களினால் திடச்சித்த்தை இழந்து விக்ருதி ஏற்பட்டு மயங்குவதான பிராப்தி விரோதி நம் கர்மவினைகாரணமாக நமக்குஏற்படுவது கூட அவன் சங்கல்பத்தாலேதான " உன் தன்னோடு உற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வேம்" என்கிற ஸ்ரீ ஆண்டாளின் அறிவுரைப்படி திடச்சித்தத்தோடு இருக்க வேண்டும்.



**94. ஓம் மஹேசாய நம :**

தேவதேவனாக எல்லோர்க்கும் ஈசனாக திவ்யமங்கள ஸ்வரூபனாக விளங்குபவன்.








**95. ஓம் மஹாமஹாய நம:**

அணோரணியன் - மஹதோரணியன் என்கிற உபநிஷத் வாக்கின் படி மகத்தானதிற்கும் மகத்தானவன்

**96, 97, 98,99,100,101, 102, 103, 104,105, ம, மா, மி,மீ, மு.மூ, ம்ரு, ம்லு, லூ, மே, மை,**

என்கிற 12 அக்ஷரங்களும் 'மகாரத்தின் திரிபுகள் இவ்விதம் மகாரம் என்கிற ஜீவனைக்குறிக்கும் பீஜாக்ஷரம் பிரணவத்திலும் இதர மந்திரங்களிலும் நிஹிதமான அக்ஷரம், இதன் உட்பொருளிலும் உறைபவன் ஸ்ரீ பரிமுகனே

**106, 107, 108, 109, 110, 111,112. மோ, மௌ, பிந்து, விஸரக, ஹ்ரஸ்வ, தீர்க்க ப்லுத, ஸ்வர :** **மோ, மௌ,** இவ்விரண்டும் மகாரத்தின் விரிவு பிந்து என்பது ஒரு அக்ஷரத்தின் மேல் வைக்கும் புள்ளி " ம் " என்பது விஸர்கம் என்பது : இவ்வாறு குறியீட்டு ' ஹ ' என்ற சப்தத்தை உண்டாக்கும். ஹ்ரஸ்வ - என்பது குறில் தீர்க்க - என்பது நெடில் ப்லுதஸ்வர - ஒரு அக்ஷரத்தை நீட்டிச் சொல்லல் இவ்விதமாக தேவமொழியான வடமொழியின், அக்ஷர உத்பத்தி, உடபொருள் யாவும், ஸ்ரீ ஹயக்ரீவனின் அம்சமே.

**113. ஓம் ஸ்வராய நம:**

ஏற்கனேவேகூறியபடி ஸ்வராக்ஷங்கள் ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்வரூபம்.

**114. ஓம் உதாத்தாய நம அனுதாத்தாய நம :**

ஒரு பொருளை ஏற்றிச் சொல்வதும் குறைத்து சொல்வதும் கூட எம்பெருமான் ஸ்வரூபமே.

**115. ஓம் ஸ்வரிதாய நம:**

**116. ஓம் பிரசயாய நம :**

ஒரு அக்ஷரத்தின் முன்னும் பின்னும் அர்த்த விசேஷத்திற்காகச் சேர்க்கப்படும். குறைக்கப்படும் ஸ்வர பேதங்கள் யாவுமே ஸ்ரீ ஹயக்ரீவனின் கிருபா விசேஷமே.

**117. ஓம் கம், கம், கம், .................. 151 வரை**

இவ்வித வியஞ்ஜன ஸ்வரங்கள் வடமொழியில் உள்ள 35 யாவும் ஸ்ரீ ஹயக்ரீவனின் ஸ்வரூபமே.

**152. ஓம் யமாய நம:**

அரங்களின் ஒரு பிரகாரம் யம என்பது அதுவும் எம்பெருமானே.

**153. ஓம் வியஞ்ஜனாயநம :**

அகார விதானம ஸ்வரம் எனப்படும் கவர்க அக்ஷரங்கள் யாவும் வியஞ்ஜனம் எனப்படும் . இவைகள் எல்லாம் எம்பெருமான் உறைவும் அக்ஷர ஸ்வரூபமே.

**154. ஓம் ஜிஹ்வாமூலீயாய நம :**

நாக்கை உபயோகித்து உச்சரிக்கப்படும் அக்ஷரங்களின் காரணகர்த்தா வானவன்.

**155. ஓம் அர்த விஸர்கவதே நம :**

இரண்டு புள்ளிகளக் கொண்டு 'ஹ ' லந்த சப்தத்தை உண்டு பண்ணும் பிரகாரத்தை உண்டாக்கியவன்

**156. ஓம் உபத்மானீயாய நம:**

ப,ப,அக்ஷரங்களுக்கு முன் வரும் விஸர்கம் ( : ) உபத்மானீயம் எனப்படும்.



**157. ஓம் ஸம்யுக்தாக்ஷராய நம :**

இரண்டு வியஞ்சனங்கள் சேர்ந்து ஏற்படக் கூடியஅக்ஷரங்கள் ஸம்யுத்தாஅக்ஷரங்ள் க் + ஷ = க்ஷ போன்ற அக்ஷரங்கள் எம்பெருமான்

**158. ஓம் பதாய நம :**

இரண்டு அல்லது இரண்டிக்கு மேற்பட்ட அக்ஷரங்கள் சேர்ந்து வார்த்தைகள் உருவாகும். அவை பதங்களாகும் அவை கூட ஸ்ரீ ஹயக்ரீவனே

**159. ஓம் கிரியை நம :**

செயல்பாட்டை குறிக்கும் வினைச் சொல் கிரியாவாகும். மொழியின் இந்த ரூபமும் ஸ்ரீ ஹயக்ரீவனே

**160. ஓம் காரகாய நம :**

எட்டு வித காரகங்கள் கர்த்தாவுடன் சேரும், செயப்படு பொருடன் சேர்ந்து அர்த்த விசேஷத்தைக் காட்டும் அவை கூட எம்பெருமானின் ஸ்வரூபமே

**161. ஓம் நிபாதாய நம :**

முறையை மாறிய சொல் அமைப்பு நிபாதனம் எனப்படும் அதுவும் கூட பரமனே.

**162. ஓம் கதயே நம :**

முன்னேறுவது, நடப்பது இவைகளைக் குறிக்கும் இச்சொல், மொழியின் மேம்பாட்டிக்கு, சக்திக்கு காரணகார்த்தாவாகிய ஸ்ரீஹயக்ரீவனையே குறிக்கும்.

**163. ஓம் அவ்யயாய நம :**

' புராண புருஷம் பிராஹ ' ரவ்யயம், என்று பிரம்மா பரந்தாமனை ஹரிவம்ச புராணத்தில் அழிற்றவன்

எனபுகழ்ந்து பாடுகிறுர். வடமொழி இலக்கணத்தில் அவ்யய வர்கம் என்கிற வகையைச் சேர்ந்த சொற்கள் மாறுதல் அற்றவையாகும்.

**164. ஓம் ஸாந்நிதியே நம:**

ஸ்வர, வியஞ்சன், பதங்கள், இரண்டு ஒன்று சேரும் போது, ஏற்படும் ஸன்னிதி பரந்தாமன் ஆகிய ஸ்ரீ ஹயக்ரீவனே

**165. ஓம் யோக்யதாயை நம:**

' ஏக பதார்த்த பரரதார்த்தோ ஸம்ஸர்கோ யோக்யதா - என தார்க்தரத்தில் கூறுவர். இரு வேறு பதங்கள் சேர்க்கையில் அதன் அர்த்தம் விபரீதமாகாமல் உண்மையான பொருள் த்வனிப்பது ஸ்ரீ ஹயக்ரீவனின் ஸங்கல்பமே.

**166. ஓம் ஆகாங்க்ஷாய நம:**

லட்சியம், எதிர்ப்பார்ப்பு, என பொருள் படும், இந்த சொல் வடமொழியில் இலக்கணத்தில் ஒரு சொல்லின் திரண்ட பொருள் 'ஆகாங்க்ஷா' என்கிற சொல் குறிக்கும்.

**167. ஓம் பரஸ்பர ஸமன்வயாய நம:**

இருவேறு பொருள்படும் சொற்களைச் சேர்க்கும் போது அவைகளின் ஒன்று படுத்தி ஒரு உண்மையான பொருள் தெரிவிக்கிறான் சொல் ஸமன்வயப்படுதுவதாகும் மொழியில் இவ்வித ஜாலம் யாவுமே ஸ்ரீ ஹயக்ரீவனின் ஞானக்கடலின் திவலைகளே.

**168. ஓம் வாக்யாய நம:**

சில வார்த்தைகளை இலக்கண முறைப்படி சேர்ந்து ஒரு



பொருள் பட கூறுவதாகிய வாக்கியம் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**169. ஓம் பத்யாய நம:**

இலக்கியத்தின் ஒரு பிரிவாகிய செய்யுள் வகை என்கிற 'பத்யம்' ஸ்ரீ ஹயக்ரீவனுடைய கருணையே.

**170. ஓம் ஸம்ப்ரதாயாய நம:**

இலக்கிய நடைமுறைனளைக் காக்கும் ஸம்ப்ரதாய வழிகளை வகுத்து தருவது ஸ்ரீ ஹயக்ரீவனே.

**171. ஓம் பாவாய நம:**

செய்யுள், உரைநடை, எதுவாயினும் மொழியின் வெளிப்பாட்டால் ஏற்படும் திரண்ட பொருள் பாவம் எனப்படும். இவ்விதமான பாவமும் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**172. ஓம் சப்தார்த்த லாலிதாய நம:**

சொற்ளில் அழகும், நளினமும் மிளிர்வது ஸ்ரீ ஹயக்ரீவனுடைய கருணை யாலேயேதான்.

**173. ஓம் வியஞ்யை நம:**

**174. ஓம் லக்ஷணாயநம:**

**175. ஓம் சக்தயே நம:**

வட்மொழியில் 'சப்தசக்தி' என்னொரு விசேஷம் உண்டு. சொல்லின் நேரிடையான பொருள் தவிர ஒரு விசேஷார்த்தம் த்வனிக்கும் படி செய்வது 'அவன் காரியத்தில் ' என்றுல் புலி போன்ற வேகமுடைய செயல் வீரன் எனபொருள் அது 'லக்ஷணாசக்தியாகும் ' - 'மணி மாலை' ஆறடித்து விட்டதே - என்று சொன்னால் விளக்கேற்றும் நாழிகையாச்சு என பொருள்படும். இது வியஞ்சனா சக்தி. அது போன்ற பலப்பல சக்தி

பிரயோகங்க்ளும் வார்ததை ஜாலங்களும் ஸ்ரீ ஹயக்ரீவனே

**176. ஓம் பாகாய நம:**

இலக்கியங்களின் பல உட்பிரிவுகளாகவும் விளங்குபவன்.

**177. ஓம் ரீதே நம:**

இலக்கியம் உருவாகும் விதம், வழி பிரகாரசம் எம்பெருமானே

**178. ஓம் அலங்கிருதயே நம:**

இலக்கியத்தில் அழகுமேம்பட உபயோகப்படும் அலங்காரங்களும் எம்பெருமானே.

**179. ஓம் சய்யாயை நம:**

சமமான ஒலியுள்ள அக்ஷரங்களைக்கொண்டு வெளிப்பாடும் இலக்கிய நயம் எம்பெருமானே

**180. ஓம் ப்ரேடாத்வனியே நம:**

உயர்ந்து ஒலியுள்ள சப்தங்களால் ஆன த்வனி வெளிப்பாடும் எம்பெருமானே.

**181. ஓம் த்வனிமத் காவ்யாய நம:**

தனது கருத்தை அசைக்கமுடியாத படி வெளிப்படும் காவிய ரூபம் எம்பெருமானே.

**182. ஓம் ஸர்காய நம:**

காவிய பிரிவு ஸர்கம் எனப்படும் அவ்வித காவிய இலக்கணம் எம்பெருமானே.

**183. ஓம் கிரியாயை நம:**

செயல்பாட்டை விவரிக்கும் சொல்‘ கிரியா’ வாகும்.



கிரியாவும் எம்பெருமானே.

**184. ஓம் ருசயே நம:**

இலக்கியத்தின் சுவையாக விளங்குபவன்.

**185. ஓம் நாநாரூப பிரபந்தாய நம:**

ஸ்வராய, உதாத்தாய அனுதாத்தாய, ஸ்வரிதாய, பிரசயாய, கம், கம், கம், கம், ஙம், சம்,சம், ஞம், ஞம், ஞம், டம், டம், டம், டம், ணம், தம், தம், தம்,தம்,நம்,பம்,பம்,பம்,பம்,மம்,யம்,ரம்,லம்,வம்,சம்,ம்,ஸம், ஹம், ளம், க்ஷம், யமாய, வியஞ்ஜயை, ஜிஹ்வாமூலீயாய, அர்தவிஸர்தவதே, உபத்மானீயாய,ஸம்புக்தாக்ஷராய, பதாய கிரியாயை, காரகாய, நிபாதாய, கதயே, அவ்யயாய, ஸன்னதடியே, யோக்யதாயை, ஆகாங்க்ஷாயை, பரஸ்பர ஸமன்வயாயை, வாத்யாய, பத்யாய, ஸம்பிரதாயாய,பாவாய, சப்தார்த்தலாலிதாய வியஞ்ஜாயை லக்ஷ்ரையை, சக்த்யை, பாகாய, ரீதயே, அலங்கிருதயே, சய்யாயை, பிரெயடத்வனயே, த்வனிமத்காவ்யாய, ஸர்தாய, கிரியாயை, ருசயே,

**186. ஓம் நாநாரூபபிரபந்தாய நம:**

ஸமஸ்கிருத மொழியின் அக்ஷரங்கள், இலக்கண வேறுபாடுகள், இலக்கிய ஸ்வருபங்கள், அவை கருத்துகுரிய லக்ஷணங்கள், யாவுமே, ஸ்ரீ ஹயக்ரீவனின் ஸ்வரூபத்தில் அடங்கும்.

**187. ஓம் யசஸே நம:**

ஸமஸ்த கல்யாண குணாத்மககிய ஸ்ரீ ஹயக்ரீவன்

என்றென்று 'யசஸ்' என்கிற புகழ்க்குரியவன்.

**188. ஓம் புண்யாய நம:**

பாப ஸம்மந்தமற்ற அவனுடைய திவ்யங்கள விக்கிரஹம் எல்லாவிதமான புண்ணியங்களுக்கும் இருப்பிடம்.

**189. ஓம் மஹதே தனய நம:**

நிலையற்ற செல்லம் ஆயிரம் ஆனலும் என்றும் நிலையான மகத்தான செல்வம் அவன் திருவடிகளே "மூகம் கரோதி வாசாலம் பங்கும் லங்கயதே கிரிம் யத்கிருபா தமஹம் வந்தே பரமானந்த மாதவம்" ஸகலவித செல்வங்களும் இருப்பிடமான ஹயக்ரீவனை பணிந்தால் அடையமுடியாத செல்வம் உண்டோ? ஊமை பேசுவான், முடவன், மலைஏறுவான் என்பதெல்லாம் கூட அவன் கருணையால் ஸாத்தியமாகிறது.

**190. ஓம் வ்யவஹார பரிச்சதாய நம:**

ஜகத் வியாபாரம் லீலாபிபூதி எல்லாமே அவனுடைய திவ்ய ஸங்கல்பத்தால் அவனஅதீனமாக நடக்கும்வியாபாரங்களே அவனன்றி ஒருணுவும் அசையாது 'தேன விநா திருமணமபி நசலதி-

**191. ஓம் சிவேதர பரிக்ஷயாய நம:**

முத்தொழில் புரிவதில் அழிக்கும் தொழில் பரமசிவனுடையது அவருக்கும் அந்தர்யாமியாய் இருந்து கொண்டு அவர் மூலமாக அந்த தொழிலையும் அவனே செய்கிறான்.

**192. ஓம் ஸத்ய: பரம நிர்வஹணய நம:**

பரம நிர்வாணம் என்று குறிப்பிட்க் கூடிய மோக்ஷாஸாம் ராஜயத்தின் தலைவனாக, இருப்பிடமாக, விளங்குமவன் ஸ்ரீ ஹயக்ரீவனே.



**193. ஓம் பிரிய பத்யோப தேசகாய நம:**

தத்வ, ஹித, புருஷாத்தம், என்று கூறக்கூடிய ஜீவனுக்கு ஹிதத்தை உண்டாக்கக்கூடிய ஸாரதமமான விஷயங்களை கடல் நீரை மேகங்கள் மழையாய் பொழிவதுபோல ஆசார்ய வர்யகளின் திவ்ய ஸுக்திகள் மூலமாக ஜீவனுக்கு அருள்பவன் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**194. ஓம் ஸம்ஸ்காராய நம:**

சாஸ்திர விதிதமான ஸம்ஸ்காரங்கள் யாவுமே பரமன் தான். அவைகளை செய்வித்து, அவற்றின் ஸ்வரூமாக இருந்து. அவற்றின் பலனை அருள்பவனும் அவனே.

**195. ஓம் பிரதிபாய நம:**

மேதாவிலாஸத்திற்கு பிறப்பிடமானவன்

**196. ஓம் சிவேதர பரிக்ஷாயாய நம:**

ஐஹிக, ஆமுஷ்மிக, மோக்ஷ பர்யந்தமான பலன்களை அடைய ஸகலவித ஞானத்தயும், அறிவையும் போதிப்பவன் அவனே.

**197. ஓம் கிரஹணாய நம:**

போதிக்கப்படும் ஞனத்தை ஜீவன் அறிந்து கொள்ளும்படி, புரிந்து கொள்ளும்படி செய்பவனும் அவனே.

**198. ஓம் தாரணாய நம:**

ஈரேழு பதினான்கு உலங்களையும் அண்டபிரம்மாண்டங்களையும் ஜகத் வியாபாரங்களையும் தன் ஸ்வரூபத்தில் தாங்குபவன் ஸ்ரீ

ஹயக்ரீவன்.

**199. ஓம் சிரமாய நம:**

ஜீவராசிகள் உஜ்ஜீவிக்கச் செய்ய, தாமே பல அவதாரங்கள் எடுத்தும், மகரிஷிகளைவும், அவர்கள் மூலம் பல திவ்ய ஸுக்திகளையும் செய்வித்து, இவ்விதமாகத்தான் என்பதாக இலல்ாமல் சோராது பரிசிரமம் செய்பவன், உழைப்பவன் கருணாமூர்த்தியான ஸ்ரீ ஹயக்ரீவனே.

**200. ஓம் ஆதாயை நம:**

ஸ்திரமான நிலையான, நம்முடைய திருஷ்டிக்கும் புலப்படும் படியான, ஸ்வரூபத்தை காட்டியருளக்கூடியவன்.

**201. ஓம் ஸ்வாதிம்னே நம:**

துக்கக்கலப்பற்ற ஆனந்தமயமான ரஸானுபவத்தை தன்னை நினைத்தமாத்திரத்தில் சேதனனுக்கு அருள்பவன்.

**202. ஓம் சித்ராய நம:**

சந்திர மண்டலத்தில் எழுந்தருளியிருக்கும் பரிமுகனின் பிரகாசமான ஒளி சித்ரா பௌர்ணமியின் நிர்மலமான குளிர்ந்த ஒளியை போன்றது.

**203. ஓம் விஸ்தாராய நம:**

ஸ்ரீ ஹயக்ரீவனுடைய ஸ்வருபத்தின் விஸ்திர்ணம் இவ்வளவென்று கணிக்க முடியாது விஸ்திர்ணம் என்பதே ஸ்வரூபமென்ருல் ஒரு வேளை பொருந்தலாம்.

**204. ஓம் சித்ரஸம் விதயே நம:**

ஒளி பொருந்திய ஸ்ரீ ஹயக்ரீவனின் ஸ்வரூபம்



அப்படிப்பட்டதான் ஸ்வரூபத்திற்கு இலக்கணம் வகுத்தது போல உள்ளது.

**205. ஓம் புராணாய நம:**

'புராணன்' என எம்பெருமானைக் குறிப்பது அவன் அனாதியானவன் என்பதைக் காட்டும் ஹயக்ரீவனுடையது என்பது நிர்ணயிக்க முடியாதது சிறப்பாகக் கொண்டாடப்படும் தசாவதாரங்களுக்கும் முன்றய அவதாரம் ஸ்ரீ ஹயக்ரீவாவதாரம்.

**206. ஓம் இதிஹாஸாய நம:**

எம்பெருமானுடைய திவ்யாத்ம ஸ்வரூபம் அவர்தம் திருக்கல்யாண குணங்களும், அவர்தம், சேஷ்டிதங்களும் ஜீவனுக்கு என்றென்னும் நினைத்து, பாராயணம் செய்து, நடைமுறைப்படுத்த வேண்டிய சரித்திரங்களாகும்.

**207. ஓம் ஸமிருதயே நம:**

ஸ்ருதி, ஸ்மிருதி கிரமத்தில் வேதங்கள் உபபிரும்மணங்கள் இவைகளில், ஸ்வரூபமாகவும், பிரதிபாத்யமாகவும் விளங்குபவன்.

**208. ஓம் ஸுத்ராய நம:**

வேதவியாஸ பகவான் வேதத்தை பிரம்மஸுரத்ரங்களாக பிரித்து போதித்தார். அத்தகைய பிரம்ம ஸீத்ரங்களும் எம்பெருமானின் ஸ்வரூபமேஆபஸ்தம்பம் ஸுத்ரம் இத்தியாதிகளும் இதில் அடங்கும்.

**209. ஓம் ஸம்ஹிதாயை நம:**

வேத ஸம்ஹிதை எனப்படும் ஸம்ஹிதைகளும்

எம்பெருமான் ஸ்ரீ ஹயக்ரீவன் தான். ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகம ஸம்ஹிதைகளும் கூட ஸ்ரீ பரிமுகனின் ஸ்வரூபமே.

**210. ஓம் ஆசாராய நம:**

வேதங்கள், ஸ்ருதி, ஸ்மிருதி, ஸம்ஹிதை, சாஸ்திரங்கள் யாவற்றிலும் கூறப்பட்ட ஆஞ்ஞா, அனுஞா கர்மங்களும் அவைகளை நடைமுறைபடுத்துவதும், ஆசாரத்தில் அதாவது நடவடிக்கையில் கொண்டுவருபவனும் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**211. ஓம் ஆத்மதுஷ்டயே நம:**

'துஷ்டி' என்கிற ஸமஸ்கிருதபதம் பூர்ணத்வத்தை குறிக்கும் ஆத்மாவின் அந்தர்யாமியாகிய ஸ்ரீ ஹயக்ரீவனே அவ்வாத்மாவின் பூரணத்வமாகிறான்.

**212. ஓம் ஆசார்யாஞானாதி க்ரமாய நம:**

இவ்விதமாக சாஸ்திரவிதமான கர்மாக்களை அனுஷ்டித்து எம்பெருமானின் ஸ்வரூபத்தை நிர்ணயிக்க இயலுமா என்றும் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட இவைகளைக் கடந்த அனுமானத்திற்கு அப்பாற்ப்பட்ட ஸ்வரூபம் பகவானுடையது.

**213. ஓம் ஸ்ரீமதே நம:**



'ஸ்ரீ' என்கிற பெரியபிராட்டியை உடைத்தானவன் என்கிற பெருமைக்கு உரியவன் ஸ்ரீ மந்நாராயணன் ஒருவன் தான்

**214. ஓம் ஸ்ரீ கிரே நம:**

வாக்தேவி எனப்படும் ஸ்ரீ ஹயக்ரீவனின் வாமபாகத்தில்



அமர்ந்திருக்கிக் கூடிய பிராட்டியின் தலைவன் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**215. ஓம் ஸ்ரீய:காந்தாய நம:**

பிராட்டியின் உளம் கவர்ந்த ஸ்ரீ காந்தன் எனப்படுபவன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவாகிய ஸ்ரீ ஹயக்ரீவனே!

**216. ஓம் ஸ்ரீ நிதயே நம:**

என்றும் அகலகில்லாதவளாக அவர்தம் அவதார காலங்களிலும் கூட தாம் அவதரித்து "யத்தர்ளைமரிஹதர்மிணி விஹாதே நாநாகிருதிர் நாயிகா" என்கிற கிரமத்தில் அவதார காரியத்தை பூர்த்தி செய்பவள். பிராட்டியே, அப்படிப்பட்ட ஸ்ரீ-யின் நிதியாக விளங்குபவன் எம்பெருமான் ஸ்ரீ என்பது மங்களத்தை குறிக்குமானால் எல்லாவித மங்களங்களுக்கும் மங்கள மானவன் 'மங்களானாம்ச மங்களம்' என்ப்படுவனும் எம்பெருமான் தானே!

**217. ஓம் ஸ்ரீ நிகேதனாய நம:**



ஸ்ரீ என்கிற பிராட்டி எம்பெருமானின் திவ்ய வக்ஷஸ்தலத்திலும், மடியிலும் வீற்றிருக்கும் 'ஸ்ரீ' என்றும் வசிக்கும், வாசம் செய்யக்கூடிய ஸ்தலம் எம்பெருமானின் திருமேனியே

**218. ஓம் ச்ரேயஸே நம:**

இவ்வுலக ஐச்வர்யங்கள் பிரேயஸ் என்றும் பாரலௌகிக பரம புருஷார்த்தத்தை 'சிரேயஸ்' என்றும் கூறப்படும் அப்படிப்பட்ட புனராவிருத்தி இல்லாத சிரேயஸ்

எம்பெருமானின் ஸ்வரூபம், இருப்பிடம் இவையே.

**219. ஓம் ஸ்ரீ ஹயானனாய நம:**

குதிரையின் ஸ்வரூபமாக முகவடிவு கொண்டவன் பரிமுகன். குதிரையின் முகம் பரிசுத்தத்திற்கு பிரதிபாத்யம் அப்படிப்பட்ட குதிரை முகம் கொண்டு பரமன் வேதம் ஸாதித்தகுளி ஸ்ரீ ஹயானனாக சேவை ஸாதித்தான்

**220. ஓம் ஸ்ரீதாய நம:**

ஐஹிக, ஆமுஷ்மிக, மோக்ஷம், வரையிலான ஸகல ஐச்வர்யங்களையும் மங்களங்களையும், நிலையான நிம்மதியையும், நெறியான வழிமுறைகளையும் அளிப்பவன் ஸ்ரீ ஹரியே.

**221. ஓம் ஸ்ரீ மயாய நம:**

'ஸ்ரீ' என்கிற பதமே ஸகலவிதமான மங்களங்களுக்கும் பொதுவாகக் குறிப்பிடக் கூடிய பதம். எம்பெருமானுக்கு தாம் ஆபரணமாக விளங்கி,அவன் 'ஸ்ரீ மான்' ஆக்கும் பிராட்டியின் இருக்கையால் ஸகல மங்களங்களின் ஸ்வரூபமாக எம்பெருமான் விளங்கு வதில் வியப்பென்ன? அவன் ஸ்ரீ மயமாய், மொத்த வடிவாய் விளங்கு பவனே.

**222. ஓம் ச்ரிதவத்ஸலாய சம:**



ஸ்ரீ நரசிம்ம அவதாரகாலத்தில் கூரேசன் அருளிச் செய்துள்ளது போல தமது வாத்ஸலய குணத்தை ஆச்ரிதனுக்கு பூரணமாகக் காட்டியருளினர் எம்பெருமான். ஒரு திருக்கண்ணால் அசுரனை தரிக்கும் விதமாகவும், மற்றொரு திருக்கண்ணால் பிரஹ்லாதனை குளிரவும் கடாக்ஷித்தருளி சீற்றத்தோடு



அருள்பெற்றவனாகி விளங்குகிற ஸ்ரீ நிருஸிம்ஹன் அடைய வேண்டிய பொருளும் , அடையும் மார்கமும் ஒருவனே, அவன் திருவடிகளே கதி என்றிகுக் கூடிய ஆச்ரிதர்களுக்கு தமது வாத்ஸல்யத்தை வாரிவாரி வழங்குபவன் ஸ்ரீய: பதி

**223. ஓம் ஹம்ஸாய சுசிக்ஷதே ஆதித்யாய நம:**

யாஞ்நவால்க்ய மகரிஷி க்கு ஸீர்யமண்டலத்தின் நடுவில் எழுந்தருளி ஸ்ரீ ஹயக்ரீவன் சுக்லயஜுர்தேதத்தை உபதேசித்தருளினார், ஹம்ஸம், என்பது ஞானத்திற்கு சின்னம் தூய்மையான ஞானத்தை, வேதத்தின், உட்பொருளை எடுத்துவைரத்த, ஸீர்ய மண்டல மத்யஸ்த்தன் ஹயக்ரீவனே.

**224. ஓம் வஸவே அந்தரிக்ஷஸதே சந்திராய நம:**

ஸ்ரீ ஹயக்ரீவ மாலா மந்திரத்திலேயே 'சந்திர மண்டல வாஸினே' என்கிற பதம் நிஹிதமாக உள்ளது. சந்திரகாந்தம் போன்ற குளிர்ந்த காந்தியை பரப்பும் பரிமுகனாகிய பரமன் சந்திரமண்டலத்தில் வஸிப்பதும் பொருத்த மானதே!

**225. ஓம் ஹோத்ரே வேதிதே யோனயே நம:**

வேத பிரதிபாத்யமான யாக, யஞ்ஞ தர்மங்களின் உத்பத்தி ஸ்தானமாக விளங்குபவன் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**226. ஓம் அதிதயே த்ரோண ஸதே ஹவிஷே நம:**

யஞ்ஞ கர்மாக்களில் அளிக்கப்டும் ஹவிஸ்யை ஏற்று சிறந்த பழத்தைத் தரும் மரம் போல, அதற்குரிய மேலான பலனை அளிக்கும் காருணிகன் எம்பெருமான்

**227. ஓம் ந்ருஷதே மிருத்யவே நம:**

மிருத்யு ஸர்வஹரஸ்சாஹம்' என்று பகவத் கீதையில்

ஸாதித்தருளியபடி, எல்லாவற்றையும் முடிக்கும் காலன் என்கிற மிருத்யு எம்பெருமான்

**228. ஓம்வரஸதே அம்ருதாய நம:**

பிறப்பு, இறப்பு, என்கிற முடிவற்ற சக்கரத்தினின்று ஆச்ரிதர்களை மீட்டு இழிதல் இல்லாத அமிருதமயமான ராஜியத்தை மோக்ஷம் அருள்பவன் பரந்தாமனே

**229. ஓம் ருதஸதே வ்ருஷாய நம:**

பூஜிக்கத்தக்க தெய்வங்களின் முதன்மை யானவன்.

**230. ஓம் வ்யோம ஸதே விவித ஸ்போட சப்தார்த்தவியங்க்ய வைபவாய நம:**

ஆகாய மண்டத்தில் எப்போதும் பரவி, விரவி, இருக்கும் வேத, ஸ்ருதி, உபநிஷத், ரிஷிவாக்கியங்கள் சப்தங்கள் மூலமாக ஸ்புரிக்கும் தத்வார்த்தங்கள் வியஞ்ஞார்த்தங்கள், எல்லாவித வைபவங்களுக்கும் இருப்பிடமானவன் ஸ்ரீ ஹயக்ரீவன் தான்:

**231. ஓம் அப்ஜாய ஸ்வாதுதம ரஸாயநம:**

ஸ்வாதி முத்யம் என்று தூய்மைக்கு எடுத்க்காட்டாக முத்து கூறப்பகிறது எம்பெருமான் ஸ்ரீ ஹயக்ரீவன் தூய்மையான ருசிகளின் எல்லயாம் நிலையில், ரஸானு பவத்தை சேதனைர்களுக்கு அளிப்பவன்

**232. ஓம் கோஜாய மனோஹரகேயாய நம:**

'கோ ' என்கிற சப்தம் வாக்தேவதை ஸரஸ்வதியை குறிக்கும். அந்ததேவி தம் குருவாக பூஜிக்கும், ஸ்ரீ ஹயக்ரீவன் மனோஹரமாக அவளால் துதிக்கப்படுகிறன். ஏனெனில் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸாதித்தப்படி தாக்ஷிண்ய ரம்யா கிரிசஸ்ய மூர்த்தி தேவிஸரோஜாஸன தர்ம பத்னி1



ஸ்ரீ பெருந்தேவி தாயார் (காஞ்சிபுரம்)



ஸ்ரீ வரதராஜப் பெருமாள் (காஞ்சிபுரம்)



வ்யாஸாதயோபி வியபதேச்யவாச: ஸ்புரத்திஸர்வே தவ சக்திலேசை:11 என்பதால் ஸ்ரீ ஹயக்ரீவனின் சக்தியின் ஒரு திவலை மாத்திரத்தைபிரஸாதமாக்ப பெற்று வாக்தேவதை ஸரஸ்வதி, வித்யாதேவதையாக விளங்குகிறாள் அவள். மனேஹறராமாக குருவந்தனம் செய்து துதிக்கின்றள்.

**233. ஓம் ரிதஜாய ஸகல பத்ராய நம :**

ஸகல மங்களங்களுக்கும் பிறப்பிடமானவன் ஸர்வ பூஜிதன், அப்படிப்பட்ட பரமனை பூஜிப்பதால் ' ஸகலம் பத்ரமச்னுதே' என்று மந்தர ராஜபதத்தில் ருத்ரன் ஸாதித்திருப்பது பொருத்தம் தானே.

**234. ஓம் அத்ரிஜாய உத்தம ஸ்தைர்யாய நம :**

சந்திர மண்டத்தில் குளிர்ந்த ஒளியில் எப்போதும் நிலையானவன். சந்திர மண்டத்தில் வாஸியான பரிமுகன் நமக்கும் நிலையான குளிர்ந்த கடாஷங்கள் அருளட்டும்.

**235. ஓம் ரிதாய ஸமஞ்ஞாய நம :**

எம்பெருமானுடைய பரத்வம் பரஸ்பர விரோத மின்றி ஸமதிருஷ்டியிடன் சாஸ்திங்களால் உண்மையான தத்துவமாக வரைப்பட்டது தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உண்மையின் ஸ்வரூபமாய் பரமனே பூஜைக்கும் தியானத்திற்கும் உரியவன்.

**236. ஓம் பிருதே அந்ருதாய ஸீக்ஷ்ம வசானுகாய நம :**

தமது விச்வரூபத்தை வெளிப்படையாக பல இடங்களில் காட்டியருளியது சாஸ்திரங்கள் கூறும். அவற்றில் பரமாணுவாக எம்பெருமான் வசிப்பதும் உண்மையே, எங்கும் எல்லாவற்றிலும் எப்போதும் அந்தர்யாமியா

வசிப்பவன் ஹயக்ரீவன் ஆகையால் எம்பெருமானுடைய ஸ்வரூபத்தை இவ்வளவுதான் இப்படித்தான், என்று அனுமானிக்கக்கூட முடியாத படி திவ்யமங்கள ஸ்வரூபத்தையுடையவன் ஸ்ரீ ஹயக்ரிவன்.

**237, 238, 239, ஓம் ஸத்யாய , ஞானாய, அனந்தாய நம:**

ஸத்யம், ஞானம், அனந்தம், பிரம்ம, என்கிற ஸீத்ர வாக்கியத்தில் பிரதிபாத்ய தேவதை ஸ்ரீ மந் நாராயணன் இதன் தேர்ந்த பொருள் வெளிப்பட கலியன ' நந்தா விளக்கே அளத்தற்கரியாய் நரநாராயணனே' என்று திருநாமங்கள் நாராயணப் பெருமான் உண்மையான ஞானத்திற்கும் அளப்பதற்கு அரிய அப்பாற்பட்ட ஸ்வரூபமுடையோன் என்பது தேறுகிறது - ஸ்ரீ ஹயக்ரீவனை மங்களாசாஸனம் செய்தபோது எம்பெருமானின் பிரயயக்ஷஸ்வரூபத்தில் முன்னிலையில் ' ஞானானந்த மயம் தேவம்' என்றுதான் தொடங்குகிறார் ஆகையால் இந்த ஸீத்ரவாக்கியம் ஸ்ரீ ஹயக்ரீவனுக்கே பொருந்தும்.

**240. ஓம் யதே நம:**

பக்தர்களைக் காப்பதற்கு எப்பொழுதும் முயற்சியுடையனாக இருக்கிருன் பரிமுகன்.

**241. ஓம் ததே நம:**

பக்தர்களுக்கு மேன் மேலும் பக்தியை பெருக்கி தன்னிடம் ஈடுபாடுடையவர்களாக ஆக்குபவனும் எம்பெருமானே.

**242. ஓம் ஸதே நம:**



உண்மையான 'இருத்தல்' என்கிற பதத்திற்கே மொத்தமான பரம்பொருள் ஸ்ரீ மந்நாராயணன் நிலையாக என்றென்னும் முடிவில்லாத உண்மையின் உட்பொருளாக விளங்குபவன் ஸ்ரீ பரிமுக எம்பெருமான்.

**243. ஓம் பரஹ்ம மயாய நம:**

'ஸத்யம் ஞானம் அனந்தும் ப்ரஹ்ம ' என்கிற ஸீத்ரவாக்கியம் ப்ஹைமஸ்வரூபத்தை விவரிக்கின்றது. அவ்விதமான உயர்வற உயர்ந்த தத்துவங்களின் நிறைந்த ஸ்வரூபமான. பிரம்ம ஸ்வரூபம் ஸ்ரீ ஹயக்ரீவனுடையது.

**244. ஓம் அச்யுதாய நம:**

எம்பெருமானின் இத்த திருநாமத்திற்கு பெரியோர் மிக விரிவான வியாக்கியானம் ஸாதித்துள்ளனர் அர்ச்சா ரூபத்தில் இத்திருநமத்தின் ஸ்வரூபமாக ஸ்ரீதேவனாதன் சேவைஸாதிக்கின்ருர் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸமஸ்கிருதம் பிராகிருதம், தமிழ். என்று மூன்று மொழிகளும் இவ்வெம் பெருமானை பாடியுள்ளார் தம் திருவடிகளை சரணாகப்பற்றிய வரை கைவிடாதவர் என பொருள்படும்.

**245. ஓம் அக்ரே பவதே நம:**

பிரணவம் அகார, உகார, மகரம், சேர்ந்தது எம்பெருமான் அகார வாச்யன், அக்ர என்றால் முதல் என்று பொருள் படும். வேதத்தின் ஆரம்பமும் பிரவணவமே அதன் முதல் எழுத்தாகிய அகார வாச்யன் மூவுலகு உண்டு உமிழ்ந்த முதல்வன் என்பது தொண்டரடிப்பொடி யாழ்வாரின் நிர்வாகம்.

**246. ஓம் நகாய நம:**

'நக' என்கிற பதத்திற்கு அகராதியின் மலை, மரம், ஸுரியன், எண்களில் 7 என்கிற விதமான பொருள்

கூறப்பட்டுள்ளது. இவையாவும் எம்பெருமானுக்கு குறிப்பாக பொருந்தும் 'ஸ்தாவராணாம் ஹிமாலய' மலைகளுக்குள் எம்பெருமான், இமயமலையாக இருக்கின்றவன். இந்த கலிகாலத்திலும் அந்த இமயமலையில் ஸ்ரீ நாராயணன் ஸ்வரூமாக திருவஷ்டாகூரத்தை பிரவர்த்திப்பித்து ஜீவர்கள் உஜ்ஜீவிக்கச் செய்து அருள் பாலித்து வருகின்றனர். மரங்களுக்குள் அரசமரம் எம்பெருமானின் ஸ்வரூபம் 'ஜ்யோதிஷம் ரவிரம்சுமாந்' ஒளி பரப்பும் ஜோதிகளில் சூரியனாக விளங்குபவன் ஸ்ரீ ஹயக்ரீவன் கலிகால ப்ரத்யக்ஷ தெய்வமாக 'கலௌ வேங்கட நாயக' என்கிற படி ஏழுமலைகள் மீது எழுந்தருளிய சேதனர்கள் தன்திருவடிகளைப் பற்றும் படியாக மௌன முத்திரை ஸாத்திஸாதித்தருள்பவன் பரதேவதையாகிய ஸ்ரீ ஹயக்ரீவன். இப்படி ஸகலவிதமாகவும் எழுந்தருள்யிருந்து சேதனாகளை பரிபாலிப்பவன் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**247. ஓம் நித்யாய நம:**

ஸ்ரீ மத்பாகவதம் கூறுவது போல யுகம் தோறும் பிரளயம் தோன்றி யாவும் அழிந்த நிலையில் ஆலிலை மேல் சிறு குழந்தை வடிவத்தில் தாம் மட்டும் எழுந்தருளிந்து புனரபி ஈரேழு பதினான்கு உலகங்களையும், உயிர்களையும் தேவ தேவர்களையும் சிருஷ்டித்து லீலாவிபூதியை நடத்துகின்ற நிலையான முடிவற்ற ஸ்வரூபம் ஸ்ரீ ஹயக்ரீவனுடையது.

**248. ஓம் பரமாய நம:**

"தாஸ பூதா : ஸ்வத : ஸர்வே ஹ்யாத்மான பரமாத்னே



என்று மந்திர ராஜ ருத்ரனும் -'' ஹரிவம்ச புராணத்தில்பிரம்மன் பரம்மச ஸித்திம்பரமம்ச தேவம் பரம் பரஸ்யாயி பரம்ச யத்பரம் பரஸ்யாமதி பரமம் பிரபும்த்வாமாஹுர்ராக்யம் புருஷம்புராணம் என்று எம்பேருமானுடைய விபுத்வததை கொண்டுடாடி இருக்கிறார்கள் பிரம்மனும், ருத்ரனும்மன எம்பெருமானின் பரத்தவ ஸ்வரூபத்தை இவ்வாறு கொண்டாடியிருக்க பரதேவதை ஸ்ரீ ஹயக்ரீவனே.

**249. ஓம் புருஷோத்தமாய நம:**



'புராண புருஷன் என்கிற திருநாமத்தை ஒட்டி எம்பெருமான் அனாதியானவன் என்பது தேறும் குறிப்பாக ஸ்ரீ ராமனை புருஷோத்தமன் என்று விசேஷித்து கொண்டாடுவர் ஸ்ரீ ராமர் ஷாட்குண்யம் பரிபூர்ணம் என்கிற படி ஞான, பல, ஐச்வர்ய, வீர்ய, சக்தி, தேஜஸ் இவை நிரம்பிய பூர்ணாவதாரம், மனிதமாத்திரத்திற்கு நெறிமுறைகளை தாமே அனுஷ்டித்தவர் புருஷோத்தமன் என்பதால் ஸ்ரீ ராமனுக்கு மிக பொருத்தமான திருநாமமாகிறது ஸ்ரீ ஹயக்ரீவனே.

**250. ஓம் யோக நித்ராபராய நம:**

தக்ஷிணாயன் புண்ணியகாலத்தில் எம்பெருமான் யோக நித்தினரக்கு ஸங்கல்பித்துக் கொள்வதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. எம்பெருமானுடைய ஸூக்ஷ்ம ரூபம் என்றும் விழிப்பை உடைத்ததானது நடைமுறைக்கு

யோகநித்திரைக்கு ஸ்ரீ ஹயக்ரீவன் ஸங்கல்பித்துக் கொள்கின்றான்.

**251. ஓம் ஸ்வாமினே நம:**

எல்லா ஜீவராசிகளுக்கும் ஸ்வாமி என்கிற எஜமானர் ஸர்வசேஷியான ஸ்ரீ ஹயக்ரீவனே சேஷ பூதர்களாகிய நாம் எல்லோரும் அவனுக்கு மட்டுமே ஆட்பட்ட அடிமைகள், கைங்கர்ய ஸ்ரீ யை வேண்டுபவர்கள் அதை எம்பெருமானின் 'சரணாகதி கத்யத்தில் எம்பெருமானே வரமாக அருள்கிறார். 'நித்யகிங்கரோ பவ' என்பது அனுஸந்தேயம்.

**252. ஓம் நித்யான பர நிர்விருதாய நம:**

எவனொருவன் எம்பெருமானை நினைக்காது செய்வதெல்லாம் அவன் பிரீதிக்காக வேதான் என்பதை உணராது செயலில் பற்றுக் கொண்டால், அப்புப்பட்டவர்கனை எம்பெருமான் அணுகுவதில்லை.

**253. ஓம் ரஸாய நம:**

உயர்ந்த தத்வங்களுக்கு கெல்லாம் உட்பொருளாய் விளங்குபவன் ஹயக்ரீவனே.

**254. ஓம் ரஸ்யாய நம;**

உயர்ந்ததான ஆத்மானுபவத்தை எடுத்துக் காட்டி அருள்பவன் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**255. ஓம் ரஸியித்ரே நம:**

இப்படிப்பட்ட துக்ககலப்பற்ற தூயதான ஆத்மானுபத்தை உண்டாகுபவன் ஸ்ருஷ்டித செய்பவன் அவனே.



**256. ஓம் ரஸவதே நம:**

எம்பெருமானனுடைய திவ்யமங்கள ஸ்ரூபம் ரஸமயமானது தரிசித்த மாத்திரத்தில் ஆனந்தானுபவத்தை தருவது.

**257. ஓம் ரஸிக பிரியாய நம:**

சேதனன் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் இந்த ரஸனுபவத்தை ஏற்று ஆனந்திப்பதைக் கண்டு மகிழ்பவன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**258. ஓம் ஆனந்தாய நம:**

"ஆனந்தோ பிரம்மே திவ்ய ஜானாத்" என்கிறது ப்ருகுவல்லி. அதுவே பரப்ரஹ்ம ஸ்வரூபி ஸத். சித் ஆனந்தம் என்றும் குறிப்பிடுவர்கள் ஸ்ரீ ஹயக்ரீவனே ஆனந்மயமானவன் இந்த ஆனந்தத்தாலேயே ஜீவராசிகள் ஆனந்திக்கிறார்கள்.

**259. ஓம் ஸர்வானந்தயதே நம:**

இப்பூவுலகில் உள்ளவரை எம்பெருமானை தரிசித்து அனுஞாகைங்கர்யங்களைச் செய்து பெறக்கூடிய ஆனந்தத்மைதயும் மோம் பெற்ற பிறகு திருமாமணி மண்டபத்தில் நித்யானந்தத்தையும் அருள்பவன் ஸ்ரீ ஹயக்ரிவனே.

**260. ஓம் ஹயகந்தராய நம:**

குதிரை முகவடிவம் கொண்ட திவ்யமங்கள ஸவரூபத்தை உடையவன் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**261. ஓம் காலாய நம:**

கால கலயதாமஹம் என்று விபூதிவைபவத்தில் கண்ணன் கூறியது போல கணக்கிடுபவர்கள்ளுக்குள்

எம்பெருமான் காலன்.

**262. ஓம் கால்யாய நம :**

கணக்கிடப்படும் கால பிரமாணமும் எம்பெருமானே.

**263. ஓம் காலாத்மே நம :**

இப்படியாகப் காலம், தினம், வருஷம், யுகம், என்கிறதாக உள்ள கால நிர்ணயம் யாவும் எம்பெருமானின் திவ்யஸங்கல்பத்தால் உருவாகின்றன யாவற்றின் உருவமும் உப்பொருளும் அவன் தான். ஆங்கிலத்தில் Time and Tide wait for no Man என்பர். காலம் தவறமல் நடப்பதும் முன்னேறுவதும் ஸூரிய சந்திரர்கள் , பூமி, இவற்றின் இயக்கமும் கால பிரமாணப்படி நடப்பதும் யாவும் அவன் திவ்ய ஸங்கல்பமே.

**264. ஓம் காலாப்யுதி தஜாகராய நம :**

ஸூரிய சந்திரர்களின் தம்தம் உதய, அஸ்தமனமும் பூமியின் சுழற்சியும் காலபிர்மாணப்படி நடப்பதால் பகல், இரவு, நாட்கள் கணக்கும் ஏற்படுகிறது. இவ்விதமான காலத்தின் தோற்றம் முன்னேற்றத்திற்கு காரணகர்த்தாவாக எப்பவும் ஜாகரூகனாக விளங்குபவனும் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**266. ஓம் காந்தா கதிதவ்யாதிகால காய நம :**

பிராட்டியின் புருஷகாரம் பெற்ற ஜீவனுக்கு பிறவி எனும் நோயை வேரறுத்து மோட்சம் அருள்பவன்.

**267. ஓம் திருங்ந்ய்ஞ்சனோத்யல்லயாய நம :**

வேத, வேதாங்கங்கள், உப நிதங்கள், சாஸ்திரங்கள் யாவற்றிலும் தெளியாத நிலங்களை, தமது கடாக்ஷசேத்தால் மையிட்டு காட்டுவது போல



தெளிவிப்பவன் ஸ்ரீ ஹயவதனன்.

**268. ஓம் த்ருகு தஞ்சனோத்யத் ஸர்காய நம :**

ஹயவதன பெருமானின் திருக்கண்களின் தெளிவான கடாக்ஷ விசேமே உண்மை பொருளீன் உற்பத்தி ஸ்தானமாகும்.

**269. ஓம் லகு கிரியாய நம :**

அகராதியில் “லகு ” என்றுல் சிறிய என்று பொருள்படும் ‘லகுஹஸ்த’– என்று விளையாட்டாக அதே சமயம் ஸாமர்த்தியமாக பூரணமாக வேலை செய்பவனை குறிப்பர். எம்பெருமான் முத்தொழிலையுலும் லகுகிரியை போல அனாயாசமாக செல்கின்றுன் அல்லவா?

**270. ஓம் வித்யா ஸஹாய நம :**

‘சுவித்யை’ என்று அஞ்ஞானத்தை குறிப்பிட்டு சுத்தமான ஞானம் என்கிற வித்யை ஆச்ரிதர்களுக்கு ஏற்படும் படி ஸகல்பத்தை செல்பவன் ஸ்ரீ ஹயக்ரீவன்

**271. ஓம் வாகீசாய நம :**

வாக்தேவியை தம் இடபாகத்தில் ஏற்று, ஆச்ரிதர்களுக்கு பூரண ஞானத்தையும், வாக் சக்தியையும் அளித்தருள்பவள் ஸ்ரீ ஹயக்ரீவன் ஞானத்தையும், வித்தையும் அருளும் தேவதைகளுக்கும் ஈசனாக விளங்குபவன்.

**272. ஓம் மாத்ருகாமண்ட லீ கிருதாய நம :**

சரண்யா எனப்படும் ஆச்ரிதவாத்ஸலல்ய ஸ்ரூபத்தை பெரியபிராட்டியை தனக்கு ஆபரணமாகக் கொண்டு விளங்குபவன்.

**273. ஓம் ஹிரண்யாய நம :**

ஸ்வர்ணமாயமான ஸ்வரூபமும் உடைய தேஜோமய ரூபன் ஸ்ரீ ல்க்ஷமி ஹயக்ரீவன்.

**274. ஓம் ஹம்ஸ மிதுனாய நம :**

சுத்த ஸத்வமான ஸ்வரூபமும். ஞானமும் அதன் தேர்ந்த பொருளாகவும் விளங்குபவன் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**275. ஓம் ஈசானாய நம :**

ஸர்வேச்வரன் , ஸர்வ வல்லமை படைத்தவன் உயர்வற உயர்நலடையவன், ஜீவகோடிகளின் பரம லட்சியமான திருவடினளை உடைய பரந்தமன் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**276. ஓம் சக்தியே நம :**

எம்பெருமான் ஈட்குண்ய பரிபூரிதன் ஞான பல, ஐச்வர்ய, வீர்ய, சக்தி, தேஜஸ் என்பன இவைகளின் சக்தி என்கிற குணபூர்த்தி உள்ள அவதாரம் ஸ்ரீ ஹயக்ரீவாவதாரம்.

**277. ஓம் ஜயினே நம :**

ஜயம் என்று வெற்றி எம்பெருமானை சார்ந்திருக்கும் என்பதல்ல வெற்றி என்பதே எம்பெருமான் நான்,

யத்ர யோகீச்வரோ க்ருஷ்ண
யத்ர பார்த்தோ தனுர்தர தத்ர
ஸ்ரீ விஜயோ பூதி - த்ருவா நீதி : மதிர்மம

என்பது கீதைவாக்கியம்கிணங்க எம்பெருமான் எழுந்தருளிக்கும் இடமும் விஜயம் - வெற்றி என்பதாகும்.

**278. ஓம் க்ருஹ மேதினே நம :**

ஸ்ரீ வைகுண்டத்தில், திருமாமணி மண்டபத்தில்



வீற்றிருந்து ஸ்ரீ பூமி நீளா நாயக, அனந்த கருட விஷ்வக்ஸேனாதி நித்யருரிகள் புடைசூழ, ஸாம்ராஜ்யாதிப தியாகிய பரமன் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**279. ஓம் குணினே நம :**

எம்பெருமான் ஸகல கல்யாணகுண பரிபூரணன் அகில ஹேய குண ப்ரத்யனீகன் என்று எம்பெருமானார் கொண்டாடுவது போல திருக்கல்யாண குணங்களின் இருப்பிடம் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**280. ஓம் ஸ்ரீ பூமி,நீளா லீலைக லாலஸாய நம :**

ஸ்ரீ தேவி, பூமிதேவி, நீளாதேவி, என முத்தேவியரின் துணையுடன் லீலாவிபூதியை நடத்துவதில் ஈடுபாடுடைய தலைவன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**281. ஓம் அங்கோதூட வாக்தேவி காயோ பாச்ரிதாசார்யகாய நம :**

குருப்ய : தத்குருப்யஸ்ச நமோ வாகமதீமஹே!
வ்ருணீமஹே ச தத்ராத்யௌ தம்பதீ ஜகதாம்பதி !!

என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன். திவ்யதம்பதிகள் தொடங்கி ஸ்வாசார்யன் வரையிலான் ஆசார்ய பரப்பரையை உபாயமாக, உபேயமாக வரிக்கிறேன் என்கிறா். ஸ்ரீ ஹயக்ரீவன் இந்த திருநாமத்திற்கு இதுவே அனு ஸந்தேயம் ஆசார்ய பரம்பராதிகள் வாக்தேவியுடன் கூடிய ஸ்ரீ லஷ்மி ஹயக்ரீவனையே ஸர்வார்த்தித்திற்கும் உபாஸிக்கிருர்கள்.

**282. ஓம் வேதவேதாந்த சாஸ்த்ரார்த்த தத்வவியாக்யான தத்பராய நம :**

"ஆதாரம் ஸர்வ வித்யானாம்" என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸாக்ஷாத் ஸ்ரீ ஹயக்ரீவன் முன்னிலையில் ஸாதித்ததின்விரிவே இந்த திருநாமம் ஸகலவிதமான வேதம், தத்துவம், சாஸ்திரம், யாவற்றிற்கும் பூரண பொக்கிஷம், உற்பத்தி ஸ்தானமும் எம்பொருமானே"

**283, 284, 285, 286, 287, 288, 289, 290, 291, 292.**

ஓம் ஹௌம், ஹ்லூம், ஹம்ஹம், ஹயாய, ஹம்ஸீம், ஹம்ஸாம், ஹம்ஸீம், ஹஹீம், ஹஸௌம், ஹஹீம்ஹம், ஆகிய இந்த மந்திரங்கள் யாவும் ஸ்ரீ ஹயக்ரீவனை பற்றிப் அவரைக் குறிக்கும் பீஜாக்ஷரங்களே.

**293. ஓம் ஹரிணாய நம:**

ஸ்வர்ண மயமான ஸ்வரூபத்தை உடைய ஸ்ரீ ஹயக்ரிவேனே இத்திருநாமம் குறிக்கும். அகராதியில் "அபி பிரஸன்னம் ஹரிணேஷீ தேமன" என்றும் கூறப்பட்டுள்ளது. ஆச்ரிதர்களிடம் எப்போதும் பிரஸ்ன்னாமாய் எழுந்தருளியிருப்பவன் ஸ்ரீ ஹயவதவன்

**294. ஓம் ஹரிகேசாய நம:**

ஹரி என்பது மஞ்சள் வர்ணத்தைக் குறிக்கும் எம்பெருமான் ஸ்ரீ ஹயக்ரீவனின் கேசபாரம் கூட ஸ்வர்ணமாயமாக பிரகாசிக்கின்றது.

**295. ஓம் ஹரேடிதாய நம:ம**

ஆச்ரிதர்கள் பக்தர்கள் துக்கத்தை த்வம்ஸம் செய்து காப்பவன் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**296. ஓம் ஸனாதனாய நம:**

மிகவும் பழைமையானதை ஸனாதனமானது என்பர்.



எம்பெருமானின் ஆரம்பமே முடிவே காண இயலாது. பழைமைக்கு பழைமையானவன் பரந்தாமன் அண்ட பஹிரண்டங்களுக்கும் சிருஷ்டிகர்த்தரவாகிய பரமனின் தோற்றம் காலத்தால் நிர்ணயிக்க முடியாது.

**297. ஓம் நிபீஜாய நம:**

எம்பெருமான் ஸ்வ ஸங்கல்பத்தால் ஒரு ஸ்வரூபத்தை ஏற்கக்கூடியவன். ஈரேழு பதினன்கு உலகிலும் உள்ள ஜீவன்கள்தம்தம் கர்மாக்களின் பயனாக விதவிதமான பிறவிகளை, ஸ்தானத்தை அடைகிருர்கள். எம்பொருமன் கர்மவச்யர் அல்ல. அதனால் இதரர்களைப் போல் கர்தா என்கிற விதை, பீஜம், அவர் அவதாரங்களுக்கு, இல்லை கீதையில் கண்ணனும் . இதையே அர்ஜுனனுக்கு போதிக்கிறார்கள் "உன் பிறவிகளை நீ அறியமாட்டாய் என் பிறவிகளை நான் அறிவேன்" ஆகவே அவன் நிர்பீஜன். எந்த சூதாரத்தைக்கொண்டு ஒரு ஸ்பரூபத்தை அவள் அடைவத்லலை.



**298. ஓம் ஸதே நம:**

ஸத், சித், ஆனந்தம் என்கிற ஸூத்ரவாக்கின்படி. ஸத் தேறுகிறது உண்மையான ஸ்வரூபம் எம்பெருமானுடையாது.

**299. ஓம் அவ்யக்தாய நம:**

இவள் இப்படிப் பட்டவன், என்று அறியக் கூடாதவன், மாறுபாடும், தமக்கு மேம்பட்டமுதும் இல்லாத அவனை மதியீனர்கள் தோன்றுதலில்லாத பரமனை தோற்றமுடையவனாக கருதுகின்றனர் என்று கீதை கூறுகிறது 7 வது ஸர்கம் 24 ஸ்லோகம்.

**300. ஓம் ஹ்ருதயே சயாய நம:**

ஆச்ரிதர்களின் இதயத்தில், எண்ணங்களிளும் எப்படிவும் தோன்றுபவன், நிலையாக இருப்பவன் ஸ்ரீ ஹயக்ரீவன் " மனீஷிணாம் மானஸ ராஜஹம்ஸம்" என்கிறர் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன்.

**301. ஓம் அக்ஷராய நம:**

அக்ஷரம் என்பது அகாரவாச்யனாகிய ஸ்ரீ மந் நாராயாணைக் குறிக்கும். என்னும் அழிவற்று தன்மையுடைய பரந்தாமன் என்பதே இதன் தேர்ந்த பொருள்.

**302. ஓம் க்ஷர ஜீவேசாய நம:**

க்ஷய என்றல் அழியக்கூடிய! அப்படிபட்ட ஜீவாத்மாக்கள் யாவற்றுக்கும் ஈசன் தலைவன் ஸ்ரீ மந்நாராயணனே!

**303. ஓம் க்ஷமிணே நம:**

ஆச்ரித்களின் குறைகளை, குற்றங்னளை எப்போதும் பொருத்தருள, மன்னித்துவிட தயாராக இருப்பவன் பரமகாருணிகளுகிய பரமன்.

**304. ஓம் க்ஷயகராயாச்யுதாய நம:**

இழிவு, பின்னடைவு, ஏற்படும் காலங்களில் ஆச்ரிதர்களைக் கைவிடாது காப்பவனும் பரம் பொருளாகிய ஸ்ரீ ஹயக்ரீவனே.

**305. ஓம் கர்த்ரே நம:**

தேன வினா திருணமபி ந சலதி - என்பது சாஸ்திரம் எந்த ஒரு செயலையும் நம் பார்வையில் யாரோ செய்வதாக தென்பட்டாலும் யாவற்கும் அந்தர்யாமியாய்



அந்த செயலை உண்மையில் செய்பவன் பரந்தாமனே.

**306. ஓம் காரயித்ரே நம:**

எந்த செயலையும் அவரவர் மூலம் செல்விப்பவன் ஸ்ரீ மந் நாராயணனே.

**307. ஓம் கார்யாய நம:**

செய்யப்படும் காரியமும் அவன் தான்.

**308. ஓம் காரணய நம:**

எந்த ஒரு செயலுக்கும் விளைவிற்கும் ஒரு காரணம் இருக்கும், அதற்கான காரணா ஸ்வரூபம் ஸ்ரீ மந் நாராயணனே.

**309. ஓம் பிரக்ருதயே நம:**

இந்த பூமண்டலம் பிரகிருதி என்று கூறப்படுகிறது. இந்த பிரகிருதி நிஜமானது. மாயை அல்ல. ஏனெனில் இந்த பிரகிருதி ஸ்வரூபமும் ஸ்ரீ மந்நாராயாணன் தான்.

**310. ஓம் கிருதயே நம:**

இந்த பிரகிருதியை உண்டாக்கியவனும் ஸ்ரீ ஹயக்ரீவன் தான்.

**311. ஓம் க்ஷயக்ஷய மனஸே நம:**

' அவிஞாதா ' என்கிற திருநாமத்திற்கு சேதனர்களின் குற்றங்கள் அறியாதவன் என்று பட்டர் ஸாதிக்கிறார் ஆச்ரிதர்கள் பால் ஏற்படக்கூடிய அபசாரங்கள் எம்பெருமான் மனதில் தங்குவதில்லை சிறுக சிறுக மறைந்து விடுகின்றன் என் அடியார் இது செய்யார் செய்தால் நன்றே செய்தார் என்கிற ஸ்ரீ ஆழ்வார் பாசுரம் இங்கு அனுஸந்தேயம்,

**312. ஓம் மார்த்தாய நம:**

மாத ' என்கிற பதத்திற்கு வழி என்கிற பொருள் உண்டு. இழிதல் இல்லா பேரின்ப ஸாம்ராஜ்யத்தை அடையக்கூடிய வழி எம்பெருமான் தான்.

**313. ஓம் விஷ்ணவே நம:**

எங்கும் பரந்து நிற்கும் பரந்தாமன் ஸ்ரீ மகா விஷ்ணு என்பது. ' வியாப்ய' என்கிற பதத்திலிருந்து விஷ்ணு என்ற பதம் ஏற்பட்டதே.

**314. ஓம் ஜிஷ்ணவே நம:**

எங்கும் பரவி இருக்கும். மஹாவிஷ்ணு என்றும் மங்காத ஒளி பொருந்தியவன் நிலையானவன்.

**315. ஓம் ஜகந்மயாய நம:**

ஸ்ரீ நம்மாழ்வர் ஸ்ரீ ஒப்பிலியப்பனை திரு விண்ணகரப்பனை மங்களர்சாஸனம்



செய்யும் போது விபரீதமாக விளங்கும் இரண்டு நிலைகளிலும் இருப்பவன் அவனே என பாடியிருக்கிருர். அதனால் ஜகம் முழுவதும் உயிரற்ற எல்லாவற்றிலும் நிறைந்து நிற்பவன் பரமன் அதனால் ஜகன்மயமாக இருப்பவன் ஸ்ரீ மத் நாரநாராயணன் என்பது பொருந்தும் ஸ்ரீ மத்ராமாயணம் பலச்ருதியிலும் ஜகத் முழுவதும் ஸ்ரீ ராமமயாயிற்று என வால்மீகி மகரிஷி கொண்டாடுகிறர் ஸருதியும் அந்தர்பஹிசச் தத் ஸர்வம் நாராயண ஸ்தித: கூறப்படுகிறது.

**316. ஓம் ஸங்குசதே நம:**

சுருங்கியிருத்தல் என்கிற தன்மையுடன் ஸ்ரீ மந் நாராயணன் ஸ்ரூபம் தான்.





அண்ணன் பெருமாள்



ஸ்ரீ கோமளவல்லித் தயார் ஸமேத ஸ்ரீ ஆராவமுதன்



**317. ஓம் விகசரே நம:**

விரிவடைதல் என்கிற தன்மையும்ஸ்ரீ மந்நாராயணன் ஸ்வரூபம் தான்.

**318. ஓம் ஸ்தாணவே நம:**

எப்போதும் ஸ்திரமாக ஒரேசீராக மாறுதலின்றி குறைவின்றி இருப்பவன் ஸ்ரீ மந்நாராயணன்.

**319. ஓம் நிர்விகாராயநம:**

மாறுதல், திரிதல் என்கிற இழிவு எம்பெருமானுக்கு கிடையவே கிடையது.

**320. ஓம் நிராமயாய நம:**

ஆமயம் என்பது தீமை, தீதற்ற ஸ்வரூபம் ஸ்ரீ மந்நாராணனுடையது.

**321. ஓம் சுத்தாய நம:**

சுத்த ஸத்வமான குறைகளற்ற என்றுமே மாறாத ஸ்வரூபம் ஸ்ரீ ஹயக்ரீவடையது.

**322. ஓம் புத்தாய நம:**

உண்மையான ஞானத்தின் இருப்பிடமனவன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**323. ஓம் பிரபுத்தாய நம:**

அந்த விதமான உண்மையான ஞானத்தின் வெளிப்பாடும் அவன் திவ்ய ஸங்கல்பத்தாலேதான் ஏற்படுகிறது.

**324. ஓம் ஸ்நிக்தாய நம:**

எம்பெருமாடைய கருணை ஸஹ்ருதயமானது ஆச்ரிதர்களின் துன்பத்தைக் கண்டு பொறாது உருகக்கூடிய மென்மையான ஸ்வபாவ முள்ளவன் ஆச்ரிதர்களின் 'அஞ்சலி' என்கிற கைகூப்புதலுக்கு இவ்வளவு பெரிய தாக்கம் எம்பெமானிடம் ஏற்பட்டு விடுகிறது.

**325. ஓம் முக்தாய நம :**

ஆச்ரிதர்காரிடம் அன்பின் முதிர்ச்சி கொண்டவன் மாறத எம்பெருமானின் அன்பு ஆச்ரிதர்களின் ரனக்ஷ.

**326. ஓம் ஸ முத்ததாய நம :**

அன்பின் முதிர்வால் கிளர்ச்சி ஸாமானியவர்களுக்கு ஏற்படும் எம்பெருமானும் ஆச்ரிதவர்களிடம் கொண்ட அன்பால் கிளர்ச்சி அடைகின்றான்னாம் கோபியர்ககளிடம் கண்ணன் காட்டிய அன்பு இதற்கு உவமானாகும்.

**327. ஓம் ஸங்கல்பதாய நம :**

எம்பெமானுடைக்கு எண்ணற்ற ஸ்வரூபமும், பாவமும் திருநாமங்களும் ஏற்படுகின்றன - அவை மற்றேருவரால் அவருக்கு ஏற்றி- கொடுக்கப்படுபவை அல்ல. ஸ்வேச்சையாய் தமது ஸ்ங்கல்பத்தாலே தமக்கே பல ஸ்வரூங்கள் ஏற்று அருள்பவன்.

**328. ஓம் பஹூபவதே நம :**

எண்ணற்ற ரூபங்கள் ஏற்று அவ்வப்போது தமது ஸ்ங்கல்ப காரியங்கள் நிறைவேற்றுபவன் ஸ்ரீ ஹயக்ரீவன்

**329. ஓம் ஸர்வாத்மனே நம :**

பர்ஜன்ய தேவதைகள் தம்தம் இட்ட கடமைகளை பொறுப்புகளை ஆற்றி வருகின்றனர். எல்லா தேவதைகளுக்கும் தாம் ஏற்கும் எல்லாவித விஷ்ணு ஸ்வரூபங்களிலும் தாமே ஸர்வாந்தயாமியாக இருந்து யாவற்றையும் நடத்தி வைப்பவன் ஸ்ரீ மந் நாராயணன் ஒருவனே ' யேப்யனன்ய தேவதா சிரத்தயானிவிதா' என்கிற கீதையில் ச்லோகம் இங்கு அனுஸந்தேயம்.

**330. ஓம் ஸர்வ நாமபிருதே நம :**



ஆயிரம் பெயர் உடைய ஒப்புயர்வற்ற பரமன் கணக்கற்ற திருநாமங்கள் உள்ளன. எத்தனை நாமங்களாயினும் பிரதிபாதியன் ஸ்ரீ மந் நாராயணனே.

**331. ஓம் ஸஹஷஸ்ரசீர்ஷாய நம :**

' ஸஹஸ்ரசீர்ஷ புருஷ: ' என்கிற புருஸுக்தம் கோஷீப்பது போன்று எம்பெருமாடைய விச்வரூபத்தில் ஆயிரம் சிரஸ்ஸுகள் உண்டு. புரு என்பது மஹாவிஷ்ணுவிற்கு மட்டுமே பொருந்தும் ஆதலின் ஆயிரம் ஸிரஸ்ஸுகள் கொண்ட பரமபுருன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**332. ஓம் ஸஹஸ்ரபதே நம :**

ஆயிரம் திருவடித்தாம ரைகளையும் கொண்ட விச்வரூபன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**333. ஓம் ஸஹஸ்ராக்ஷாய நம :**

' ஸஹஸ்ராக்ஷ ஸஹஸ்ர பாத்' என்கிறது புருஷஸீக்தம் ஆயிரம் கண்களையும் உடையவன் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**335. ஓம் வ்யக்தாய நம :**

மனேவாக்கிற்கு எட்டாத ஸ்வரூபத்தை உடைய ஸ்ரீ மந்நாராயணன் ரூபம் இப்படித்தான். இவ்வளவுதான் என்று அறுதியிட்டு கூறமுடியாது. ஆயினும் வெளிப்படையாக தன் ஸ்வரூபத்தை வர்ணனைக்கு உப்பட்டதாக் காட்டியருள்பவன் லஷ்மி ஹயக்ரீவன்.

**336. ஓம் விராஜே நம :**

உயர்வற உயர்ந்த பதவியான ஈரேழு பதினன்கு உலகினுக்கும் தலைவன் என்கிற பரமபத நாதனகவீற்றிருப்பவன், அப்பதவியை அலங்கரிப்பவன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**337. ஓம் ஸ்வராஜே நம :**

பூர்ண ஸ்வதந்த்ரனாகிய பரந்தமான் உலகங்களிலும் ஒரே தலைவன் அவனுக்குமேம்பட்ட தலைவன் யாருமில்லை.

**338. ஓம் ஸம்ராஜே நம :**

லீலாவிபூதி உன்கிற ஸாம்ராஜ்ஜியத்தை தமது ஸங்கல்ப மாத்திரத்தில் நடத்தி மோக்ஷஸாம்ராஜ்ஜியத்திலும் நித்யஸூரிகளுக்கு தமதனைத்தும் வழங்கி அவர்களை விஞ்சி நிற்கும் ஸாம்ராஜியாதிபதி ஸ்ரீ ஹயக்ரீவன்

**339. ஓம் விஷ்வக்ருபவபுஷாய நம :**

விச்வம் என்கிற திருநாமத்திற்கு பட்டர் திக்கல்யாண குணங்கள் பரிபூரிதன் என்று ஸாதிக்கிருர் ஸர்வாத்மாவான எம்பெருமான் இந்த உலகின் பூர்ண ஸ்வரூபமாக விளங்குபவன் என்பது பொருத்தமாகிறது.

**340. ஓம் விதயே நம :**

விதி என்கிற சிருஷ்டியும் அவனே சாஸ்திரங்கள் விதித்துள்ள மதஸம்மந்தான கிரியைகளும் அவைகளின் நிர்வாக வழிகளும்,அவைகளின் பலனும் எல்லாமே ஸ்ரீ மந்நாராயணன் தான்.

**341. ஓம் மாயாவினே நம :**

உண்மையின் ஸத்யஸ்வரூபமாக உள்ள பரந்தாமன் சேதனர்கள் வியத்தில் மாயங்கள் செய்து பிரமிக்கச் செய்பவன் மாயனை மன்னு வடமதுரைமைந்தன் எந்த ஸ்ரீ ஆண்டாளும் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் , தேசிகர் பிரபந்தத்தில்மாயோன் நிற்க என்கிறர்கள் மாமாயன் மாதவன் என்று நாமம் பல ஜபித்து வரும்படி ஸ்ரீ ஆண்டாளும் இதுபற்றி ஆனந்திக்கின்றனர்.



**342. ஓம் பரமானந்தாய நம :**

‘ஆனந்தோ பிரம்மே திவ்யஜானுத்’ என்கிற வாக்குபடி எம்பெருமான் ஆனந்த மயமானவன் ஞான ஆனந்தமயன் என்றுதான் பரிமுகனின் லாலாமிருதம் பெற்ற ஸ்ரீ ஸ்வாமி தேசிகனும் ஹயக்ரீவனை துதிக்க ஆரம்பிக்கிறார்.

**343. ஓம் மான்யாய நம :**

தேவ தேவர்களும் தமது சிரஸின் கிரீடங்கள் உரச வணங்கி வழுபடும் திருவடித் தாமனரகளை உடைய ஸ்ரீ மந் நாராயணன் யாவரிலும் உயர்ந்தவனுக மதிக்கப்படுகின்றான் தலைவராக ஏற்றுக் கொள்ளப்படுகின்றான்.

**344. ஓம் மாயாதிகாய நம:**

மாயை செய்து எதிராளியை பிரமிக்கச் செய்தாலும் தாம் அதைக்கடந்து உண்மையின் ஸ்வரூமாகவே விளங்குபவன். யசோதைக்கு தமது திருவாயில் மூவுலங்கள்ளைக் காட்டி மாயை செய்தாலும்,தாம் பரந்தாமன் என்கிற உணர்வுடன் தான் கண்ணன் இருந்தான்.

**345. ஓம் மஹதே நம :**

மகத்தானது மிகப் பெரிய, ஈடிணையற்ற குணங்களின் இருப்பிடம் என்பது ஸ்ரீ மந் நாராணனின் ஸ்வரூபம்.

**346. ஓம் வடபத்ர சாயினே நம :**

ஸ்ரீ மத்பாகவதத்தில் விவரித்துள்ளபடி யுகம்முடிவில் பிரளயம் ஏற்பட்டு எல்லா உலகங்களுக்கும் மூழ்கிய நிலையில் ஆதியும் அந்தமுமற்ற ஸ்ரீமந் நாராயணன் ஆலிலையில் சிறு குழந்தையாக சயனித்திருந்து மீண்டும்முத்தொழிலையும் புரிந்து லீலாவிபூதியை நடத்துபவன்.



**347.ஓம் பாலாய நம:**

சிறு குழந்தையாக தமது ஸ்வரூபத்தை காட்டியருள்பவன்

**348. ஓம் லலதே நம:**

யசோதை, கோபியர்கள், பக்தர்கள், ஆச்ரிதர்கள் யாவரலும் கொண்டாடப்படுபவன் சீராட்டி, பாராட்டி அன்பு முதிர்ச்சியால் குழந்தையைப்போல பாராட்டப்படுபவன்.

**349. ஓம் ஆம்நாய ஸூசகாய நம:**

வேதங்கள் உபநிஷத்துக்குள் இவைகளை ஸூசிப்பித்துக்காட்டி அவைகளின் வழி நடத்திச் செல்பவன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**350. ஓம் முகந்யஸ்த கரக்ரஸ்த பாதாக்ர படலாய நம:**

எம்பெருமானின் அழகிய திருமுகமும், காக்கும் கரங்களும், திருவடிகளும் சேதனர்கள் காக்கும் ஒரு கூரையைப் போன்று இருந்து ஸகலவித ஆபத்துக்களின்றும் பயங்களினின்றும் அவர்களை காப்பாற்றுகின்றது.என ஆங்கிலத்தில் கூறுவர்.



எம்பெருமான்திருவடி நிழலே நமக்குக் காப்பு

**351. ஓம் பிரபவே நம:**

எல்லோர்க்கும் மேம்பட்டவன் பிரபு எம்பெருமான் ஸ்ரீ மந்நாராயணனே.

**352. ஓம் நைத்ரீ ஹாசாச்வ ஸம்பூத ஞான ஸாத்விக தாமஸாய நம:**

எம்பெருமான் யோக நித்திரைக்கு ஸங்கல்பித்துக் கொண்டிருக்கும் போதும், அவரது ஸூஷ்ம ஸ்வரூபத்தில் ஸ்புரிக்கும் ஞானம், ஸாத்விக, தாமஸ லீலைகளை புரிந்து வருகிறது.

**353. ஓம் மஹார்ணவாம்பு பர்யங்காய நம:**

திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் வியூஹ மூர்த்தி எம்பெருமான் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**354. ஓம் பத்ம நாபாய நம:**

எம்பெருமானின் நாபிக்கமலத்தினின்று தோன்றி அவள் ஸங்கல்பத்தாலே, சதுர்முக பிரம்மா ஸ்ருஷ்டி தொழிலை செய்துவருகிறார். திருவனந்தபுரம் அனந்த பத்ம நாப ஸ்வாமி பத்ம நாபனாக ஸாக்ஷாத் வ்யூஹமூர்த்தியாகவே ஸேவைஸாதிக்கும் இன்றும் இரவு நேரங்களில் அலை ஓசை கேட்கப்படுகிறது. சில இடங்களில் பால் வடிகின்றதாம். அர்ச்சை என்கிற முறையில் பத்மநாபஸ்லாமி பிரத்யக்ஷமான வ்யூஹமூர்த்தியே.

**355. ஓம் பராத்பராய நம**

பரம் என்பது எல்லோரினும் மேம்பட்ட ஸ்தானத்தைக்

குறிக்கும். ஸ்ரீ மந் நாராயணனே பாவத்திற்கும் பரமான ஒரு இடத்தை வகிப்பவன் ஆழ்வார் திருநகரில் நம்மாழ்வாரின் ஸேவை ஸாதிக்கும் எம்பெருமானை பராத்பரன் என்பார்.

**356. ஓம் ப்ரஹ்ம புவே நம:**

சதுர்முக பிரம்மாவுக்கு, வணங்கத்தக்க பிரபுவானவன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**357. ஓம் ப்ரஹ்ம பய ஹ்ருதே நம:**

மதுகைடபர்கள் வேதங்கள் அபகரித்துச் சென்ற போது வேதங்கள் மீட்டு, புன்ரபி கிருஷ்டி தொழிலை செய்யும்படி பிரமனுக்கு அருளி அவரது பயத்தை போக்கியருளியவன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**358. ஓம் ஹரயே நம:**

ஹரி என்கிற பதத்திற்கு பிரதிபாத்யனாகிய ஸ்ரீ ஹரி ஸ்ரீ மந்நாராயணனே. ஸகல அரிஷ்டங்களையும் நீக்கி அருளும் ஸகல மங்களுமும் அருளும் மங்கள தேவதை ஸ்ரீ மந்நாராயணன்.

**359. ஓம் ஒமுபதேச கிருதே நம:**

வேதத்தின் பாகங்கள் யாவும் பிரணவத்தில் தொடங்கி பிரணத்திலேயே முடியும். அகார, உகார, மகாரமும் சேர்த்து பிரணவம் என்கிற "ஓம்" சப்தம். இதன் உண்மையான தேர்ந்த பொருள் ஸ்ரீ ஹயக்ரீவனே. இந்த - பதத்தின் பொருளாளவனும் உபதேசிப்பவனும் அவனே.

**360. ஓம் மதுகடைப நிர்மாதாய நம:**

மதுகைடப ராக்ஷஸர்களை ஸம்ஹரித்து வேதங்களை காப்பாற்றிய பரமன் ஸ்ரீ ஹயக்ரீவனே.



**361. ஓம் மத்த பிரம்ம மதாபஹாராய நம:**

பிரம்மா தமது ஸ்தானத்தை நினைத்து கர்வமுற்ற போது அவரது கர்வத்தை ஒடுக்கி, தமது பரத்வத்தை நிர்ணயித்தவர் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**362.ஓம் வேதோவிலாப வாக்விர் தயாஸாராய நம:**

அஸுரர்கள் வயப்பட்டு வேதங்கள் தமது புனிதத்தன்மையை இழந்துவிட்டதாக வருந்தியபோது ஸ்ரீ ஹயக்ரீவன் தமது புனிதமான குதிரை முகத்தால் வேதம் உபதேசித்தருளி வேதங்களை புனிதப்படுத்தினான்.

**363. ஓம் அம்நார்த்த தாயகாய நம:**

உண்மைக்கு புறம்பான வியக்கியானங்கள், பொருள் கண்டு மதிமயங்காமல், உண்மைப்பொருளை காட்டித்தருபவன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**364. ஓம் நாராயணாஸ்த்ர நிர்மாத்ரே நம:**

நிச்சயமாக தமது இலக்கை முடிக்கும் சக்தி உள்ளது. நாராயண அஸ்த்ரம். எந்த அஸ்திரத்திற்கும் அபிமானத்திற்கும் மந்த்ரங்கள் உண்டு. அவ்விதம் நாராணாயஸ்திரத்தின் நிர்மாதா ஸ்ரீ ஹயக்ரீவனே (அனுபந்தத்தில் இந்த மந்திரத்தைக் காணவும்)

**365. ஓம் மதுகடைப மர்தனாய நம:**

மதுகைடபன் என்கிற இரு அசுரர்கள் வேதங்களை கவர்ந்து சென்று கடலில் மறைத்தபோது அவைகளை மீட்டு அசுரர்களை ஸம்ஹரித்தவன் ஸ்ரீ ஹயவதனன்.

**366. ஓம் வேதகர்த்ரே நம:**

வேதங்களின் புனிதத்தன்மையை மீட்டு தமது திருவாக்கால் உபதேசித்தருளியவன் ஹயக்ரீவன். யாஞ்ஞவால்க்யக மகரிஷக்கு உபதேசித்தருளியவன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**367. ஓம் வேத பர்த்ரே நம:**

வேதத்திற்கு தலைவனும் எம்பெருமான் ஸ்ரீ மந்நாராயணனே. வேதங்கள் எம்பெருமான் பெருமைகளை கோஷிக்கின்றன. பாட்டுடைத் தலைவன் எம்பெருமானே.

**368. ஓம் வேதா ஹர்த்ரே நம:**

வேதங்களை மீட்டு கொண்டுவந்த மஹானுபாவனும் எம்பெருமான் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**369. ஓம் விததாம் வ ராய நம:**

பாண்டித்யத்தை வரனாக அருளக்கூடிய வித்யா தேவதை ஸ்ரீ ஹயக்ரீவன்.

**370. ஓம் புங்கானுபுங்க ஹேஷாட்யாய நம:**

ஸ்ரீ ஹயக்ரீவனுடைய வேத கோஷத்தை ஹேஷா சப்தம்என்பர். அம்பு ஒன்றன்பின் ஒன்றுக தொடர்ந்து வருவது போல ஹேஷா சப்தம் வேதத்தை கோஷித்து வருகிறது. ரன்னிபமானது.

**371. ஓம் பூர்ண ஷாட்குண்ய விக்ரஹாய நம:**

ஞான, பலைச்வர்ய வீர்ய சந்தி தேஜஸ் என்கிற ஆறுவித குணங்களும் நிரம்பிய திவ்யமங்கள விக்ரஹம் ஸ்ரீ ஹயக்ரீவனுடையது.

**372. ஓம் லாலாமிருத கண வியாஜ வாந்த நிர்தோஷவர்ணாய நம:**

எம்பெருமான் தந்தருளும் லாலாமிருதம் நிர்தோஷமான நிர்மலமான ஸ்படிகத்தைப் போன்றது. அது போலவே அவன் திருமேனியும் ஸ்படிகாசல ஸன்னிபமானது.

**373. ஓம் உல்லோல த்வான தீரோத்ய துச்சைர் ஹலஹல த்வனயே நம:**



ஹ்லௌம் என்கிற பீஜாக்ஷரத்தை கொண்ட ஸ்ரீ ஹயவதன பெருமான் ஹயவதன ஹேஷா ஹலஹல: என்கிறபடி ஸாதித்தருளும் ஹலஹல சப்தம் கேட்க மிக ரம்மியமானது.

**374. ஓம் கர்ணாநாரப்ய கல்காத்மனே நம:**

ஸ்ருதியின் தேர்ந்த பொருள் ஸாராம்சம் எதுவோ அதுனுடைய ஆத்மாவாகவும் விளங்குபவன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**375. ஓம் கவயே நம:**

கவிதா சக்தி எவருக்காவது இருக்கும் என்றால் அது, ஸ்ரீ ஹயக்ரீவனுடைய மொத்தமான கவிதா சக்தியில் ஒரு திவலை தான், யாவரினும உயர்ந்த கவி, வேதத்தையே ஸாதித்தருளிய ஸ்ரீ ஹயக்ரீவன்.

**376. ஓம் க்ஷீரார்ண வோபமாய நம:**

ஸ்ரீ ஹயக்ரீவன் திருப்பாற்கடலைப்போன்று அளப்பரிய வியாப்தியும் நிர்மலமான வெண்மை நிறத்தையும் கொண்டவன்.

**377. ஓம் சங்கினே நம:**

பாஞ்சஜன்யம் என்கிற வெண்சங்கை தம் திருக்கரத்தில் ஏந்துபவன்.

**378. ஓம் சக்ரிணே நம:**

ஸ்ரீ சுதர்சனம் என்கிற காலசக்கரத்தை தமது ஸங்கல்ப ஸ்வரூபத்தை மற்றொரு திருக்கரத்தில் ஏந்தியிருப்பவன்.

**379. ஓம் கதினே நம:**

பஞ்சாயுதங்களின் அடுத்தாகிய கதையைத்த

தாங்குபவனும் மஹாவிஷ்ணு.

**380. ஓம் சார்ங்கிணே நம:**

சாரங்கம் என்றும் வில்லை ஏந்தி சாராங்கபாணி எனப்படுபவன்.

**381. ஓம் நிர்பய முத்ரகாய நம:**

ஆச்ரிதர்களின் பயத்தைப் போக்கும் அபய முத்திரை காட்டியருள்பவன். ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அபயமுத்திரைக்கு வெகு ஸ்வாரஸ்யமாக நிர்வாகம் செய்தருளியிருக்கிறார்.

**பிராய: பிரபதனே புஸ்மாம் பௌன:**

புண்யம் நிவாரயத் ஹஸ்த ஸ்ரீ ரங்க பத்த்தூர் மாம் அவ்யத் அபய முத்ரிதஎன்று ஒருமுறை அவன்திருவடிகளை சரணாகதி என்று ஆச்ரயித்த உடன், எமபெருமான் திருவுள்ளம் பற்றி விடுகிறார். நச த்விரபி பாஷஸே என்கிறவிதமாக வாக்கு ஒன்றே தான் எம்பெருமானுக்கு ஆகையால் மறுபடி ஸந்தேகம், பயம் காரணமாக சரணாகதி செய்து அதன் பெருமையைக் குலைத்து விடாதே என்று அபயகரம் காட்டி நிறுத்துகிறார்.

**382. ஓம் சின்முத்ரா சிஹ்னிதாய நம:**

தமது வலக்கரத்தால் சின்முத்திரை காட்டியருளி ஞான உபதேசம் செய்தருளிகிறார் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**383. ஓம் ஹஸ்த தல வின்யஸ்த புஸ்தகாய நம:**

மற்றொரு இடத்தைகளில் வேதங்கள், உபஷதங்கள் என்கிற ஸ்ரீ கோசங்களைத் தாங்கி காட்சி தந்தருள்கிறார் பரிமுகன்.



**384. ஓம் சிஷ்ய பூத வித்'ப ஸ்ரீ நிஜவைபய வேதகாய நம:**

ஆச்ரிதர்களுடன், தாஸர்களுக்கும் ஆத்மவித்யை என்கிற பூரண ஞானத்தை உபதேசித்தருளி குருபரம்பரையின் தலைவனாக விளங்குகிறார்.

**385. ஓம் அஷ்டார்ணவ கம்யாய நம:**

திருமந்திரத்திற்கு பொருள் கூற, பல பக்கங்களாக விரியும். ஆழ்வார் ஆசாரியர்கள் ஸாதிடித்துள்ளவைகளை படித்து அறிந்து கொள்ள ஒரு புருஷ ஆயுள் போதாது. ந மந்த்ரம் ஆஷ்டாக்ஷராத் பரம் என்கிற கூற்றின் படி கணக்கற்ற மந்திரங்கள் எம்பெருமானை வருணித்தாலும் அவைகளுள் பரமனை ஒரு அளவுக்கு காட்டித்தரும் திருவஷ்டாக்ஷரம் ஜீவனுக்கு பிரதானம் அது மோஷம் வரையிலான பலன்களை வாங்கித்தரக்கூடிய சக்தி பெற்றது.

**386. ஓம் அஷ்ட புஜாய நம:**

சங்கு, சக்கரம், கேடயம், கத்தி, கதை, பாணம் , வில், பாசம் என்கிற எட்டு திருவாயுதங்களைத் தாங்கி, கருடன் மீது எழுந்தருளி கஜேந்திரனைக் காத்தாராம் பரமன் என்று ஸ்ரீமத் பாகவதம் நாராயண வர்ம கூறுகிறது. ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் "ஆச்ரிதர்களை ரக்ஷிக்கும் த்வரை ஏற்பட்டு நான்கு புஜங்கள் எட்டு புஜங்களாக்கிக் கொண்டான் என்று சரணாகத ஸந்த்ராண த்வரா த்விகுண பாஹுனா" என ஸாதித்தார் ஸ்வாமி.

**387. ஓம் வியஷ்டி ஸ்ருஷ்டி கராய நம:**

ஆக்கலும், அழித்தலும், அவன் திவ்ய ஸங்கல்பத்தல்

நடைபெறும் லீலைகளே.

**388. ஓம் பித்ரே நம:**

ஜகத் பிதா-பிதாஸ லோகஸ்ய சராசரஸ்ய என்கிற வாக்குப்படி கீதை கண்ணனை ஜகத் பிதா என்கிறது.

**389. ஓம் அஷ்டைச்வைர்ய பிரதாய நம:**

பிரகிருதியில் ஜீவன் அடையக்கூடிய வைபவங்கள் எட்டுவிதமானவை என்கிறது. சாஸ்திரம் அவை யாவும் எம்பெருமானின் கருணையால் கிட்டுவது.

**390. ஓம் ஹ்ருஷ்ய மூர்த்தி பித்ருஸ்துதாய நம:**

அஷ்ட வஸீக்கள் தம்தம் அதிகாரங்களைப் பெற்று மனமகிழ்ச்சி கொண்டு, எம்பெருமானை துதிக்கிறார்கள். அவர்களின் துதிக்கு பிரதிபாத்யன்ஸ்ரீஹயக்ரீவன்.

**391. ஓம் ஆநந்த வேத புருஷாய நம:**

எம்பெருமானுக்கு கால பிரமாணம், நியதி, ஆதி, அளவு எதுவும் இல்லை. வேதமே அனாதியானது. வேதம் காட்டித்தரும் பரமபுருன் ஸ்ரீ மந் நாராயணனே.

**392. ஓம் விதி வேதோப தேச ககிருதே நம:**

பிரமன் தமக்குரிய சிருஷ்டித் தொழிலை செய்ய வேதம் அடிப்படை, மதுகடைபர்கள், ஸம்ஹரித்து வேதங்களை உபதேசித்தருளியவன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**393. ஓம் வேத வேதாங்க வேதாந்த புராண ஸமிருதி மூர்த்திவதே நம:**

வேதங்கள் அவைகளின் அங்க பிரத்யங்கங்கள், புராணங்கள் ஸ்மிருதி இவையாவும் ஒருமுகமாக பெருமைப்படுத்தி பரதேவதையாகக் கொண்டாடும் மூர்த்தி ஸ்ரீ மந் நாராயணனே



**394. ஓம் ஸர்வ கர்ம ஸமாராத்யாய நம:**

ஆஞ்ஞா, அனுஞா கர்மாக்களால், வேத பிரதிபாத்யமான எல்லாவற்றிற்கும், அந்த கர்மாவாகவும் அவைகளை ஏற்று பலனளிக்கும் முடிவான சக்தியாகவும் விளங்குபவன் ஸ்ரீ மந் நாராயணனே.

**395. ஓம் ஸர்வ வேதமயாய நம:**

ஹரி ஓம் எனத்தொடரும் எந்த வேத பாகமும் எம்பெருமானின் திவ்யாத்ம ஸ்வரூபத்தை, திருக்கல்யாண குணங்களையே பாடுகின்றன. எம்பெருமான் வேதசப்தங்கள் எங்கும் வியாபித்திருப்பவன்.

**396. ஓம் விபவே நம:**

வைபவம் என்கிற பதத்திற்கே பொருத்தமானவன் ஸ்ரீ மந்நாராயணன் தமது எண்ணற்ற விபவாபதாங்ரளில் தமது வைபங்கள் நிதரிசனமாகக் காட்டியருளியன் பரம காருணிகனாகிய பரமன்.

**397. ஓம் ஸர்வார்த்த தத்வ வியாக்யாத்ரே நம:**

தெளியாத கூடமான தத்வார்த்தங்காளை தெளிவாக வியாக்யானம் செய்து உண்மையான ஞானத்தை போதிப்பவன் சின்முத்திரையுடன் ஸேவை தரும் ஹயக்ரீவன் குருப்ய தத்குருப்ய என்கிற ஆசார்ய பரம்பரையிலும் முதன்மை ஸ்தானத்திலிருந்து, ஸர்வார்த்த தாயகனாக விளங்குவதும் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**398. ஓம் சதுஷ்சஷ்டி கலாதிபாய நம:**

கலைகள் மொத்தம் அறுபத்தி நான்கு என்பர். இந்த 64 கலைகளும் பூர்ண அதிகாரி ஸர்வ கலாத்மகனாகிய ஸ்ரீ

ஹயக்ரீவன்.

**399. ஓம் சுபயுஜே நம**

சுபாச்ரயத்வம் உள்ள திவ்ய தம்பதி பிராட்டியுடன் கூடிய ஸ்ரீய பதி ஸ்ரீ மந் நாராயணனே.

**400. ஓம் ஸுமுகாய நம:**

ஆச்ரிதர்களிடம் என்றுமே பிரஸன்னமாய் எழுந்தருளியிருக்கும் திருமுக மண்டலத்தை உடையவன்.

**401. ஓம் சுத்தாய நம:**

ஜீவகோடிகளாகிய நமது சரீரம் அழியக்கூடியது. கர்மவச்யமாக ஏற்படுவது. ஸர்வேச்வான் ஸ்ரீ மந்நாராயணன் ஸ்வரூபம் ஸ்வேச்சையாய் ஏற்படும் சுத்த ஸத்வமானது, அழிவில்லாதது.

**402. ஓம் ஸுரூபாய நம:**

காண்போர் மயங்கும் விதமாக தோள் கண்டார் தோளே கண்டார் என கம்பர் அனுபவிக்கும் விதமாக திவ்ய ஸௌந்த்ர்ய ரூபம் எம்பெருமானுடையது

**403. ஓம் ஸுகதாய நம:**

எல்லோரினும் , எல்லாவற்றினும் உயர்ந்த சுப்ரீம் மேம்பட்டவன் என்று பொருள்படும். எம்பெருமான் ஒப்புயர்வற்ற பரதத்வமே.

**405. ஓம் ஸுவ்ருதயே நம:**

நன்மையை வளர்த்து தீமையை அழித்து, ஸ்வகர்ம நிரதர்களாகிய ஸாதுக்களை பரிபாலித்து, ஸம் ஸ்தாபனம் பண்ணும் விரதம் பூண்டவன்.

**406. ஓம் ஸம்விரதயே நம:**



தர்ம ஸம்ஸ்தாபனமாகிய தமது நீள்விரத்தை எப்போதும் பூர்த்தி செய்து வைப்பவன் ஸ்ரீ ஹரி.

**407. ஓம் சூராய நம:**

நற்காரியங்களை தவறுமல் எப்போதும் நிறைவேற்றக்கூடிய வல்லமை படைத்த சூரத்தன்மை எம்பெருமானனுடையது.

**408. ஓம் ஸுதபஸே நம:**

சிறந்த ஞானமுள்ளவன் என்று ஸ்ரீ மந்நாராயணனே. இத்திருநாமத்தால் பட்டர் வர்ணிக்கும் முறை இது.

**409. ஓம் ஸுஷ்டுதயே நம:**

ஜகந்மோஹன அழகிய திருமேனியுடையவன் எம்பெருமான்.

**410. ஓம் ஸுஹ்ருதே நம:**

அம்ருத சுகத்தை தேவர்களுக்கு அளித்த வாசுதேவன் அதற்கான அன்பு நிறைந்த மனம் கொண்டவன் என்று பட்டர் ஸாதிக்கிறார்.

**411. ஓம் ஸுந்தராய நம:**

மிக ஸ்ரீ அழகிய மந்நாராயண் ஸ்வரூபத்தை உடையவன்..

**412. ஓம் ஸுபகாய நம:**

சேதனர்களுக்கு அவர்தம் பிரியத்திற்கும் அன்பிற்கும் பாத்திரமானவன்.

**413. ஓம் ஸௌம்யாய நம:**

எப்போதும் ஆச்ரிதர்களிடம் அனுக்ரஹ பூர்வமாக எளிமையுடன் எழுந்தருளியிருப்பவன்.

**414. ஓம் ஸுகதாய நம:**

புனராவிருத்தி இல்லாத மோக்ஷஸுகம் வரையிலான ஸகலவித ஸுகங்களையும் அடியார்கட்கு அருள்பவன்

**415. ஓம் ஸுஹ்ருதாம் ப்ரியாய நம:**

அன்பு நிறைந்த மனம்கொண்ட அடியார்களுக்கு என்றும் பிரியமானவன் பரந்தாமன்.

**416. ஓம் ஸுசரித்ராய நம:**

எம்பெருமான் அவதார காலங்களில் தர்மத்தை நிலைநாட்டச் செய்யும் சேஷ்டிதங்கள் யாவுமே நல்ல சரித்திரங்கள்.

**417. ஓம் ஸுகதராய நம:**

சுகம் என்பதின் பிரதிமூர்த்தி ஸ்வரூபமே எம்பெருமான்.

**418. ஓம் சுத்தஸத்வ ப்ரதாயகாய நம:**

ஜீவன் 101வது பிரம்மரந்தர நாடி வழியாக ஸ்ரீ வைகுண்டம் போகும் போது, விரஜா நதியில் ஜீவன் நீராடி பின் அழிவில்லாத சுத்த ஸத்வமான சரீரத்தை பெறுகிறது. இதை அளித்தருள்பவன் எம்பெருமான்.

**419. ஓம் ரஜஸ் தமோ ஹராய நம:**

ஸாத்விக குணம் பொருந்திய அதன் பிரதிபாத்யன் எம்பெருமான் ரஜோ, தமோ குணங்களை வேரறுப்பவன்.

**420. ஓம் வீராய நம:**

தமது இலக்கை குறியுடன் அடைபவன் வீரன். எம்பெருமானே ஸகல ஜீவராசிகளையும் அவரவர் கர்ம வினைப்படி நடத்திச்சென்று விண்ணகம் புகுவது மண்ணவர் விதியே என்கிற ஸ்ரீ நம்மாழ்வார் கூற்றுப்படி,





ஒருநாள் தம் திருவடி நிழலில் சேர்த்துக் கொள்வதான மகத்தான செயலை சீராக நடத்தி வரும் வீரன்.

**421. ஓம் விச்வரக்ஷா துரந்தராய நம:**

எம்பெருமானுடைய வியாபாரத்தில் ரக்ஷனமே பிரதானம் ஆகையால் இவ்வுலகை ரக்ஷிப்பதான வியாபாரத்தில் த்வரை உள்ளவன்.

**422. ஓம் நர நாராயணாகிருத்யா குருசிஷ்யத்வமாஸ்திதாய நம:**

ஸ்ரீ மத் பாகவத்தில் விவரித்துள்ள படி, துவாபரயுகம் முடிந்த பிறகு கலியுகம் ஆரம்பமுதல் முடிய, பத்ரி காச்ரமத்தில் எம்பெருமான் நர நாராயணர்ளாக இருஸ்வரூபத்தில் குருவாகவும், சிஷ்யனாகவும் திருவஷ்டாக்ஷரத்தை உபதேசித்து உஜ்ஜீவிக்கச் செய்து வருகிறான்.

**423. ஓம் பராவராத்மனே நம:**

ஸதல விதமான ஞானத்திற்கும், அறிவிற்கும் அதாமானவன், கடல்நீரை மேகங்களாக மாற்றி மழை பொழிவது போல சுத்தமான ஞானத்தை யாவரும் பெறும் வண்ணமாகச் செய்பவன்.

**424. ஓம் பராபவாய நம:**

எல்லோரினும் மேம்பட்ட பிரபுவான ஸ்ரீ மந் நாராயணன் பிரபாவங்கள் வாக்சத்திற்கு அப்பாற்பட்டது.

**425. ஓம் பாவனாய நம:**

பாவனமானது, புனிதமானது, என்று குறிப்பிடக் கூடிய எல்லோவற்றிலும் உயர்ந்த பாவன ஸ்வரூபமானவன்.

**426. ஓம் பாபநாசனாய நம:**

எம்பெருமானின் திருநாமங்களை உச்சரித்தாலே நம் பாவங்கள் தீயினில் தூசாகும். அவன் திருவடிகளையே உபாயமாகவும், உபேயமாகவும் பற்றினால், போய பிழையும் புகுதருவான் நின்றவும் கூட தூசாகி நமக்கு யாவுமே அருளக்கூடிய பாபநாசனன் ஸ்ரீ மந் நாராயணன்.

**427. ஓம் தயாகனாய நம:**

கருணை என்பது அவன் குணங்களின் ஒன்ருக இல்லை. கருணை என்பதே கெட்டிப்பட்டு அதன் மொத்த உருவமாகவே விளங்குபவன்.

**428. ஓம் க்ஷமா ஸாராய நம:**

'யதி வா ராவண ஸ்வயம், என ஸ்ரீ ராமன் உரைத்து போல எவ்விதமான மஹா பாவியனாலும் அவன் திருவடிகளை சரணாகப் பற்ற உடனே மன்னித்துவிடக் கூடிய குணத்தின் ஸாரமானவன்.

**429. ஓம் வாத்ஸல்யைக விபூஷணாய நம:**

குற்றம் உள்ள பிள்ளையிடத்தில் கண்மூடித்தனமான வாத்யஸல்யம் காட்டும் தாயைப்போல பரமனும் ஆச்ரிதர்களிடத்தில் வாத்ஸல்யம் காட்டுவதை ஆபரணமாகக் கொண்டவன்.

**430. ஓம் ஆதி கூர்மாய நம:**



கூர்மாவதாரம் எழுத்து மந்தர மலையைத் தாங்கி திருப்பாற்கடலில் கடைய ஏதுவாக இருந்து தேவர்களுக்கு அமுதம் வழங்கியவன், ஆதி கூர்ம மூர்த்தி



ஆமை தன் குட்டிகளை தமது எண்ணத்தாலேயே வளர்க்குமாம். எம்பெருமான் திருமார்பிலுள்ள கௌஸ்துபத்தினின்று உருவான நம். த்வர்கள் பால் எப்போதும் உய்யச் செய்ய நல்லெண்ணம் அவனுக்கு உண்டு. அதனாலேயே விண்ணகம் புகுவது மண்ணவர் விதியே என்கிறார் நம்மாழ்வார் முன்பின்னாக யாவருமே அவன் திருவடியடைவர்.

**431. ஓம் ஜகத் பர்த்ரே நம:**

இந்த உலகிலுள்ள ஜீவர்கள் யாவருக்கும் பதி ஸ்ரீ மந் நாராயணன் தான். ஆண்பால், பெண்பால் யாராயினும் ஜீவாத்மா ஸ்த்ரீ. பரமபுருன் அவன் ஒருவனே.

**432. ஓம் மஹா போத்ரிணே நம:**

ஸ்ரீ பூமியை ஹிரண்யாக்ஷன் கவர்ந்து சென்றபோது சரணடைந்த பூமி பிராட்டியை மீட்க எம்பெருமான் வரஹாவதரம் எடுத்து தமது கோரப்பல்லில் பூமியை தாங்கி வந்தார். இவ்வளவு பெரிய பூமியை ஒரு பழத்தைப்போல் தமது மக்தம்ஷ்ட்ரத்தில் தாங்க வேண்டுமாயன் அவன் ஸ்வரூபம் எவ்வளவு பெரியாதாக இருக்கும். ஆதலாலேயே ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் மஹா போத்திரின் என ஸ்ரீ வராஹாவதாரத்தை கொண்டாடினார்.

**433. ஓம் மஹீதராய நம:**

இந்த பூமியைத் தாங்கியவன் ஸ்ரீ பூமிதேவிக்கு முதன் முதலாக வராஹ சரமச்லோகத்தை உபதேசித்து, தம்மை சரணடைந்தவர்களை கைவிடாது காப்பாற்றி மோக்ஷமே அருள்பவன் எனப் பொருளபட பூமி உள்ளவரை

யாவரையும் தமது வாக்கால் தாங்குபவன் ஸ்ரீ வாராஹ மூர்த்தி.

**434. ஓம் மஹீபித் ஸ்வாமினே நம:**

மேற்கூறியபடி இந்த பூமியின் தலைவன் எஜமான் பிரபு அவனே.

**435. ஓம் ஹரயே நம:**

நம் பாவங்களை எல்லாம் நசித்து நமக்கு அந்தமில்லாத பேரின்பம் அருளும் ஸ்ரீ ஹரி அவனே.

**436. ஓம் யக்ஷாய நம:**

யக்ஷர்களின் தலைவன் குபேரன், ஐச்வர்யத்தின் அதிகாரி குபேரன், குபேரனுக்கும் அந்தர்யாமியாய் அந்த பொறுப்புகளையும் நிர்வகிப்பவன்.

**437. ஓம் ஹிரண்யரிபவே நம:**

ஹிரண்யன் என்கிற அசுரன் பூமியைத் கவர்ந்து சென்றபோது மஹா வராஹரூபம் கொண்டு அவனை ஸம்ஹரித்து பூமியை மீட்டவன். ஹிரண்யனின் எதிரியாக செயல்பட்டதால் ஹிரண்ய ரிபுவானவன்.

**438. ஓம் ஐச்சிகாய நம:**

இச்சா மீன என மத்ஸ் யாவதரத்தை ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் கொண்டாடுகிறார். எம்பெருமான் கர்மவச்யர் அல்லர். ஸ்வ ஸங்கர்பத்தால் அவதார காரியத்தை உத்தேசித்து, தானே அதர்மம் தலைதூக்கும் போதெல்லாம் பலப்பல ஸ்வரூபங்களை ஏற்று தர்மத்தை நிலைநாட்டுபவன், இச்சா சக்தி ஸ்வரூபமானவன்.

**439. ஓம் ப்ரஹ்லாத பாலகாய நம:**



ஹிரண்ய கசிபு இழைத்த கொடுமைகளின்று பிரஹ்லாதனை வாத்ஸல்யத்துடன் காப்பாற்றியவன்.

**440. ஓம் ஸர்வ பய ஹர்த்ரே நம:**

எம்பெருமான் திருநாமங்களை ஓதுபவர்க்கு நரகபயமே இல்லை என்கிற போது மற்ற பயங்களை போக்குபவன் எல்லாவித பயங்களையும் போக்குபவன் ஸ்ரீ மந்நாராயணன் "ந தஸ்ய யமவச்யுதா நரக பாத பீதி,குத" என்கிற ஸ்ரீ அபீதிஸ்தவ வாக்கியம் இங்கு அனுஸந்தேயம்.

**441. ஓம் பிரியம் வதாய நம:**

எம்பெருமானின் திருமுக மண்டலம் சேதனர்களுக்கு எப்போதும் அன்பின் பெருக்கை உண்டாக்குவதாகும்.

**442. ஓம் ஸ்ரீ முகாலோகன ஸம்ஸ்ரத் கஞ்சுகாய நம:**

பெரிய பிராட்டி வாக்தேவியாக ஸ்ரீ பரிமுகனின் இட பாகத்தில், வீற்றிருந்து, தமது திருமுகண்டலத்தைத் திரும்பி எம்பெருமானை நோக்குகிறார். அவளின் பார்வையை ஆடையாகத் தரிப்பவர் பரிமுகன்.

**443. ஓம் குஹ காஞ்சனாய நம:**

குபேரன் அஷ்டஐச்வர்ய பொக்கிஷத்தின் தலைவன் அவனுக்கு அந்த அதிகாரத்தை ஈந்தருளி, நடத்தியும் வைப்பவன் ஸ்ரீ மந் நாராயணனே.

**444. ஓம் சத்ரிணே நம:**

சத்ரம் என்பது குடை, கோவர்தன கிரியை குடையாகப் பிடித்து, குளிர்மழை காத்த பரமன் ரக்ஷண வியாபாரத்தை உலகம் யாவற்றையும் தமது குடைக்கீழ் கொண்டு

நடத்துபவன். வாமனவதாரத்தில் ஒரு குடையை ஏந்தி வந்த பிரம்மச்சாரியும் அவனே.

**445. ஓம் கமண்டுலுதராய நம:**

எம்பெருமான் வாமனனாக பிரம்மச்சாரி அவதாரம் கொண்டபோது தமது திருக்கரத்தில் கமண்டுலு ஏந்தியிருந்தான்.

**446. ஓம் வாமனாய நம:**



மிகச் சிறிய உருவம் கொண்ட வாமனனாக அவதரித்து, தமது சிறிய திருவடிகளைப் மஹாபலி சக்ரவர்த்தியை மூவடி மண் வேண்டி. ஈரேழுபதினான்கு, உலகங்களையும் அளந்தவன்.

**447. ஓம் வததாம் வராய நம:**

கூரத்தாழ்வார் ஆர்த்ததிராண நாராயணாஷ்டகத்தில் பிரஹலாதன், விபீஷணன் கஜேந்திரன், பாஞ்சாலி, அஹல்யா துருவன் ஆகிய ஆறு மகனீயர்களுக்கும் வரமளித்த வைபவத்தை பாடுகிறார். ஆச்ரிதர்கள் முழு நம்பிக்கையுடன் வரன் வேண்டிய மாத்திரத்தில் விலம்பில்லாமல் தந்தேன் என் அருள்பவன்.

**448. ஓம் பிசுனாத் மோசனோ திருஷ்டி லோபனாய நம:**

மூவடி மண் வரனாகப் பெற்று விச்வரூபம் எடுத்த எம்பெருமான், தமது மாற்றலுக்குட்பட்ட ரூபத்தால் பார்ப்போர் பிரமித்து கண்பார்வையை இழந்தார் போல ஆகும்படியான, நிலையை ஏற்படுத்தினார்.

**449. ஓம் பலிமர்தனாய நம:**



மஹாபலி சக்ரவர்த்தியிடமிருந்து மூவடி நிலம் பெற்று நிலம், ஆகாயம், ஈரடிகளால் அளந்து மூன்றாவதாக பலியின் சிரஸில் அடிவைத்து பாதாளலோகத்திற்கு சிரஞ்சீவியாக அனுப்பிவைத்தான். தமது திருவடிகாளல் அவனது சிரஸை அமுத்தி கீழே தள்ளிவிட்டான்.

**450. ஓம் உருக்ரமாய நம:**

சிறிய வாமனனாக வந்து ஆகாயத்தை அளாவிய விச்வரூபம் எடுத்து, மகத்தான ஸ்வரூபம் எத்தகையது என் பதை காட்டியருளினார்.

**451. ஓம் பலிசிரோ ந்யஸ்தாங்க்ரயே நம:**

மஹாபலி சக்ரவர்த்தியின் சிரஸில் தமது திருவடிகளை பதித்தவன்.

**452. ஓம் பலி மர்தனாய நம:**

எம்பெருமான் திருவடி ஸ்பர்சத்தால் அனுக்ரஹமுகமாக என்றும் பாதாள லோகத்திற்கு அரசனாக சிரஞ்சீவியானவன் மஹாபலி.

**453. ஓம் ஜாமதக்னயே நம:**

ஜமதக்னி மகரிஷியின் புத்திரனாக அவதரித்தவர் மஹா விஷ்ணுவே

**454. ஓம் பரசுபிருதே நம:**

தமது திருக்கரத்தில் பரசு என்கிற கோடாலியை ஏந்தியவன்.

**455. ஓம் கிருத க்ஷத்ர குலோத்தபாய நம:**

இருபத்தியோரு தலைமுறைகள் க்ஷத்திரிய குலத்தை வேரறுத்து அவதாரம் பரசுராமருடையது.

**456. ஓம் ராமாய நம:**



எல்லோர் மனதையும் கவர்ந்து, ரமிக்கச் செய்யும் குணமுடையவன் ஸ்ரீ ராமன்.

**457. ஓம் அபிராமாய நம:**

ஸ்ரீ ராமனை நினைத்தமாத்திரத்தில் மனது ஈர்க்கப்பட்டு கவர்ந்து போய் விடக்கூடிய, ஸ்வரூபமுடையவன் ஸ்ரீ ராமன்.

**458. ஓம் சாந்தாத்மனே நம:**

ஸ்ரீ ராமன் எந்நிலையிலும் சமநோக்கு வகித்து சாந்தகுண சீலராய் இருப்பவன். சாந்த குணத்தின் ஆத்மா என்றும் பொருந்தும்.

**459. ஓம் ஹர கோதண்ட கண்டனாய நம:**

ஜனக மகரிஷி சபையில் சிவதானுஸை முறிந்து ஸீதைலை ஏற்றவன்.

**460. ஓம் சரண ஸந்திராத்ரே நம:**

சரணாகத ரக்ஷணத்தையே விரதமாகப் பூண்டவன்- ஸர்வாவஸ்த்த ஸகிருத் பிரபன்ன ஜனதா ஸம்ரக்ஷணைக விரதீ- என்கிறார் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன்.

**461. ஓம் ஸர்வ யோத்யக முக்திதாய நம:**

ஸ்ரீ ராமன் தமது அடிச்சோதிக்கு எழுந்தருளியபோது ஸ்ரீ அயோத்தியில் ஸ்தாவர ஜங்கம ஸகல வஸ்துக்களுக்கும் கூட மோக்ஷ மளித்த பெருந்தகை யானன்ஸ்ரீ ராமன்.

**462. ஓம் ஸங்கர்ஷணாய நம:**

சதுர்வியூஹ மூர்த்திகளில் ஸங்கர்ஷண ஸ்வரூபமாக



அவதரித்தவன் ஸ்ரீ பலராமன்.

**463. ஓம் புதோதக்ராய நம:**

மதிமயக்கத்தால் வழிதவறுபர்களை, தரிசுநிலத்தை உழுது விளை நிலமாக்குவதுபோல கலப்பை ஏற்றும் பலராமன் பண்படுத்தி எம்பெருமான் உறையும் இடமாக மாற்றுவான்.



**464. ஓம் பல தேவனாய நம:**

பலம் பொருந்திய சக்திஸ்வரூபன் ஸ்ரீ பலராமன்.

**465. ஓம் முஸலாயுதாய நம:**

கலப்பையை தமது ஆயுதமாகக் கொண்ட அவதாரம் ஸ்ரீ பலராமாவதாரம்.

**466. ஓம் கிருஷ்ணாக்லேச ஹராய நம;**

கலிகால பிரபாவத்தால் ஏற்படும் துக்கங்களை போக்கியருள்பவன்.

**467. ஓம் கிருஷ்ணாய நம:**

துவா பர யுகத்தில், கருநிற வண்ணத்தைக் கொண்டு அவதரித்தவன் ஜகன்மோகன கண்ணன்.

**468. ஓம் மஹா வியஸன சாந்திதாய நம:**

மஹா வியாலனம் என்பது இருகாரணங்களால் ஏற்படும். இவ்வுலக வாழ்க்கையில் கர்மவச்யமாக வரும் துக்கம் மற்றது பிறவி நோய் மாறாமல் தவிக்கும் ஆத்ம விஷயமான துக்கம் இரண்டையுமே 'மாசுச' என விலக்கி அருள்பவன் கண்ணன்.

**469. ஓம் இங்காலிதோத்தரா கர்ப பிராணதாய**

நம:

இளம் பஞ்சபாண்டவர்கள் யாவருமே போய்விட்டநிலையில் உத்தரையின் கர்பஸ்திதமானபரிக்ஷித் ஒருவனே வம்சத்திற்கு மீதமிருந்தவன். அபாண்டவாஸ்திரத்தால் கௌரவர்கள் அவனையும் அழித்து விட ஏற்பாடு செய்திருந்தனர். உத்திரை மகப்பேறு பெற்ற காலத்தில் கண்ணனே தமது திருவடிகளால் ஸ்பரிசித்து பரிக்ஷித்தை உயிர்ப்பித்தார் பரிஷித்திற்கு பிராணதானம் செய்தார் கண்ணன்.

**470. ஓம் பார்த்த ஸாரதியே நம:**



அர்ஜுனனுக்கு குருக்ஷேத்திர யுத்தத்தில் ஆயூதம் ஏந்தாமல், தேரை ஓட்டி, துணை இருந்து, தர்மத்தை நிலைநாட்டி, கீதோபதேசம் செய்தவன் ஜகத்குரு கண்ணன்.

**471. ஓம் கீதாசார்யாய நம:**

பதினெட்டு அத்தியாயங்கள் கொண்ட ஸ்ரீ மத் பகவத்கீதையை ஸகல உபநிஷத் ஸாரமாக உபதேசித்த கீதாசார்யன் கண்ணன். மோக்ஷவித்தையாவும் தன்னுள் கொண்டது கீதை.

**472. ஓம் தரா பார ஹாரினே நம:**

யுகம் முடிவு தோறும் பூமியின் பாரத்தை குறைத்து தர்ம ஸம்ஸ்தாபனம் செய்து மீண்டும் லீலா விபூதியை தொடங்குபவன் கண்ணன்.

**473. ஓம் ஷட்புர மர்தனாய நம:**



ஷாட்குண்ய பரீபூரிதனாகிய எம்பெருமான் காமாகுரோத் லோப, மோஹ, மது, மாச்சரியம் எனும் ஆறுவித ஹேயகுண இரும்பிடமாக திகழும் சேதனனை அவைகளை விலக்கி ஸாத்வீககுணவானக மாற்றுகிறான்.

**474. ஓம் கல்கினே நம:**



'தசா கல்கின் என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் பரவியது போல கல்கி ஸ்வரூபம் எடுக்கப் போவதும் ஸ்ரீ மந் நாராயணன்'.

**475. ஓம் விஷ்ணு யசஸ் ஸ்'னவே நம:**

மஹாவிஷ்ணுவின் மனோவாக்கிற்குளட்டாத மகிமையை தமது அவதார காலத்தில் பூர்ணமாகக் காட்டியருள்வான் கல்கி மூர்த்தி.

**476. ஓம் கலிகாலுஷ்ய நாசனாய நம:**

கலிகால காலுஷ்யங்களை (தர்மத்தை அறவே மறந்து, மனம் போனபடி மனச்சாட்சிக்கும் பயப்படாமல், மக்கள் மத்தியில் மலிந்து நிற்கும் கொடுமைகள், பாவங்கள்) அறவே அழித்து மறுபடி கிருதயுக தர்மத்தை நிலைநாட்டப் போகிறவன் கல்கி ஸ்வரூபன்.

**477. ஓம் ஸாது பரித்ரான விஹரிதோதயாய நம:**

ஸாத்விக எண்ணங்கள், வழிமுறைகள் கொண்டு ஒழுகும் ஸாதுக்களை ரக்ஷிப்பது எம்பெருமானின் இயல்பான வியாபாரமாகும்.

**478. ஓம் துஷ்கிருத்வினாச விஹரிதோ தயாய நம:**

கெட்ட வழிகளில் சென்று தீமைகளை செய்து வருபவரை அழிப்பதும் எம்பெருமானின் இயல்பான வியாபாரமே.

**479. ஓம் பரம வைகுண்டஸ்தாய நம:**

பரமாகாசம்ட எனப்படும் ஸ்ரீ வைகுண்டத்தில் நித்யவாசம் செய்பவன்.

**480. ஓம் ஸ^குமாரயுவா கிருதயே நம:**

என்றும் மாருத இளமையும், அழகும் பொருந்திய நித்யயெளவன் மூர்த்தி ஸ்ரீ ஹயக்ரீவன்.

**481. ஓம் விச்வோதய ஸங்கல்ப பிரபவே நம:**

மஹா பிரளயத்தில் பதினான்கு உலகங்களும் மூழ்கிய பிறகு ஆலிலை மேல் குழந்தையாக பள்ளி கொண்டு மறுபடி உலகங்களை ஆக்கி உண்டாக, ஸங்கல்பிக்கும் பரமபுருஷன், தலைவன்.



**482. ஓம் விச்வ ஸ்திதி பிரபவே நம:**

ஸ்ருஷ்டிக்கு தலைவனாகிய பரமன், ஸ்திதி என்கிற ரக்ஷன வியாபாரத்தையும் செய்யும் பிரபு.

**483. ஓம் விச்வத்வம்ஸ பிரபவே நம:**

கடைசியாக அதர்மம் மலிந்து, தர்மம் அழியும் போது உலகை பரிபூரணமாக பிரளயத்தில் லயிக்கச் செய்து அழிப்பவன்.

**484. ஓம் மதன மதனாய நம:**

அழகின் உருவாக மன்மதனைக் கூறுவர். அந்த மன்மதனுக்கும் மன்மதன் ஸ்ரீ மந் நாராயணன்.

**485. ஓம் மணிகோடி ரமா நிதாய நம:**

எம்பெருமான் திருமாமணி மண்டபம் திவ்ய காந்த



மணிகளால் அலங்கரிக்கப்பட்டு லஷ்மி கடாக்ஷமாக விளங்குகிறது.

**486. ஓம் மந்தார மாலிகா பீடாய நம:**

மந்தார புஷ்பங்களால் கோர்க்கப்பட்ட மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட பீடமுடையவன்.

**487. ஓம் மணிகுண்டல மண்டிதாய நம:**

திருச்செவிகளில் மணிகுண்டலங்களை அணிந்தவன்.

**488. ஓம் ஸீஸ்நிக்த நீலகுடில குந்தளாய நம:**

கருத்து, சுருண்ட அழகான கேச பாரத்தை உடையவன்.

**489. ஓம் கோமளா கிருதயே நம:**

மிகவும் மிருதுவான ஸ்வரூபமுடையவன் ஸ்ரீ மந் நாராயணன்.

**490. ஓம் ஸ^லலாடாய நம:**

அழகிய நெற்றியை உடையவன்.

**491. ஓம் ஸ^திலகாய நம:**

அவ்வழகிய நெற்றியில் கஸ்தூரி திலகம் அணிந்தவன்.

**492. ஓம் ஸ^ப்ரு காய நம:**

அழகிய அடர்ந்த புருவங்களை உடையவன்.

**493. ஓம் ஸ^கபோலாய நம:**

அழகிய கதுப்புபோன்ற கவர்ச்சியான கன்னங்களை உடையவன்.

**494. ஓம் ஸதாஸித்தாய நம:**

தேவர்கள், அசுரர்கள் இடையில் எப்போதும் யுத்தம் நேர்ந்தாலும், பரந்தாமனே தேவர்கள் பக்கத்தில் இருந்து, எப்போதும் வெற்றி காண்பவன்.

**495. ஓம் ஸதாலோக ஸுதாஸ்யந்திரதச்சதாய நம:**

அமராபுரி என்கிற இந்திர லோகத்திய அமரர்களுக்கு அமிருதம் வழங்கி அமரத்வமளித்தவன்.

**496. ஓம் தாரகா கோரகா கார விநிர்மித ரதஸ்சதாய நம:**

நக்ஷத்திர மண்டலங்களையும், நக்ஷத்திரங்களையும் ஏற்படுத்தி, அவைகளை சூன்யா காசத்தில் ஆதாரமில்லா இடத்தில் நிலை பெற்றிருக்கச் செய்பவன்.

**497. ஓம் ஸுதா வர்த்தி பரிஸ்பூர்த்தி சோபமான ரதச்சதாய நம:**

அமர லோகம் என்கிற மேலுலகங்களை அமிருதமயமானதாக எப்போதும் அழிவில்லாத விதாமாக இருக்கும்படி நிர்வகிப்பவன்

**498. ஓம் விஷ்டப்ரதாய நம:**

பதா விஷ்டப்த பாதாளம் மூர்த்தா விஷ்ட திரிவிஷ்டபம் என்பது போல பாதாளம் மூவுலகங்கள் யாவும் அவன் ஆளுகையே.

**499. ஓம் விபுலக்ரீவாய நம:**

பருத்த கழுத்து பாகத்தை உடையவன்.

**500. ஓம் நிப்ருத உச்சைச்ரவஸ்திதயே நம:**

ஸ்ரீ கூர்மாவதாக காலத்தில் திருப்பாற்கடலைக் கடைய காரணகர்த்தாவாக இருந்து, எத்தகைய உயர்ந்த வஸ்துக்களும், பிராட்டியும், அமுதம் கிடைக்க வழி செய்தான் உச்சைச்ராவஸ் என்கிற பச்சை குதிரையும் அவைகளின் ஒன்று.





**501. ஓம் ஸமாவிருத்தா, வதாதோரு முக்தா பிராலம்ப பூஷணாய நம:**

ஒரே சீரான அளவுள்ள அழகிய முத்துக்களாலான பதக்கத்துடன் கூடிய ஆபரணத்தை அணியாகக் கொண்டவன்.

**502. ஓம் ரத்னாங்கதினே நம:**

ரத்தினாங்களால் இழைக்கப்பட்ட அங்கதங்களை அதாவது தோள்வளைகளை அணிந்திருப்பவன்.

**503. ஓம் வஜ்ர நிஷ்கினே நம:**

வைரங்கள் பதிக்கப்பெற்றா தங்க மாலைய கழுத்தில் அணிந்திருப்பவன்.

**504. ஓம் நீல ரத்னாங்க கங்கணாய நம:**

நீல மணி ரத்தினங்களால் இழைக்கப்பட்ட கங்கணங்கள் அணிந்திருப்பவன்.

**505. ஓம் ஹாரிந் மணிம்கனுபத்த குராங்கலா கங்கேணார் மிகாய நம:**

மஞ்சள் நிற புஷ்பராகங்கள் இழைத்த, திருக்கரங்களில் அணியக்கூடிய கொலுசு அலங்காிக்கபட்டவன்.

**506. ஓம் ஸி தோப வீத ஸமச்ஷ்யத் பத்மாக்ஷ மணிமாலிகாய நம:**

தாமரை விதைகள் போன்ற உருக்கொணட மணிகளாலான மாலையை பூணூலுடன் இணைந்ததாற்போல் அணிந்திருப்பவன்.

**507. ஓம் ஸ்ரீ சூர்ணவத் த்வாசதோர்த்தவ புண்ட்ரேகா பரிஷ்திருதாய நம:**

ஸ்ரீ சூர்ணத்துடன் பன்னிரண்டு ஊர்த்தவ புண்ட்ரங்களை அணிந்து பளிச்சென மின்னும்படியான

ஸ்வரூபத்தை உடையவன்.

**508. ஓம் பட்ட தந்து கிருதவத் பவித்சஸாசோபிதாய நம:**

அழகிய பவித்ரமான ஸரத்தால் அலங்கரிக்கப்பட்ட தலைப்பாகையை அணிந்து சோவிப்பவன்.

**509. ஓம் பீன வக்ஷஸே நம:**

செழிப்பான மார்பு என்கிற வக்ஷஸ்தஸத்தைக் கொண்டவன்.

**510. ஓம் மஹா ஸ்கந்தாய நம:**

திரண்ட தோள்களை உடையவன் கம்பர் தனது ராம காதையில் ராமனை வருணிக்கும்போது ஸ்ரீ ராமனின் தோள்களைக் கண்டவர் கண்களை எடுக்க மாட்டாது அவன் தோள்களையே பார்த்திருந்தனராம்.

**511. ஓம் விபுலோருகடிதடாய நம:**

அகன்ற வயிறு, இடுப்பு பிரதேசங்களைக் கொண்டு கம்பீரமாகத் தோற்றமளிப்பவன்.

**512. ஓம் கௌஸ்துபினே நம:**

திருமார்பில் ஸ்ரீ கௌஸ்துபம் என்கிற மணியை ஏந்திருப்பவன் ஜீவாத்மாக்களின் உத்பத்திஸ்தான மாகிய ஸ்ரீ கௌஸ்துபம் ஜீவர்களின் பூஜ்யபிரதேசம்.

**513. ஓம் வனமாலினே நம:**

திருக்கழுத்தில் வனமாலையை எப்போதும் அணிந்திருப்பவன்.

**514. ஓம் காந்த்யா சந்திராயுதோபமாய நம:**

சந்திரனின் நிர்மலமான ஒளியை ஒத்த காந்தி படைத்தவன் ஸ்ரீ ஹயக்ரீவன்



**515. ஓம் மந்தாரமாலிகா மேதினே நம:**

மந்தார புஷ்பங்களாலான மாலையை தரிப்பதில் பிரியமுள்ளவன்.

**516. ஓம் மஞ்சுவாசே நம:**

அழகிய சொற்களைக் கொண்ட சிறிய வாக்கை உடையவன்.

**517. ஓம் அமலச்சவயே நம:**

நிர்மலமான ரூபத்தைக் கொண்டவன்

**518. ஓம் திவ்ய கந்தாய நம:**

எம்பெருமானின் அண்மை திவ்யபரிமள கந்தத்தை நாற்புறமும் பரப்பக் கூடியதாகும்.

**519. ஓம் திவ்ய ராசயே நம:**

சேதனர்களின் அனுபவத்திற்கு இன்ப திவ்ய ரசத்தைப் போன்றவன்.

**520. ஓம் திவ்ய தேஜஸே நம:**

மானிடருக்கு உள்ள தேஜஸ் நித்தியமானது அல்ல. எம்பெருமானுடைய தேசு பெற்ற தேஜஸ் எக்காலத்திற்கும் மாறாத திவ்யதேஜஸ் தேஜோ ரூபன் எம்பெருமான்.

**521. ஓம் திவஸ்பதயே நம:**

த்யேய : ஸதா ஸ்வித்ரு மண்டல மத்யவர்த்தீ என்கிற படி சூரிய மண்டலத்தில் நடுவில் இருந்துகொண்டு உலகை நிலைபெறச் செய்பவன்.

**522. ஓம் வாசாலாய நம:**

வாக்கு சாமர்த்தியம் மிக்கவன். எம்பெருமானுடைய லாலா மிருதத்தைப் பெற்ற ஸ்வாமி ஆசார்ய ஸார்வ பௌமனாக ஸர்வதந்த்ர ஸ்வத்ந்கரராக

எழுந்தருளியிருந்தார் என்றால் எம்பெருமானின் வாக்சத்தி பற்றி யோசிக்கலாம்.

**523. ஓம் வாக்பதயே நம:**

வாக்சக்திக்கு அதிபதி ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவன்

**524. ஓம் வக்த்வே நம:**

வாக்கு என்பதே அதன் பிறப்பிடமே ஸ்ரீ ஹயக்வன்

**525. ஓம் வியாக்யாத்ரே நம:**

வேத வேதாங்களின் கூடமான தெளியாத நிலங்களையும் தெளிவிக்கும் வியாக்யான கர்த்தா பரமன.

**526. ஓம் வாதினாம் பிரியாய நம:**

வாது செய்து, ஸத்தியமான வைகளை நிர்தாணம் செய்ய மிகப் பிரியமானவன் ஸ்ரீ ஹயக்ரீன். பகவத் ராமானுஜருக்கு ஸ்வயம் வியத்தமான ஸ்ரீ ஹயக்ரீவ விக்ரஹத்தை ஸரஸ்வதி பிரஸாதித்தாள். அந்த ஹயவதனின் அருளாலே பகவத்ராமானுஜர் வாதத்தில் ஜெயம் பெற்று விசிஷ்டாத்வைத மதத்தையே ஸ்தாபித்தார். வர்கரு ஸித்தி ஸ்ரீ ஹயவதனன் பிரஸாதமே வாதிகளுக்கு பூஜ்ய மானவன் ஸ்ரீ ஹயவதனன்.

**527. ஓம் பக்த ஹ்ருந்மதுராய நம:**

பக்தர்களுடைய இதயத்திற்கு எப்போதும் இனிமை யானவன், உகப்பானவன் மதுரமானவன்.

**528.ஓம் வாதி ஜுஹ்வா பத்ராஸன்ஸ் திதாய நம:**

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஜிஹ்வாக்ர ஸிம்ஹாஸன மப்யு பேயா: என பிரார்த்திக்கிறார். வாதிகளின் வாக்கு நுனியில் தாம் வீற்றிருந்து அனுபிரவேசமாக வாது செய்து அவர்களுக்கு வெற்றியை பெற்றுத்தருவது எம்பெருமானே!



**529. ஓம் ஸ்மிருதி ஸன்னிஹாஸ்தயே நம:**

உபநிஷத்துக்கள், இதிஹாசங்கள் இவைகள் யாவற்றினும் உட்பொருளாய், தேர்ந்த கருத்தாய் அறியப்படுபவன.

**530. ஓம் ஸ்நிக்தாய நம:**

அன்பு, பாசம் மிகுந்தவன் பக்தர்களிடம் தாஷிண்ய ஸ்வபாவத்துடன் எழுந்தருளியிருப்பவன்.

**531. ஓம் ஸித்திதாய நம:**

எதிலும் வெற்றியை பக்தர்களுக்கு அருள்பவன்.

**532. ஓம் ஸித்த ஸன்னுதாய நம:**

ஸித்தி, வெற்றி என்பதன் வாசஸ்தானம் உத்பசத்தி ஸ்தானமும் எம்பெருமானே.

**533. ஓம் மூல கந்தாய நம:**

ஆதிமூலமே என கஜேந்திரன் அரற்றி என எம்பெருமான் தன்னைத் தானே அடையாளம் கண்டு கொண்டோன் . அதுபோல ஈரேழுபதிநான்கு உலகங்கள் அனைத்திற்கும் ஆணிவேர் எம்பெருமான் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் யாவும் நிகழ்வதற்கு காரண கர்த்தா அவன் ஒருவனே.

**534. ஓம் முகுந்தாய நம:**

எம்பெருமானின் ஆயிரக்கணக்கான திருநாமங்களை ஒன்று முகுந்தன் லௌகீக. பாரலௌகீக இருவித பலன்கள் அளிக்க வல்லவன் என்கிறதாக இத்திருநாமத்திற்கு பொருள்படும்

**535. ஓம் க்லாவே நம:**

சந்திர மண்டலத்தில் வசிப்பவன் மட்டுமல்ல, சந்திரனே

ஸ்ரீ ஹயக்ரீவன் தான் எனக் கொண்டாடப் படுபவன்.

**536. ஓம் ஸ்வயம்புவே நம:**

ஸ்வ ஸங்கல்பத்தால் தாமே அவதாரகாரியத்திற்கு ஒத்தார்போல் அவதாரம் எடுப்பவன். கர்ம வச்யராய், கர்ப்ப வாஸம் செய்து அவதரிப்பவன் அல்லன்

**537. ஓம் சம்பவே நம:**

எப்பொதும் மகிழ்ச்சி நிறைந்தவன் சேதனர்களுக்கு செழிப்பு, வளம் இவைகளை அருள்பவன்.

**538. ஓம் ஐந்தவாய நம:**

பூர்ண சந்திரனின் காந்தியைப் போன்று குளுமையான ஸ்வரூபத்தை உடையவன்.

**539. ஓம் இஷ்டாய நம:**

பிரளய காலத்தில் ஜீவன்களை பிரியமுடன் தன் வயிற்றில் தாங்குபவன்

**540. ஓம் மனவே நம:**

மந்த்ரமயம் சரீரம் என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அனுபவித்து போல எம்பெருமான் மந்த்ர ஸ்வரூபம்.

**541. ஓம் யமாய நம:**

எல்லாவற்றிலும் உட்புகுந்து அடக்கிக் கொள்பவன்- இது பட்டர் பாஷ்யம்.

**542. ஓம் அகால கல்யாய நம:**

கால பிரமாண நிர்ணயம் எதுவும் இல்லாமல் எக்காலத்திற்கும் இனிமையானவன்.

**543. ஓம் கம்பு கலாநிதயே நம:**



சுத்தமான, ஸாத்விகமான கலைளின் பொக்கிஷமாக விளங்குபவன்.

**544. ஓம் கால்யாய நம:**

ஆத்மானுபவத்தின் ஸார மாக விளங்குபவன்.

**545. ஓம் காமயித்ரே நம:**

நிஷித்த ரஹித, ஸாத்விகமான மனோ காம்யங்களை நிறைவேற்றுபவன்.

**546. ஓம் பீமாய நம:**

தன்னை அனுபவிக்காதவர்களுக்கு எம்பெருமான் பயங்கரமானவன் என்பது ஸ்ரீ பட்டர் நிர்வாகம்.

**547. ஓம் கார்தயஹரணாய நம:**

கோழைத்தனத்தை வேரறுப்பவன்

**548. ஓம் கிருதினே நம:**

சாஸ்த்ர ஸம்மதமான ஸத்காரியங்களை செய்பவனும் , செய்விப்பவனும் எம்பெருமான்.

**549. ஓம் ஸம்பிரியாய நம:**

ஆச்ரிதர்களின் மனதிற்கும், எண்ணத்திற்கும் மிகவும் பிரியமானவன்.

**550. ஓம் பக்கணாய நம:**

பூரணமாக பக்குவப்பட்ட, சுத்த ஞான ஸ்வரூபமே நிறைந்தவன்.

**551. ஓம் தர்காய நம:**

தர்க சாஸ்திரம் என்று கூறப்படும் தர்க்கம் எம்பெருமான் ஸ்வரூபமே.

**552. ஓம் சர்ச்சாயை நம:**

உண்மையான தத்துவம் எது என்பதை நிர்ணயம் செய்ய தர்க்கங்களைக் கொண்டு சர்ச்சை செய்பவர். அந்தவிதமான விவாதமும் எம்பெருமானே.

**553. ஓம் நிர்தாரணாதயே நம:**

தர்க்கம், சர்ச்சை இவைகளைக் கொண்டு தத்வ நிர்ணயத்தைத் தருபவனும் அவனே.

**554. ஓம் வியதிரேகாய நம:**

உவமானங்களாக எவ்வளவு உயர்வானதைக் குறிப்பிட்டாலும் அந்த உவமானத்தை விஞ்சும், சிறப்புடையோன்.

**555. ஓம் விவேகாய நம:**

பாலும் நீரும் கலந்திருப்பின், பாலை மட்டும் பிரித்து ஏற்கும் ஹம்ஸம் போல, உண்மையானவைகளே மட்டும் பிரித்து ஏற்பவன் எம்பெருமான்.

**556. ஓம் பிரவேசாய நம:**

உண்மையான ஞானமார்க்கத்தின் திறவு வாயில் போன்றவன் எம்பெருமான்.

**557. ஓம் பிரக்ரமாய நம:**

ஸத்தான ஞான மார்க்கத்தின் சுபாரம்பம் ஸ்ரீ ஹயக்ரீவனே.

**558. ஓம் கிரமாய நம:**

அவ்வித ஞானமார்க்கத்தின் வழியும் அவன் தான்.

**559. ஓம் பிரமாணாய நம:**

வேதம், சாஸ்திரம், உபநிஷத் போன்ற எல்லாவித



ஞானத்திற்கும் பூர்ண அதிகாரி ஸ்ரீ ஹயக்ரீவன்

**560. ஓம் பிரதிபுவே நம:**

ஸகல ஞானத்திற்கும் இருப்பிடமாகிய மேதாவிலாஸம் பொருந்தியவன்.

**561. ஓம் பிராஞ்ஞாய நம:**

தத்வார்தங்களில் முதிர்ந்த ஞானமுடையவன்.

**562. ஓம் பத்ய பிரஞ்ஞா பூதாய நம:**

பிரஞ்ஞா திரஷ்டே ரஞ்சன ஸ்ரீ ரபூர்வா என ஸ்ரீ ஸ்வாமி, தேசிகன் அனுபவித்து போல, ஆச்ரிதர்களுக்கு ஹிதத்தை அருளும் பூர்ண ஞான ஸ்வரூபன்.

**563. ஓம் தாரணாய நம:**

வேத வேதாங்கங்கள், உபயிரம் மணங்கள் தத்வார்த்ங்கள் இதிஹாஸ புராணங்கள், சாஸ்திரங்கள் யாவையுமே தமது சரீரத்தில் தாங்கி இவர்களின் ஸ்வரூபமானவன்

**564. ஓம் விதயே நம**

லீலா விபூதியின் வியாபாரங்களை வகுத்த ஜகத்காரணன்.

**565. ஓம் விதாத்ரே நம:**

உலகில் படைக்கும்ட பிரமனின் அந்தர்யாமியாய் அந்த கர்மத்தையும் செய்யும் விதமாக இருப்பவன்.

**566. ஓம் வியதுதயே நம:**

வியவதானம் என்பது மறைந்திருத்தல் என பொருள்படும். இதனை உயர்நலம் படைத்த எம்பெருமான் ஜீவனின் அனுமானத்திற்கும், கணிப்பிற்கும் அப்பாற்பட்டு,

தமது சக்தியை மறைத்துக்கொண்டு, ஸாமானியன் போல் எழுந்தருளியிருப்பவன்.

**567. ஓம் உத்பவாய நம:**

ஸம்ஸார பற்றை விலகச்செய்பவன் என்பது ஸ்ரீ பட்டரின் அனுபவம்.

**568. ஓம் பிரபவே நம:**

தேவ தேவர்களுக்கும் ஜகத்பிரபு ஸ்ரீமந்நாராயணன்.

**569. ஓம் ஸ்திதயே நம:**

என்றும் நிலைத்து நிற்பவன், பிரளய காலத்திலும் சிறு ஆலயங்களில் எழுந்தருளி மீண்டும் உலகங்களை படைப்பவன்.

**570. ஓம் வியாய நம:**

ஜீவன் இழிதலில்லாத பரமானந்தம் என்கிற மோட்சத்தை பெற அனுப்பட வேண்டிய குறித்தேவன் பரமனே.

**571. ஓம் ஸம்சயாய நம:**

ஸந்தேகங்கள் என்று ஏற்பட்டு, தர்க்கத்தால் உண்மை நிர்த்தாரணம் செய்யப்படுகிறது. அப்படி ஏற்படிக்கூடிய ஸம்சயம் கூட எம்பெருமான் தான்.

**572. ஓம் பூர்வ பக்ஷாய நம:**

ஸத்யமான தத்வ நிர்ணயங்களுக்கு முன் சில மாறுபட்ட முன் கருத்துகள் ஏற்படும் பிறகு தர்க்கம் ஏற்பட்டு உண்மை நிலை நிறுத்தப்படும். இதற்கு பூர்வபக்ஷமான தவறுன கருத்தும் ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்வரூபமே.

**573. ஓம் கக்ஷ்யோப பாதகாய நம:**

உண்மையான தத்துவத்திற்கு ஏறக்குறைய சமமான அளவு கட்சி பேசப்பட்டால், இரு பக்ஷமும் நிறுத்து



உண்மையை நிலை நிறுத்துபவன்.

**574. ஓம் ராத்தாந்தய நம:**

எந்த கட்சிக்கும் விரோதமின்றி, யாவருக்கும் ஏற்பாக இருக்கும் விதமாக, ஸித்தாந்தத்தை நிலைநாட்டும் எல்லை நிலமாக இருப்பவன்.

**575. ஓம் விஹிதாய நம:**

உண்மையின் தத்துவத்தை வெளிப்படையாக விளக்கிக் காட்டுபவன்.

**576. ஓம் நியாய பல நிஷ்பதயே நம:**

நியாயமான, முடிவான, நிர்ணயத்தை நிர்வகிப்பவன்.

**577. ஓம் உத்பவாய நம:**

இத்திருநாமம் எம்பெருமானுடைய கிரியாசக்தியை குறிக்கும். வேதங்கள் தொடங்கி ஸர்வ காலத்தின் நிர்மாதாவும் எம்பெருமானே அவன் கிரியா சக்தியே காரணம்.

**578. ஓம் நாநா ரூப தந்த்ராத்மனே நம:**

"பிரவர்த்தா சந்தஸாம் வத்தா பாஞ்சாத்ரஸ்ய ய ஸ்வயம்" என ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் குறிப்பிட்டது போல ஸ்ரீ ஹயக்ரீவன். ஸதலவித ஸூக்ஷ்யமான தந்தரங்களையும் நிர்மாணித்தவன்.

**579. ஓம் வியவஹார்ய நம:**

வேதங்கள், சாஸ்திரங்கள் , ஆகமங்கள் யாவற்றுக்கெல்லாம் நடைமுறை வழிகளை நிர்ணயிப்பவன்.

**580. ஓம் வியவஸ்திதயே நம:**

இவ்வழிமுறைகளை நிலை நிறுத்துபவன்.

**581. ஓம் ஸர்வ ஸாதாரணய நம:**

மேற்கண்ட படியும், இன்னும் வேதங்கள் தொடங்கி பிரமாண விசேஷங்களாலும் எம்பெருமான் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் என்பதாகிறது. இருப்பினும் அவன் பற்றுடை அடியவர்க்கெளியவன். என்பதே எம்பெருமானுடைய ஏற்றத்தின் சிகரமாகிறது.

**582. ஓம் தேவாய நம:**

அமரலோக வாசிகளை தேவர்கள் எனக் குறிப்பிட்டதையும் எல்லா பர்ஜன்ய தேவதைகளுக்கும் அந்தர்யாமி அந்தந்த பொறுப்புகளை வகிக்கும் பரமனுக்கு தேவன் என்கிற பதம் பொருந்தும் தேவாதிதேவன், தேவனாதன் எம்பெருமான்.

**583. ஓம் ஸாத்வஸாது ஹிதேரதாய நம:**

"ஸாதுரேவ ஸச மந்தவ்ய" என்கிற கீதைவாக்கு பிரகாரம் ஸம்யக் வியவஸாயமாகிய அவன் திருவடிகளை கதி என்றிருக்கக் கூடிய ஸாதுக்களின் நன்மையில் எப்போதும் நாட்டமுடையவன்.

**584. ஓம் ஸத்தாயை நம:**

ஸந்தா என்பது எல்லை என்பதாகும். எம்பெருமாள் திருக்கல்யாண குணங்களின் எல்லை, எளிமையின் எல்லை, கருணையின் எல்லை, ஆச்ரித வாத்ஸல்யத்தின் எல்லை என்பதாகும்.

**585. ஓம் ஸனாதன தர்மாய நம:**

தர்மம் என்குளதோ அங்கு கண்ணன் இருப்பான் என்பது பிரமாணம். எக்காலத்திலும் நிலைத்து இருப்பான். இந்து மதத்தை ஸனாதன தர்மம் என்பர் இந்து மதத்தின் தலைவனும் எம்பெருமானே.



**586. ஓம் தர்மார்ச்சயாய நம:**

தர்மத்தால் பூஜிக்கப்படுபவன்.

**587. ஓம் சந்தோமயாய நம:**

எம்பெருமானுக்கு மேம்பட்ட உத்தரவிடக்கூடிய சக்தியாதுமில்லை - ஆகையால் ஸ்வேச்சையாக வியஹரிக்கும் சக்தி படைத்தவன் பரமன்

**588. ஓம் திரிதாமாத்மனே நம:**

மூவுலகுண்டு, உமிழ்ந்த முதல்வன் என்கிற ஆழ்வார் வாக்குபடி மூவுலகங்களின் தலைவன் எம்பெருமான்

**589. ஓம் ஸ்வசந்தாய நம:**

'பூரண ஸ்வதந்த்ரன் எம்பெருமான் அவனுக்கு மேம்பட்டவர் யாருமிலர்.

**590. ஓம் சாந்த ஸேடிதாய நம:**

எம்பெருமான் தமது ஸங்கல்பத்தால் மட்டுமே தூண்டப்படுபவன்.

**591. ஓம் யஞ்ஞாய நம:**

யாகம் என்பது பலவிதமாயினும் யாக புருஷன் யாக இலக்கு, எம்பெருமானே யஞ்ஞஸ்வரூபியும் அதிகாரிகளும் அவனே.

**592. ஓம் யஞ்ஞாத்மநாய நம:**

யாகத்தின் ஆத்மாவாக இருந்து யாக கர்த்தாவிற்கு அதன்பலனை அளிப்பவன்.

**593. ஓம் யஷ்டரே நம:**

இஷ்டி எனப்படும் மனோபீஷ்டத்தை தந்தருளும் பலவித யாகங்களுக்கும் பூர்ண அதிகாரி எம்பெருமானே.

**594. ஓம் யஞ்ஞாங்காய நம:**

யாகத்தின் பலவித அங்கங்களும் அவன் ஸ்வரூபமே

**595. ஓம் அபசனாய நம:**

யாகத்தின் மொத்த வடிவம் எம்பெருமானே.

**596. ஓம் ஹவிஷே நம:**

யாகத்தில் அளிக்கப்படும் ஹவிர்பாகத்தை ஏற்பவன் அவனே.

**597. ஓம் ஸமிதே நம:**

யாக குண்டத்தில் உபயோகப்படும் ஸமித்துக்கள் கூட எம்பெருமான் ஸ்வரூபவமே

**598. ஓம் ஆஜ்யாய நம:**

யாகத்திற்கு அஹுதி செய்யப்படும் நெய் எம்பெருமான் ஸ்வரூபமே.

**599. ஓம் புரோடாசாய நம:**

குறிப்பிட்ட யாகத்தில் உபயோகப் படுத்தப்படும் புரோதஸ் மிருக மாமிசம் கூட எம்பெருமான் ஸ்வரூபமே.

**600. ஓம் சாலாயை நம:**

யாகம் நடைபெறும் யாகசாலை கூட எம்பெருமான் ஸ்வரூபமே.

**601. ஓம் ஸ்தால்யை நம:**

சொம்புடன் பயன்படும், ஸ்தாலி என்கிற பஞ்சபாத்ரம்



**602. ஓம் ஸ்ருவாய நம:**

யாக குண்டலத்தில் ஆஹீதி செய்வதற்கு மரத்தலான நீளமான காம்புடன் சிறிய கரண்டி உண்டு. அதன் ஸ்வரூபம் கூட எம்பெருமான் என்பது தாத்பர்யம்

**603. ஓம் ஸ்ருசே நம:**

அந்த கரண்டியால் அளிக்கப்படும் பொருள் நெய்–ஆஹீதியும் அவனே.

**604. ஓம் பிராக்வம்சாய நம:**

நிலை பொருள்களுக்கும் நிலையான ஆதாரனமானவர்

**605. ஓம் தேவயஜனாய நம:**

யாகம் எனப்படும் கர்மாவே எம்பெருமானின் ஸ்வரூபமும், ஸங்கல்பமும் ஆகும்.

**606. ஓம் பரிதயே நம:**

யாக குண்டத்தைச் சுற்றி பலாச குச்சியை வட்டமாக இட்டு வைப்பார். அவ்விதமான வளையம் (பலாச குச்சியான) எம்பெருமான் ஸ்வரூபமே.

**607. ஓம் பரிஸ்தராய நம:**

யாக குண்டத்தைச் சுற்றி பரப்பப்படும் ஸமித்துக்கள் ஸ்வரூபமாகவும் எழுந்தருளியிருப்பவன்.

**608. ஓம் வேதயே நம:**

யாக வேதத்தை எம்பெருமான் ஸ்வரூபமாகவும் கருதப்படும்.

**609. ஓம் விஹரணய நம:**

விஹரணம் என்பது எடுத்துக் கொண்டு விடுத்தனர் என்பதாகும். யாக கர்மாயாவையும் தாமே ஸங்கல்பித்து திரவியங்களாக, காரியமாக இருந்து அந்த

கைங்காரியத்தை தாமே ஏற்று, பலன் தருபவன் பரமாத்மாவே.

**610. ஓம் திரேதாயை நம:**

யாகத்தில் சேர்க்கப்படும் மூன்றுவித பவித்ரமான நெருப்பு, திரேதா எனப்படும். இதன் ஸ்வரூபமாகவும் விளங்குபவன் எம்பெருமான்.

**611. ஓம் பசவே நம:**

சிலயாகங்களில் மிருகங்களை அர்ப்பணம் செய்வர். அந்த மிருக ஸ்வரூபமாகவும் இருப்பவன் எம்பெருமான்.

**612. ஓம் பாசாய நம:**

அந்த மிருகத்தை கட்டும் கயிறும் அவனே.

**613. ஓம் ஸம்ஸ்கிருதயே நம:**

யாக கார்ய செய்கை என்பதும் அவனே.

**614. ஓம் விதயே நம:**

யாகம் செல்லக்கூடிய கிரமம், விதம் அவனே/

**615. ஓம் மந்த்ராய நம:**

அஹுதி செய்ய உச்சரிக்கப்படும் மந்திரமும் அவனே.

**616. ஓம் அர்த்தவாதாய நம:**

யாக கர்மத்தின் குறிக்கோள், பயன், கோப்தா எம்பெருமானே.

**617. ஓம் திரவ்யாய நம:**

யாகத்திற்கு பயன்படக்கூடிய ஸகலவித பொருட்களும் அவனே.

**618. ஓம் அங்காய நம:**

யாக நிர்வாகத்தின் முன்னேறக்கூடிய ஒவ்வொரு



அங்கமும் அவனே.

**619. ஓம் தைவதாய நம:**

தேவ தேவனாகிய ஸ்ரீ மந் நாராயணனே யஞ்ஞ புருஷன்.

**620. ஓம் ஸ்தோத்ராய நம:**

அவனை துதிக்கக்கூடிய துதி சொற்களும் அவனே.

**621. ஓம் சஸ்த்ரே நம:**

மந்தரங்களின் அங்கமாக அஸ்த்ரம் என்பது ஒன்று உண்டு. திருவஷ்டாக்ஷரத்திற்கு ஸ்ரீ நாரயணாஸ்திரம் என்பது போல ஏற்படக்கூடிய சஸ்திரங்களும் அவனே.

**622. ஓம் ஸாம்னே நம:**

புராணத்திற்கு ஒப்ப ஸாம வேதத்தின், பாராயணம் செய்யக்கூடிய பாசுமும் எம்பெருமானே. வேதானாம் ஸாம வேதோஸ்மி என்கிற கீதை வாக்கு பலித்தது.

**623. ஓம் கீதயே நம:**

பாராயணம் செய்யப்படும் ஸ்ருதிகளும் அவனே.

**624. ஓம் உத்கீதாய நம:**

உத்கீத பிரணவோத்கீத ஸர்வவாகீச்வரேசச் வர : என்கிற மந்திரம் ஸ்ரீ ஹயக்ரீவ உபநிஷத்தைச் சேர்ந்தது. இதற்கு பிரதிபாத்யன் எம்பெருமான் கருடபகவான் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனுக்கு இதே மந்திரத்தைத்தான் உபதேசித்தார் என்பர் பெரியோர்.

**625. ஓம் ஸர்வ ஸாதனாய நம:**

ஸாதனம் என்பது ஒரு இலக்கை அடைய

உதவும்பொருளாகும். வழிகளாகும். அவ்வாறான ஸாதனமும் நற்பயனும் அவனே.

**626. ஓம் யாஜ்யாய நம:**

இஜ்யா என்பது குறிப்பிட்ட வேளையில் செய்யப்படும் ஆராதனமாகும். இவ்வாறு செய்யப்படும் திருவாராதனமும் அவனே.

**627. ஓம் புரோநு வாக்யாயை நம:**

வேதாந்த ஞானம் வெளிப்படும் சாஸ்த்ர ரீதியான வாக்கியங்கள் யாவும் அவனே.

**628. ஓம் ஸாமிதேன்யை நம:**

யாக குண்டத்தில் தீயை பொருத்த கட்டைகளை அடுக்கும்போது பாராயணம் செய்யப்படும் ஸ்ருதிவாக்கியம் அவனே.



**629. ஓம் ஸமூஹானாய நம:**

யாகத்திற்குரிய அங்கங்கள், பிரத்யங்கங்கள் நடைமுறை, கர்மா, அதற்குரிய, பலன் யாவற்றுக்கும் அதிகாரியாக இருந்து, யாவற்றையும் சேர்த்து, பரஸ்பர விரோதமில்லாத ஒரு யாக கர்மாவை பூர்த்தி செய்விப்பவன்.

**630. ஓம் பிரயோகத்ராத்மனே நம:**

யாக பிரயோகத்தை தடையின்றி, காத்து முடித்து வைப்பவன்.

**631. ஓம் பிரயோகாய நம:**

யாக பிரயோகமும் எம்பெருமான் ஸங்கல்பமே.

**632. ஓம் பிரபஞ்சாய நம:**



இந்த பிரகிருதிமண்டலம், மாயை என்கிற தத்துவம் உண்மை அல்ல. ஜீவனுக்கு ஏற்படும் பிரகிருதி அனுபவங்கள் உண்மை. இந்த பிரபஞ்சம் என்கிற பிரகிருதி எம்பெருமானின் ஸ்வரூபமே.

**633. ஓம் பிராசு பாவாய நம:**

பிரபஞ்சம் லயமாகும் காலத்தில் இந்த பிரபஞ்சத்தையே உண்டு மறைக்கும் சக்திபடைத்த தலைவன்.

**634. ஓம் ச்ரத்தாயை நம:**

ஸத்காரியங்களின், ஈடுபாடு, சிரத்தை என்கிற பாவம் எம்பெருமான் ஸ்ரூபவமே.

**635. ஓம் பிரத்வம்ஸனாய நம;**

தீயவைகளை அடியோடு வேரறுக்கும் தன்மையன்

**636. ஓம் துஷ்டயே நம:**

பூரணத்வம் என்கிற பதத்திற்கே பிரதிபாத்யமானவன்.

**637. ஓம் புஷ்டயே நம:**

எதற்கும் புஷ்டி என்கிற நிறைவைத் தருபவன். மஹா குணங்கள் நிரம்பியவன்.

**638. ஓம் புண்யாய நம:**

புண்ய கர்மாக்கள் என்று ஏற்று செய்யப்படும் காரியங்களுக்கு எம்பெருமானையே குறித்தவை.

**639. ஓம் ரதாய நம:**

நல்லதை, தர்மத்தை நிலை நாட்டுவதில் எப்பொதும் த்வரை உடையவன்

**640. ஓம் பவாய நம:**

இவ்வாறு நடைபெறும் ஸத்காரியமும் எம்பெருமானே.

**641. ஓம் ஸதஸே நம :**

வித்வத் ஸபை என்று கூடும் போது அதன் தலைமை ஏற்பவன் அந்த ஸபா ஸ்வரூபமும் அவனே

**642. ஓம் ஸதஸ் ஸம்பதாய நம :**

ஸபை அங்கத்தினர் யாவரும் ஒரு தத்வ நிர்ணயம் பண்ண வாத விவாதங்கள் செய்யும் போது பரஸ்பர விரோதமின்றி, ஒத்த அபிப்ராயங்கள் எல்லாரும் கொண்டு , ஏகோபித்து இருக்கும் விதமாக செய்பவன்.

**643. ஓம் ப்ரச்னாய நம :**

ஸபையில் எடுக்கப்படும் கேள்வி அவனே.

**644. ஓம் ப்ரதி வசஸ்திதயே நம :**

கேள்விக்கான பதிலும் அவனே..

**645. ஓம் ப்ராயசித்தாய நம :**

எவ்வித தவறான செய்கைக் காகவும் செய்யப்படும் ப்ராயசித்த கா்மா அவனே.

**646. ஓம் பரிஷ்காராய நம :**

ப்ராய்ஸ்சித்த கா்மத்தால் விளையும் புனிதமான பாவன நிலையும் அவனே.

**647. ஓம் திருதயே நம :**

எல்லாவற்றையும் தம்முள் தாங்குபவன்.

**648. ஓம் நிர்வஹணய நம :**

ப்ராயஸ்சித்த கர்மத்தின் பூர்த்தியும் நிர்வகிப்பவன்.

**649. ஓம் பலாய நம :**

ப்ராய்ஸ்சித்த கர்மாவால் அடையப்படும் புண்ணிய பலனும் அவனே.



**650. ஓம் நியோகாய நம :**

ஸத் காரியங்களின் செயல்பாடும் அவனே.

**651. ஓம் பாவனாய நம :**

பாவம் என்பது எவ்வகை யாயினும் இதயம் ஆத்மா, மனம், மூன்றும் இணைத்து தேறும் பொருளாகும். இவ்விதமான ஆத்மபூர்வமான பாவமும் அவனே.

**652. ஓம் பாவ்யாய நம :**

ஸத் பாவங்கள் எதிர் காலத்தில் பலிதமாவதும் அவன் ஸங்கல்பத்தாலே தான்.

**653. ஓம் ஹிரண்யாய நம :**

ஹிரண்யம் என்பது தங்கம் என பொருள்படு -மாயினும் மஹாவிஷ்ணுவை குறிக்கும் சொல்லாகவே ஹிரண்யம் வழக்கில் உள்ளது.

**654. ஓம் தக்ஷிணாயை நம :**

எல்லா வல்லமையும், ஸாமர்த்தியமும் பொருந்தியவன்.

**655. ஓம் நுதயே நம :**

எல்லாருடைய போற்றுதலுக்கும், வணக்கத்திற்கும் உரியவன்.

**656. ஓம் ஆசிஷே நம :**

நல்லாசீர் வாதங்களை வாழி வழங்குபவன்.

**657. ஓம் அப்யுபத்தயே நம :**

நல்லாசீர்வாதங்களின் பலனை அடைவது, என்பதை சீக்கிரமாக முழுமையாக ஆக்குபவன்.

**658. ஓம் திருப்தயே நம :**

பயனடைந்த மஹான்களுக்கு ஏற்படும் திருப்தியும் அவனே.

**659. ஓம் ஸ்வாய நம:**

எந்த பிரயாசையுமின்றி, அனாயாசமாகத் தாமே எதையும் செய்பவன்.

**660. ஓம் கேவல சர்மணே நம:**

"பேராயிரம் உடைய பேராளன்" என்று ஸ்ரீ மந் நாராயணனைக் குறிப்பிட்டாலும் அனந்தமான பெயர்களையும், கல்யாண குணங்களுமுடையவன் . எந்த பெயரால் எப்படி விளித்தாலும் ஸர்வகுண பரிபூரிதனை உள்ளபடி வர்ணிக்க இயலாதவன்.

**661. ஓம் புண்யசக்ஷுஷாய நம:**

புண்ணியத்தின் இருப்பிடம் எம்பெருமான்

**662. ஓம் புன. பாதபயாய நம:**

சேதனன் தன் உயர்வான குண நிலையின்று கீழே இறங்கி விடப் போகிறாகுனே என்கிற பயம் எம்பெருமாறும்னுக்கு உண்டாம்.

**663. ஓம் சிக்ஷா சுகர்தனாய நம:**

எம்பெருமான் தமது திருவாக்கால் சேதனுக்கு நல்லனவைகளை போதிக்கிறான்.

**664. ஓம் கார்ப்பண்யாய நம:**

சேதனன் தனது இயலாமையை ஆகிஞ்சனத்வத்தை உணர்த்திருத்தல் அவசியம் இதை எம்பெருமான் உணர்த்துகிறான்.



**665. ஓம் யாதனாய நம:**

துன்பம் அனுபவித்தல் பாப விஷேத்தால் சேதனுக்குஏற்படுகிறது. அந்த துக்கானுபவம் கூட எம்பெருமான் ஸ்வரூபமே.

**666. ஓம் சிந்தனாய நம:**

பிறவி நோய்க்கு ஆட்பட்டு மீளாத சக்கரத்தில் தவிக்கும் ஆத்மாவை எப்படி காப்பாற்றப் போகிறோம்என்பது ஏற்படக் கூடிய கவலை கூட எம்பெருமானே.

**667. ஓம் நிர்வேதாய நம:**

சிரங்காலமாக நிலையற்ற இவ்வுலக வாழ்வில் ஈடுபட்டு, அனேகானேக ஜன்மங்களை வீணடித்து விட்டோமே, எம்பெருமான் திருவடிகளை உபாயம் உபேயம் என்பதை உணராமல் போனோமே என்கிற வருத்தம் சேதனுக்கு ஏற்படுவது எம்பெருமான் ஸங்கல்பத்தாலே தான்.

**668. ஓம் விஹஸ்ததாய நம:**

இந்நிலையில் நாம் போகும் வழிதான் என்ன என்று சேதனன் வலுவிழந்து, வழி அறியாமல் தவிக்கும் நிலை கூட எம்பெருமான் ஸங்கல்பம் தான்.

**669. ஓம் தேஹப்ருத் கர்ம ஸம்பாதாய நம:**

பிரக்ருதியில் ஆத்மா ஒரு சரீரம் பெற்று கர்மா செய்வதில் ஈடுபடுகிறது. இதனால் மேன் மேலும் மீளாத பள்ளத்தில் விழுகிறது. மேலே வரும் வழி புலப்படாமல் கஷ்டப்படும் நிலை சேதனுக்கு அவன் ஸங்கப்பத் தாலேயே ஏற்படுகிறது.

**670. ஓம் கிஞ்சித் கர்மானு கூலாய நம:**

எம்பெருமானுக்கு கிஞ்சித் மாத்திரம் கைங்காரியம் ஏதாவது செய்யக் கிடைத்தால் அதனால் ஏற்படும் அநுகூல நிலையும் எம் பெருமானே.

**671. ஓம் அஹேதுக ப்ரேம்ணே நம :**

ஜீவனிடத்தில் எம்பெருமானுக்கு ஏற்படக்கூடிய வாத்ஸல்யம் ஸ்வபாவமானது. அதற்கு காரணம் எதுவும் இல்லை. அவன் திருமார்பில் உத்பத்தியாகி ஒருநாள் இல்லை ஒருநாள் விண்ணகம் புகுவது மண்ணவர் விதியே என்கிற விதமாக ஜீவனிடம் எம்பெருமானுக்கு ஸ்வபாவமான அன்பு உண்டு.

**672. ஓம் ஸாம்முக்யாய நம :**

எம்பெருமான் சேதனுக்கு அநுகூலமான நிலையில், தமது திருஷ்டியை அவன் மீது செலுத்துபவன்

**673. ஓம் அநுக்ரஹாய நம :**

சேதனுக்கு எம்பெருமான் செய்யும் அநுக்ரஹம் அவன் ஸ்வரூபம் தான்.

**674. ஓம் சுசயே நம :**

புனிதத்தன்மை, சுத்தத்தன்மை இவற்றின் உருவாக இருப்பவன் எம்பெருமான்.

**675. ஓம் ஸ்ரீமத்குல ஜனாய நம :**

உயர் குணமுள்ள, நற்குடிப்பிறப்புள்ள சேதனுக்கு அநுகூலமானவன்.

**676. ஓம் நேத்ரே நம ;**

வழி நடத்தும் தலைவன் என பொருள்படும் சேதனனை



மோக்ஷம் வரை, வழிகாட்டும் துணைவன்.

**677. ஓம் ஸத்வாபிமானவதே நம :**

ஸாத்வீகமான வழிமுறைகளில் ஈடுபாடுடையவன் சேதனர்களையும் அவ்வழி கொண்டு செல்பவன்.

**678. ஓம் அந்தராய ஹராய நம :**

நல்வழிப்படும் சேதனர்களின் மார்கத்தில் ஏற்படும் தடைகளை போக்குபவன்.

**679. ஓம் பித்ரே அதுஷ்டாஹாரா தாயகாய நம :**

ஸாத்வீக குணத்தை வளர்க்கும் சுத்த ஆகாரத்தை பித்ருக்களுக்கு ஸமர்பிக்கச் செய்பவன்

**680. ஓம் சுத்தாஹாரானுரூபாங்க பரிணாம விதாயகாய நம:**

ராஜஸ் தாமஸ குணங்களை வளர்க்கும் விதமாக அமையாமல், ஸாத்வீகமான ஆகாரமாக மாற்றியருளும் தன்மையன்.

**681. ஓம் ஸ்ராவ பாதாதி விபத்பரிஹாரிணே நம :**

தொடர்ந்து வரக்கூடிய கெடுதல், விபத்துகளை போக்கியருள்பவன், நமக்கு கர்மவச்யனாக இருந்தும், ஆத்மா உய்ய முனைப்புடன் மனைத கட்டுபடுத்தி வழிநடத்தியும் லௌகீகமான சிரமங்கள் தடைக்கல்களாக அமையும். அவைகளை பரிஹரித்து நமது ஏகாக்ரமான குறிக்கோளாகிய உய்யும் வகையை நமக்குக்

காப்பாற்றியருள்பவன்.

**682. ஓம் பராயணய நம;**

சேதனை உய்விப்பதிலேயே ஈடுபாடு உடையவன்.

**683. ஓம் சிர. பாண்யாதி ஸந்தாத்ரே நம:**

சரண் புகுந்த சேதனனை மணிக் கட்டைப்பிடித்து தூக்கி கராவலம்பனம் அருளி காப்பவன்.

**684. ஓம் க்ஷேமக்ருதே நம:**

லௌகீக மற்றும் பாரலௌகிக க்ஷேமம் இரண்டும் ஒருங்கே அளிக்க வல்லவன்.

**685. ஓம் ப்ராணதாய நம:**

ஒவ்வொரு ஜீவனையும் உண்டாக்குவன் படைப்பவன் , உயிரளிப்பவன்.

**686. ஓம் ப்ரபவே நம:**

எல்லா ஜீவனுக்கும் தலைவன், பரமபுருஷன் அவன் ஒருவனே.

**687. ஓம் அஹிர்க்ருணய நம:**

'யதிவா ராவணஸ்வயம்' என் விளம்பிய பரமனுக்கு, எந்த வித ஜீவனிடத்தில் வெறுப்பு என்பதே கிடையாது.

**688. ஓம் அக்ஷமாய நம:**

ஜீவர்களிடத்தில் பாகுபாடு, வேண்டியவன், வேண்டாதவன் என்பதும் கிடையாது.

**689. ஓம் சக்தி த்ரிதய நாயகாய நம:**

மூன்றுவித சக்திகள் ஞான, இச்சா, கிரியா சக்திகளை அளிப்பவன்.



**690. ஓம் ஸ்வேச்சா ப்ரஸங்க ஸம்பத்தி வ்யாகஹார்ந்த விசேஷதே நம:**

பஹூனாம் ஜன்மானமந்தே ஞானவான் மாம் ப்ரபத்யதே என்கிற கீதாசார்யரனின் வாக்குபடி, நிலையான ஸம்பத்தில் மோக்ஷம் பெற, சேதனுக்கு எண்ணம் உண்டாகும்படியாக, ஸங்கல்பிப்பதும் எம்பெருமானின் ஸ்வேச்சையாலேயே.

**691. ஓம் ஸம்வித ஸந்தாய காய நம:**

சலனமற்ற ஸமநிலை மனதிற்கு உண்டாகும் படி அருள் செய்பவன். விபரீத வியாக்யானங்களால் மனது அலைபாய்ந்து போகாமல் நிலைபெறச் செய்பவன்.

**692. ஓம் ஸர்வ ஜன்ம க்லேச ஸம்ஹ்ருதி ப்ரதாய நம:**

அனேகானேக பிறவிகள் எடுத்து இன்ப துன்ப சுழலில் சிக்கி ஆத்மா சிரம்காலமாக துக்கப் பட்டு களைத்து இருக்கிறது. எம்பெருமான் ஸங்கப்பத்தால் இதனின்று மீளவேண்டும் என்கிற எண்ணம் ஏற்படுகிறது.

**693. ஓம் விவேகதாய நம:**

ஆத்மா பற்றிய பக்குவக்தை சேதனுக்கு ஏற்படச் செய்பவன்

**694. ஓம் சோக விதாயகாய நம:**

இன்ப துன்ப சக்கரத்தில் அகப்பட்டு மீள முடியாது தவிக்கும் ஆத்மாவுக்கு அந்த சோகத்தை தருபவன் அவனே சரணமடைந்த ஜீவனுக்கு மாசுச: என துக்கத்தை விடும்படியாக ஆறுதளிப்பவனும் அவனே.

**695. ஓம் வைராக்ய விதாயகாய நம:**

இவ்வுலக இன்பம் யாவும் இறுதியில் துன்பமே தருபவை. நிலையான இன்பம் அவன் திருவடி அடைதலே. ஆக இப்பிறவி நோயின்று மீளவேண்டும் என்கிற அசையாத வைராக்கியத்தைக் தருபவனும் அவனே.

**696. ஓம் பவபீதி விதாயதாய நம:**

பயகிருத் பய நாசன என்கிற கிரமப்படி ஸம்ஸார பயத்தை ஜீவனுக்கு ஏற்படுத்துபவன் அவனே.

**697. ஓம் கர்ப்பஸ்ய அனுகூலத்தைக் அத்யவஸாயதாய நம:**

கர்பத்தில் வசிக்கும் சிசுவை மதுஸீதனன் கடாஷித்தால் ஜாயமான கடாக்ஷம் பெற்ற ஜீவன் மோக்ஷார்த்த சிந்தகனாகிறான். இந்த அனுகூலத்தை செய்பவனும் அவனே.

**698. ஓம் சுபவை ஜனனோஹபேத ஸதநேர்ஹாய நம:**

சுபாச்ரயத்துவமுள்ள எம்பெருமான் கடாக்ஷ விசேஷத்தால் பிறவி ஆட்படும் ஆத்மா மறுஜன்மமில்லாமல் சுபமான நிலைபெறுகிறது.

**699. ஓம் ஜனிபிரதாய நம:**

ஜீவனுக்கு பிறவியை உண்டாக்கும்பவன் அவனே

**700. ஓம் உத்தமாயு பிரதாய நம:**

மானுட ஆயுள் உத்தமமானதாக இருக்கும்படி அருள்பவன். ஜன்மம் ஸபலமாகிறது.



**701. ஓம் பிரமஹ்ம நிஷ்டானுக்ரஹக காரகாய நம:**

சேதனுடைய ஆத்மா பரமனிடம் லயிக்கும்படி அருள்பாலிக்கக்கூடிய கர்த்தா எம்பெருமான்.

**702. ஓம் ஸ்வதாஸ ஜன நிஸ்தீர்ண தத்வம்சஜன பரம்பராய நம:**

ஸ்ரீ மந் நாராயணனுக்கு மட்டுமே அடிமைப் பட்டவன் என்கிற பக்குவமுள்ள ஜீவனுடைய, பரம்பரையான ஜீவன்களை இதே கோப்திருத்வ வரணத்துடன் இருக்குமாறு ஸங்கல்பிபவன்.

**703. ஓம் ஸ்ரீ வைஷ்ணவோத் பாத திருத ஸ்வஸ்திய ஸ்ரீ மண்டலாய நம:**

விபன்யவோ ஜாக்ருவாகம் ஸஸ்யமிந்ததே என்கிற படி நித்யஸீஹஸூரிகள். முக்தர்கள் கைங்காரிய ஸ்ரீ பெற்று விளங்குமிடம், எம்பெருமானுக்கு உகந்த மண்டலமாகிறது.

**704. ஓம் ஆதர்வணேக்தைக சதமுள்ள தூர கிரியாபராய நம:**

அதர்வண வேதம் கூறியபடி நூற்றுக்கணக்கான பிறவிகள் எடுத்துக் களைத்த ஜீவனை பிறிவியினின்று விலக்கிக் காப்பாற்றுபன்.

**705. ஓம் தயாதி அஷ்டகுண தாத்ரே நம:**

கருணை முதலிய அஷ்ட குணங்களின் இருப்பிடமானவன்.

**706. ஓம் தத்வ ஸமஸ்கிருதி தாயதாய நம:**

உயர்ந்த கலாசாரத்தை ஏற்படுத்தி நிலைபெறச் செய்பவன்.

**707. ஓம் மேதாவிதாத்ரே நம**

மேதா என்கிற உயர்ந்த ஞானத்தை சேதனனுக்கு

அருள்பவன்.

**708. ஓம் சிரந்தா கிருதே நம:**

சிரத்தை, ஈடுபாடு என்கிற உயர்நிலை சேதனன் ஏற்று விளங்குமாறு செய்பவன்.

**709. ஓம் ஸௌஸ்தய தாய நம:**

மதிமயக்கம் இல்லாது ஸத்தான மார்க்கத்தில் எப்போதும் சுறுசுறுப்பாய் இருக்கும்விதமாக அருள்பவன்.

**710. ஓம் ஜாமிதாஹராய நம:**

பரசுராமன் தந்தை சொல் ஏற்று தனது தாய் ஜமதக்னி பத்னியை கொன்றார்.

**711. ஓம் விக்னநுதே நம:**

ஆத்மாவின் முன்னேற்றப் பாதையில் ஏற்படக்கூடிய விக்கினங்களை விரட்டியடிப்பவன்

**712. ஓம் விஜயாதாத்ரே நம:**

சேதனனுடைய நற்காரியங்களில் வெற்றி ஏற்படும் படியாக அருள்பாலிப்பவன்.

**713. ஓம் தேச காலானுகூல்ய கிருதே நம:**

சேதனுக்கு இடம், காலம், அவகாசம் இவை எப்போதும் அனுகூலமாக இருக்கும்படி செய்பவன்.

**714. ஓம் விநேத்ரே நம:**

வழிகாட்டி தலைவன் என்று பொருள்படக்கூடிய நிலையில் எம்பெருமான் சேதனனை தவறிப்போகமால் மோக்ஷ மார்க்கத்தில் வழி நடத்திச் செல்லும் தலைவன்.

**715. ஓம் ஸத்பதா நேத்ரே நம:**

நல்வழிக்கு நாயகன், அதாவது உய்யும் வழியில் சேதனனை நடத்திச் செல்பவன்.



**716. ஓம் தோஷஹ்ருதே நம:**

சேதனனிடம் இருக்கக்கூடிய தோஷங்களை தீயினில் தூசு போல செய்து உய்யும் படியாக செய்பவன்.

**717. ஓம் சுபதாய நம:**

சுபம் என்று கூறப்படுகிறது பாரலௌ கீக மோக்ஷம் என்கிற ஆத்மாவுக்கு சுபத்தைக் காட்டுகிறது. மோக்ஷம் அருளும் அதிகாரம் பரமனுக்கு மட்டுமே உண்டு.

**718. ஓம் ஸக்யே நம:**

சேதனன் நல்வழியில் சென்று நித்யானந்தம் பெற துணைவகை உடனிருந்து காப்பவன்.

**719. ஓம் ஹ்ரீதாய நம:**

எம்பெருமான் திருவடிகளை நமக்கு இலக்கு என்கிற நல்லெண்ணத்தை உண்டாக்குபவன்

**720. ஓம் பீதாய நம:**

பாப புண்ணிய சுழலில் சிக்கிய சேதனன் எம்பெருமான் திருவடி அடைய அருகமானவனா என்கிற பயத்தை உண்டு பண்ணுபவனும் அவனே.

**721. ஓம் ருசிதராய நம :**

பஹீனாம் ஜன்மானமாந்தே ஞானவான் மாம் பிரபத்யதே என்கிற கீதை வாக்குப்படி பிரகிருதி வாஸனையால் சோர்ந்த ஆத்மா எம்ருமான் திருவடியடைய வேண்டும் என்பதிலேயேருசி காண்கிறது. அவ்விதமானருசியைசேதனுக்கு உண்டாக்குபவன்.

**722. ஓம் விச்வாய நம:**

ஸகல கல்யாணகுண பரியூர்ணன் மஹாவிஷ்ணு என்பது பட்டர் திருவுள்ளம். எப்படியாயினும் ஸர்வாவஸ்த்த ஸக்ருத பிரபன்ன ஜனதா ஸம்ரக்ஷண

தீக்ஷிதனகிய எம்பெருமான் அடியேனையும் ஏற்பான் என்கிற நம்பிக்கையும் அவன்தான்.

**723. ஓம் விச்வ ஹிதேரதாய நம:**

பிரகிருதியிலுள்ள ஜீவனிடம், எப்போதும் ஹிதத்தையே நினைத்து இருப்பவன்.

**724. ஓம் பிரமாதவஹிருதே நம:**

முயற்ச்சியில் ஏகாக்ர ஈடுபாட்டுடன் இல்லாமல் அக்கரை குறைவாக வழுவினால் அந்நிலையினின்று சேதனனை காப்பாற்றுபவன்.

**725. ஓம் பிராப்த காரிணே நம:**

அந்தமில்லா பேரின்பநிலை என்கிற மோக்ஷானந்தம் பிராப்தமாக செய்பவன். தந்தருள்பவன்.

**726. ஓம் பிரத்யும்னாய நம:**

சதுர்வியூஹ மூரத்திகளில் பிரத்யும்னன் எம்பெருமானின் ஸ்வரூபம்.

**727. ஓம் பலவத்தராய நம:**

ஷாட்குண்ய பரிபூரிதனகிய எம்பெருமான் ஸர்வ வல்லமை படைத்த பலவானவன்.

**728. ஓம் ஸாங்க வேத ஸமா யோக்த்ரே நம:**

வேதங்கள் ஸகல அங்கங்களுடன் கூடி ஸமமாக எம்பெருமானின் ஸ்வரூபத்தில் அடங்கி இருக்கின்றன.

**729. ஓம் ஸர்வ சாஸ்த்ரார்த்த வித்திதாய நம:**

எல்லா வித சாஸ்திரங்களையும் வித்திட்டு நிர்மாணித்தருள்பவன்.

**730. ஓம் பிரம்சர் யாந்தராயக்ரேயாய நம:**



பிரம்பசர்ய நிஷ்டைக்கு ஏற்படக்கூடிய தடைகளை போக்குபவன்.

**731. ஓம் பிரியகிருதே நம:**

அன்பு என்னும் உயர்ந்த குணத்தை ஏற்படுத்துபவன்.

**732. ஓம் ஹித கிருதே நம:**

சேதனுருக்கு எப்போதும் இதத்தைச் செய்பவன்

**733. ஓம் பராய நம:**

கேசவாத் தத்பரம் நாஸ்தி என்கிறபடி ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பரமன் எம்பெருமான்.

**734. ஓம் சித்த சுத்தி பிரதாய நம:**

நம் எண்ணங்களை, மனதை எப்போதும் சுத்தமாக இருக்குமாறு செய்பவன். சுத்த ஸ்படிகம் போன்ற ஹயவதனன் நம் மனதில் குடியிருந்த சித்த சுத்தி ஏற்படுகிறது.

**735. ஓம் சின்னாக்ஷ சாபல்யாய நம:**

பரிமுகனின் காரிய வேகம் கணகளைப் பறித்து விடும் போன்றதான தன்மை உடையது.

**736. ஓம் க்ஷமா வஹாய நம:**

பொறுத்து மன்னித்தருளும் ஸ்பாவமுடைய காருணிகன்.

**737. ஓம் இந்திரியார்த்த ரதிச்சேத்ரே நம:**

பஞ்சேந்திரியங்களின் வயப்பட்டு ஸம்ஸார பந்தத்தில் உழலும் சேதனுக்கு, வைராக்யத்தை அருளி, இந்த இந்திரிய கட்டிலிருந்து விடுவிப்பவன்.

**738. ஓம் வித்யைக வ்யாஸவனாவஹாய நம:**

ஆத்ம வித்யை சேதனுக்கு ஏற்படும்படியாக செய்து இதை நிர்வகித்து வருபவன்.

**739. ஓம் ஆத்மானுகூல்ய ருசி கிருதே நம:**

ஆத்மாவுக்கு உய்யும் வகை அறிந்து, அதில் மனம் ஈடுபட்டு முன்னேறும்படியாக அருள்பாவிப்பவன்

**740. ஓம் அகிலார்த்தி விநாசகாய நம:**

ஆத்மா உய்வடையம செல்லக் கூடிய வழியில் ஏற்படும் ஆபத்துக்களை பரிஹரிப்பவன்.

**741. ஓம் தித்ர் ஹ்ருத் த்வராவேதினே நம:**

கிருஷ்ண யஜுர் வேதத்தை முதலில் உபதேசித்த தித்திரி மகரிஷியன், அந்தர்யாமியாய் அதை உபதேசித்தவன்.

**742. ஓம் குருஸதபக்தி தேஜனாய நம:**

ஆசார்யன் திருவடிகளில் மாறாத நன்றி விச்வாஸம், பக்தி இவைகள் சேதனுக்கு உண்டகும்படி செய்பவன்.

**743. ஓம் உரு ஸம்பந்த கடகாய நம:**

ஆத்ம, பரமாத்ம ஸம்பந்தம் விலைமதிப்பற்றது. இந்த ஸம்பந்தம் நிலைபெறும்படி செய்பவன்.

**744. ஓம் குரு விச்வாஸ வர்தனய நம:**

ஆசார்யனுடைய கருணா விசேஷத்தால் மோஷம் பெறுவது உறுதி, என்கிற அசையாத நம்பிக்கையை சேதனுக்கு பெருக்குபவர்.

**745. ஓம் குருபாஸன ஸந்தாத்ரே நம:**

ஆசார்யனுடைய திருவடிகளில் பிரதிபக்தி விச்வாஸத்துடன், எப்போதும் உபாஸிக்கும் படியாக செய்பவன்.

**746. ஓம் குருபிரேம பிரவர்த்தி தாய நம:**



ஆசார்யன் திருவடிகளில் மாறத ஈடுபாடு ஏற்படும் படியாக செய்பவன்.

**747. ஓம் ஆசார்யபிமதைர் யோக்த்ரே நம:**

ஆசார்ய புருஷர்களின் அபிமதங்கள் பொருந்தியவன்..

**748. ஓம் பஞ்ச ஸம்ஸ்கிருதி பாவனய நம:**

பஞ்ச ஸம்ஸ்காரம் என்பது ஸ்வாசார்யன் தாஸனை எம்பெருமானுக்கு அடையாளம் காட்டுவது. கர்மவச்யமான இந்த சரீரத்தை தர்ப்பையில் சேர்த்து ஹோமத்தில் விடுவர். திவ்யமான சரீரம் புனரபி மந்த்ர பூர்வமாக இருக்கும்படியாகும். அது பகவானின் சின்னங்களாகிய சங்கு சக்கரத்தை ஏற்க தகுத்ததாகும். பிறகு தாஸ்ய நாமம் என்று விஷ்ணுதாஸன் என்கிற அடையாளமாக ஆசாரியன் நாமகரணம் செய்வர். எம்பெருமானின் 12 திருநாமங்கள் ஊர்த்வ புண்ட்ரங்களாக, அவைகளுக்குரிய இடங்களின், திருமண் ஸ்ரீ சூர்ணம் மூலம் ஏற்படுத்துவார். மந்த்ர திரயங்கள், இதிகாஸங்கள் உபதேசமாகும். இவ்விதமாக ஐந்து ஸம்ஸ்கார பாவமாக இருப்பவன் பரமன்.

**749. ஓம் குருக்த விருத்தி நைஸ்சல்ய ஸந்தாத்ரே நம:**

ஆசார்யன் உபதேசித்தபடி நித்யானுஷ்டானங்கள் செய்யும்படியாக, அவ்வழியினின்று விலகாமல் சேதனை காப்பாற்றுபவன் எம்பெருமான்.

**750. ஓம் அவஹித ஸ்திதயே நம:**

எம்பெருமானையே ஸகலமுமாக வரித்தவனின் உள்ளுணர் வாக விளங்குபவன்.

**751. ஓம் ஆபன்னாகில ரக்ஷார்த்தாய நம:**

ஸகலவிதமான திருஷ்டாதிருஷ்ட ஆபத்துக்களிலிருந்து நம்மை காப்பவன்.

**752. ஓம் ஆசார்யக முபாச்ரிகதாய நம:**

'குருப்ய : தத்குருப்யஸ்ச நமோவாக மதீமஹே! வ்ருணீ மஹேச தராத்யௌ தம்பதி ஜகதாம்பதி!! என்கிற ச்லோகத்தில் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அனுபவிக்கும் படி ஆசார்ய பரம்பரையின் முதல் ஸ்தானம் வகிக்கக்கூடியவர் திவ்ய தம்பதிகளே.

**753. ஓம் சாஸ்த்ரபானி ப்ரதானகிருத பவமக்ன ஸமுத்தரணாய நம:**

ஸ்ரீ ஹயக்ரீவனுடைய திருக்கரத்தால் சாஸ்திரங்களை ஏந்தி, ஸம்ஸார ஸாகரத்திலிருந்து நம்மை கரை ஏற்றுகிறான்.

**754. ஓம் பாஞ்சகாலிக தர்ம நைஸ்சல்ய ப்ரதிபாதகாய நம:**

அனுதினமும் ஐந்து காலங்களில் அனுஷ்டிக்க வேண்டிய தர்மம், விலகிவிடாத விதமாக, எடுத்து காட்டுபவன்.

**755. ஓம் ஸ்வதாஸாராதனாத்யாத் சுத்த த்ரவ்ய ப்ரதாயகாய நம:**

நமது தாஸன் தமக்கு திருவாராதனம் செய்வதற்கான சுத்தமான பொருட்களை சேகரித்து தருபவன்.

**756. ஓம் நியாஸ வித்யா விநிர்வோர்ட்ரே நம:**

சரணாகதி சாஸ்திரத்தை சேதனன் உணரும்படியாக யாவருக்கும் பரப்புவன்.

**757. ஓம் நியஸ்தாத்ம பர ரக்ஷகாய நம:**

தமது திருவடிகளில் சரணகதி செய்த ப்ரபன்னனுடைய ஆத்ம பரத்தை ரக்ஷிப்பவன்.

**758. ஓம் ஸ்வகைங்கர்யைக ருசிதாய நம:**



தமக்கு கைங்கர்யம் செய்வதில் மட்டுமே ருசி ஏற்படும்படியாக சேதனுக்கு அருள்பாலிப்பவன்.

**759. ஓம் ஸ்வதாஸ்ய பிரேம வர்தனாய நம:**

தமது தாஸர்கள் திருவுள்ளத்தில் எப்போதும் அன்பு பெருகும்படியாக செய்பவன்.

**760. ஓம் ஆசார்யாத்தாகில திரவ்யர்ப்பண ரோசகாய நம:**

ஆசார்யனுக்கு கைங்காரியத்திற்காக பலவித பொருட்களை சேகரித்து, அர்ப்பணம் செய்யவேண்டும் என்கிற ருசியை ஏற்படுத்துபவன்.

**761. ஓம் ஆசார்ஸ்ய ஸ்வசிஷ்டியோஜ்ஜீவனைக் ருசிப்ரதாய நம:**

ஆசார்ய புருஷர்களின் திருவுள்ளத்தில், தமது சிஷ்யன் உஜ்ஜீவிக்க வேண்டுமே என்கிற ஒரே குறிக்கோள் ஏற்படும் படியாக செய்பவன்.

**762. ஓம் ஆகத்ய யோ ஜயதே நம:**

அடுத்த அடி என்ன, கர்தவ்யம் என்ன என்னும் விதமாக வழிவகைகள் செய்பவன்.

**763. ஓம் தாஸ ஹிதைக கிருதி ஜாகராய நம:**

தன்னடி சேர்ந்த சேதனுக்கு நன்மை செய்வது என்கிற காரியத்தில் எப்போதுமே ஜாகரூகனாய இருப்பவன்.

**764. ஓம் பிரம்மவித்யா ஸமாஸ்வாத ஸுஹிதாய நம:**

பிரம்மவித்தையில் மனம் ஈடுபட்டு இந்த வழியை ஆத்மாவின் உய்வுக்காக அனுசரிக்கும் சேதனுக்கு உதவுவதை விரதமாகக் கொண்டவன்.

**765. ஓம் ஸம்ஸ்கிருதயே நம:**

இவ்விதமான உயர்ந்த ஸம்ஸ்கிருதியைச் செய்பவன்.

**766. ஓம் ஸத்யதாரே வித்தாத்ரே நம:**

ஸத்யமான நிலை என்ன தேறவேண்டிய தத்துவம் என்ன எனது தெளிவதில் தாகத்தை உண்டு பண்ணுபவன்.

**767. ஓம் தருண்யாம்சவ புத்திதாய நம:**

ஒளிக் கிரணத்தைப் போன்ற புத்தி ஏற்படும்படி செய்பவன். இருளில் ஒரு கிரணம் ஒளி தருவது போல மதிமயக்கம் இருண்டால், ஒளி ஏற்பட்டு நல்வழி பட்டு உய்யச் செய்பவன்.

**768. ஓம் ஸபாம் வியாலீம் பிரத்யாயயதே நம:**

தத்வார்த்தங்களை, சாஸ்திரங்களை, இன்று பிரஸாம்ப்ரமாயிகமான விஷயங்கள் சர்ச்சை செய்யும் ஸபையில் ஞானிகளை தனக்கு உட்படுத்தி, ஊட்டுபவன். உதாரணமாக பகவத்ராமானுஜர் ஸ்ரீ பாஷ்யத்தை நிலை நாட்ட, பரிமுகன் அருள்பாவித்தான் அல்லவா ?

**769. ஓம் ஸர்வத்ர ஸம புத்திதாய நம:**

உண்மையான தத்துவத்தில் நிலையான புத்தி ஏற்படும்படி செய்பவன் பாஷண்ட மத தத்துவங்களில் மதி மயங்கவிடாமல் ஸாத்வீக சேதனனை ஸம்புத்தி நிலைப்பாடு அருள்பவன்.

**770.ஓம் ஸம்பாவித அசேஷ தோஷஹ்ருதே நம:**

சரணாகதன், பிரபன்னன் தேஹயாத்திரையில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தோஷங்களையும் அசேஷமாக பாக்கி இல்லாமல் தீர்த்துவைப்பவன்.

**771. ஓம் புனர் ந்யாஸ ரோசகாய நம:**

சரணகதன் தனது ஆச்ரமத்திற்கு விரோதமான



செய்கைகளில் ஈடுபட்டால் மனது கலங்கி மறுபடி சரணகாதி செய்ய எண்ணம் தோன்றக்கூடும்.

பிராய பிரபதனே பும்ஸாம் பௌன : புண்யம் நிவாரயந் ஹஸ்த ஸ்ரீரங்கபர்த்தூர்மாம் அவ்யாதபய முத்ரித..என ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ ரங்கநாதன் அபயமுத்திரை காட்டி மறுமுறை சரணகதி செய்து அதன் மகிமையை கெடுத்து விடாதே என்று கூறுவது போலுள்ளது.

**772. ஓம் மஹாவிச்வாஸ ஸந்தாத்ர ஸ்தைர்ய தாத்ரே நம:**

சரணாகதிக்குரிய ஐந்து அங்கங்களில் தப்பாமல் நிச்சயமாய் இருக்கவேண்டியது சணாகதனை எம்பெருமான் எந்நிலையிலும் கைவிடான் என்கிற முழுநம்பிக்கை. இது சேதனுக்கு விலகாமல், அவிச்சின்னமான நிலைப்பாடு நிலைத்து நிற்கும் படி. செல்பவன்.

**773. ஓம் மதாபஹாய நம:**

கர்மவச்யமான ஆத்மாவுக்கு ஏற்படக்கூடிய ஆறுவிதமான தீயகுணங்ளில் மதம் என்கிற திமிர் ஒன்று. சேதனனை அவ்வித தீய குணத்தினின்று காப்பாற்றுபவன்.

**774. ஓம் வாதவியாக்யா ஸ்வஸித்தாந்த ரக்ஷாஹேது ஸ்வமந்தரதாய நம:**

இவ்விதம் ஆத்ம, பரமாத்ம ஸம்பந்த்தம் பற்றிய ஸித்தாந்தம் வாது, சர்ச்சை இவைகளில் சிக்கும்போது

**766. ஓம் ஸத்யதாரே விதீதாத்ரே நம:**

ஸத்யமான நிலை என்ன தேறவேண்டிய தத்துவம் என்ன எனது தெளிவதில் தாகத்தை உண்டு பண்ணுபவன்.

**767. ஓம் தருண்யாம்சவ புத்திதாய நம:**

ஒளிக் கிரணத்தைப் போன்ற புத்தி ஏற்படும்படி செய்பவன். இருளில் ஒரு கிரணம் ஒளி தருவது போல மதிமயக்கம் இருண்டால், ஒளி ஏற்பட்டு நல்வழி பட்டு உய்யச் செய்பவன்.

**768. ஓம் ஸபாம் வியாலீம் ப்ரத்யாயயதே நம:**

தத்வார்த்தங்களை, சாஸ்திரங்களை, இன்று பிறஸாம்ப்ரமாயிகமான விஷயங்கள் சர்ச்சை செய்யும் ஸபையில் ஞானிகளை தனக்கு உட்படுத்தி, ஊட்டுபவன். உதாரணமாக பகவத்ராமானுஜர் ஸ்ரீ பாஷ்யத்தை நிலை நாட்ட, பரிமுகன் அருள்பாவித்தான் அல்லவா?

**769. ஓம் ஸர்வத்ர ஸம புத்திதாய நம:**

உண்மையான தத்துவத்தில் நிலையான புத்தி ஏற்படும்படி செய்பவன் பாஷண்ட மத தத்துவங்களில் மதி மயங்கவிடாமல் ஸாத்வீக சேதனனை ஸம்புத்தி நிலைப்பாடு அருள்பவன்.

**770.ஓம் ஸம்பாவித அசேஷ தோஷஹ்ருதே நம:**

சரணாகதன், பிரபன்னன் தேஹயாத்திரையில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தோஷங்களையும் அசேஷமாக பாக்கி இல்லாமல் தீர்த்துவைப்பவன்.

**771. ஓம் புனர் ந்யாஸ ரோசகாய நம:**

சரணகதன் தனது ஆச்ரமத்திற்கு விரோதமான



செய்கைகளில் ஈடுபட்டால் மனது கலங்கி மறுபடி சரணகாதி செய்ய எண்ணம் தோன்றக்கூடும்.

பிராய பிரபதனே பும்ஸாம் ப்ளான : புண்யம் நிவாரயந் ஹஸ்த ஸ்ரீரங்கபர்த்தூர்மாம் அவ்யாதபய முத்ரித..என ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ ரங்கநாதன் அபயமுத்திரை காட்டி மறுமுறை சரணகதி செய்து அதன் மகிமையை கெடுத்து விடாதே என்று கூறுவது போலுள்ளது.

**772. ஓம் மஹாவிச்வாஸ ஸந்தாத்ர ஸ்தைர்ய தாத்ரே நம:**

சரணாகதிக்குரிய ஐந்து அங்கங்களில் தப்பாமல் நிச்சயமாய் இருக்கவேண்டியது சணாகதனை எம்பெருமான் எந்நிலையிலும் கைவிடான் என்கிற முழுநம்பிக்கை. இது சேதனுக்கு விலகாமல், அவிச்சின்னமான நிலைப்பாடு நிலைத்து நிற்கும் படி. செல்பவன்.

**773. ஓம் மதாபஹாரய நம:**

கர்மவச்யமான ஆத்மாவுக்கு ஏற்படக்கூடிய ஆறுவிதமான தீயகுணங்களில் மதம் என்கிற திமிர் ஒன்று. சேதனனை அவ்வித தீய குணத்தினின்று காப்பாற்றுபவன்.

**774. ஓம் வாதவியாக்யா ஸ்வஸித்தாந்த ரக்ஷாஹேது ஸ்வமந்தரதாய நம:**

இவ்விதம் ஆத்ம, பரமாத்ம ஸம்பந்த்தம் பற்றிய ஸித்தாந்தம் வாது, சர்ச்சை இவைகளில் சிக்கும்போது

இந்த ஸித்தாந்தத்தைக் காப்பாற்றும் மந்திரத்தையும் அருள்பவன்.

**775. ஓம் ஸ்வமந்த்ரஜப ஸம்ஸித்த ஸங்காலாய நம:**

எம்பெருமானைப் பற்றிய மந்திர ஜபங்களில் அவை ஸித்த்திக்கச் செய்யும் விதத்தில், மிக வேகமுடையவன்.

**776. ஓம் கவிதோ தயாய நம:**

கவித்வம் என்பது ஒன்று ஏற்படுவது பரிமுகனின் பரமகிருபையால் தான்.

**777. ஓம் அதுஷ்ட குணவத் காவ்யபந்த வியாமுக்த சேதனாய நம:**

காவியங்கள் எழுதுவதில் அனுசிதமான எழுத்துகள், பிரமாணங்கள், குணங்கள் இவை ஏற்படாமல் சுவை மிகுந்ததாக இருக்கும்படி பிரேரணை தருபவன்.

**778. ஓம் வியங்கய பிரதான ரஸவத் கத்ய பத்யாதி நிர்மிதயே நம:**

ஹாஸ்ய ரஸம் நிரம்பிய ஊரநடை, கவிதை ஆகியவை உருவாகும் படி செய்பவன்.

**779. ஓம் ஸ்வபக்த ஸ்துதி ஸந்துஷ்டாய நம:**

தமது பக்தர்களால் துதிக்கப் பெற்று அதனால் திருப்தியடைபவன்.

**780. ஓம் பூயோ பக்தி பிரதாய காய நம:**

பக்தியின் ஆதர்ச நிலை, சேதனுக்கு ஸ்புரிக்கும்படியாக அருள்பவன்.

**781. ஓம் ஸாத்விக தியாக ஸம்பன்ன ஸத்கர்ம**



**கிருததிபிரியாய நம:**

ஸத்காரியங்களின் புண்ணிய பலன்கூட ஆத்மாவின்உய்விற்கு ஒரு விலங்காகிறது. ஆகையால் எந்த நல்ல காரியம் செய்யும்போதும் இந்த காரியத்தை , எம்பெருமானே நம் மூலம் செய்விக்கிறார்.இதன் பலன் அவனையே சேரும் என்கிற ஸாத்விக தியாகத்துடன் செய்தால் அதன் பலன் நம்மை ஒட்டுவதில்லை. இவ்விதம் செய்யப்படும் கைங்கரியத்தில் பிரியமுள்ளவன்.

**782. ஓம் நிரந்தரானுஸ்மரண நிஜதானாஸகதா தாஸயகிருதே நம:**

அவிச்சின்ன மாக ஸதாகாலமும் தம்மை தியானிக்கும் பக்தனுக்கு, தாஸனுக்கு எம்பெருமான் தாஸானு தாஸனாக விளங்குகிறான்.கொலுசினு வாரலா கொங்குபைரி என்னுர் ஸ்ரீ அன்மைய்யா.

**783. ஓம் நிஷ்காம வத்ஸலாய நம:**

சேதனனிடம் எம்பெருமான் காட்டும் வாத்ஸல்யம் ஸ்வபாமானது பிரதி எதுவும் எதிர்பார்த்து காட்டும் அன்பு அல்ல.

**784. ஓம் நைச்ய பாவ நிர்விஷ்டாய நம:**

சேதனன் தன்னை குறைத்து நைச்சியானுஸத்தானம் செய்வதில் விருப்பமில்லாதவன்

**785. ஓம் ஸர்வபூத பவத்பாவ தர்சிஜன ஸதாஸ்திதாய நம:**

எல்லா ஜீவனுள்ளும் ஸ்புரிக்கக் கூடிய எண்ணங்கள், பாவங்கள் இவைகளிலும் வசிப்பவன்

ஸர்வாந்தர்யாமியான பரமன் அறியாது ஒரு எண்ணம் கூட நமது இதயத்தில் ஏற்பட முடியாது. நம்மாழ்வார் திருவிண்ணகரப்பனை அனுபவித்தது போல விபரீதமான இரு நிலைகளிலும் கூட அவன் வசிக்கிறான்.

**786. ஓம் கரணதாய ஸாரூப்ய கல்யாண வஞ்ஜன ஸாதராய நம:**

மனோ, வாக்கு, காயம் என்று ஜீவனின் சரீரம் மூன்று காரணங்கள் கொண்டது. மனதில் ஒரு எண்ணம் கொண்ட வாக்கால் வேறு விதமாக தெரிவிப்பது தோஷம். மூன்று கரணங்களாலும் ஒத்த ஒரே கல்யாணகரமான எண்ணங்கள் கொள்ளப்பட்டு, ஜீவனால் ஆதரிக்கப்படுபவன்.

**787. ஓம் கைங்கர்ய காமி சேஷித்வ பாஜே நம:**

எம்பெருமான் திருவடிகளில் ஆத்ம பரத்தை ஒப்புவித்த சேதனுக்கு, கைங்கர்ய ஸ்ரீ ஒன்று தான் காம்யம், வேண்டுவது. அப்படிப்பட்ட ஷேபூதர்களைக் கொண்ட ஸர்வசேஷி பகவான்.

**788. ஓம் பரவ்யூஹாதி நிர்தோஷ சுபாச்ரய பரிக்ரஹாய நம:**

பரம் எனப்படும் ஸ்ரீ வைகுண்டத்தில் சதுர்வியூஹமாகிய திருப்பற்கடலில் பள்ளி கொண்ட ஸ்வரூபத்தில் தோஷமற்ற சுபாச்ரயத்வமுள்ளவன். அதாவது அந்தமில்லா பேரின்பமாகிய மோஷம் தோஷமற்றது அந்த நிலையை சேதனனுக்கு எம்பெருமான் பரவியூஹ நிலைகளில் அருள்கிறார்.



**789. ஓம் சந்திர மண்டல மத்யஸ்த ச்வேதாமபோருஹ விஷ்டராய நம:**

சந்திர மண்டலத்தின் நடுவில் சுத்த வெண்மையான ஸ்படிகம் போல எழுந்தருளியிருந்து, உலகங்களை காப்பவன்.

**790. ஓம் ஜ்யோத்ஸ்னயமானங்க ருசி நிர்தூதாந்தர் பஹிஸ் தமஸே நம:**

எம்பெருமானுடைய ஸ்வரூபம் கோடி சூர்ய பிரகாசமுடையது. அந்த பிரகாசமான ஒளியின் மகிமையால் சேதனுடைய உள்ளும், புறமும் இருக்கக்கூடிய இருள் மறைந்து விடுகிறது.

**791. ஓம் பாவ்யாய நம:**

எதிர்காலத்தில் தப்பாமல் நடக்கும் என்கிறவிதமான ஸங்கல்பத்தைச் செல்பவன். ஆதலாலேயே நடப்பது நடந்தே தீரும் என்கின்றனர்.

**792. ஓம் பத்ர பாவயித்ரே நம:**

ச்ரியா ச பத்ரயா ஜுஷ்டம் யஸ்தம் பத்ரம் நமாம்யஹம்.

என ருத்ரன் ந்ருஸிம்ஹனைக் கொண்டாடுகிறார். பத்ரம், க்ஷேமம் என்கிற பதத்திற்கே ப்ரதிபாத்யமானவன் சேதனுக்கு சேமத்தை அருள்பவன்.

**793. ஓம் பாரிஜாத வனாலயாய நம:**

ஜங்கம பாரிஜாதம் என்று ஸ்ரீ ராமனை ஸ்ரீ ஸ்வாமிதேசிகரின் அனுபவிக்கிறார். பாரிஜாத வனத்தையே வாஸஸ்தலமாகக் கொண்டவன் பரிமுகன்.

**794. ஓம் க்ஷீராப்தி மத்யமத்வீப் பாலகாய நம:**

திருப்பாற்கடல் நடுவில் இருக்கக்கூடிய தீவை ரக்ஷிப்பவன், பாதுகாப்பவன்.

**795. ஓம் பிரபிதாம ஹாய நம:**

பிதாமகன் எனப்படும் சதுர்முக பிரம்மாவுக்கே தகப்பனானவன் எம்பெருமானின் நாபிக்கமலதா உத்பதியானவரே பிரமன்.

**796. ஓம் நிரந்தர நமோவாக் சுத்தயாஜிஹ்கு தாச்ரயாய நம :**

எக்காலத்திலும், எம்பெருமானிடம் ஈடுபட்டு வாக்கு சுத்தம் இருப்பவருடைய இதயத்தை ஆச்ரயித்துஇருப்பவன்.

**797. ஓம் முக்தித ச்வேதமிருத்ரூப ச்வேத த்வீப விபாவனய நம:**

கர்ம பூமி எனப்படும் பாரத பிரதேசம் ச்வேத த்வீபம் எனப்படும். இதுதான் மோக்ஷ மருளக்கூடிய பூமி. இதை தன்னிருப்பிடமாகக் கொண்டவன்.

**798. ஓம் கருடாஹாரித ச்வேதமிருத்பூத யது பூதராய நம:**

காச்யப மஹரிஷியின் யாகத்திற்கு உதவிய வாலகில்ய மகரிஷிகளின் கோபத்திற்கு ஆளான இந்திரனை வெல்ல ரிஷிகளின் விருப்பத்தால் அவதரித்தவர் கருத்மான். அவரால் தாக்கப்பட்ட இந்த பூதலததைத் தாங்குபவன் ஸ்ரீ ஹயக்ரீவன்.

**799. ஓம் பத்ராச்வ வர்ஷநிலயாய நம:**

பத்ராச்வ வர்ஷம் என்பது இமயமலைக்கு அப்பால் (தற்போதைய சீன எல்லை) உள்ளது. அங்கு ஸ்ரீ



ஹயக்ரீவன் வாசம் புரிகிறான்.

**800. ஓம் பயஹாரிணே நம:**

லௌகீக, பாரலௌகீக் பயங்களை சேதனனுக்கு போக்கி யருள்பவன்

**801. ஓம் சுபாச்ரயாய நம:**

ஆத்மாவுக்கு சுபம் என்பது இழிதல் இல்லாத மோக்ஷனந்தம் இந்த அந்தமில்லா பேரின்ப சுபத்தைப்பெற சேதனன் ஆச்ரயிக்ரத்தக்கவன பரம் பொருளாகிய பரிமுகன் மற்றொருவரால் இந்த சுபத்தை அளிக்க முடியாது. சுபாச்ரயத்வம் பரம்பொருளாகிய ஸ்ரீ மந் நாராயணனுக்கு மட்டும் தான் உண்டு.

**802. ஓம் பத்ர ஸ்ரீ வத்ஸ ஹாராட்யாய நம:**

எம்பெருமான் திருமார்பில் ஸ்ரீ வத்ஸம் என்ற மரு பிரகாசிக்கும். இதனால் சோபிப்பவன் ஸ்ரீ ஹரி.

**803. ஓம் பஞ்சராத்ர பிரவர்தனாய நம:**

ஸ்ரீ பாஞ்ச ராத்ரம் என்கிற ஆகம சாஸ்திரத்தை ஐந்து இரவுகளில் உபதேசித்தவன். இன்றைய முக்கியமான பலதிருக்கோயில்கள் இந்த ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆராதிக்கப்பட்டு வருகின்றன.

**804. ஓம் பக்தாத்ம பாவ பவனாய நம:**

தமது பக்தர்களின் இதயத்தில் தோன்றும் உயர்ந்த ஸாத்வீகமான பாவங்களை தாம் ஏற்று அவைகளின் இருப்பிடமாக விளங்குபவன்.

**805. ஓம் ஹார்தாய நம:**

ஸகல ஜீவராசிகளின் ஆத்மாவில் பரமாத்ம

அந்தராத்மா வாக விளங்குகிருன். இந்நிலை ஹார்தம் எனப்படும்.

**806. ஓம் அங்குஷ்ட பிரமாணவதே நம :**

எம்பெருமான் அனுவாகவும், மஹத்தானதாகவும் ஒரே காலத்தில் இருக்கக் கூடியவன். அங்குஷ்டம் என்பது கட்டைவிரல் இந்த அளவுக்கும் ஸ்வரூபம் கொள்வான்.

**807. ஓம் ஸ்வதாஸ கிருத்யா கிருத்யஸ்பதீ கிருத தன் மித்ராரயே நம :**

தமது திருவடிகளை ஆச்ரயித்துள்ள சேதனன் செய்ய வேண்டியவைகளை செய்யாமல், கூடாதவைகளை செய்தும் அபசாரப்பட்டாலும் அவைகளை பாராட்டாதவன்.

**808. ஓம் பிராணோத்கிராமணாய நம :**

உயிரை ஜீவனுக்கு ஏற்படுத்தி வைப்பவன் பிராணன் என்கிற உயிரானவன்.

**809. ஓம் ஊரிகீருத பிராரப்த லோபனாய நம ;**

எம்பெருமான் திருவடிகளைப் பற்றும் சேதனுக்கு போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் துசாகும் என்பது போல பிராரப்த பாவங்களை மிகப் பெரிய அளவில் உள்ளதை கழித்து விடுபவன்.

**810. ஓம் லகு சிக்ஷா க்ஷபித சேஷபாபாய நம :**

சாஸ்திரங்களை பூரணமாக அறிந்து கொள்ளாத அல்ப ச்ருதர்கள் அறியாமையால் செய்து வரும் பாவங்களை அசேஷமாக பாக்கியின்றி போக்கி விடுபவன். அதற்காக தரப்படும்தண்டனைகள் ஏனையோரை விட மிக



லகுவானதாக இருப்பவை.

**811. ஓம் திரிஸ்தூண க்ஷேபா பூர்வக ஸூக்ஷ்ம வபுஸ்ருஜே நம :**

ஆதிவாஹிக, ஆதிதைவிக, ஆதிபௌதிக மூன்றுவிததுன்பங்கள் ஜீவனுக்கு ஏற்படும் முன், அதற்கு வித்திடுபவன்.

**812. ஓம் நிரங்குச கிருபா பூராய நம :**

ஜீவனிடத்தில் தடையின்றி கருணை காண்பித்து அவனை உய்விப்பவன். அவன் கருணை பரிபூரிதன்.

**813. ஓம் நித்யகல்யாண காரகாய நம :**

அந்தமில்லா பேரின்பமாகிய நித்யஸிரீத்வமும், இவ்வுலகில் உள்ளவரை கைங்கரிய ஸ்ரீயும், ஜீவனுக்கு நித்ய கல்யாணம் இவ்வித அனுக்ரஹத்தைச் செய்பவன்.

**814. ஓம் மூர்தன்யாட்யோதஞ்சித ஸ்வதாஸாய நம :**

இந்த நிலையற்ற சரீரத்தினின்று ஆத்மா பிரியும் போது 101 வது மூர்தன்ய நாடி என்கிற நாடி வழியாகக் கிளம்பி நிரந்தரமாக எம்பெருமானின் தாஸ்த்வத்தை பெறும் படியாகச் செய்பவன்

**815. ஓம் உபாஸக பிராரப்த கர்மமாத்ரானு பாவனய நம:**

எம்பெருமான் திருவடிகளை மோக்ஷத்திற்காகப் பற்றிய ஆத்மாவுக்கு, இனிவரப்போகும் ஜன்மங்களுக்கான கர்ம மூட்டையை அழித்து, இந்த ஜன்மம் முடியும்வரை

விதிக்கப்பட்ட பிராப்த கர்மபலன்களை மட்டும் நிர்வகிப்பவன்.

**816. ஓம் ஸர்வ பிராரப்த தேஹாந்த நிஷ்டாந்திம ஸ்மரணாய நம:**

பிராரப்த கர்ம முடிவில் ஜீவன் இந்த சரிரத்தை விட்டு கிளம்பும் ஸமயம் அந்திம ஸ்மிருதியைத் தந்து அருள்பவன்.

**817. ஓம் பக்த பிரபன்னயம திருஷ்டய பாவகாய நம:**

தமது திருவடிகளை ஆச்ரயித்த ஜீவன் பிரகிருதியை விட்டு கிளம்பும் ஸமயம் குளிர கடாக்ஷிக்கும் எண்ணம் கொண்டவன்.

**818. ஓம் திவ்ய தேஹ பிரதாய நம:**

அந்த நித்யமான ஜீவனுக்கு சுத்த ஸத்வமான சரீரத்தை தந்தருள்பவன்.

**819. ஓம் மோக்ஷ பிரவிருத்தானாம் ஸுர்ய த்வாரயதே நம:**

மோக்ஷம் பெறும் ஆத்மா வைகுந்தத்தை அடையும் போது வாயில் ஸுர்ய பிரகாச மானதாக இருக்கும்.

**820.ஓம் ஆதிவாஹிக ஸத்காரைர் த்வனி மானயதே நம:**

வைதிகமான கர்மாக்களை முதற்கடமையாக வகித்து நிர்வகிக்கும் ஸாதுக்களை எப்போதும் மதிப்பவன்.

**821. ஓம் ஸர்வ கர்த்ரு புஜவத் பிராபிருதானி பிரதாபயதே நம:**



ஸத்கரமாக்களைச் செய்யும் கர்த்தாவுக்கு அதற்குரிய பலன்களைத் தட்டாமல் அளிப்பவன்

**822. ஓம் துரந்த மாயாகாந்தார த்ருதலங்கன ஹேதவே நம:**

உண்மைக்கு மாறுபட்ட கருத்துகளில் மயங்கி சிக்கித்தவிக்கும் சேதனனுக்கு, இதனின்று மீண்டு தெளிவடைய காரணமானவன்.

**823. ஓம் ஸ்வாயத் ஸ்ஃதர்ச விவித வித்யுந்த்வ நேத்ரே நம:**

விதி பூர்வகமாக, வழிதவறி போய்விடாது. அதனின் ஆத்மா மோக்ஷமார்கத்தில், செல்லும் படியாக நல்வழி காட்டி கடாக்ஷித்தருள்பவன்.

**824. ஓம் ஸீமாந்த ஸிந்துபூத விரஜோத்தார காய நம:**

ஆத்மாவின் வைகுண்ட யாத்திரை முடிவில் விரஜை என்கிற திவ்ய நதி இருக்கிறது. அதில் தோன்றக்கூடிய தாரகையாக எம்பெருமான், படகிற்கு கலங்கரை விளக்கமாக வழிகாட்டியருள்பவன்.

**825. ஓம் வசினே நம:**

தமது ஸ்ரீ கௌஸ்து பத்தினின்று தோன்றிய ஜீவனை தாம் வசப்படுத்துபவ்ன். அவன் சேதனனுக்கு மட்டுமே வசப்பட்டவன்.

**826. ஓம் அமானவஸ்ய தேவஸ்ய கரம் சிரஸிதாரயதே நம:**

விரஜையில் தீராடிய சுத்த ஸத்வ சரீரம் தந்து

எம்பெருமான், ஆத்மாவை கைலாகு கொடுத்து தம்மிடம் சேர அழைத்துச் செல்பவன்.

**827. ஓம் அனஜுதி வாஸனா தூதகாய நம:**

எண்ணற்ற கர்மவச்யமான பிறவிகள் ஏற்று பிரக்ருதி வாஸனை மிகுந்த ஆத்மாவுக்கு அதை போக்கடிப்பவன்..

**828. ஓம் வைகுண்ட ஸாலோக்யதாய நம:**

ஸ்ரீ வைகுண்டத்தை சேதனுக்கு வாசம் செய்யும் படி அருள்பவன்.

**829. ஓம் அஹேய மங்களோதார தேஹேன ஸாரூப்யதாய நம:**

எம்பெருமான் தன்னைப்போலவே, ஹேயகுணங்களற்ற சுத்தமான சரீரத்தைத், சேதனனுக்கு தந்தருள்வான்.

**830. ஓம் ஸ்ரீ ஜீஷ்ட ஸ்கைகாந்த பரமபத பிராபகாய நம:**

நித்யசூரிகளால் சூழப்பட்ட ஸீகபோக பரமபதத்தை சேதனுக்கு தந்தருள்பவன்.

**831. ஓம் அரண்யாக்யாமிருதார்ணவ தர்காயை நம:**

இனியும் விளம்பமில்லாமல், சீக்கிரமே அந்த அமிருதம் போன்ற சாச்வதமான வாழுமிடத்தை காட்டியருள்பவன்.

**832. ஓம் சிரம நாசனய நம:**

எண்ணற்ற ஜன்மங்கள் எடுத்துக்களைத்த ஆத்மாவிற்கு ஏற்பட்ட சோர்வை போக்கியருள்பவன்.

**833. ஓம் திவ்யோத்யான ஸரோவாபி ஸரின்மணிபர்வத பிராபகாய நம:**



ஸ்ரீ வைகுந்தத்தில் சேதனன் எம்பெருமானை தியானிக்க உத்யானவனம், நீர்நிலை, மணிபர்வதம், இத்யாதிகள் நிறைந்த அமைதியான சூழ்நிலை பிராப்யமாகும்படி செய்பவன்.

**834. ஓம் ஐரம்பதாம்பருதம் ஸர ஸங்கமனாய நம:**

ஐரம்மதீயம் என்கிற திவ்ய ஸரஸ் ஸ்ரீ வைகுந்தத்தில் உண்டு. அந்த நீர்நிலை சேதனுக்குத் கிட்டும்படி செய்பவன்.

**835. ஓம் ஸ்ப பிரம்மணே நம:**

சிங்கவேள் குன்றத்தானை மங்களவாசாஸனம் செய்யும் திருமங்கை மன்னன், "செங்கநாளீட்டிறைஞ்சும் சிங்கவேள் குன்றமே" என்கிறார். யானையின் தந்தம் சேதனனுடைய ஆத்மாவுக்கு பிரதீகம், ஆசாரியனகிய சிங்கம் யானையை அடக்கி எம்பெருமானிடம் சேர்ப்பிக்கின்றதாம். யானை கர்ஜித்து தான் உய் வடைந்ததை கொண்டாடுகிறது. இந்த யானையின் பிளிறல் வெற்றியின் சின்னமாக ஒலிக்கச்செய்பவன் பரமன்.

**836. ஓம் ஸோம ஸவனச்வத்த பிராபகாய நம:**

களைத்த ஆத்மாவுக்கு திவ்யரஸமான பரமபதம் கிடைக்குமாறு செல்பவன்.

**837. ஓம் விஷ்டரச்ரவஸே நம:**

ஸ்ரீ வைகுந்தத்தில் தலைமை ஸ்தானத்தில் வீற்றிருந்த அனந்த கருட விஷ்வக்ஸேனதி இதர நித்ய ஸூரிகள் சூழ ஸிமஹ்ஸனாதியதியானவன்.

**838. ஓம் திவ்யாப்ஸர ஸமானீத ப்ரஹ்மாலங்கார தாயகாய நம:**

இழிதல் இல்லாத மோக்ஷானந்தம் பெறப்போகும் ஆத்மாவுக்கு திவ்ய அப்ஸார ஸ்வரூபத்திற்கு நிகரான பிரம்ம அலங்கார ரூபத்தையும் தந்தருள்பவன்..

**839. ஓம் திவ்ய வாஸோஞ்சன சௌரப மால்ய கிருத பஹுமானய நம:**

ஸ்ரீ வைகுந்தத்திற்கு வரும் திவ்ய சரீரம் பெற்ற சேதனுக்கு எம்பெருமான் திவ்ய பரிமள கந்தமுள்ள மாலை சாற்றி கௌரவிக்கிறான்.

**840. ஓம் ஸ்வாயோத்யா நகர ஸாதர பிரவேசகாய நம:**

ஆத்மா தன் ஸொத்த இருப்பிடத்திற்கு மரியாதையுடன் நுழையுமாறு செய்பவன்.

**841. ஓம் தாஸ விக்ரஹஸ்தாபித திவ்யரஸ கந்தாலோகாய நம:**

இவ்விதம் வைகுந்தம் வரும் சேதனனை தாஸர்கள் கோஷ்டியில் ஸ்தாபித்து அந்த திவ்யரஸத்தை ஆனந்தமாக அனுபவிப்பவன்.

**842. ஓம் ஸ்வதாஸ ஸுரிவர்க பஹுமானனாய நம**

தமது தாஸர்கள் நித்யாஸுரிகள் குழாமாக இருந்து அவர்களால் பஹு மானிக்கப்படுபவன்

**843. ஓம் ஸுரிஸேவோதிதானந்த நைச்ய ஸ்வஜனாதிசாய காய நம:**

தமதனைத்தும் அவர்தமக்கு வழங்கியும், தாம் மிக விளங்கும் அமைவுடைய அருளாளர். என் ஸ்ரீஸ்வாமி



கொண்டாடும்விதமாக ஸாரூப்யம், ஸாலோகம் எல்லாம் நித்யஸிரிகளுக்கு வழங்கினாலும், மோக்ஷம் தரும் அதிகாரம் மட்டும் கொண்டு, மிக விளங்கும் நிலையில் இருப்பவன்.

**844. ஓம் நமோ வீப்ஸா காரகய நம:**

தொடர்ந்து நித்யஸுரிகளால் நமஸ்கரிக்கப்பட்டு மிக விளங்குபவன்.

**845. ஓம் ப்ரஹ்வ கிருதாஞ்சலிப்தவா பாதகாய நம:**

அஞ்சலி பத்தர்களாய் நித்யஸுளிகள் எப்போதும் கொண்டாடக்கூடிய திருவடிகளை உடையவன்.

**846. ஓம் பிராகாராதி பிரமை காரகாய நம:**

திருமாமணி மண்டபத்தை ஒட்டிய பிராகாரங்களில், நித்யஸுரிகள் எப்போதும் பிரணாமம் செய்தவண்ணம இருப்பர்.

**847. ஓம் இந்தர பிரஜாபதி துவாரபால பிராபகாய நம:**

இந்திராதி தேவர்கள், பிரஜாபதி, துவாரபாலகர்கள் இவர்களால் வணங்கப்படுபவன். இவர்களின் தலைவானக விளங்குபவன்.

**848. ஓம் மாலிகாஞ்சித மஹாராஜ வீதி, மத்யஸ்தாபகாய நம:**

மாலைகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்ப பெற்ற ஸ்தலத்தை ஸ்தாபித்து போக்யனாக இருப்பவன்.

**849. ஓம் ஸ்ரீ வைகுண்ட புரந்த்ரீகாரித நாநாஸத்காராய நம:**

ஸ்ரீ வைகுண்டம் என்கிற சிறந்த கோட்டையில் நித்யசூரிகள் கைங்கர்ய ஸ்ரீ மிக்கவர்களாய் ஸேவை செய்ய அவர்களால் சூழப்பட்டவன்.

**850. ஓம் திவ்ய விமான பிராப காய நம:**

ஸ்ரீ வைகுந்தத்தில் எம்பெருமான் ஸ்ரீ பூமி நீளா நாயகனக வீற்றிருக்கும் திருமாமணி மண்டபத்தில் திவ்யமான விமானம் இருக்க பொருந்தியவன்.

**851. ஓம் பிரஹ்ம காந்தி பூரகாய நம:**

பரபிரஹ்ம ஸ்வரூபமான பரிமுகன் அதற்குரிய திவ்ய தேஜஸுடன் பிரகாசமான விளங்குபவன்.

**852. ஓம் மஹாநந்தாத் மகாய நம:**

துக்கக் கலப்பில்லாத தூய தான ஆனந்தம் பரிபூரிதனக இருப்பவன். ஆனந்தோ பிரம்மே திவ்யஜானத் என்கிறது ஸ்ருதி.

**853. ஓம் ஸ்ரீமத் மணிமண்டப பிராபகாய நம:**

ஸ்ரீ வைகுந்தத்தில் தாம் வீற்றிருக்க திருமாமணி மண்டபம் உடைத்தானவன்.

**854. ஓம் குமுத சண்டாதி பிராபித விஷ்வக்ஸேனந்திகாய நம:**

விஷ்வக்ஸேனன், குமுத சண்டாதி பாலகர்களுடன் சூழுப்பட்டு பரமபதத்தில் மிக விளங்குபவன்.

**855. ஓம் ஸேனேச சோதிதாஸ்தான நாயகாய நம:**

விஷ்வக்ஸேனர் பரமபத்தில் சேனைத்தலைவர் பதவி வகிப்பவர். அவர் கட்டுப்பாட்டின் கீழ் விளங்கும் பரமபதத்தின் நாயகன் பரிமுகன்.



**856. ஓம் ஹேதி நாயகாய நம:**

எம்பெருமானின் ஸங்கல்ப ஸ்வரூபமான சக்கரத்தாழ்வானின் நாயகன்.

**857. ஓம் திவ்யாஸ்தான பிராபகாய நம:**

இவ்வரான திவ்ய இருப்பிடத்தை சேதனக்குக் கிட்டும்படி செய்பவன்.

**858. ஓம் வைநதேய பிராணமயித்ரே நம:**

கருடபகவான், பெரிய திருவடிக்கு உயிரைப் போன்றவன் பரமன்

**859. ஓம் ஸ்ரீ ஸுந்தர ஸுரிந்தர திவ்ய பங்க்தி பிராணமயித்ரே நம:**

இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாரமெல்லாம் அழகாக வரிசைகளில் இருந்துகொண்டு அவர்களின் உயிரைப்போன்று விளங்குபவன் ஸர்வாந்தர்யாமியல்லவா?

**860.ஓம் பாஸ்வராஸன பர்யங்க பிராபகாய நம:**

இவைகளை பறிக்கக்கூடிய பிரகாசமான ஆஸனத்தில் வீற்றிருப்பவன்.

**861. ஓம் பர்யங்க வித்யா ஸம்ஸத்த ஸர்வ வைபவாய நம:**

யோகஸித்தி, தியானம் இவற்றிற்காக முழங்கால்களை மடித்து யோக முறையில் பர்யங்கமாகும். ஆசார்ய பரம்பரையின் முதல் ஸ்தானம் வகிக்கும் பரமன், பத்மாஸன்மிட்டு வைபவமாக பரமபதத்தில் விளங்குகிறார்.

**862. ஓம் ஸ்ரீ காந்தேச ஸ்வாத்ம தர்சகாய நம:**

பெரியபிராட்டிக்கு உகந்தவனாக அவளுனுக்கு வயப்பட்டு தரிசனம் தந்தருள்பவன்.

**863. ஓம் சேதை கரஷசே பிரணாமனாய நம:**

ஆதிசேனுடன், ஏனைய சேஷ பூதர்களும் நித்யஸூரிகளாய், அங்கு அவர்களால் வணங்கப்படுபவன்.

**864. ஓம் அனந்தாக்ஷித்வி ஸாஹஸ்ரத்வி ஸாதராலோக பாதரதா பிராபகாய நம:**

ஆயிரம் தலைகளுள்ள ஆதிசேன் தமது இரண்டாயிரம் கண்களால் மரியாதையுடன் பார்க்கப்பட்டு அவ்வித கௌரவத்திற்கு பாத்திரனாய் விளங்குபவன்..

**865. ஓம் ஸூகுமார யுவாகாராய நம:**

என்னும் மாறாத இளமை அழகுடன் விளங்குபவன்.

**866. ஓம் அந்வஸ் சின்னந்தா காரித கிலிகிஞ்சிதாய நம:**

என்றும் குறையாத தடையற்ற எப்போதும் பிரவகிக்கக் கூடியதான ஆனந்தத்திற்கு காரண பூதனானவன்.

**867. ஓம் தாஸ கிருத அஸங்க்ய பிரணமனோதான பிரஸன்ன ஹ்ருதயாய நம:**

நித்யஸிர்களாய் எம்பெருமானிடம் கைங்கர்ய ஸ்ரீ பெற்ற தானங்கள் எண்ணற்ற விருப்பங்கள் கொண்டாலும் அவைகளை பிரஸன்னமாக நிறைவேற்றி வைப்பவன்.

**868. ஓம் ஸ்ரீ ஸஹித ஸ்வபிராப்த ஜீவபுத்ர பிரஹர் ஷகாய நம:**



எம்பெருமான் ஸ்ரீ கௌஸ்துபத்தினின்று உத்பத்தியாகிய ஜீவாத்மாக்கள் யாவும், மறுபடி பிள்ளைகள் பெற்றவரைச் சென்று சேர்வது போல, பிராட்டியுடன் கூடிய பரமனை அடைவதால், மனம் மகிழ்ந்து, அந்த நிலையை கொண்டாடுபவன்.

**869. ஓம் ஸ்வ முகாம்போதி மஜ்ஜன காரிணே நம:**

தமது அழகிய திருமுக மண்டலம் என்னும் எல்லையற்ற கடலில் தாஸர்களை திளைக்கச் செய்பவன்.

**870. ஓம் ஸ்வகீர்த்தன ருசி பிரதாய நம:**

தாஸர்கள் தம்மை ஸ்தோத்திரம் பண்ணுவதில் ஆசையுடையவர்களாகச் செய்பவன்.

**871. ஓம் தயா கங்காப்லாவந் கிருதார்த்ததா பாதகாய நம:**

நித்யஸூரிகள் எம்பெருமானின் கருணை எனும் கங்கை பிரவாகத்தில் முழுகி நன்றியுடையவர்களாய் எம்பெருமான் திருவடிகளை போற்றி வருகின்றனர்.

**872. ஓம் லக்ஷ்ம்யாஸஹ பர்யங்காரோஹண ப்ரஹ்வலாலனய நம:**

திருமாமணி மண்டபத்தில் பெரிய பிராட்டியாகிய லக்ஷ்மியுடன் கூடியவனாய் எழுந்தருளியிருந்து பிராட்டியால் கொண்டாடப்படுபவன்.

**873. ஓம் கஸ்த்வமிதி ப்ருஸ்சதே நம:**

ஜீவாத்மா பிரகிருதி வாஸனையினின்று மீண்டு பரமபதம் புக, கஸ்த்வம் நீயார் என்வினவப்பட அடியேன் தாஸன் என பதிலிறுத்து நித்யஸூரிகளின் குழாமில் புகுந்து கைங்கர்ய ஸ்ரீ பெறுகிறான்.

**874. ஓம் தாஸோஸ்மி யூக்தி விஸ்மிதாய நம :**

ஜீவன் தன்னை தாஸோஸ்மி என் அடையாளம் காட்ட எம்பெருமான் ஆச்சரியப்படுகிறான்.

**875. ஓம் அபிஜதகத்வ பிரகாரோக்தி விஸ்மிதாய நம :**

பரமபதம் சேர்ந்த பிறகு பிராட்டி எம்பெருமானுடைய அந்தஸ்திற்கு எவ்விதத்திலும் மாறுபாடோ, குறைபாடோ இல்லாத விதமாக போக்யமாக அனுபூதி சேதனுக்கு ஏற்பட அதைக்கண்டு பரமன் மகிழ்ச்சியுறுகிறான்.

**876. ஓம் வாசா ஸ்வாச்ரிதவத் பவதே நம :**

திவ்யஸூரிகள் இவ்விதம் உனக்கே நாம் "ஆட் செய்வோம்" என்கிற விதமாக தாஸோஸ்மி என்று கூடியிருக்க வைபமுள்ளவன்.

**877.ஓம் உபாஸக திருச்ய ஹயாஸ்ய ரூபாய நம :**

தம்மை உபாஸிக்கும் பக்தர்கால் திரிசிக்கும் ஸ்வரூபம் , ஹயாஸ்யன் என்கிற படி ஸ்ரீ ஹயவதன னுடையது.

**878. ஓம் வாஸுதேவாய நம :**

வஸுதேவருடைய புத்திரன் வாஸுதேவன் எனப்படுபவன் வாகீசாக்யா வாஸுதேவஸ்ய மூர்த்தி எனஸ்ரீ தேசிகனால் ஸ்வாமி நேரிடையாக நேரில் மங்களாசாஸனம் செய்யப்பட்டவன் பரவாஸுதேவன்.

**879. ஓம் வைகுண்ட நாயகாய நம :**

ஸ்ரீ வைகுந்தத்தின் தலைவன், நாயகன் ஆகியவன்.

**880. ஓம் யதா ததைவ ஸ்வரூப பிரகாசகாய நம :**

தேவம் அனந்த ரூபம் என்கிற வாக்குபடி அனந்தமான ஸ்வரூபங்களுள்ள எம்பெருமான் அவரவர்



மனோபாவத்திற்கு தகுந்தபடி ஸ்வரூபம் ஏற்று ஸேவை ஸாதிப்பவன்.

**881. ஓம் ஜகந்மோஹன மூர்த்தயே நம :**

உலகத்தையெல்லாம் வசீகரித்து மோகிக்கச் செய்யும் திவ்யமங்களா மூர்த்தி ஸ்ரீ ஹயக்ரீவன்.

**882. ஓம் த்விமூர்த்தி பிரகாசகாய நம :**

**883. பஹு மூர்த்தி பிரகாசகாய நம**

இரு மூர்த்திகளாகவும், அனேகானேக மூர்த்திகளாகவும் தான ஒருவனே பிரகாசிப்பவன்.

**884. ஓம் ஸ்வதோயுகபத் ஸர்வ ஸாக்ஷாத்கார காரிணே நம :**

யுகம் தோறும் நடைபெற்ற, நடைபெறக்கூடிய ஸகலா நிகழ்ச்சிகளையும், எப்போதும் பார்த்து கொண்டு அவைகளின் காரண கர்த்தாவாகவும் இருப்பவன்.

**885. ஓம் காவ்ய தேசகாய நம :**

கவி பாடும் ஸமர்த்தர்களின் முதன்மையானவன்.

**886. ஓம் முக்தானாம் ஆதிம : கவயே நம :**

பரமபதத்தில் நித்யஸூரிகளின் பரமனின் குண கானம் செய்கின்றனர். இவ்வித கவித்துவத்தின் மூல ஸ்ரோதம், ஆதிகவியானவன்.

**887. ஓம் துவாதசாக்ஷர நிஷ்ட ஸாந்தானிக லோக தாயினே நம :**

பரமபதத்திற்கு அடுத்தாக கீழ் ஒரு லோகம் உண்டு. அதற்கு ஸாந்தானிக லோகம் என்பர். அங்குள்ளவர்கள் காலகிரமத்தில் பிரயாசையின்றி பிறகு ஸ்ரீ வைகுந்தம் புகுவர். துவாதசாக்ஷர மந்திரஸித்தி கூடிய

மஹனீயர்களுக்கு இவ்வித ஸாந்தாரனிக லோகம் தந்தருள்பவன்.

**888. ஓம் அஷ்டாக்ஷர நிஷ்டகார்ய வைகுண்டதாயினே நம:**

திருமந்திரத்தை ஜபித்து ஸித்திபெற்றவர்க்கு ஸ்ரீ வைகுந்தம் அருள்பவன்.

**889. ஓம் சரணாகதி நிஷ்ட மூக்ய வைகுண்ட தாயினே நம:**

புகுலொன்றில்லா அடியார் தமது சரண் அடைய அத்தகைய மஹனீயர்க்கு தட்டாது வைகுந்தபதவி அருள்பவர்.

**890. ஓம் ஸ்வமந்திர ராஜு நிஷ்டததிசய தாயினே நம:**

'மந்த்ர ராஜம்' எனப்படும் தமது மந்திர ரஹஸ்யத்தை அனுஸந்தித்து வரும் நிஷ்டை உடையோர்க்கு அதிசயமான ஸித்தியை தந்தருள்பவன்.

**891. ஓம் ஸ்ரீ காடோப கூடாய நம;**

எம்பெருமானை ஆழம் காண்பதென்பது ஆகாத காரியம் எவ்வளவுதான் ஆழங்கால்பட்டு அவன் குணநுபவத்தில் முழுகி திளைத்தாலும், ஒரு கட்டில் அவன் குணங்களின் எல்லையைக் காண இயலாதவன்.

**892. ஓம் பூததாத்ரி ருசிதாய நம:**

ஜீவன் பிரகிருதியில் ஒரு சரீரத்தைக் தாங்குகிறான் நிலையற்ற சரீரத்தை தாங்குவது எம்பெருமானிடமிருந்து விலகி இருப்பது துக்கமே. ஆயினும் ஒரு நிச்சய வழியை அனுசரித்து அவரவர் தமதமர் வழி சென்று விண்ணகம்



நிச்சயம் புகுவர் என்பதால் சரீரம் அவனையடைய ஹேதுவாகிற காரணத்தால் ருசிகரமானதே என்பதை தாம் உணரச்செய்பவன்.

**893. ஓம் நிலாவிபூதி வியாமுக்தாய நம:**

நீலிமாஎன்கிற வண்ணம் மாறாதது எம்பெருமான் ஜீவனிடம் கொண்ட அன்பு பற்றும் எப்போதும் மாறாதது இவ்விதம் ஜீவாத்மாக்களிடம் மாறாத பற்று என்கிற விபூதிசயை நிர்வகிப்பதில் மனம் மகிழ்பவன்.

**894. ஓம் மஹாச்வேதாச்வ மஸ்தகாய நம:**

வெண்மையான குதிரை முகம் கொண்டு தூயதான் வடிவால் யாவரையும் வசீகரிப்பவன்.

**895. ஓம் த்ரயக்ஷாய நம:**

மூன்று கண்கள் (நெற்றியிலும் ஒன்றுக) கொண்டவன்.

**896. ஓம் திரிபுரஸம் ஹாரினே நம:**

திரிபுரம் எரித்த முக்கண்ணன் பரமசிவன் என்பது புராணம் கூறும் ஆயினும் படைத்தல், காத்தல், அழித்தல் என்கிற முத்தொழிலையும் சிவன், பிரமன் அவர்களின் அந்தர்யாமியாய் செய்ய வைப்பவன்.

**897. ஓம் ருத்ராய நம:**

ஏகாதச ருத்ரர்கள் எம்பெருமானின் ஸ்வரூபமே. ஏகாதச ருத்ரர்களில் சங்கரன் தான் என்கிறார் கீதையில்.

**898. ஓம் ஸ்கந்தாய நம:**

ஸேனாதிபதிகளில் ஸ்கந்தன் நான் என்கிற பகவத்கீதையில் கண்ணன் கூறியபடி ஸகந்தனும் எம்பெருமானின் ஸ்வரூபமே

**899. ஓம் விநாயகயா நம:**

விக்னேஸ்வரன் என்கிற விநாயகன் ருத்ரனுடைய புத்திரன் அவனுக்கும் அந்தர்யாமியாய் அந்த தேவதா விசேஷத்தை நிர்வகிப்பவன்.

**900. ஓம் அஜாய நம:**

அஜாயமானோ பஹுதா விஜாயதே என்ற ஸ்க்திக்கு பிரதி பாத்யமானவன்.

**901. ஓம் விரிஞ்சாய நம:**

பிரம்மம் என்கிற பதத்திற்கு உரிய தன் ஒப்பாரில்லா பரமன்.

**902. ஓம் த்ருஹிணாய நம:**

த்ருஹிண என்று பரமசிவனைக் குறிப்பர் பரமசிவன் அந்தர்யாமியாகிய பரமன் என்பதாகும்.

**903. ஓம் வியாப்த மூர்த்தயே நம:**

விஷ்ணு என்கிற பதத்திற்கு வியால்ப்ய என்கிற தாது மூலம் எங்கும் பரந்து இருப்பவன்

**904. ஓம் அமூர்த்திகாய நம:**

ஸ்வரூபத்தை ஏற்பவனாகவும், அது இல்லாதவன் எவ்விதமாகவும் இருப்பவன் எம்பெருமானின் ஸ்வரூபம் இதுவே என அளவிட்டு வருணித்து கூறிவிட இயலாதவன்.

**905. ஓம் அஸங்காய நம:**

எல்லா உயிரினங்களிலும் ஜீவனாய் விளங்கினாலும், யாருடனும் தாம் சேர்ந்து ஸமமாக கூறத்தகாதவன். எல்லா உலகங்களுக்கும், ஜீவனுக்கும் தேவதேவர்கட்கும் அந்தர்யாமியாய் லீலாவிபூதிகளை நிர்வகித்து ஒப்பாகும் மிக்காரும் இல்லாது தனித்து நிற்பவன்.



**906. ஓம் அனன்ய தீ ஸங்க விஹங்காய நம:**

எல்லா ஜீவனுக்கும் அதாவது தேவர்கள் உள்ளிட்ட யாவருக்கும் தலைவனாய், உற்றோமே யாவோம் என்கிற ஸ்ரீ ஆண்டாள் கூற்றுப்படி ஸகல ஜீவ.தோழர்களுக்கும், தேவர்களுக்கும் துணைவன், உற்றவன், வேறு ஒருவர் சகவாசத்திற்கு தக்கதாவர்கள் ஸர்வசேஷி அவனே.

**907. ஓம் வைரிபங்காய நம:**

எம்பெருமான் ஒருவனே உபாயம் உபேயம் என தெரிந்து, பற்றுக்கோலாக அடைய விரோதமாக இருக்கக்கூடியவைகளை விலக்கி, சேதனனை ரக்ஷிப்பவன்

**908. ஓம் ஸ்வாமினே நம:**

ஸர்வசேஷியாகிய பரமன், சேஷபூதர்கள் யாவருக்கும் எஜமான், கோப்தா, தலைவன் என்றார்.

**909. ஓம் ஸ்வாய நம:**

ஸ்வ ஸங்கல்பமுடைய பூரண ஸ்வந்தரன்

**910. ஓம் ஸந்துஷ்யதே நம:**

துஷ்டி என்பது பூரணத்வம் 'பூர பூரயிதா' என்கிற கிரமமாக பரிபூரணன்.

**911. ஓம் சக்ராய நம:**

தேவேந்திரன் அமரலோக அதிபதியானவன் இந்திரனுக்கும் அந்தர்யாமியாய் அமரலோகத்தை நிர்வகிப்பவன்.

**912. ஓம் ஸர்வாதிகஸ்ய தாய நம:**

அமார்களுக்கும், அஷ்டவஸுக்கார், திக்பாலகர்கள்

ஸித்த சாரண கணங்கள் யாவருக்கு அவரவர் பதவிக்கேற்ற நிர்வாக அதிகாரங்கள் வழங்குபவன்.

**913. ஓம் ஸ்வயம் ஜ்யோதிஷே நம:**

எம்பெருமான் ஸ்வயம் பிரகாசமானவன்

**914. ஓம் ஸ்வயம் வைத்யாய நம:**

வைத்திய நாராயணன் என்கிற ஸ்வரூபமாக தன்வந்திரியும் எம்பெருமான் பரிமுகன்.

**915. ஓம் சூராய நம:**

ஈரேழுபதினான்கு மண்டலங்களின் லீலாவி பூதியை நடத்தி, தமதடியடைந்த சேதனர்களுக்கு மோஷபர்யந்தமான ஐஹித, ஆமுஷ்மிக பலன்களையும் அளிக்கும் சூரன் சூரனாகிய ராமபிரான்.

**916. ஓம் சூர குலோத்பவாய நம:**

சூர குல திலகனாக விளங்குபவன்.

**917. ஓம் வாஸவாய நம:**

திருப்பாற்கடலில் வசிப்பவன்.

**918. ஓம் வஸுரண்யாய நம:**

திருப்பாற்கடலில் பள்ளிகொண்டு சதுர்வியூஹ மூர்த்திகளாக லீலாவிபூதியை நிர்வகிப்பவன்.

**919. ஓம் அக்னயே நம:**

முகாத் இத்திரஸ்ச அக்னிஸச என்கிற படி அக்னியும் எம்பெருமானின் முகத்திலே தான் வசிக்கிறது.

**920. ஓம் வாஸுதேவாய நம:**

வஸுதேவனின் புத்திரனாகிய வாஸுதேவன்

**921. ஓம் ஸுஹ்ருதே நம:**



உயர்ந்த நல்லெண்ணங்கள் கொண்ட ஹ்ருதயமுடையவன்.

**922. ஓம் வஸவே நம:**

ஆப, த்ருவ, ஸோம, தர, அதில, அநல. பிரத்யூ, பிரபாஸ என்கிற அஷ்ட வஸுக்களின் அந்தர்யாமியானவன். அஷ்டவஸுக்களில் அக்னி நான் என்கிறார் கண்ணன் கீதையில்.

**923. ஓம் பூதாய நம:**

ஜீவனின் ஆத்மாவாகிய அழிவற்ற தான அந்தர்யாமியும் பரமன்.

**924. ஓம் பாவினே நம:**

எதிர்காலத்தில் இவ்விதம் நடக்கும் என்கிறதை ஸங்கல்பம் செய்பவன்.

**925. ஓம் பவதே நம:**

நடப்பதும் அவனாலே தான் தேன வினா திருணமபி ந சலதி- அவனல்லால் அணுவும் அசையாது

**926. ஓம் பவ்யாய நம:**

முடிவில் அடையப்படும் பொருளானவன்

**927. ஓம் விஷ்ணுஸ்தானாய நம:**

விஷ்ணுலோகம் என்கிற போக்யஸ்தானம் என்பதானவன்.

**928. ஓம் ஸனாதனாய நம:**

ஸனாதன தர்ம ஸ்வரூபியானவன்.

**929. ஓம் நித்யாநு பாவாய நம:**

தன் தாள் அடைந்தார்க்கெல்லாம் மரணமானால்

வைகுந்தம் கொடுக்கும் பெருமாள் நித்யானுபவத்துக்கு இலக்கானவன்.

**930. ஓம் நேதியஸே நம:**

அகலில் அகலும் -அணுகில் அணுகும் என்கிற ஆழ்வாரின் ஸுக்திபடி அண்டிய தாஸர்களின் அருகில் எப்போதும் இருப்பவன்.

**931. ஓம் தவீயஸே நம:**

பற்றுடை அடியாரின் அண்மையை விட்டு விலகிப்போகும் அற்பர்களிடமிருந்து விலகியே இருப்பவன்.

**932. ஓம் துர்விபாவனாய நம:**

பற்றில்லாத பாமரர்க்கு அவர்கள் மனப்பாங்கிற்கு கட்டுப்படாமல் இருப்பவன்.

**933. ஓம் ஸனத்குமாராய நம:**

சிருஷ்டிகர்த்தா பிரமனுக்கு நான்கு குமாரர்கள் அவர்கள் ஸனத்குமாரர்கள் எனப்படுபவர் பிரம்மாதி தேவர்களுக்கும் , ஸகலருக்கும் . அந்தர்யமியாய் அவரவர் தொழிலைச்செய்பவர் பரந்தாமன்.

**934. ஓம் ஸந்தாத்ரே நம:**

எல்லோரினும் மேம்பட்டு எல்லோரையும் அவரவர் பொறுப்புகளையும், நிர்வாகங்களையும் தாங்குபவர்.

**935. ஓம் ஸுகந்தயே நம:**

நறுமணம் எம்பெருமானைச் சார்ந்து எப்போதும் பெருமையுறுகிறது.

**936. ஓம் ஸுகதர்சனாய நம:**

எம்பெருமானுடைய தரிசனம், துக்கக் கலப்பில்லாத



ஸுகத்தைத் தருவது.

**937. ஓம் தீர்த்தாய நம:**

எம்பெருமானின் திருவடி ஒன்றே பற்றுக்கோல், அவன் ஒருவனே முதலிடம் என்றிருக்கும் பாகவதன், பவித்ரத்தன்மைக்கு எடுத்துக்காட்டாக தீர்த்தனாகிறான் என்றும் அவ்வித தீர்த்தாகளை உருவாக்கும் பரமனை என்னவென்று வர்ணிப்பது அவனையும் தீர்த்தன் என்றே வர்ணிக்கிறோம்.

**938. ஓம் திதிக்ஷயே நம:**

சேதனர்கள் செய்யக்கூடிய தவறுகளை பொறுப்பவன்.

**939. ஓம் தீர்த்தாங்க்ரயே நம:**

நமது புனிதத்தன்மையால் பாபங்களை மாசுகளை அழித்தருள்பவன்.

**940. ஓம் தீர்த்தஸ்வாது சுபாய நம:**

புனிதத்தன்மையில் ரூபம், அடையாளம் ருசி எவ்விதமானது என்பதற்கு பரிக்ஷார்த்தமான ஸ்வபாவமுடையவன்.

**941. ஓம் சுசயே நம:**

சுத்தத் தன்மைக்கு இருப்பிடமானவன்

**942. ஓம் தீர்த்தத் திதிதயே நம:**

பாவனத்தன்மையை பிரகாசமாக மிளிரச் செய்பவன்.

**943. ஓம் திக்ம தேஜஸே நம:**

கூர்மையான தேசுடையவன்

**944. ஓம் தீவ்ராய நம:**

சரணாகத ஸந்த்ராண த்வரா த்விகுண பாஹுணா

என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அனுபவித்திருப்பதுபோல சேதனர்களை ரக்ஷணம் செய்வதில் த்வரை உள்ளவன்

**945. ஓம் அனுமயாய நம:**

பரபிரம்ம ஸ்வரூபத்தின் ஆதர்ச நிலையில் இருப்பவன். உயர்வற உயர்நலம் கொண்ட பரமபுருஷன்.

**946. ஓம் ஈசாத்யுபநிஷத் வேத்யாய நம:**

ஈசாவாஸ்ய உபநிஷத்தின் திரண்ட பொருளானவன்.

**947. ஓம் பஞ்சோப நிஷதாத்மகாய நம:**

நூற்றெட்டு உபநிஷத்துக்களில் பிரதானமான பஞ்சோபநித்துக்களின் ஆத்மாவானவன்.

**948. ஓம் ஈசே நம:**

பரமபுருஷன், பரந்தாமன், பரமபதநாதன் தேவதேவர்க்கும் யாவருக்கும் ஈசன்.

**949. ஓம் அந்தஸ்தாய நம:**

எல்லாவற்றிற்கும் எல்லையானவன் எல்லையில் இருப்பவன். அந்தராத்மாவாக விளங்குபவன்.

**950. ஓம் தூரஸ்தாய நம:**

ஆத்மாவில் பரமாத்மாவாக விளங்குபவன் பரமபதத்தில் ஜீவனைவிட்டு விலகியும் இருப்பவன்.

**951. ஓம் கல்யாண தம ரூபவதே நம:**

தமக்கு ஒப்பார் இல்லாத திவ்ய மங்கள ஸ்வரூபமுடையவன்.

**952. ஓம் பிராணானாம் பிராணாய நம:**

உயிரின் உயிரானவன் ஜீவாத்மாவில் உறையும்



பரமாத்மா அந்தர்யாமியானவன்.

**953. ஓம் பூர்ண ஞானைரபி ஸ்துர்கிரஹாய நம:**

பூரணமான ஞானத்தின் பெட்டகம், இருப்பிடம் ஆனவன்

**954. ஓம் நாசிகேதோ பாஸனார்ச்சயாய நம:**

நசிகேதோப ஷத் எம்பெருமானின் பெருமையை கோஷிக்கின்றது. இந்த உபநிஷத்தின் ஸ்தோத்திரத்திற்கு பாத்திரமானவன்.

**955. ஓம் திரிமாத்ர பிரணவோ திதாய நம:**

ஓம் எனும் பிரணவமந்திரம் அகார உகார, மகார வாசயமாய் விளங்குவது. சதுர்வேதங்களின் ஸாரமாக பிரணவம் த்வனிப்பதால் வேதஸ்வரூபம்.

**956. ஓம் பூதயோநயே நம:**

ஜிவாத்ம ஸ்வருபமாகவும் பிரகிருதியாய் விளங்குபவன்.

**957. ஓம் ஸர்வஞ்யாய நம:**

எக்காலத்திலும் எப்போதும் எல்லாமறிந்தவன்.

**958. ஓம் அக்ஷராய நம:**

தேவபாஷை எனப்படும் ஸம்ஸ்கிருதத்தின் ஒவ்வொரு அக்ஷரஸ்வரூபமாகவும் விளங்குபவன்.

**959. ஓம் அக்ஷரபச பராய நம:**

அக்ஷரங்கள் வெவ்வேறு ஸ்வரூபமாக த்வனித்தாலும் யாவும் எம்பெருமானுடைய பரத்வத்தையே பேசுகின்றன.

**960. ஓம் அகாராதி பதஞ்யேய வ்யூஹாய நம:**

அகாரம் என்பது தொடக்கம் இவ்வாருன பதங்களினால் அறியப்படுபவன்.

**961. ஓம் தாரார்த்த பூருஷாய நம:**

நல்முத்து பிரகாசம் தூயது, வெண்மையானது ஸந்தேகமற்றது. அதுபோல பரிமுகனின் பரத்வமும் நல்முகைத்தப் போன்று பிரகாசிப்பது.

**962. ஓம் மனோமயாய நம:**

சேதனர்களுக்கு திருஷ்டா திருஷ்டா பலன்களை அளிப்பதில் மனோ வேகமுடையவன்.

**963. ஓம் அம்ருதாய நம:**

அம்ருதம் அமரத்வத்தை அளிக்கும். எம்பெருமானோ அதையும் விஞ்சி நிரந்தரமான இழிதல் இல்லா பேரின்பமாகிய மோக்ஷானந்தத்தையே அருள்பவன்.

**964. ஓம் ஆனந்தமயாய நம:**

ஸத்யம், ஞானம், அனந்தம், பிரம்ம என்கிற ஸூத்ரவாக்கிய பிரதிபாத்யனாகிய பரம்பொருள் சுத்த ஆனந்தமயமானவன்.

**965. ஓம் தஹூர ரூப திருதே நம:**

வாமனாவதாரம் எடுத்த பரந்தாமன், அதுபோல மிகச்சிறிய ரூபத்தையும் தரித்து வேலை ஸாதிப்பவன்.

**966. ஓம் நியாஸவித்யாவேத்ய ரூபாய நம:**

ஸர்வாவஸ்த ஸக்ருத் பிரபன்ன ஜனதா ஸம்ரக்ஷணை தீக்ஷிதனாகிய பரந்தாமன் சரணகதி வித்தையின் பிரதிமூர்த்தியாக விளங்குபவன்.

**967. ஓம் ஆதித்யந்தர் ஹிரண்மயாய நம:**



சூர்யமண்டலத்தின் நடுவிலிருந்து சுக்ல யஜுர் வேதத்தை உபதேசித்தருளிய பரிமுகன் ஒளிப்பிழம்பாகிய சூரியனின் நடுவில் ஹிரண்யம் போன்று தனித்து பிரகாசித்த வண்ணம் எழுந்தருளியிருப்பவன்.

**968. ஓம் இந்த்ராய நம:**

இப்போது, இதோ, இங்கே எழுந்தருளியிருக்கின்றனர் என நாம் உணரும் விதமாக வசிப்பவன்.

**969. ஓம் ஆத்மனே நம:**

யோக ஸாக்ஷாத்காரம் செய்யக்கூடிய திறன் படைத்தவர்கள் அந்தர்யாமியாய் எழுந்தருயிருக்கும் பரமனை உணர்வர். எல்லா ஆத்மாவிலும் பரமாத்மா வசிக்கிறான்.

**970. ஓம் உத்கீதாதி பிரதீகோபாஸ நான் வயினே நம:**

உத்கீத பிரணவோத் கீத ஸர்வ வாசீச்வரேச்வர எனப்படும் தொடர்மந்திரம் ஸாமவேதத்தைச் சேர்ந்தது. இந்த மந்திரத்தின் மூல உபாஸனைக்குரிய பரதேவதை பரிமுகனாவான்.

**971. ஓம் மது வித்யோ பாஸனீயாய நம:**

ஸ்ரீ ஹயக்ரீவன் - மதுவித்யா எனப்படும் மஹாமந்திரங்களால் உபாஸிக்கப்படுபவன்.

**972. ஓம் காயத்ரீ-தியான கோசராய நம:**

காயத்ரி மந்திரம் வேதத்திற்கு ஆத்மா அந்த மந்திரத்தை அர்த்தா நுஸந்தானம் பண்ணி அதன்மூலம் அறியப்படுபவன்.

**973. ஓம் திவ்ய கௌக்ஷேய ஸஞ்ஜோதிஷே நம:**

தமது திவ்ய அந்தபுரத்திற்கு ஜோதிஸ்ஸாக விளங்குபவன்

**974. ஓம் சாண்டில்யோ பாஸ்தி வீக்ஷிதாய நம:**

சண்டில்யோபநிஷத்தால் சிரத்தையுடன் துதிக்கப்படுபவன் அதன் திரண்ட பொருளானவன்.

**975. ஓம் ஸம்வர்க வித்யா வேதாத்மனே நம:**

வேதங்கள், உபநிஷத்துக்கள் அவைகள் வர்கங்கள் யாவற்றிற்கும் ஆத்மா போன்றவன், பூரண பிரதிபாத்யன்

**976. ஓம் பரஷோடச கலாய நம:**

பதினறு வித கலைகளும் அதிஷ்டான தேவதையானவன்.

**977. ஓம் உபகோஸல வித்யேக்ஷயாய நம:**

தவறு செய்யும் சேதனர்களுக்கு அதற்குரிய தண்டனையை வழங்குபவன்.

**978. ஓம் பஞ்சாக்ன்யாத்ம சரீராய நம:**

ஐந்து விதமான அக்னி எம்பெருமான் ஸ்வரூபமாகவே விளங்குகின்றன.

**979. ஓம் வைச்வான்ராய நம:**

''அஹம் வைச்வானரோ பூத்வா.........
சதுர்விதான்னம் பசாம்யஹம்''

என கீதையில் கண்ணன் ஸாதித்துள்ளபடி வைச்சானரம் என்கிற ஜாடராக்னியாக இருந்துகொண்டு, நான்குவித அன்னங்களையும் ஜீவர்களுக்கு, ஜீரணம் செய்விப்பவன்.

**980. ஓம் ஸதே நம:**

ஸத் எனப்படுபவன்



**981. ஓம் பிரகிருதியே நம:**

பிரகிருதி என்கிற இந்த பூமண்டலமும் எம்பெருமான் ஸ்தூல ரூபமே.

**982. ஓம் ஜகத்கர்மணே நம:**

ஜகத் வியாபாரங்கள் யாவற்றிருக்கும் காரண கர்த்தாவானவன்.

**983. ஓம் ஆதிபுருஷய நம:**

எம்பெருமான் தோற்றத்திற்கு எதுவும் காரணம் கிடையாது.

**984. ஓம் மூர்த்தா மூர்த்த பிரம்மணே நம:**

ஸ்வரூபம் ஏற்று ஸகுண பிரம்ம மாகவும் எல்லோருக்கும் அந்தர்யாமியாய் அமூர்த்தமாகவும் எழுந்தருளியிருந்து ஸகல லீலாவிபூதியையும் நிர்வகிக்கும் பரப்ரஹ்மம்.

**985. ஓம் ஸர்வ பிரேஷ்டாய நம:**

ஸகல தேவதா ஸ்வரூபத்திற்கும் அவரவர் பதவிக்குரிய காரியங்களைச் செய்ய வைக்கும் பிரேரிதா வானவன்.

**986. ஓம் அன்ய பிரியதாகராய நம:**

எம்பெருமானைக் கண்ட, தரிசித்த மாத்திரத்தில் அவர் மனதில் பிரியம் பொங்கும் விதமான ரூபமுடையவன்.

**987. ஓம் ஸர்வாந்தராய நம:**

எல்லா ஜீவர்களுள்ளும் வசிப்பவன்

**988. ஓம் அபரோக்ஷாய நம:**

பரத்வமுள்ள ஸூக்ஷ்ம ஸ்வரூபனாகிய எம்பெருமான் பற்றுடை சேதனனின் மனோபாவத்திற்குக் கட்டுப்பட்டவன்.

**989. ஓம் அந்தர்யாமினே நம:**

பர, வியூஹாதி ஐந்து நிலைகளில் அந்தர்யாமி என்கிற நிலையில் இருப்பவன்.

**990. ஓம் அம்ருதா நகாய நம:**

பாப ஸம்பந்தம் லேசமுமில்லாத அமிருதம் போன்றவன்.

**991. ஓம் அஹர்நாம ரதித்ய ரூபாய நம:**

அஹஸ் என்கிற பகல் பொழுதின் நாயகன் சூரியனின் மத்யவாஸனாகிய பரமன், அதன் ஸ்தூல ரூபமாகவும் இருப்பான்.

**992. ஓம் அஹர் நாமாக்ஷி ஸம்சரிதாய நம:**

சந்திர ஸீர்யாக்னி லோசனான் எனப்படும் எம்பெருமானின் திருக்கண்ணை சூரியபகவான் ஆச்சரியித்துள்ளான்.

**993. ஓம் ஸதுர்ய காத்னரயர்த்தாய நம:**

ஸந்தியாசிகள் திருக்கரங்களில் மூவுலகில் புண்யபலமாக ஏந்திவரும், திரிதண்டத்தின் பொருளாக விளங்குபவன்.

**994. ஓம் யதோ பாஸ்த்யாப்ய ஸத் வபுஷே நம:**

உபாஸனைக்குரிய ஸத்தான பாத்திரன்.

**995. ஓம் சந்திராத் ஸாயுஜ்ய பூர்வ மோக்ஷத நியாய கோசராய நம:**

சந்திரலோக ஸாயிஜ்யம் போன்ற நிலையற்ற பதவிகளைப் பெற்றவர். நிலையான மோஷத்தைப் பெற சரணகப்பற்றத் தக்கவன்.



**996. ஓம் நியாஸ நாச்யா மப்யுபேத பிராரப்தாம்சாய நம:**

சரணகதி செய்த ஜீவனின் கர்மவினை மூட்டையை தீயினில் தூசாக அழித்துக் காப்பவன்.

**997. ஓம் மஹாதயாய நம:**

கருணையின் தடையற்ற பிரவாகமானவன்

**998. ஓம் அவதார ரஹஸ்யாதி ஞானி பிராரப்த நாசனாய நம:**

அர்த்தோ அர்த்தார்த்தி ஞானி ச பரதர்ஷப-என்கிற கீதைவாக்கு படி எம்பெருமானையே உபாயமாக, உபமேயமாக உணர்ந்த ஞானிகளின் பிராரப்த கர்ம பலனை கழிப்பவன்.

**999. ஓம் ஸ்வபர கிருத நியாஸ பல பிரதாய நம:**

ஆத்ம பரத்தை எம்பெருமான் திருவடிகளில் ஸமர்பித்த சேதனின் சரணகதிக்கு பலன் தந்தருள்பவன்.

**1000. ஓம் அஸாஹஸாய நம:**

ஸர்வ வல்லமை படைத்த பரமனுக்கு மகத்தான காரியம், ஸாஹஸம் என்பது எதுவும் இல்லை.

**1001. ஓம் அநபாய ச்ரியே நம:**

அகலகில்லேன் என்று எப்போதும் பிரியாது உடனிருந்து பிராட்டியுடன் கூடியவன்.

**1002. ஓம் ஸஹாயாய நம:**

சேதனுக்காக பரிந்துபேசி சரணகதியை ஏற்கும்படியாக உதவி பண்ணும் பிராட்டியை உடையவன்

**1003. ஓம் ச்ரியைவ ஸதே நம:**

பெரிய பிராட்டியை சதியாகக் கொண்ட பதி ஸ்ரீய பதியானவன்.

**1004. ஓம் ஸ்ரீ மந் நாராயணாய நம:**

'பிரபாவாந் ஸீதயாதேவ்யா' என்ற ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அனுபவித்தது போல மஹாலஷ்மியுடன் கூடியவன் என்பதால் பெருமை பெற்ற நாராயணமூர்த்தி.

**1005. ஓம் வாஸீதேவாய நம:**

சதுர்வியூஹ மூர்த்திகளில் வாஸீதேவனானவன்

**1006. ஓம் விஷ்ணவே நம:**

எல்லா இடங்களிலும் எப்போதும் வியாபித்து விளங்கும் மஹாவிஷ்ணு.

**1007. ஓம் உத்தமாய நம:**

அகில ஹேயகுண பிரத்யனீகனாக ஸகலருக்கும் புகலிடமாய் விளங்கும் உத்தமன்.

**1008. ஓம் ஸ்ரீ மதே ஹயக்ரீவாய நம;**

பரிமுகனாய் ஸேவைதரும் பரம்பொருள் ஸ்ரீ ஹயவதனன்.











श्री महानारायणास्त्र स्तोत्रम्

ओं अस्य श्री नारायणास्त्र महामन्त्रस्य
आदि सृष्टि कर्ता ब्रह्मा ऋषिः । अति जगति
छन्दः । त्रिपाद् विभूति नायकः । श्रीमन्नारायणो देवता
ओं बीजम् ह्रीं शक्तिः । ओं नमः कीलकम्
मम सर्वाभीष्ट सिद्ध्यर्थे सर्वारिष्ट शान्त्यर्थे
नारायणास्त्र महामन्त्र पाठे जपे विनियोगः ॥

ध्याये आगारमध्यस्थं सहस्रादित्य तेजसं
अनन्त शक्ति संयुक्तं नारायणम् अनामयम् ॥

ओं ऐं ह्रीं श्रीं नमो भगवते नारायणाय
सकल जगत् उत्पत्तिस्थिति लय कारणाय अमित
तेजसे अतुल बल पराक्रमाय महाविभूति पतये
ह्रौं ह्रीं हुं हें ह्रौं हः ॥

सकल निगम गोचर गुणगणाय महासाम्राज्य
विभूति विभूषिताय श्वेतातपत्र चामर व्यजन
कुण्डल कटक कटिसूत्राङ्गदादि हारवलय

मणिनूपुरादि अनेक मणिभूषण भूषिताय
सहस्रशिरसे सहस्राक्षाय सहस्रभुजाय
सहस्रपादाय शंख चक्र गदा पद्म शार्ङ्ग शरनन्दक
खड्ग चर्मखेटक परशुपाश हलमुसल
तोमर भुशुण्डी पाशांकुश कुन्त शतघ्नी
भयादि विभूषित भुजसहस्राय बाला तप
सदृश पीताम्बर राजित ब्रह्माण्ड मण्डलाय अनन्त
नागेन्द्र सिंहासन अधिष्ठिताय सनकाद्यनेक
मुनिगण सिद्ध चारण विद्याधर किन्नर गन्धर्व
यक्ष राक्षस उरग गीर्वाण सुगीत गुणार्णवाय
सकल जगत् भयंकराय भूतप्रेत पिशाच ब्रह्मराक्षस
शाकिनी डाकिनी वेताल मारीच ब्रह्मराक्षस
कूश्माण्ड वैनायक मातृगणान् भक्षय भक्षय
वीर्यं कुरु कुरु कुष्टदुष्टज्वर दाहापस्मार
प्रमेह विस्फोटक ब्रह्मापस्मारादि सर्वराज रोगान्
विहिंसय विहिंसय । ममाभयं कुरु कुरु । मम
शत्रून् उच्चाटय उच्चाटय व्याधि भयं शमय
शमय । चोर भयं नाशय नाशय । महाशस्त्रास्त्राणि
स्तंभय स्तंभय । मम दुष्ट ग्रहान् भीषय



भीषय । मोहय मोहय । स्तंभय स्तंभय । कंपय
कंपय । पातय पातय । बन्धय बन्धय । भूतग्रहान्
बन्धय । बालग्रहान् शमय शमय । यक्ष पक्ष
ज्वालातमोहार ग्रहान् ज्वलय ज्वलय । प्रज्वल
प्रज्वल भर्त्स भर्त्स पच पच दह दह उन्मथय
उन्मथय । मम शत्रून् नाशय नाशय । कारागृहान्
मोचय मोचय । सुपर्णेन नागपाशान् त्रोटय त्रोटय ।
निगडपाशादीन् मोचय मोचय । वह्निवात सुपर्ण
नागपर्वत पर्जन्यादि दुष्ट शस्त्रास्त्रजन्य
बन्धनानि शमय शमय । दुष्टकृत महापीडान्
शमय शमय । भूतप्रेत पिशाचादि पीडान् शमय
शमय । दुष्कर्मजन्य नरकभयान् मां मोचय
मोचय । ओं ह्रां ह्रीं ह्रूं ह्रैं ह्रौं ह्रः । खें खां खैं
हुं फट् । ह्रैं क्ष्मौं ओं क्रौं हुं फट् । ठः ठः ठः ठः
ह्रौं ह्रूं ह्रैं ह्रौं एहि एहि ज्वल ज्वल प्रज्वल
प्रज्वल हुं फट् स्वाहा । ओं नमो नारायणाय
नमस्ते नमस्ते नमस्ते ॥



## மங்களம்

ஓம் நமோ ஸ்ரீ வேங்கடேசாய !
சுத்தஞான ஸ்வரூ பிணே !!

வாசுதேவாய சாந்தாய !
ஸ்ரீ நிவாஸாய மங்களம் !!

ஸ்ரீய: காந்தாய கல்யாண !
நிதயே நிதயேர்த்தினாம் !!

ஸ்ரீ வேங்கட நிவாஸாய !
ஸ்ரீ நிவாஸாய மங்களம் !!




# ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாள் திருக்கோயில்

ராமகிருஷ்ணா நகர், புதுச்சேரி – 1.

போன் : 0413 2260096



ஓம் ஸ்ரீ ரமணா, புதுச்சேரி – 13. செல் : 9443059049